# தென்றலென
# வந்தாய்



சத்யா இராஜ்குமார்

# தென்றலென நீ வந்தாய்!

## 1

''சுபா!''

''சொல்லுங்கமா.''

''முதல் நாள் வேலைக்குப் போகப் போற. போய்க் கடவுள நல்லா வேண்டிக்கோமா.''

''எதுக்கு?''

''என்னமா இப்பிடிக் கேக்கற?''

''சாமிய வேண்டிக்கோன்னு சொல்லுங்க. சரிதான். அதென்ன முதல் நாள் வேலைக்குப் போறதுனால சாமிய வேண்டிக்கறது?''

''நல்ல விஷயத்துக்கு விதண்டாவாதம் பேசக் கூடாதுமா.''

''நீங்க சொல்றது புரியலேன்னு கேக்கறேன். இதுல விதண்டாவாதம் எங்கிருந்து வந்தது?''

"உங்கிட்டப் பேசி ஜெயிக்க முடியுமா, சரி சரி. போய்க் கடவுள வேண்டிக்கிட்டு வந்து டிஃபன் எடுத்துக்கோ."

"அதெல்லாம் அப்பவே கடவுள் தரிசனமெல்லாம் முடிஞ்சது, என்ன டிஃபன் மம்மி? எடுத்து வைங்க."

"பூரி, பொங்கல்."

"பொங்கல் வேண்டாம், பூரிய மட்டும் சூடா எடுத்துட்டு வாங்க."

ஆவி பறக்க அப்பொழுதுதான் சூடாக எடுத்து வந்த பூரிகளை நளினி மகளுக்குப் பரிமாற, "அடடா! வாசனையே ஆளத் தூக்குதே!" என்று தானும் வந்து சாப்பிட அமர்ந்தார் நளினியின் கணவன் நடேசன்.

"எதுக்கும் டேஸ்ட் பாத்துட்டே புகழுங்களேன் டாடி."

"நீ என்ன பாத்தா முதல் நாள் வேலைக்குப் போறவ மாதிரியா இருக்கற?"

"ஏன் மம்மி, முதல் நாள் வேலைக்குப் போறவங்க எப்பிடி இருக்கணுங்கறீங்க?"

"கொஞ்சமாவது பயம், படபடப்பு எதுவுமே இல்லாம..."

ஆதங்கத்துடன் தாய் சொன்னவற்றைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள் சுபாஹிணி.

சில வினாடிகளில் ஓரளவு தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள், "பாருங்கப்பா இந்த அம்மாவ..." என்று மேலும் வந்த சிரிப்பை முயன்று அடக்கிக் கொண்டு சொன்னாள்.

"என்னடாம்மா?"

"முதல் நாள் வேலைன்னா பயபக்தியோட சாமிய வேண்டிக்கிட்டு, திருநீறு சந்தனம் குங்குமமெல்லாம்



நெத்தி நிறைய வெச்சுக்கணுமாம் டாடி. அப்புறம் பயம் படபடப்புன்னு இப்பிடி இன்னும் என்னென்னவோ இருக்கணுமாம்."

"ஓ, நார்மலா மனுஷப் பிறவிங்களுக்கு இருக்க வேண்டியது எல்லாத்தையும் போய் உங்கிட்ட இருக்கணும்னு சொல்றாங்களாடா?"

"வேண்டாம் டாடி..."

" கூல் பேபி கூல், எனிவே கங்க்ராட்ஸ்."

"நீங்களுமா?"

"என்ன பண்றதுமா. எங்களுக்குக் கொஞ்சம் விடுதல கிடைக்குதேன்னு சந்தோஷப்பட முடியல. பாவம், அந்தக் கம்பெனி எம்.டி.ன்னு இப்பக் கவலையா இல்ல இருக்கு!"

"ஓஹோ! அப்புறம்?"

"அப்புறமென்ன, பொறுத்திருந்துதான் பாக்கணும்."

"அட என்ன டாடி நீங்க. இந்த மம்மி தான் இருபத்தஞ்சு வருஷத்துக்கும் மேல காலேஜ்ல புரஃபஸரா இருந்திருந்து டிஸிப்ளின் அது இதுன்னு எல்லாத்துக்கும் புத்தி சொல்லியே பழக்கப்பட்டுட்டாங்கன்னா நீங்க கூடவா?"

"என்ன பண்றதுடா? அப்பப்பக் கொஞ்சம் ஜால்ராவும் போடலேன்னா புவ்வாவுக்கு என்ன பண்ணட்டும்?"

"ஓ, அப்பாவுக்கும் பொண்ணுக்கும் என்னப் பாத்தா அந்த அளவுக்கு நக்கலா இருக்கா? இருங்க. உண்மைலயே உங்க சாப்பாட்டுல கை வைக்கறேன்."

"நோ ப்ராப்ளம். நானும், டாடியும் சேந்து சமச்சு சாப்புட்டுக்குவோம். கடவுள் எங்களுக்கும் திவ்யமா ஆளுக்கு ரெண்டு கைகள ஆரோக்கியமாக் குடுத்திருக்கார்."

... இன்னும் கால் குடுத்திருக்கார். அது குடுத்... இது குடுத்திருக்கார்னு பினாத்துவ போலிருக்கு. எழுந்து கிளம்புடி. ஒன்பது மணிக்கு ஆஃபீஸ்ல இருக்கணும்னு சொன்ன, இங்கயே டைம் எட்டரையாயிடுச்சு.''

''ஓ.கே. கூல் மம்மி கூல்!'' என்ற சுபாஹினி பெற்றவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

நன்கு தூக்கிப் போடப்பட்டிருந்த போனி டெய்லும், காட்டனில் எடுப்பான நிறத்தில் இருந்த சுடிதாரும் மகளின் அழகை மேலும் அதிகமாக்கிக் காட்டியதைப் பெருமையுடன் மகளின் ஸ்கூட்டி கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்து விட்டு அதற்குப் பிறகே வீட்டிற்குள் வந்தார் நளினி.

''என்னம்மா சிரிச்சுட்டே வர்ற?''

கணவன் கேட்க, தான் நினைத்ததை அப்படியே சொன்னார்.

''நீ சொல்றது ரொம்பவும் சரி. ஆனா...''

''என்னங்க?''

''சில சமயங்களில் அந்த அதிகப்படியான அழகுனாலயே கூடப் பிரச்சனைகளும் வர வாய்ப்பிருக்கு.''

''என்ன சொல்றீங்க...?''

''அட என்னமா நீ, சும்மா பொதுவா சொன்னேன். அவ்வளவு தான்.''

''அது சரிதான், அழகு மட்டுமா நம் பெண்ணுக்கு? அதே போல வாய்த்துடுக்கும் அதிகமாக இருக்கிறதே. ...ஏன் அதை மற்றவர்களும் இயல்பாக எடுத்துக் கொள் ...நம் வரை பிரச்சனையொன்றும் இல்லைதான்.''



''என்னமா?''

''கணவன் கேட்க, இல்ல பேசாம சுபாவுக்கும் நாம மாப்ளயப் பாத்துக் கல்யாணம் பண்ணிக் குடுத்திருக்கலாம். அத விட்டுட்டு அவசரப்பட்டு வேலைக்கெல்லாம் போகச் சம்மதத்த சொல்லிட்டோம்னு தோணுது.''

''அட என்னமா நீ, நாம இப்ப செஞ்சது தான் கரெக்ட். பாவம், சுபாவாவது கொஞ்ச நாளைக்கு ஜாலியா இருக்கட்டுமே. நமக்கும் குழந்த கூட இருக்கறதுக்கு மனசுக்கு எவ்வளவு நல்லா இருக்கு! கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டா அப்புறம் அவ அக்கா விகாசினி ஒரு நாள் குடும்பத்தோட வந்து நம்மகிட்ட இருக்க மாட்டாங்களான்னு ஏங்கிட்டே இருக்கற மாதிரிதான் இவளுக்காகவும் ஏங்கணும். குறைஞ்சது முழுசா இன்னும் ஒரு வருஷத்துக்காவது சுபாவோட கல்யாணப் பேச்சு எடுக்காத.''

''இனி எங்க, அவதான் வேலைக்கே போக ஆரம்பிச்சுட்டாளே.''

''சரிமா. நானும் ஆஃபீஸ் கிளம்பறேன், லேட்டாச்சு.''

''சரிங்க, உங்க டிரைவர அனுப்புங்க. லஞ்ச் குடுத்தனுப்பறேன்.''

''முடிஞ்சா இன்னைக்கு நானே வரப் பாக்கறேன். இந்தப் பக்கமா மதியத்துக்கு மேல வர வேண்டிய வேல ஒன்னிருக்கு.''

''அப்ப சரிதான். கொஞ்சம் பொறுமையாவே செய்யலாம். அப்புறம் நம்ம கடைல இருந்து யாரோ ரெண்டு பேர அனுப்புங்க, கிச்சன்ல ஸ்லேப்க்கு வுட் வொர்க் இன்னும் முடியாம அப்பிடியே இருக்கு.''

''இன்னைக்குக் கஷ்டம்மா. ஒரு ஹோட்டலுக்கு ஸெட்டா ஃபர்னிச்சர்ஸ் ஆடர் குடுத்திருக்காங்க. அதுக்காக மும்முரமா வேல நடந்துட்டிருக்கு. இன்னும் ரெண்டு நாள் இல்லாம யாரும் நகரக் கூட முடியாது.''

''ஓ. சரிதான். பிஸியெல்லாம் முடிஞ்சதுக்கப்புறமே வரச் சொல்லுங்க,'' என்ற நளினி கணவன் தங்களுடைய ஃபர்னிச்சர் ஷோரூமுக்குக் கிளம்பியதும் வெளிக் கதவைத் தாழிட்டுக் கொண்டு வந்து அடுப்படியில் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்.



## 2

தனது ஸ்கூட்டியை டூ வீலர் பார்க்கிங்கில் பார்க் செய்துவிட்டு உள்ளே வந்தாள் சுபாஹிணி.

ஆறு தளங்களாக இயங்கிக் கொண்டிருந்த அந்த மிகப் பெரிய கட்டடத்தின் ஆறாவது தளத்தில் தான் இப்பொழுது அவள் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் நேச்சர் செராமிக்ஸ் அண்டு கண்ஸ்ட்ரக்ஷன் கெமிக்கல்ஸ் என்ற லிமிடெட் நிறுவனத்தின் அலுவலகம் இயங்கிக் கொண்டிருந்தது.

அந்த நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டருக்குத் தான் பர்ஸனல் அஸிஸ்டண்ட்டாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறாள் சுபாஹிணி.

லிஃப்ட்டில் ஏறி ஆறாவது தளத்தை அடைந்து அலுவலகத்தினுள் இருந்த ரிசப்ஷனுக்கும் வந்திருந்தாள்.



ஆனால் அவளுடைய தாய் சொன்னது போல எந்த விதப் பதட்டமோ, பயமோ அப்பொழுது கூட அவளுக்குத் தோன்றியிருக்கவில்லை.

எம்.டி.யைப் பார்க்க உடனே அனுமதியும் கிடைக்க, சென்றாள்.

''மே ஐ கம் இன் ஸார்.''

''யெஸ் கம் இன்!'' என்ற குரலில் உள்ளே சென்ற சுபாஹிணி, ''குட்மார்னிங் ஸார்!'' என்றாள்.

''ம், வேலைக்குத் தயாரா வந்தாச்சா?''

''யெஸ் ஸார்.''

''குட், உங்க வேல விவரத்துலிருந்து எல்லாத்தையும் பழைய பி.ஏ.லட்சுமி சொல்லுவாங்க. நீங்களும் என்ன டவுட் வந்தாலும் அவங்களையே கேட்டுக்கலாம்.''

''யெஸ் ஸார்.''

''இங்க பங்க்சுவாலிட்டி ரொம்ப முக்கியம். ரெண்டு நிமிஷம் தானே, நாலு நிமிஷம் தானேன்னு லேட்டா வர்ற வேலையெல்லாம் இருக்கக் கூடாது. முடிஞ்ச அளவுக்கு டியூட்டி டைம்க்கு அஞ்சு நிமிஷம் முன்னாடி வந்துடுங்க. பிரச்சனையில்ல.''

''எஸ் ஸார்.''

அதே நேரம் எம்.டி. தேவானந்த் பஸ்ஸெரை அழுத்தியிருக்க, அடுத்த சில வினாடிகளில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி உள்ளே வந்தார்.

''இவங்கதான் நான் சொன்ன பி.ஏ.லட்சுமி!'' என்றவன், அதே போல சுபாஹிணியையும் அந்த லட்சுமிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

"நீங்க கிளம்பப் போற இந்த ஒரு வாரத்துக்குள்ள இவங்களுக்கு எல்லாத்தையும் சொல்லிக் குடுத்துடுங்க லட்சுமி."

"யெஸ் ஸார்."

"முதல்ல நம்ம ஆஃபீஸ் ரூல்ஸ் நடைமுறை எதெத எப்பிடி ஹேண்டில் பண்ணணும்னெல்லாம் சொல்லிடுங்க!" என்றவன், "சரி. இனி நீங்க போகலாம்," என்று மீண்டும் தனது வேலைகளில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

வாங்க என்பதைப் போல ஜாடை காட்டி விட்டு அந்த லட்சுமி கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல, தானும் அவளைப் பின் தொடர்ந்தாள் சுபாஹிணி.

அந்த லட்சுமியை சுபாஹிணிக்கு உடனே பிடித்துப் போனது.

அவள் பார்க்க நாற்பது வயது கணிக்கத்தக்க பெண்மணியாக இருந்தாள்.

எந்த அனாவசிய அலட்டல்களும் இல்லாமல், வேலைகள் அனைத்தையும் புரியும்படி நன்றாகச் சொல்லிக் கொடுத்தாள்.

அதற்கு மேலும் எம்.டி.க்களுடைய குணநலன்களைப் பற்றியும், எப்படி நடந்து கொண்டால் நல்லது என்பதையும் கூட.

அதென்ன எம்.டி.க்கள் என்று பன்மையாகச் சொல்கிறார்கள்.

புரியாமல் சுபாஹிணி பார்க்க, அதையும் சொன்னாள் லட்சுமி.



அதுவரை அவள் சொன்ன அனைத்துமே வேலை விஷயமாக இயல்பாக எடுத்துக் கொள்ளும்படியாகத் தான் இருந்தது.

ஆனால் அதற்குப் பிறகு அவள் சொன்னதோ சற்று. சற்றென்ன நன்றாகவே யோசிக்க வைப்பதாக இருந்தது.

அவள் சொன்னதும் இதுதான்.

அந்த நிறுவனத்தைத் தோற்றுவித்தது, வளர்த்தது, ஐந்து வருடங்களுக்கு முன்பு நடத்தி வந்தது வரை என்னவோ பெரியவர், நித்யானந்தன் தான் என்றாலும், அவரை ஓய்வில் விட்டுவிட்டு இப்பொழுது நிர்வாகம் செய்வது அதாவது நிறுவனத்தைக் கொண்டு செல்வது அவருடைய இரு மகன்கள் தேவானந்த்தும், தயானந்த்துமே.

அதிலும் முக்கியமாக இந்தச் சென்னை நிறுவனத்தை நிர்வகித்துச் செல்வது சிறியவர் தயானந்த் மட்டுமே.

ஏன் இந்த நிறுவனம் முழுவதுமே தயானந்த்துடைய அதிகாரத்தின் கீழ் மட்டும் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அதே போல பெரியவர் தேவானந்தத்திற்கு இங்கே இருக்கும் இந்த நிறுவனத்தைப் போலவே பெங்களூரில் ஒரு நிறுவனம் உள்ளது, அவர் அதை நிர்வகித்து வருகிறார்.

என்னதான் இந்த இரண்டு நிறுவனங்களும் அனைத்து விதங்களிலுமே சம அளவுடையதென்றாலும், இந் அதாவது சென்னையிலிருக்கும் சிறியவர் தயானந் நிர்வகிக்கும் நிறுவனத்தில்· தான் உற்பத்தி முத அனைத்துமே பிரமாதமாக நடந்து வந்தது.

ஏன் பிரமாதமாக என்று ஒற்றை வார்த்தையில் முடித்து விட முடியாத அளவிற்கு எல்லாவற்றிலுமே முதன்மையான முன்னணி நிறுவனமாகச் சிறியவர் தயானந்த் நடத்தி வரும் இந்தச் சென்னை நிறுவனம் இருக்கிறது.

அதிலும் சிறியவர் தயானந்திடம் வேலை செய்வதென்பது அவ்வளவு சுலபமான ஒன்று கிடையாது.

அந்த அளவிற்கு அவரிடம் அவருடைய வேலைக்கு ஈடு கொடுத்து வேலை செய்வது என்பது சவால்கள் நிறைந்ததும் கூட.

நான் சொல்வதை விட போகப் போக நீங்களே அதைப் புரிந்து கொள்ளத்தானே போகிறீர்கள் என்று லட்சுமி முடித்ததில், அவளையறியாமலேயே சிரித்துக் கூட விட்டிருந்தாள் சுபாஹினி.

லேசாகத்தான். ஆனாலும் அதை லட்சுமி கவனித்து விட்டு என்னவென்று விசாரிக்க, ஒன்றுமில்லையென்று சமாளித்தாள்.

தான் சொல்வதை அவள் சுத்தமாக நம்பவில்லை என்பது புரிய, ''இல்ல. நீங்க சொல்றத வெச்சுப் பாத்தா பெரிய எம்.டி.கிட்ட வேல செய்யறது ரொம்பவும் சுலபம். ஏன் சாதாரணமான ஒண்ணுன்னு சொல்ற மாதிரி படுது!'' என்றாள்.

சுபாஹினி சொல்ல, ''ஆமா. அதுல சந்தேகமே இல்ல!'' என்று உடனே ஒத்துக் கொண்டாள் லட்சுமி.

''இதக் கூட உங்களுக்காக நீங்க பெரிய எம்.டி. கிட்ட அவர் ஸ்பீடுக்கு வேல செஞ்சுட்டு அதுக்கப்புறம் வர்ற சின்ன எம்.டி.யோட வேகத்தப் பாத்து ஸ்டன் ஆயிடக் கூடாதுங்கறதுக்காகத்தான் சொல்றேன்.''



''சரிதான், தேங்க்ஸ் மே...''

''பரவாயில்ல, சும்மா வாங்க போங்கன்னே கூப்புடுங்க,'' என்ற லட்சுமி மேலும் அனைத்தையும் கற்றுக் கொடுக்க, தன்னால் இயன்ற மட்டும் நன்கு கிரகித்து உள் வாங்கிக் கொண்டாள் சுபாஹினி.

''நான் ஒண்ணு கேட்டா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே.''

சுபாஹினி கேட்க, ''என்ன சொல்லுங்க?'' என்றாள் லட்சுமி.

''இல்ல, நீங்க ஏன் ரிஸைன் பண்றீங்க, இல்ல வேற...''

''ஆமாம் சுபாஹினி. நான் வர்ற ஒண்ணாம் தேதில இருந்து இவங்களோட பெங்களூர் ப்ரேஞ்சுக்கு மாறப் போறேன்.''

''ஓ...''

''என் கணவர் ஸாஃப்ட்வேர் இன்ஜினியர். அதோட எங்க பொண்ணுக்கும் இப்ப அங்கயே வேல கிடைச்சுடுச்சு. அதனால தயானந்த் ஸார்கிட்ட எனக்கு ஜாப்ப அங்க மாத்தித் தர முடியுமான்னு ஒரு வார்த்த கேட்டேன். அவரும் உடனே சரின்னுட்டார்.''

அப்படியானால் வேலையில் கெடுபிடியாக இருப்பதைத் தவிர மற்ற விதத்தில் அவனும் நல்லவன்தான் போலிருக்கிறது.

அதோடு அப்படி வேலையில் சரியாக இருப்பவன் வேறு எந்த விதத்திலுமே தொல்லை எதுவும் தரக் கூடியவனாகவும் இருக்க மாட்டானல்லவா?

''அப்புறம் சுபாஹினி, நான் இன்னும் மூணு நாள் தான் வருவேன். அதுக்குள்ள முடிஞ்ச அளவுக்கு

உங்களுக்கு என்ன டவுட்னாலும் கேட்டு கிளியர் பண்ணிக்கோங்க.

''இதுகூட ஏன் சொல்றேன்னா சின்ன...''

''என்னக்கா, சொல்லுங்க?''

லட்சுமியின் வயதும், யதார்த்தமான எளிமையான அணுகு முறையும் சுபாஹிணியை அவளையறியாமலேயே அப்படி அழைக்க வைத்திருந்தது.

''இல்ல, சின்ன எம்.டி. தயானந்த் ஸார் மிடில் ஏஜ்ல இருக்கறவங்கள தான் வேலைக்கு எடுக்கச் சொல்லியிருந்தார். ஆனா...''

''ம், சொல்லுங்கக்கா.''

''நீங்க சின்ன வயசுப் பொண்ணுங்கறதால எம்.டி. எங்க ஏற்கெனவே கோபப்படுவாரோ என்னவோ, அப்பிடியிருக்கும் போது வேலையிலும் குத்தம் சொல்ற மாதிரி நீங்க நடந்துடக்கூடாதில்லையா, அதனால தான் சொல்றேன்.''

ஓ, இனி அது வேறா? சிறு வயதுப் பெண் என்றால் வேண்டாம் என்றானா?

ஏன்?

அப்படி அந்தச் சிறிய எம்.டி. என்ன பெண்களே ஆகாதென்று சொல்லுமளவிற்குச் சாமியாரா அல்லது இந்தக் காலத்துப் பெண்களின் மீது அவனுக்கிருக்கும் நம்பிக்கையின் அளவுகோல் அந்த மாதிரியானதா?

எது எப்படியானாலும் இந்த ஒரு விஷயத்திலேயே அந்த தயானந்த்தின் மீது சற்று சுவாரஸ்யம் பிறந்திருந்தது சுபாஹிணிக்கு.



அதோடு இன்னொன்றும் துல்லியமாகத் தெரிந்தது.

எப்பொழுது அவனாகவே இளம் வயதுப் பெண்களை வேண்டாமென்கிறானோ, அந்த அளவிற்கு எந்த விதத்திலும் அவன் தானாக வந்து வாலாட்ட மாட்டான் என்பது தெளிவாகிறதல்லவா?

## 3

ஒரு வழியாகத் தனது புது வேலையில் நன்கு பொருந்திப் போனாள் சுபாஹிணி.

எந்த அதிகப்படியான அதிகாரமோ அலட்டலோ இல்லாமல் யதார்த்தமாக வேலை செய்ய நேர்ந்த விதம் அவளுக்குப் பிடித்துப் போனது.

அதே சமயம் சற்றும் சுவாரஸ்யமே இல்லாமல் என்ன வேலை இது என்ற எண்ணமும் தோன்றவே செய்தது.

ஏற்கெனவே சொன்னது போல மூன்றாம் நாளோடு லட்சுமி கிளம்பி விட்டிருக்க, அதற்குப் பிறகு தனது கைகளில் வந்து சேர்ந்த முழுப் பொறுப்புகளையும் சிரமேற்கொண்டு நன்கு செய்தாள்.

அவள் வேலைக்குச் சேர்ந்தும் ஒரு வாரம் சென்றிருந்தது.

நாளை சிறிய எம்.டி. வந்து விடுவார் என்று முதல் நாளே பெரிய எம்.டி. சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது.

அப்படியானால் இன்று பெரிய எம்.டி. வரமாட்டாரோ.

சரிதான். எந்த எம்.டி. இருந்தால் என்ன, நாம் நம்முடைய வேலையைப் பார்த்துக் கொண்டு போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதானே.

சுபாஹிணி எதிர்பார்த்தது போலவே அன்று அவள் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த போது இருக்கையில் பெரிய எம்.டி. இல்லாததைக் கண்டாள். மாறாக அங்கே ஒரு புதியவன் அமர்ந்திருப்பதையும்.

கடினமான முக பாவனையிலும் பட்டும் படாமல் ஒற்றை வார்த்தையில் வந்த பேச்சிலும் அவர் தான் சிறிய எம்.டி. தயானந்த் என்பது தெளிவானது.

பெரிய எம்.டி. தேவானந்த்தைப் போலவே, சிறியவர் தயானந்த்தையும் எதிர்பார்த்த சுபாஹிணிக்கு மிகுந்த ஆச்சரியம்.

பெரியவரைப் போல சாதுவான முகபாவனை, சற்றுக் குண்டான உடல்வாகு, லேசாக முன் பக்கம் சரிந்த தொப்பை, ஐந்தரைக்கும் சற்றே அதிகமான உயரம் என்றெல்லாம் இல்லாமல், அவருக்கு நேர் மாறாகச் சிறிய எம்.டி. தயானந்த் இருந்ததே அதற்குக் காரணம்.

தோற்றத்தில் மட்டுமல்லாது பழைய பி.ஏ.லட்சுமி சொன்னது போல வேலையிலும் அவனுக்கு ஈடு கொடுத்து நிற்க பிரம்மப் பிரயத்தனப் பட்டுத்தான் போனாள் சுபாஹிணி.

இது மட்டும் லட்சுமிக்குத் தெரிந்தால்...

ஏனென்றால் சிறிய எம்.டி. தயானந்த்தைப் பற்றி அவள் சொன்ன போது தான் நக்கலாகச் சிரித்தது இப்பொழுது போல அவளுக்கு நினைவிற்கு வந்தது.

அதே போல நடப்பு முதல் எதையுமே சிறிய எம்.டி. பெரிதாக எடுத்துக் கொள்ளாததும் அவளுடைய கவனத்தில் படத் தவறவில்லை.



அது மட்டும் தானா என்ன?

அவனுடைய கண்களில் எதுவுமே தான் பட்டாற் போலத் தெரியவில்லையே.

முதலில் ஒரு முறையேனும் தான் அவனுடைய கவனத்தில் முழுமையாக விழுந்திருக்கிறோமா என்றும்.

அதே போல எந்நேரமும் வேலை வேலை என்று அது ஒன்றைத் தவிர வேறு எதுவுமே அவனுடைய கவனத்தில் மிகச் சிறிய அளவில் கூடப் படவில்லை என்பதும்.

சுபாஹிணியைப் பொறுத்தவரை, தனது தோற்றத்தில் அவளுக்கு எப்பொழுதுமே சற்றுக் கர்வம் கலந்த பெருமை உண்டு. அது கூட மிகச் சிறிய அளவில்தான்.

அந்த அளவிற்கு அது எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் ஒரு முறை பார்ப்பவர்களை நிச்சயம் மற்றொரு முறை திரும்பிப் பார்க்க வைத்து விடும் பிரமாதமான அழகுடையவள்.

ஆனாலும் துளியும் அது வெளிப்படையாகத் தெரியாதவாறு எப்பொழுதும் நடந்து கொள்பவளும் கூட, இப்பொழுது போல.

அன்றோடு சுபாஹிணி வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் முடிவடைந்திருந்தது.

அன்று திங்கட்கிழமை.

கூடவே அவளுடைய பிறந்த நாளும் என்பதா பெற்றவர்கள் ஆசையாகப் பரிசளித்திருந்த சேலை எடுத்துக் கட்டிக் கொண்டாள்.

சேலை கட்டுவது அவளுக்கு அவ்வளவாகப் பழ மில்லாத ஒன்று.

அதற்காக ஒரு முறை கூட சேலை கட்டியதே இல்லையென்றும் சொல்லி விட முடியாது.

கல்லூரியில் சில முறை, அதற்குப் பிறகு ஒரு முறை என யாருடைய உதவியையும் நாடாமல் தானே கட்டிக் கொள்ளுமளவிற்குத் தேர்ச்சி பெற்றவள். அவ்வளவு தான்.

ஆனாலும் அதற்காக அவள் எடுத்துக் கொண்ட முயற்சியும், நேரமும் மிகவும் அதிகம் என்று தான் சொல்ல வேண்டும்.

ஒரு வழியாகப் பார்த்துப் பார்த்துச் சேலையைக் கட்டிக் கொண்டு அதிகப்படியென்று யாரும் சொல்லி விட முடியாத அளவிற்குத் தன்னை அலங்கரித்துக் கொண்டவள், கண்ணாடியின் முன்பு நின்று ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

தன்னுடைய தோற்றம் தனக்கே அறிமுகமற்ற வேறு யாரோ ஒரு அழகான பெண் என்பதைப் போன்றதொரு எண்ணத்தைத் தோற்றுவித்துப் புன்னகையை வரவழைத்தது.

''மம்மி.''

''வாடாம்மா.''

''என்ன மம்மி, அப்பிடிப் பாக்கறீங்க?''

''என் கண்ணே பட்டுடும் போல ரொம்ப அழகா இருக்கேம்மா.''

''அது இருக்கட்டும் மம்மி, இன்னைக்கு என்ன ஸ்பெஷல்?''

''பாதாம் அல்வா.''

''வாவ்...''

''சரி. முதல்ல வந்து டிஃபன் சாப்புடு.''



''ம்கூம். ஸ்வீட் மட்டும் போதும்.''

''ஏன்டாம்மா?''

''லேட்டாச்சு மம்மி.''

''அது சரி. என்ன டிபன்னு கேட்டு சண்ட போடுவேன்னு உனக்குப் புடிச்ச டிபனெல்லாம் செஞ்சு வெச்சிருக்கேன். ஆனா நீ என்னடான்னா...''

''சரி சரி மம்மி. சீக்கிரம் எடுத்து வைங்க. சாப்பிட்றேன்...'' என்று வந்தவள் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே சாப்பிட்டேனென்று பெயர் செய்து விட்டு எழுந்தாள்.

''என்னம்மா இது?'' தாய் கேட்க, ''ம். சாப்டாச்சு!'' என்றாள்.

''சரி மம்மி. பை.''

''ஏய் சுபா...''

''என்ன மம்மி.''

''என்னாச்சு உனக்கு?''

''ஏன், எனக்கென்ன...''

''ஸ்வீட் மட்டும் போதும்னு சொன்னவ இப்ப அந்த ஸ்வீட்டக் கூட டேஸ்ட் பண்ணாமயே போற. அதுவும் டிபனையும் அரகுறையாக் கொறிச்சுட்டு...''

''அச்சச்சோ! நின்னு பேச டைமில்ல மம்மி. ரொம்ப லேட்டாச்சு. வேணும்னா கப்ல போட்டுக்குடுங்க. லஞ்ச் டைம்ல சாப்புட்டுக்கறேன்,'' என்று தன் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே மகள் செல்ல, அவள் சொன்னது போலவே செய்தார் நளினி.

''இந்தா, எதுக்கும் இருக்கட்டும்னு தயாராப் போட்டு வெச்சது இப்ப நல்லதாப் போயிடுச்சு பாரு,'' என்று சொல்லிக் கொண்டே தாய் கொடுத்த அந்த உள்ளே

ஸ்பூன் வைக்கப்பட்ட டப்பர்வேர் பாக்ஸை, ''இல்லன்னா ஈவினிங் வந்து சாப்புடப் போறேன். இதுல என்ன மம்மி இருக்கு?'' என்று வாங்கிக் கொண்டாள் சுபாஹினி.

''அது சரி. விட்டா நாளைக்குக் கூட சாப்பிடுவ தான், சரிதான். இனிமேல் உன் பர்த்டேக்கு ஸ்பெஷலா ஒன்னும் செய்ய மாட்டேன். விடு...''

''அச்சச்சோ! என்ன மம்மி நீங்க, எங்க சிரிங்க. பாக்கலாம்!'' என்று தாயின் கன்னத்தில் இதழ் பதித்து விட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள்.

''சுபா...''

''என்ன மம்மி?'' என்று திரும்பிப் பார்த்தவள்,

''மதியமாவது கொஞ்சம் பொறுமையா உக்காந்து சாப்புடு!'' என்ற தாய்க்குப் பதில் சொல்லிக்கொண்டே வந்து டூ வீலரை ஸ்டார்ட் செய்திருந்தாள்.

வண்டியில் செல்லச் செல்லவே கையைத் திருப்பிச் சில முறை கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்திருந்தாள் சுபாஹினி.

வழக்கத்தை விடவும் கூட அன்று ஐந்து நிமிடங்கள் அதிகமாகவே ஆகியிருக்க, நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

சரியாக எட்டு மணிக்கு வண்டியைக் கம்பெனி பார்க்கிங்கில் பார்க் செய்தவள், தனது கைப்பையை எடுத்துக் கொண்டு வேகமாக லிஃப்ட்டை நோக்கி ஓடினாள்.

சரியாக அதே நேரம் லிஃப்ட் மேல் நோக்கிப் புறப்பட, கைகாட்டி நிறுத்தியிருக்கலாமோ என்று சுபாஹினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



அடுத்து இருந்த லிஃப்ட் சில வினாடிகளில் வர, அதில் ஏறியவள், ஒரு வழியாக அவளுடைய ஆஃபீஸ் அறையைச் சென்றடைய மேலும் சில நிமிடங்களும் கூட ஆகிவிட்டிருந்தன.

அந்த வினாடியே கைப்பையைத் தனது இடத்தில் வைத்துவிட்டு எம்.டி.யைப் பார்க்க ஓடினாள்.

எப்பொழுதும் சற்று நேரத்திலேயே வந்து விடும் எம்.டி.தயானந்தும் அன்று அப்பொழுது தான் வந்திருக்க, கீழே பார்க்கிங்கில் சுபாஹினி தனது டூ வீலரைப் பார்க் செய்யக் காத்திருந்தது முதல், லிஃப்ட்டுக்காக ஓடி வந்தது, ஆனாலும் அதைப் பிடிக்க முடியாமல் அடுத்த லிஃப்டில் ஏறியது, இப்பொழுது வினாடியில் சென்று அவளிடத்தில் கைப்பையை வைத்துவிட்டுத் தன்னைப் பார்க்க அவசரமாக ஓடி வந்தது வரை அனைத்தையும் அறிவான்.

அப்படி அவன் பார்க்க நேர்ந்ததனைத்துமே கூட யதேச்சையாக நடந்தது தான்.

ஆனால் அதற்குப் பிறகு தனது இடத்திற்கு வந்து வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தவன், ''குட்மார்னிங் ஸார்!'' என்ற குரலில் நிமிர்ந்தான்.

சுபாஹினி நின்றிருக்க, ''ம். வெரி குட்மானிங்!'' என்றான்.

................

''என்ன, சொல்லுங்க.''

''ஸாரி ஸார். கொஞ்சம் லேட்டாயிடுச்சு.''

அப்படிச் சொன்னவளை எதுவும் பேசாமல் பார்த்தான் தயானந்த்.

''இல்ல, எப்பவும் வர்றத விடவும்...''

''அஞ்சு நிமிஷமா?''

''ஆமா ஸார்!'' என்று பதட்டத்துடன் சொன்னவளைப் பார்த்தவனுக்கு இப்பொழுது சிரிப்பு கூட வந்து விட்டிருந்தது.

அவசியமில்லாமல் ஒரு வார்த்தை கூடப் பேசாதவன், இதுநாள் வரையிலும் ஒரு மில்லிமீட்டர் அளவு கூட சிரித்திருக்காதவன் இப்பொழுது எதற்காகச் சிரிக்கிறானென்று சுபாஹிணிக்குமே ஆச்சரியமாகி விட்டிருந்தது. கூடவே பயமாகவும்.

ஆனாலும் அப்பொழுது அவள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எதிரே நின்றிருந்தவளைப் பார்க்க, இனி அவனுக்கும் என்ன தோன்றியதோ என்னவோ, இப்பொழுது நன்றாகவே சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

''ஸார்...''

''அஞ்சு நிமிஷம் லேட்டா வந்ததுக்குப் பத்து நிமிஷம் ஃபீல் பண்ணுவ போலிருக்கு!''

''ஓ, அப்ப அவசியமில்லையா ஸார்?''

யோசிக்காமல் பட்டென்று கேட்டுவிட்டு அதற்குப் பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டாள் சுபாஹிணி.

''லேட்டா வராம இருந்திருந்தா இப்பிடி வேஸ்டா ஃபீல் பண்ணிட்டிருக்கற நேரமும் மிச்சமாகியிருக்குமேன்னு சொல்றேன்.''

''ஸாரி ஸார். இனிமேல் இப்பிடி ஆகாது, ஆனா...''

''ம். சொல்லு.''



ஒருமை அழைப்பு மனதில் உறைத்தாலும் இப்பொழுது அதைக் காட்டிக் கொள்ள வேண்டாமென்று தொடர்ந்தாள்.

''இல்ல, அந்த லேட் கூட கம்பெனி டூ வீலர் பார்க்கிங்ல காத்திருக்க நேர்ந்ததுலயும், லிஃப்ட்டுக்காக வெயிட் பண்ணிட்டிருந்ததாலயும் ஆனது தான் ஸார்.''

என்னதான் ஏதோ ஒரு வேகத்தில் தொடங்கி விட்டிருந்தாலும் அதைச் சொல்லி முடித்தவளுக்கு இப்பொழுது பயம் கூட வந்து விட்டிருந்தது.

ஏனென்றால் அன்று தயானந்த்துடைய ஜாலியான மனநிலை தந்த தைரியத்தில் தான் அவள் அப்படிப் பேசியதும்.

நல்லவேளையாகத் தான் சொன்னதை அவன் சாதாரணமாக எடுத்துக் கொண்டு விட்டான் என்பது தெரிந்த பிறகு தான் அவளால் இயல்பாக மூச்சுக் கூட விட முடிந்தது.

''விட்டா பக்கத்து வீட்டுக்காரர் அவரு கார குறுக்க நிறுத்திட்டார். ரோட்ல பிச்சக்காரன் பிச்சை கேட்டு லேட் பண்ணிட்டான்னு வாய்க்கு வந்த காரணத்தையெல்லாம் கூட சொல்லுவ போலிருக்கு!''

''என்ன பண்றது ஸார், நம்ம நாட்டோட நிலமையும் இன்னைக்கு அப்பிடிதான இருக்கு?''

''ஓ, அப்பிடின்னா லேட்டா வந்தது உன் தப்பு கிடையாதுன்னு சொல்ற?''

''ஸார்...''

''அதுதான் உனக்கே நம்ம நாட்டோட நிலம நல்லாத் தெரிஞ்சிருக்கே. அதனால இனிமேல் எல்லாத்துக்கும்

சேர்த்தே வீட்ல இருந்து ஒரு அஞ்சு பத்து நிமிஷம் முன்னாடி கிளம்பிடு.''

''சரிதான் ஸார்.''

''நானும் வேணும்னா இன்னைக்கே என் பி.ஏ.வுக்கு முதலில் வழி கொடுக்கவும், மீறினால் தண்டிக்கப்படுவீர்கள் அப்பிடின்னு டூ வீலர் பார்க்கிங்ல ஒரு போர்ட் வெச்சுடறேன். அப்பிடியே லிஃப்ட்லயும்...''

அப்படிச் சொன்னவனைச் சற்றே அசடு வழியப் பார்த்தாள் சுபாஹிணி.

உடனே, ''இல்ல ஸார். அதுக்கெல்லாம் அவசியமில்ல,'' என்றும் சொல்லி விட்டிருந்தாள்.

''ஆரோக்கியமான சொந்தக் கால்கள வெச்சுக்கிட்டு லிஃப்ட்ட நம்பறவங்கள இனி நாமும் தான் என்ன சொல்றது?''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ''நான் இங்க வேலைக்கு வந்த நாள்ல இருந்து லிஃப்ட்ட யூஸ் பண்ணினது இன்னைக்கு தான் ஃபர்ஸ்ட் டைம் ஸார்!'' என்று பட்டென்று ரோஷத்துடன் சொல்லியே விட்டிருந்தாள்.

''அது கூட...''

''ம், சரி. விடு. இன்னைக்கு கொஞ்சம் சோம்பேறித்தன...''

''எனக்கா, சான்ஸே இல்ல ஸார். எனக்கு சேலயக் கட்டிக்கிட்டு சும்மா நடக்கறதே சிரமமான காரியம். அப்பிடியிருக்கும் போது ஆறு மாடி நினைச்சுக்கூடப் பாக்க முடியல...''



''ஆக இன்னைக்கு நீ லேட்டா வந்ததுக்குக் கூட அது தான் காரணம் இல்லையா?''

''என்ன ஸார் பண்றது. வருஷத்துக்கொரு முறை வர்ற...''

''ம்...''

''ஒண்ணுமில்ல ஸார்.''

''எனவே மெனிமோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆஃப் தி டே.''

''அப்படிச் சொன்னவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் சுபாஹிணி.

''உங்களுக்கு எப்பிடித் தெ...''

''ஓ! அப்ப இன்னைக்கு உன் பர்த்டே தான் இல்லையா?''

அப்படியானால் வெறும் ஊகத்தில் தான் சொன்னானாக்கும்...

ஆனாலும் இனிமேல் இவனிடம் இன்னும் கொஞ்சம் கவனத்துடன் தான் நடந்து கொள்ள வேண்டும்.

''அப்புறம் பர்த்டேக்கு ஸ்வீட் எதுவும் கிடையாதா?''

''இன்னைக்கு தான் எனக்குப் பிறந்த நாளே இல்லையே.''

''சரிதான் விடு. ஒரு ஸ்வீட்டாக எதுக்குப் பிறந்த நாள் அதுவுமா பொய் சொல்ற...''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ''ஒரு நிமிஷம் ஸார்,'' என்று அங்கிருந்து சென்றாள் சுபாஹிணி.

சென்றவள் சில வினாடிகளில் ஸ்பூன் போடப்பட்ட டப்பர்வேர் ஸ்வீட்டுடன் திரும்பி வந்தாள்.

''இந்தாங்க ஸார் ஸ்வீட். எடுத்துக்கோங்க.''

தயானந்த்தின் பார்வை தன்னை என்னவோ செய்ய, ''ஆமா ஸார். இன்னைக்கு எனக்கு பர்த்டே தான்!'' என்று ஒத்துக் கொண்டாள்.

''அப்பாடா! மேடம் ஒரு வழியா ஒத்துக்கிட்டீங்க, ஆனாலும் இன்னைக்கு எனக்கு வயிறு கொஞ்சம்...''

''பயப்படாம எடுத்துக்கோங்க ஸார், என் மம்மி செஞ்சது தான்.''

''ஓ அப்ப சரிதான்!'' என்று வாங்கி இரண்டு வாய் சாப்பிட்டிருந்தவன், ''டேஸ்ட் ரொம்ப நல்லார்க்கு!'' என்றான்.

''அது சரி தான் ஸார். மம்மி செஞ்சதாச்சே.''

அதற்குப் பிறகு இருவருமே வாய்ப்புக் கிடைக்கும் போது இயல்பாகப் பேசிக் கொள்வது வழக்கமாயிற்று.

ஒரு வாரம் சென்றிருந்தது.

சுபாஹினிக்கு வேலை மிகவும் பிடித்துப் போயிற்று. அனைத்திற்கும் மேலாக எம்.டி.தயானந்த் வேலை வாங்கிய விதம்.

சிறிதும் சலிப்பே தோன்றாமல் அவன் சொல்லும் வேலைகளைச் செய்வது மிகவும் சுறுசுறுப்பாகவும் அதே சமயம் சவால்கள் நிறைந்த ஒன்றாகவும் இருந்தது.

ஆனாலும் கூட அவன் வெகு சாதாரணமாகச் சொல்லும் (அல்லது) செய்து விடும் வேலைகளைத் தான் செய்வதற்குள் ஒவ்வொரு முறையும் அரும்பாடு பட்டுத்தான் போனாள் சுபாஹினி.

ஆனாலும் அவள் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எம்.டி.தயானந்த் சொல்லும் வேலைகளைச் செய்து முடிப்பதற்குள் தான் படும் சிரமம் இனி அவனுக்குத் தெரிந்திருந்தால் எப்படியோ, ஆனால் அதை எதையும் அறியாத தயானந்த் நன்றாகச் செய்திருக்கிறாய் என்று பாராட்ட நேரும் பொழுது உச்சி குளிர்ந்து போவாள்.



அவள் அப்படி நினைத்துக் கொண்டிருக்க, தான் சொல்லும் வேலைகளைச் செய்து முடிப்பதற்கு சுபாஹினி படும் சிரமத்தை அவனும் நன்கு அறிந்தே இருந்தான்.

அதனாலேயே தயானந்த்திற்கு அவளின் மீதிருந்த மதிப்பு மேலும் சற்று அதிகமாகி விட்டிருந்தது என்றும் கூடச் சொல்லலாம்.

மற்றப்படி தான் சொல்லும் வேலைகளை நினைத்த மாத்திரத்தில் அவ்வளவு எளிதாகச் செய்து முடித்து விடுவதென்பது அனைவராலும் முடியாது என்பதை அவனும் நன்கு அறிந்திருந்ததே அதற்குக் காரணம்.

''சுபாஹினி.''

எம்.டி. அழைக்க, ''சொல்லுங்க ஸார்!'' என்று வந்தாள் அவள்.

''நம்ம சப்ளையர்ஸோட டீடெய்ல்ஸ் முழுக்கக் கலெக்ட் பண்ணச் சொன்னேனே, முடிச்சுட்டயா?''

''தயார் ஸார். நேத்து ஈவினிங்கே முடிச்சு உங்க டேபிள்ல கொண்டு வந்து வெச்சுட்டேன். நீங்க வேற வேலைல பிஸியா இருந்ததால நானும் அதக் குறிப்பிட்டுச் சொல்லல.''

''சரி. அந்த ரிப்போர்ட்ட எடுத்துட்டு வா.''

''இதோ ஸார்...'' என்று தனது பி.ஏ.சுபாஹினி நீட்டிய ஃபைலை வாங்கி முழுமையாகப் பார்த்த தயானந்தால் என்ன முயன்றும் அவளைப் பாராட்டாது இருக்க முடியவில்லை.

அந்த அளவிற்கு அவள் தயாரித்திருந்த அந்த ரிப்போர்ட் புள்ளி விவரத்துடன் வெகு துல்லியமாக இருந்தது.

அதை அவன் குறிப்பிட்டுச் சொல்ல, ''ஆமா ஸார், மேலோட்டமான டீடெய்ல்ஸ்னா அதுக்கு ஒரு ரிப்போர்ட் தேவையே இல்லையே. அதனால தான் கொஞ்சம் டைம் எடுத்தாலும் பரவாயில்லன்னு மேக்ஸிமம் எல்லா டீடெய்ல்சும் இருக்கற மாதிரி லிஸ்ட்ட ரெடி பண்ணினேன்,'' என்றாள்.

''குட்!'' என்றவன் அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, ''சரி. நீ போய் உன் வேலையப் பாரு. நான் திரும்பவும் கூப்புட்றேன்,'' என்று அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தான்.



## 4

''குட்மார்னிங் ஸார்.''

''மார்னிங் சுபாஹிணி, என்ன இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்க போலிருக்கு?''

''சரிதான் ஸார். அக்கா ஃபேமிலி, இன்னைக்கு மதியம் வீட்டுக்கு வர்றாங்க, அதான்.''

''ஓ! அப்ப சந்தோஷப்பட வேண்டியது தான். ரொம்ப நாளைக்கப்புறம் வர்றாங்களோ?''

''ஆமா ஸார், ஆறு மாசத்துக்கப்புறம்.''

''ஓ...''

''ஸார்...''



''ம், சொல்லு.''

''இன்னைக்கு ஈவினிங் ஒரு டூ அவர்ஸ் பர்மிஷன் கிடைக்கு...''

''ம்கூம். முடியாது.''

அப்படிச் சொன்னவனை லேசான கவலையுடன் பார்த்தாள்.

''மதியத்துக்கு மேல அரை நாள் லீவ் எடுத்துக்கோ.''

''தேங்க்யூ ஸார்.''

''அடடா! என்ன சந்தோஷம், அக்கா மேல அவ்வளவு பிரியமா இல்ல அக்கா குழந்த, வீட்டுக்காரர் எல்லார் மேலயுமேவா?''

''அதுவும் சரிதான் ஸார் - ஆனா பிரச்சனையே இப்ப அதில்ல.''

''பின்ன?''

''வீட்ல ஒரு வாரமாவே இன்னைக்கு லீவ் எடுத்துக் கோன்னு ரொம்பவும் சொல்லிட்டிருந்தாங்க, ஆனா நாந்தான்...''

''ம். நீதான்...''

''எங்க எம்.டி. ரொம்ப ஸ்ட்ரிக்ட். அப்பிடியெல்லாம் லீவு எடுக்கவே முடியாதுன்னு ஒரேயடியா சொல்லிட்டேன்.''

''எதுக்கு அப்பிடிச் சொன்ன?''

அப்படிக் கேட்டவனைப் புன்னகையுடன் பார்த்த சுபாஹிணி, ''அடடா! இது தெரிஞ்சிருந்தா லீவே கேட்டிருப்பேனே!'' என்று புலம்புவதைப் போலச் சொன்னாள்.

"நீயும் சரியா தான் கணிச்சு சொல்லியிருக்க!" என்று சொன்னவன், "ஆனா ஒரு சில இடங்கள்ல உண்மையக் கூடக் கொஞ்சம் யோசிச்சு தான் பேசணும் தெரியுமா?" என்று புன்னகையுடன் கேட்டான்.

"என்ன ஸார் பண்றது. எனக்குத் தான் பொய் சொல்லிப் பழக்கமே இல்லையே!" என்று தயானந்த்தின் பாவனையிலேயே அதுவும் ஒரு குறை போலச் சொன்னாள் சுபாஹிணி.

"ஓ! பொய் சொல்லிப் பழக்கமில்ல, அதுவும் உனக்கு? சரிதான்."

"என்ன ஸார் நான் சொல்றத நம்ப மாட்டீங்களா?"

"பின்ன நம்பாம? வீட்ல இருந்தே லேட்டாக் கிளம்பிட்டு பார்க்கிங்ல இருக்கறவங்க மேலயும், லிஃப்ட் மேலயும் உனக்குப் பழியப் போடத் தெரியுமா? இல்ல ஸ்வீட் குடுக்கணுமேன்னு பர்த்டேவையே மறைக்கத் தெரியுமா? எதுக்காக நம்பாம இருக்கணும், சொல்லு?"

"அட என்ன ஸார் நீங்க. அவசியத்துக்கு சில விஷயங்களக் கொஞ்சம் மாத்தி சொல்லித்தான் ஆகணும். அதையெல்லாம் பொய்ன்னு ஒரேயடியா சொல்லிட முடியுமா?" என்று கேட்க வந்த சுபாஹிணியால் என்ன முயன்றும் புன்னகையைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

தன்னை மறந்து நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள்.

"ம்... அப்புறம்?"

"என்ன ஸார் அப்புறம்?"

"பொய் சொல்றதோட சிரிக்கவும் கூட உனக்கு நல்லா வருங்கறது தெரியுது. இப்பிடி வேற என்னவெல்லாம் இன்னும் ஸ்பெஷலாத் தெரியும் உனக்கு?"



அப்படிக் கேட்டவனை லேசான குற்ற மனப்பான்மையுடன் பார்த்த சுபாஹிணி, "ஸாரி ஸார்!" என்றாள்.

"அட இது எதுக்கு?"

"நான் கொஞ்சம் ஓவராப் பேசிட்டேன்."

"ம்கூம். நான் தான் தெரியாம பெரிய வாயாடிகிட்டப் பேசி மாட்டிக்கிட்டேன். ஏன் சிரிக்கற?"

"இல்ல. உங்களுக்கும் அது தெரிஞ்சு போச்சா?"

"ஏன் மத்தவங்களுக்குத் தெரியறது என் கண்லயும் படாம போயிடுமா?"

"அது சரிதான் ஸார். அதுலயும் உங்க கண்ல பட்டதுல ஒன்னும் ஆச்சரியமே இல்ல. எனக்கு ரொம்ப நாளா உங்கிட்ட ஒண்ணு கேக்க..."

"ம், என்ன கேளு?"

"இல்ல ஸார், ஒண்ணுமில்ல."

"பரவாயில்ல. விடு. அது என்னன்னு எனக்கே தெரியும்."

"தெரியுமா? என்ன, சொல்லுங்க?"

"நீங்க எப்பிடி இவ்வளவு ஸ்மார்ட்டா இருக்கீங்கன்னு தான..."

"அடடா, ஆனாலும் ஒரு மனுஷனுக்கு இவ்வளவு தற்பெரும ஆகாதுப்பா."

"நான் உண்மையத் தான சொன்னேன், இதுல தற்பெருமை எங்கிருந்து வந்தது? சரி, விடு..."

ஆமாம் ஸார். நீங்க ரொம்ப ஸ்மார்ட் தான். அதுல என்ன சந்தேகம் என்று வாய் வரை வந்து விட்டிருந்த வார்த்தை

களைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சுபாஹினி.

வேண்டாம். இதுவரை பேசியது போதும். இப்பொழுதே எங்கே தன்னை அதிகப்பிரசங்கித் தனமாகப் பேசுவதாய் முடிவு செய்து கொண்டானோ என்னவோ.

யதேச்சையாக நிமிர்ந்து தயானந்த்தைப் பார்த்த சுபாஹினிக்கு. அதற்குப் பிறகு தான் அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஆனா நீ ரொம்ப அழகா இருக்க.''

......................

''என்ன பாக்கற? எனக்குப் பொய் சொல்லத் தெரியாது. அதுவும் உன்ன மாதிரி. ம்கூம்.''

தயானந்த்தின் பார்வையும், அவன் சொன்ன வார்த்தைகளும் தன்னை என்னவோ செய்து விட்டிருக்க, என்ன முயன்றும் அவனுக்கு முன்பாகத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியாது தோற்றாள்.

சில வினாடிகளில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள், ''ஸார்! இந்த டீடெய்ல்ஸ் என்ட்ரி பண்ணணும். இந்த ஃபைல்ஸ எடுத்துக்கட்டுமா ஸார்?'' என்று இயல்பான குரலில் கேட்டாள்.

தான் பேச்சை மாற்றியதாக எண்ணினானோ, என்னவோ, சிரித்துக் கொண்டே சரியென்பதைப் போல அவன் தலையை ஆட்ட, அந்த இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்டு தன் இடத்திற்கே வந்து சேர்ந்திருந்தாள் சுபாஹினி.

அப்படி வந்து சேர்ந்தவளால் சில பெரிய மூச்சுக்களை எடுத்து விட்டுத் தன்னைச் சமன்படுத்திக் கொண்ட



பிறகே மீண்டும் வேலையில் கவனத்தைச் செலுத்த முடிந்தது.

சொன்னது போலவே தயானந்த் மதியம் கிளம்பிக் கொள்ளச் சொன்னதும் மீண்டுமொரு முறை நன்றி சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள் சுபாஹினி.

# 5

அன்று காலையில் வந்ததுமே தன்னை எம்.டி. அழைக்க, ''குட்மார்னிங் ஸார். சொல்லுங்க,'' என்று வந்து நின்றாள் சுபாஹினி.

''குட்மார்னிங். உக்காரு.''

''பரவாயில்ல ஸார்!'' என்றவள் மீண்டுமொரு முறையும் எம்.டி.தயானந்த் அமரச் சொன்னதில் உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

''சொல்லுங்க ஸார்!'' என்றவள், ''என்ன ஸார், ஏதோ தீவிரமான யோசனைல இருப்பீங்க போலிருக்கு?'' என்று கேட்டாள்.

வாயைத் திறந்து கேட்டு விட்டவளுக்கு அதற்குப் பிறகு நாம் சற்று அதிகப் பிரசங்கித் தனமாகப் பேசுகிறோமோ என்று பயம் வந்து விட்டிருந்தது.

ஆனால் அவனுக்கு அப்படியெல்லாம் எதுவும் தோன்றியிருக்கவில்லை போலும், புன்னகையுடன், ''உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்,'' என்றான்.

''சொல்லுங்க ஸார்.''

''சாப்டாச்சா?''

''சாப்டாச்சு ஸார். நீங்க?''

''ஆச்சு.''

''என்ன ஸார் சொல...''

''நான் சொல்லத் தயாரா தான் இருக்கேன். ஆனா அதக் கேட்டுட்டு நீ என்ன அடிக்க வரக் கூடாது.''

''என்ன ஸார் ஜோக்கடிக்கறீங்களா?''

''சரி. சொல்றேன். கேட்டுக்கோ. நீ என்ன லவ் பண்ணணும்.''

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. அதிர்ச்சியில் இருக்கையை விட்டே எழுந்திருந்தாள் சுபாஹிணி.

''கூல் சுபாஹிணி. அதாவது அப்பிடி நடிக்கணும், அதுவும் கொஞ்ச நேரத்துக்கு. அவ்வளவு தான். அது கூட உனக்கு விருப்பமில்லேன்னா வேண்டாம்.''

''ஆமாம், பின்ன இந்த மாதிரி யெல்லாம் கூட நடிக்கறதுக்கு எந்தப் பொண்ணாவது ஒத்துக்குவாளா?''

என்ன முயன்றும் சுபாஹிணியின் குரலில் லேசாகத் தோன்றி விட்டிருந்த எரிச்சல் அப்படியே வெளிப்படையாகத் தெரிந்தது.

''சரி தான். வேண்டாம்.''

''ஆனாலும் நீங்க ஏதாவது காரணம் இல்லாம கேக்க மாட்டீங்கன்னு தெரியும். மேல சொல்லுங்க ஸார்.''

''பரவாயில்லமா. விட்டுடு.''

''இல்ல ஸார், சொல்லுங்க.''

தான் வேலைக்குச் சேர்ந்திருந்த இந்த இரண்டரை மாதங்களில் முதன் முறையாக அன்று தயானந்த்தின்



முகத்தில் தெரிந்த சோர்வும் அந்த மிக லேசான தடுமாற்றமும் அவன் திடீரென்று அப்படிக் கேட்டதால் வந்த கோபத்தை இருந்த இடம் தெரியாமல் காணாமல் போகச் செய்திருந்தன.

''நானும் யோசிக்காம திடீர்னு அப்பிடிக்கேட்டிருக்கக் கூடாது தான்...''

''இல்லில்ல ஸார். நாந்தான் யோசிக்காமப் பேசிட்டேன். நீங்க ஏதோ காரணம் இருக்கப் போய்த் தான அதுவும் கொஞ்ச நேரத்துக்கு மட்டும்னு கேட்டிருக்கீங்க. ஸாரி ஸார். எதுவா இருந்தாலும் சொல்லுங்க. என்னால் முடிஞ்ச வரைக்கும் செய்யறேன்.''

''நன்றிமா!'' என்றவன், ''எனக்கு அத்தெ பொண்ணு ஸ்ரீமதின்னு ஒருத்தி இருக்கா. அதாவது அப்பாவோட தங்கச்சி பொண்ணு.

''அவளுக்குப் பிறவியிலயே கால்ல ஒரு பிரச்சன, நடக்கும் போது லேசா அதுவும் ரொம்பவும் கொஞ்சம் தான் சாஞ்சு நடப்பா. ஆனா நான் அத ஒரு குறையா எப்பவுமே எடுத்துக்கிட்டதில்ல. அவளுக்கும் எனக்கும் தான் கல்யாணம்னு சின்ன வயசுல இருந்தே பெரியவங்க எல்லாரும் பேசிட்டே இருப்பாங்க, என் அம்மாவத் தவிர.''

''ஓ.''

''அவங்களுக்கு மட்டும் அதில ஒரு சின்ன வருத்தம், ஏன் சம்மதமில்லன்னே சொல்லிடலாம். ஆனாலும் வேண்டாம்னு ஒரு முறை கூடச் சொன்னதில்ல. உன் விருப்பப்படி உன் மனசு சொல்றபடி செய்னு பேசாம ஒதுங்கிக்கிட்டாங்க.''

எத்தனை பேருக்கு இந்த மனப்பான்மை வருமென்று நினைத்த சுபாஹிணிக்கு தயானந்தின் தாயை நினைத்துப் பெருமையாக இருந்தது.

"இப்ப ரெண்டு வருஷம் முன்னாடி வரைக்கும் கூட எல்லாரும் எங்க ரெண்டு பேரையும் இணைச்சு ஜாடையாப் பேசும்போது எனக்கு ஒன்னுமே தோணினதே இல்ல. ரொம்பவும் சாதாரணமா தான் எடுத்துக்கிட்டிருந்தேன். ஆனா..."

"ஆனா இப்ப நாம ஏன் ஊனமான பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு இருக்கா ஸார்?"

...

"ஸாரி ஸார். யோசிக்காம கேட்டுட்..."

"ஏன் நீ சாதாரணமாத் தான கேட்ட. அதுல என்ன இருக்கு? இப்பக்கூட அவளோட உடல் குறையோ, அதனால அவள அவாய்ட் பண்ணிடணுங்கற எண்ணமோ எனக்கில்ல.

"ஆனா இப்ப யோசிச்சுப் பாக்கறப்ப தான் ஸ்ரீமதியோட அந்த உடல் குறைபாடு தான் அவமேல என்னையறியாமலேயே ஒரு பரிதாபத்த ஏற்படுத்தி அவளைக் கல்யாணம் பண்ணிக்க சம்மதம் சொல்ல வெச்சதோன்னு நினைக்க வைக்கிது."

இப்படிச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியுமா?

பாவம்! அந்தச் சிறு பெண். இப்பொழுது இவன் மீது ஆசையையும், விருப்பத்தையும் வளர்த்து அதைத் தனது மனப் பெட்டகத்திற்குள் பூட்டி வைத்துக் கொண்டிருந்தால்?

அதுவே காதலாகவும் மாறியிருந்தால்?

ஆனால் தான் நினைத்ததை என்ன முயன்றும் சுபாஹிணியால் வாயைத் திறந்து கேட்க முடிந்திருக்கவில்லை.



"ஆனா இப்பப் பிரச்சனையே அதில்ல. என்ன தான் எனக்கு அவ மேல விருப்பமோ காதலோ எதுவுமே இல்லேன்னாலும் கூட ஒருவேள அவ என்ன விரும்பினா அவளுக்காக அவள நான் சந்தோஷமாக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கேன்.

"ஆனா அப்பிடியும் எதுவுமில்ல. இப்போதைய அவளோட நிலமையும் அப்பிடியே முழுக்க முழுக்க என்ன மாதிரியானது தான்."

"அப்பிடின்னு அவங்க சொன்னாங்களா ஸார்? ஒருவேள அவங்களுக்கு உங்க மேல விரு..."

"ம்கூம். நிச்சயமா இல்ல. அத நான் ஜாடையா சில தடவ கேட்டுட்டேன்."

"ஓ..."

"உங்களுக்கு அவங்க அந்த ஸ்ரீமதி மேல விருப்பம் எதுவும் இல்லேங்கறது சரிதான் ஸார். ஆனா ஒரு வேள நீங்க அவங்களத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்கன்ற தைரியத்துல அவங்க தன்னோட மனச வெளிய காட்டிக்காம இருந்தா? தனக்கு அது கிடைக்காமப் போயிடுமோங்கற எண்ணமோ பயமோ வராத பட்சத்துல, அவங்களும் நிம்மதியா இருக்காங்களோ என்னவோ?"

"அதாவது ஒரு பொண்ணா அவங்களால உங்கள மாதிரி ஃப்ரியா எதையும் விளக்கமா சொல்ல முடியாம இருக்கலாம், இதக்கூட ஏன் சொல்றேன்னா பெரியவங்க அவங்க பாட்டுக்கு உங்க ரெண்டு பேரையும் இணைச்சுப் பேசிட்டே இருக்கறதுனால ஒருவேள இப்ப அவங்களுக்கும் உங்க மேல..."

"அதுதான் இப்ப என்னுடைய சந்தேகமும். அதோட அவ கொஞ்சம் ரிஸர்வ்ட் டைப்பும் கூட."

..................

''கல்யாணங்கறது ரெண்டு மனசு சம்பந்தப்பட்ட விஷயம். அதுவும் இல்லாம கூடவே ஸ்ரீமதிக்கும் என்னைப் பிடிக்காத பட்சத்துல ஏன் எங்க ரெண்டு பேருக்குமே பரஸ்பரம் விருப்பம் இல்லாதப்ப... அவங்க வரட்டும் பாக்கலாம்.''

இவனைப் பிடிக்காதவர்கள் கூட யாராவது இருப்பார்களா என்ன?

ஆறடிக்கும் அதிகமான உயரமும், கிச்சென்றிருக்கும் கச்சிதமான உடலும்.

முக்கியமாக ஆண்மைக்கே உரிய அத்தனை லட்சணங்களுடனும் இவனை ஒரு பெண் மனதார விரும்புவதற்கு இன்னும் எத்தனை எத்தனை காரணங்களை வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டே போகலாமே.

கடவுளே! நம் எண்ணம் போகும் போக்கு சரியில்லையே...

''ஒரு ஃபங்ஷனுக்காக அத்தையும், மாமாவும் இன்னைக்கு வர்றாங்க. கூடவே ஸ்ரீமதியும்.''

''அவள இங்க விட்டுட்டு அவங்க ரெண்டு பேரும் வேலைய முடிச்சுட்டு வந்து அழைச்சுட்டுப் போறதா இருக்காங்க போலிருக்கு.

''ஸ்ரீமதியோட விருப்பத்தத் தெரிஞ்சுக்கிட்டு அவளோட பதில் எதுவானாலும் இன்னைக்கு அத்தெ மாமா கிட்டப் பேசி ஒரு முடிவுக்கு வந்துட வேண்டியது தான்.

''உன்னோட உதவிக்கு அவசியமில்லாமலும் போகலாம், அதுக்குத் தான் வாய்ப்பும் அதிகம். ஒருவேள தேவப்பட்டா...''



தயானந்த் தன்னைக் கேள்வியாய்ப் பார்க்க, கடவுளே! தன்னை இப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில் நிறுத்துகிறானே என்றிருந்தது சுபாஹிணிக்கு.

அதற்காக இன்னொரு பெண்ணின் வாழ்வில் விளையாடுவதா?

இவனுடைய ஆட்டத்திற்கு நாம் சம்மதித்து, அது நாலு பேருக்குத் தெரிந்தால் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

அதனால் தான் அதைக் கேட்கும் போதே லேசாகத் தடுமாறினானோ?

அதோடு அவனொன்றும் கட்டாயப்படுத்தவும் இல்லையே!

உனக்கு விருப்பமில்லையென்றால் பரவாயில்லை என்று தானே சொல்கிறான்.

அழுத்தக்காரன்! இதைச் சொல்லவே இனி எத்தனை முறை தனக்குள் யோசித்தானோ?

தன்னுடைய பதிலுக்காகத் தயானந்த் காத்திருப்பது தெரிந்தது.

''உங்கள ஒரு இக்கட்டுலிருந்து மீட்கறதுக்காக ஒரு சின்னப் பொய். அவ்வளவு தான, தாராளமா செய்யறேன் ஸார்.''

''தேங்க்யூ சுபாஹிணி. ஆனா முடிஞ்ச அளவுக்கு உன் உதவிக்கு அவசியம் வராத மாதிரி பாத்துக்கறேன்!'' என்றவன் மீண்டுமொரு முறையும், ''ரொம்ப நன்றிமா!'' என்றான்.

# 6

அதற்குப் பிறகு இருவரும் வேலையில் மும்முரமாகி விட்டிருக்க, தயானந்த் சொன்னது போல, அவனுடைய அத்தை குடும்பம் மதிய உணவு வேளைக்குச் சற்று முன்பாக வந்து சேர்ந்தது.

அனைத்தையும் சொன்ன தயானந்த் அந்தக் குடும்ப நபர்களைப் பற்றியும் கொஞ்சம் சொல்லியிருந்தால் நாம் இப்படி அசந்து போய் நின்றிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காதோ என்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த அளவிற்கு அவனுடைய அத்தை பெண் ஸ்ரீமதி பிரமாதமான அழகியாக இருந்தாள்.

அதாவது சுபாஹிணி (தானே) தன்னை மறந்து அப்ப டியே அசந்து போய்ப் பார்க்குமளவிற்கு அந்த ஸ்ரீமதி இருந்தாள் என்றும் சொல்லலாம்.

சற்று வித்யாசமான காலணிகளை அணிந்து வந்திருப் பாள் போல. அவள் விந்தி நடந்தது போலத் துளி கூடத் தெரியவில்லை.

ஏனோ அவனுடைய அழகுடன் ஒப்பிடும் பொழுது இந்தச் சிறு உடல் குறை ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூடப் பொருட்படுத்தப்பட வேண்டியதல்ல என்று நினைக்க வைத்தது.

அழகில் மட்டுமல்லாது குணத்திலும் பிரமாதமான வளாக இருந்த ஸ்ரீமதியைப் பார்த்ததும் உடனே பிடித்துப் பானது சுபாஹிணிக்கு.



''ஸாரி தயா.''

அப்படிச் சொன்ன தனது அத்தையைப் பார்த்தான் தயானந்த்.

''இல்ல. டியூட்டி டைம்ல வந்து டிஸ்டர்ப் பண்றோம், தயவுசெஞ்சு கோவிச்சுக்காத கண்ணா.''

''அட என்ன அத்த நீங்க. உங்கள மாதிரி பெரிய ஆளுங்க எல்லாம் இப்பிடியாவது எங்களுக்குத் தரிசனம் குடுக்கறீங்களேன்னு சந்தோஷப் படத்தான முடியும்.''

''அப்பிடிச் சொல்லு தயா. இருந்திருந்து உங்கிட்டப் பேசும்போதாவது உன் அத்தெ கொஞ்சம் யோசிச்சுப் பேச வேண்டாம்?''

''நான் முக்கியமா சொன்னதே உங்களத்தான மாமா?''

''அடடா, இப்பிடிப் போட்டுட்டயேப்பா!'' என்று அத்தை கணவர் லோகநாதன் சிரிக்க, ''ம் அப்பிடிப் போடு தயா!'' என்றாள் அத்தை கல்யாணி.

''மம்மி! டாடி! கிளம்பலையா? வரும்போதே லேட்டா யிடுச்சுன்னு சொல்லிட்டே வந்தீங்க!''

மகள் ஸ்ரீமதி கேட்க, ''அது சரிதான்மா. நாங்க கிளம்ப றோம்!'' என்று மீண்டுமொரு முறையும் இருவரிடமும் சொல்லிவிட்டு அவளைப் பெற்றவர்கள் கிளம்பினார் கள்.

அவர்கள் கிளம்பியது தான் தாமதம், ''அத்தான்!'' என்று தனது மாமன் மகனிடம் ஓடி வந்தாள் ஸ்ரீமதி.

''வா, ஸ்ரீ. உக்காரு, அப்புறம் என்ன இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்க?''

''காரணம் இருக்கே.''

''அதத்தான் கேக்கறேன்.''

''அத சொல்றதுக்குதான அம்மா அப்பா கூட நானும் ஒட்டிக்கிட்டு இப்ப வந்ததே. ஆனா...''

''ஆனா?''

என்னதான் தனது இடத்திலிருந்து தன்னுடைய வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், தனக்குச் சற்று அருகிலேயே ஸ்ரீமதியும், தயானந்தும் பேசிக் கொள்வது சுபாஷிணியின் காதுகளில் நன்றாகவே விழுந்தது. காதுகளை இறுகப் பொத்திக் கொண்டால் ஒழிய அதைக் கேட்காமலிருப்பதற்கு வேறு வழியில்லை.

''அத்தான்.''

''சொல்லுமா.''

''சொல்லிடுவேன். ஆனா பயமா இருக்கு.''

''பயமா, எதுக்கு? அதுவும் உனக்கு!''

''விளையாடாதீங்க ப்ளீஸ்.''

''சரி. அப்ப சொல்லு.''

''நான்... நான் வந்து...''

''ம்.''

''ஒண்ணுமில்ல அத்தான், ஒண்ணுமே இல்ல.''

''அப்ப சரிதான். ஆள விடுமா. நானாவது என் வேலையைப் பாக்கறேன்.''

''அச்சச்சோ! சொல்லிடறேன், அத்தான். நான் ஒருத்தர... எங்கூடப் படிச்சவர்...''

''ம்.''

''அவர விரும்பறேன் அத்தான். நீங்கதான் எப்பிடி யாவது அப்பா அம்மாகிட்ட சொல்லி சம்மதத்த வாங்கிக் குடுக்கணும். அதோட...''



''சொல்லு.''

''நீங்களும் என்ன மன்னிக்கணும்.''

''ம், அப்புறம்.''

''ஸாரி அத்தான், நான் செஞ்சது பெரிய...''

''இரு இரு. ஒவ்வொண்ணா சொல்லு. முதல்ல நீ ஒண்ணும் விளையாடலயே.''

''அச்சச்சோ! இல்ல. நான் சொன்னதெல்லாம் முழு உண்மயத்தான்...''

''சரி. யாரந்த துரதிர்ஷ்டசாலி...''

''ஹலோ... வேண்டாம், அவர் பேரு அர்விந்த். நம்ம அளவுக்கு அந்தஸ்து உடையவர் தான்.''

''சரிதான், ஆனா உங்கூடப் படிச்சவர்னு சொல்ற. இத்தன நாளும் ஒண்ணும் சொல்லாம, படிச்சு முடிச்சு ரெண்டு வருஷம் கழிச்சு இப்ப சொல்ற?''

''ம், இப்பதான் வீட்ல மும்முரமாகக் கல்யாணப் பேச்சு எடுத்திருக்காங்க.''

''அதனால?''

''சாட்சிக்காரன் கால்ல விழறத விடவும் சண்டக்காரன் கால்லயே விழுந்துடலாம்னு முடிவு பண்ணி வந்தேன்.''

.......................

''என்ன அத்தான்?''

''என்ன இப்பிடி ஏமாத்திட்டயேம்மா. இது நியாயமா?''

''அத்தான்...''.

''அதெல்லாம் முடியாது, இதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன்.''

''என்ன சொல்றீங்க... நீங்க...''

''இவ்வளவு நாளும் ஆசைய வளத்து விட்டுட்டு இப்ப திடீர்னு...''

''நான்... நான் அவர உயிருக்குயிரா லவ் பண்றேன்... அவர் இல்லாம என்னால வாழவே முடியாது. அம்மா அப்பாகிட்ட சொல்லி எங்கள சேத்து வைக்க உங்களால மட்டும் தான் முடியும்னு நான் உங்கள நம்பி வந்தேன். ஆனா இப்ப நீங்களோ...''

''ஏய், கூல்மா கூல். அழாத...''

............

''ஸ்ரீ இங்க பாரு...''

''நான் பெரிய தப்புப் பண்ணிட்டேனே. கடவுளே! நான் இப்ப என்ன செய்வேன்?''

''எதுவும் செய்ய வேண்டாம். பேசாம உக்காந்து வேடிக்கைய மட்டும் பாரு. உங்க ரெண்டு பேரையும் சேத்து வைக்க நானாச்சு.''

''நிஜமாவா சொல்றீங்க?''

''நிச்சயமா.''

''ஆனா கொஞ்சம் முன்னாடி...''

''அது சும்மா, நீ என்ன தான் சொல்றேன்னு பாக்கலாம்னு கொஞ்சம் விளையாடினேன்.''

''ஓ, ஆனாலும் ஒரு நிமிஷம் ஆடிப் போய்ட்டேன் அத்தான்.''

''கவலப்படாத. உன் பிரச்சன இனிமேல் என் பிரச்சன.''

''எப்பிடி நம்பறது? ஸாரி. உங்க மேல எனக்கு முழு நம்பிக்கை இருக்கு...''



''அப்பதான என் ரூட் கிளியராகும்.''

''என்ன சொல்றீங்க?''

''ஏன்னா எனக்குப் பிடிச்சவள நான் கல்யாணம் பண்ணிக்க வேண்டாமா?''

''வாவ் அத்தான், யாரந்த லக்கி கேர்ள்?''

''இனி எங்க இருக்காளோ, அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.''

''திரும்பவும் விளையாடாதீங்க அத்...''

''வெய்ட் மேடம் வெய்ட். அப்படி ஒருத்திக்காக நான் முதல்ல தயாராக வேண்டாமா?''

''ஓ, அப்படியா விஷயம்?''

தயானந்த் சொன்னது காதில் விழ, ஏனோ உடலும் உள்ளமும் ஒருசேரச் சிலிர்த்துப் போயின சுபாஷிணிக்கு.

அந்தப் பெண் நாமாக இருந்தால் எப்படியிருக்குமென்று நினைத்தவளுக்கு அவளையறியாமலேயே ஒருவித ஆனந்தம் வந்து தொற்றிக் கொண்டதைப் போலிருந்தது.

எது எப்படியோ இப்பொழுது மூன்றாவது மனுஷியான தன்னுடைய உதவி இல்லாமலே தயானந்த் தான் நினைத்ததைச் சாதித்துக் கொண்டு விட்டது புரிந்தது.

ம்கூம். கடவுளாக அவனை ஒரு பிரச்சனையிலிருந்து வெளியே கொண்டு வந்து விட்டு விட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

''அப்புறம் சொல்லு, உன்னவர் இப்ப எங்க என்ன பண்ணிட்டிருக்கார்?''

சந்தோஷமாக ஸ்ரீமதி அனைத்தையும் சொல்ல, ''நீ சொல்றத வெச்சுப் பாத்தா அவர அத்தையும், மாமாவும்

மறுக்க வேண்டிய கட்டாயம் வராதுன்னு தான் தோணுது.'' என்றான்.

''அது சரிதான். என் செலக்ஷனாச்சே! சோட போகுமா?''

மேலும் மேலும் கூட சில விஷயங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்ட தயானந்த்தின் மீது இப்பொழுது மரியாதை இன்னும் சற்று அதிகமாகியிருந்தது சுபாஹிணிக்கு.

அதில் அந்த அளவிற்குத் தனது அத்தை பெண் தவறாக எதிலும் போய் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று நினைக்கும் உண்மையான அக்கறை தெரிந்தது.

''அப்புறம் அத்தான்...''

''சொல்லு...''

''அப்ப அம்மாகிட்ட நீங்களே எல்லாத்தையும் சொல்லிடறீங்களா?''

''பின்ன? ஆனா...''

''என்ன அத்தான்... ஏதாவது பிரச்...''

''ஏய், என்ன நீ தேவையில்லாததுக்கெல்லாம் பயந்து நடுங்கற? முதல்ல உங்க லவ் மேட்டர் எனக்கும் ரொம்ப நாளாவே தெரியும்ங்கற மாதிரி காட்டிக்கலாம்.''

''ஏன்?''

''அப்பதான் அவங்களும் இத உடனே நம்புவாங்க, இல்லன்னா கல்யாணப் பேச்சு நிறுத்தறதுக்காக நம்ம ரெண்டு பேரும் சேந்து போட்ட திட்டம்னு கூட அவங்க நினைச்சுடலாம் இல்லையா?''

''நீங்க எத சொன்னாலும் கேள்வி கேக்காம நம்புவாங்க அத்தான். இருந்தாலும் உங்க விருப்பப்படி செஞ்சுக்கலாம்.''



அதே நேரம் தனது டேபிளில் இருக்கும் லேண்ட் லைனுக்கு அழைப்பு வர அட்டெண்ட் செய்து பேசினான் தயானந்த்.

சில வினாடிகள் பேசியவன் பிறகு போனை வைத்து விட்டுத் தனது பி.ஏ. சுபாஹிணியை அழைத்தான்.

அவள் உடனே வந்து நிற்க, சில விவரங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டான்.

''சரிதான். ஆனா அத இன்னைக்குக் கண்டிப்பா ரெடி பண்ணிடு.''

''ஓ.கே.சார்!'' என்றவளைத் தனது அத்தை பெண் ஸ்ரீமதிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். அதே போல ஸ்ரீமதியை சுபாஹிணிக்கும்.

''நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று ஸ்ரீமதியைப் பார்த்து சுபாஹிணி தன் மனதில் உள்ளதை அப்பிடியே சொல்ல, ''நீங்க மட்டும் என்னவாம், நீங்களும் ரொம்ப ரொம்ப அழகா இருக்கீங்க!'' என்று தானும் உடனே சொன்னாள் அவள்.

''ஹலோ மேடம்ஸ், போதும். விட்டா ஆளாளுக்குப் பொய்க்கு மேல பொய் சொல்லிட்டே போவீங்க போலிருக்கு.''

''ஹலோ ஸார்! நாங்க ஒன்னும் பொய் சொல்லல, அந்த அவசியமும் எங்களுக்குக் கிடையாது, என்ன சுபா?'' என்று ஸ்ரீமதி தன்னைப் பார்க்க, ''அதான?'' என்றாள் சுபாஹிணி.

''ஐயோ! கூட்டணியா?'' என்று பயந்தவன் போலக் கேட்டவன், ''சாதாரணமாவே கூட்டணின்னா நமக்கு அலர்ஜி. அதுலயும் பொண்ணுங்களோட கூட்டணி வேற. நானில்லடா சாமி!'' என்றான்.

''போதும் அத்தான். எனக்குப் பசிக்குது, இன்னைக்கு என்ன லஞ்ச்?''

''இன்னுமொரு பத்து நிமிஷத்துல வீட்ல இருந்து லஞ்ச் வந்துடும்மா.''

''சரிதான். ஒரு புடி புடிச்சுடலாம்.''

''எனக்கு வெளிய ஒரு முக்கியமான வேல. போய்ட்டு வந்துடட்டுமா?''

''போய்ட்டு வாங்க அத்தான், நீங்க வந்ததும் சேந்தே சாப்புட்டுக்கலாம்.''

''ம்கூம். நான் போறது ஒரு லஞ்சமீட். திரும்ப மூணு மணிக்கு மேல ஆகும்.''

''அப்ப நானும் சுபாஹிணியும் சேந்து சாப்பிட்டுக்கறோம். என்ன சுபா. எனக்குக் கம்பெனி குடுப்பீங்க தான?''

''பின்ன?'' என்று அவள் சந்தோஷமாகச் சொல்ல, அடுத்த சில வினாடிகளில் கிளம்பியிருந்தான் தயானந்த்.

கிளம்பும்போதே, ''முடிஞ்சா இதையெல்லாம் செஞ்சு வை,'' என்று சில வேலைகளையும் சுபாஹிணியிடம் கொடுத்து விட்டுச் சென்றான்.

அந்தச் சில மணி நேரங்களிலேயே பெண்கள் இருவரும் வா போ என்று அழைத்துக் கொள்ளுமளவிற்குத் தோழி களாகி விட்டிருந்தனர்.

அந்த அளவிற்கு இருவருக்குமே ஒருவரையொருவர் (மிகவும்) பிடித்துப் போனது.

தயானந்த் சொன்னது போலவே லஞ்ச் வர இருவரும் சேர்ந்து மதிய உணவை முடித்துக் கொண்டு பிறகு வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தனர்.



சுவாரஸ்யமாகத் தங்களுக்குள் பேசிக் கொண்டே வேலைகளைச் செய்ததில், இருவருக்கும் மூன்று மணி நேரங்களும் நிமிடத்தில் பறந்து விட்டதைப் போலிருந்தது.

''என்ன மேடம்ஸ் என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

தயானந்த்தின் குரலில் பெண்கள் இருவரும் ஒரு சேரத் திரும்பினர்.

''ஜாலியா டைம் போச்சு தெரியுமா, இல்ல சுபா?'' என்று ஸ்ரீமதி தன்னைப் பார்க்க, ஆமாமென்பதைப் போலப் புன்னகையுடன் தலையை ஆட்டினாள் சுபாஹிணி.

''ஓ! அப்ப வேல நடக்கல...''

தயானந்த் முடித்துக் கூட இருக்கவில்லை,

''யார் சொன்னது? வேலைகளையும் கம்ப்ளீட்டா செஞ்சு முடிச்சுட்டோமாக்கும்!'' என்றாள் ஸ்ரீமதி.

''அச்சச்சோ! சரிமா. அடிச்சுடாத!'' என்ற தயானந்த், ''எப்படியோ நான் அந்த மனுஷன் அர்விந்த்துக்கு ரொம்பவும் நன்றிக் கடன் பட்டிருக்கேன்!'' என்று உணர்ந்து சொன்னான்.

''வேண்டாம் அத்தான்.''

''பின்ன லைஃப்ல எனக்கு எவ்வளவு பெரிய உதவி, அதுவும் அவர அறியாமலேயே செஞ்சிருக்கார்.''

''வேண்டாம். அப்புறம் உத விழும்.''

''கல்யாணத்துக்கு முன்னாடியேவா, ரொம்பவும் பாவம் தான் அந்த மனுஷ...''

''நான் சொன்னது உங்களுக்காக்கும்.''

''அடடா! என்ன குணம்...''

''ஸாரி அத்தான்.''

''ஏன் நல்லாதான இருந்த, அதுக்குள்ள என்னாச்சு?''

''விளையாட்டுக்குப் போய் உங்கள ஏதேதோ சொல்லிட்டேன்.''

''ஓ! நிஜமா செய்ய முடியலையேன்னு ஃபீல் பண்றியா?''

''ஐயோ! அத்தா...''

''முதல்ல அந்த அத்தான், பொத்தான விடு. பேர் சொல்லிக் கூப்புடு.''

''ஐயோ! பேர் சொல்லியா?''

''ஏன் அதுக்கு வாடா, போடா பெட்டர்னு சொல்றியா?''

''என்ன அத்தான் நீங்க. பேர் சொல்லிக் கூப்புடவே என்னால முடியாதுங்கறேன். அப்பிடியிருக்கும் போது நானா அப்பிடியெல்லாம் கூப்புடப் போறேன்?''

''என்ன தயா, உன்ன ஒரு வழி பண்றாளா?'' என்ற குரலில் இருவரும் திரும்பிப் பார்க்க, ஸ்ரீமதியின் பெற்றோர் புன்னகையுடன் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள்.

''இது என்னங்க கேள்வி? பின்ன உங்க மக என்ன சாதாரணமான வாயா?'' என்று தந்தையைப் பார்த்த தாயை, ''மம்மி, வேண்டாம்!'' என்றாள் ஸ்ரீமதி.

''வாங்க மாமா. உக்காருங்க. போன வேல முடிஞ்சதா அத்தெ?''

''அதெல்லாம் நல்லபடியா முடிஞ்சதுப்பா. அப்புறம் ரெண்டு பேரும் சாப்டீங்களா?''



''அதெல்லாம். நீங்க?''

''நாங்களும் சாப்டாச்சு தயா. விசேஷ வீட்ல சாப்பிடாம எப்படி விடுவாங்க?''

''அத்தான் வெளிய ஒரு பிஸினஸ் மீட்டிங்னு போய்ட்டு அங்கயே சாப்டுட்டு வந்துட்டார் மம்மி. நானும் சுபாஹிணியும் தான் இங்க சேந்து சாப்புட்டோம்!'' என்ற ஸ்ரீமதி, சுபாஹிணியை அழைத்து வந்து தன்னைப் பெற்றவர்கள் இருவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''நீ ரொம்ப அழகா இருக்கமா!'' என்று தன்னைப் பார்த்துச் சொன்ன ஸ்ரீமதியின் தாய் காவேரிக்குப் புன்னகையுடன் நன்றி சொன்னாள் சுபாஹிணி.

அதற்குப் பிறகு அவள் மீண்டும் சென்று தனது வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருக்க, ''உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும்!'' என்று தனது அத்தை மாமாவுடன் உள்ளறைக்குச் சென்றான் தயானந்த்.

எப்பொழுதும் தான் உண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் சுபாஹிணி, ''சுபா! நாங்க கிளம்பறோம்!'' என்ற (ஸ்ரீமதியின்) குரலில் தான் மீண்டும் நடப்புக்கு வந்தாள்.

''அப்புறம் என்ன பழமா?''

சுபாஹிணி மெல்லிய குரலில் புன்னகையுடன் கேட்க,

''ம்'' என்று வெட்கத்துடன் சொன்னாள் ஸ்ரீமதி.

தொடர்ந்து வந்த ஐந்து நிமிடங்களில் ஸ்ரீமதியின் குடும்பம் அங்கிருந்து கிளம்பியிருந்தது.

அவர்கள் அனைவருமே தன்னிடமும் விடை பெற்று கொண்டு சென்றதில் மனதிற்குள் மிகவும் சந்தோஷம் உணர்ந்தாள் சுபாஹிணி.

# 7

ஒரு வாரம் சென்றிருந்தது.

அவனுடைய அத்தை குடும்பம் வந்து விட்டுச் சென்றதிலிருந்து, தயானந்த் தன்னிடம் மேலும் நெருங்கி விட்டதைப் போல உணர்ந்தாள் சுபாஹிணி.

அனைத்து விதங்களிலுமே அவன் மீது நாளுக்கு நாள் தனக்கிருக்கும் மதிப்பும், மரியாதையும் அதிகமாகிக் கொண்டே செல்வதையும்.

எம்.டி.தயானந்த்துடன் அவள் அன்று தான் முதன் முறையாக வெளியே செல்ல நேர்ந்தது, அதாவது ஃபேக்டரிக்கு.

பல நூற்றுக் கணக்கானோர் வேலை செய்து கொண்டிருக்க, அங்கு தெரிந்த நேர்த்தியையும் அவர்கள் அனைவரிடமுமே தயானந்த்திற்கு இருந்த மதிப்பையும் மரியாதையையும் கண்டு திகைத்துப் போய் விட்டிருந்தாள் சுபாஹிணி.

அதேபோல ஃபேக்டரியின் பிரமாண்டத்தைக் கண்டும், கம்பெனியின் கணக்கு வழக்குகளைப் பார்க்க நேர்ந்த போதே, அவள் இதை எதிர்பார்த்துத் தான் இருந்தாள் என்றாலும், தொழிற்கூடத்தின் நேர்த்தியும், வேலை நடந்த பாங்கும் அவளை அந்த அளவிற்குத் திகைக்க வைத்து விட்டிருந்தன.

"என்ன மேடம்?" என்ற குரலில் சட்டென்று திரும்பினாள் சுபாஹிணி.



அங்கு தயானந்த் நின்று கொண்டிருக்க, "ஸார், சொல்லுங்க," என்றாள்.

"என்ன இவ்வளவு யோசனை?"

"இல்ல, எனக்கு இதெல்லாம் புதுசாத் தெரிஞ்சது. அதான் அப்படியே பாத்துட்டு நின்னுட்டேன்."

"அப்படியா?" என்றவன் அவளை அழைத்துக் கொண்டு போய் ஃபேக்டரி முழுக்கச் சுற்றிக் காட்டினான்.

அப்படியே ஒவ்வொரு செக்ஷனில் நடக்கும் வேலைகளைப் பற்றியும் நன்கு விளக்கினான்.

தங்களுடைய எம்.டி.யைக் கண்டதும், அங்கே நிலவிய அமைதியும் அனைவரும் கொடுத்த மரியாதையும், என்னவோ அவையனைத்துமே தனக்கே கிடைப்பதைப் போல மனதிற்குள் மிகவும் பெருமையாக உணர்ந்தாள் சுபாஹிணி.

"என்ன?"

தயானந்த் கவனித்துக் கேட்க,

"ஒண்ணுமில்ல ஸார்," என்று மழுப்பி வைத்தாள்.

"கொஞ்சம் எங்கூட வா!" என்று அவன் நடக்க, தானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள் சுபாஹிணி.

அவன் சென்றடைந்த இடம், அந்த ஃபேக்டரியின் கடைக் கோடியில் இருக்கும் அவனுடைய ஆபீஸ் அறை.

முதலில் உள்ளே சென்ற தயானந்த், "வா..." என்றழைக்க, பிறகு தானும் உள்ளே சென்றாள்.

குறுகலாகவும், அதே சமயம் உள்ளே நீண்டும் இரு
அவனுடைய அறை பார்க்கவே வித்யாசமாக இருந்

அதே சமயம் டீயை ஃப்ளாஸ்க்கிலிருந்து இரண்டு கப்களில் ஊற்றியிருந்த தயானந்த், ஒன்றை எடுத்துக் கொள்ளச் சொல்லி சுபாஷிணியின் பக்கமாக நகர்த்திக் கொடுத்து விட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டான்.

''இல்ல ஸார், நீங்க எடுத்துக்கோங்க.''

''ஏன் நீ டீ சாப்பிடுவ தான?''

''அதெல்லாம் குடிப்பேன்.''

''அப்ப எடுத்துக்கோ,'' என்று அவன் (மீண்டும்) சொல்லி முடிப்பதற்குள் எடுத்துக் கொண்டாள்.

''ஸ்ரீக்கு மேரேஜ் ஃபிக்ஸ் ஆகியிருக்கு.''

''நிஜமாவா ஸார்!''

''ஆமாம், நாளைக்கு இன்விடேஷன் குடுக்க சென்னை வர்றாங்க.''

''ஓ, அப்படியா!''

''ஏன் ஸ்ரீ உனக்கு போன் பண்ணலயா?''

''நாலு நாளைக்கு முன்னாடி கூடப் பேசினோம் ஸார், ஆனா...''

''என்கேஜ்மெண்ட் நேத்து தான் முடிஞ்சது.''

''அப்படியா, கல்யாணம் எப்ப?''

''இன்னும் இருபது நாள் இருக்கு.''

''எங்க ஸார்?''

''பேங்களூர்ல...''

''அங்கயா?''

''ஏன்?''

''இல்ல, தூரம்...''



''எப்பிடியானாலும் நீ கல்யாணத்துக்கு வந்தாகணும்னு ஸ்ரீ சொல்லிட்டிருந்தா. உங்க வீட்டுக்கே வந்து இன்விடேஷன் குடுக்கணும்னு...''

''வீட்டுக்கெல்லாம் வந்து குடுக்கணுங்கற கட்டாயமில்ல ஸார். போன்ல சொன்னாக் கூடப் போதும். ஆனா தூரம் தான்....''

''என்ன நீ தூரம், தூரம்னு சொல்லிட்டே இருக்க?''

''ஆமாம் ஸார். எப்பிடியும் ரெண்டு நாள் கடைசிக்கு ஒரு நாளாவது லீவ் எடுக்க வேண்டிய அவசியம் வருமே.''

''எதுக்கு?''

''என்ன ட்ரேவலிங்லயே டைம் போயிடுமே.''

''எதுக்கு ஃப்ளைட்ல போய்ட்டு வர அரை நாள் இருந்தாப் போதுமே.''

''ஃப்ளைட்லயா?''

''ம்.''

''அது உங்களுக்கு ஸா...''

''ஏன் உனக்கு ஃப்ளைட்ல இடமில்லேன்னு சொல்லிட்டாங்களா? பாஸ்போர்ட் இருக்கு தான?''

''இருக்கு ஸார்.''

''நான் முதல் நாளே போய் முழுக்க அங்க இருக்க வேண்டியதிருக்கும், மறுநாள் போகும்போது நீயும் எங்கூடவே வந்துட்டு வந்துடு.''

''யோசிச்சு சொல்...''

''யோசிக்க ஒண்ணுமில்ல, வர்ற.''

............

"என் உங்க வீட்ல ஏதாவது சொல்வாங்களா?"

"அதெல்லாம் இல்ல ஸார், உங்களுக்குத் தான் வீண் சிரமம்..."

"மொத்தத்துல பாத்தா ஸ்ரீ கல்யாணத்துக்கு வர்றதுல உனக்கு அவ்வளவா விருப்பமில்ல போலிருக்கு. அப்பிடித் தான?"

"அச்சச்சோ, நானே எப்படா அவ கல்யாணம் வரும்னு ஈகரா எக்ஸ்பெக்ட் பண்ணிட்டிருக்கேன். ஏன், கல்யாணத்துக்குப் போட்றதுக்குன்னு இப்பவே தேவையானத ரெடி பண்ணக் கூட ஆரம்பிச்சுட்டேன். தெரி..."

"ஓஹோ..." என்று சிரித்தவனைச் சிறு வெட்கத்துடன் பார்த்தாள் சுபாஹிணி.

"அப்புறம் நீ எப்ப இன்விடேஷன் தரப்போற?"

"குடுக்கலாம் ஸார்."

"ஓ, அப்பக் கல்யாணத்துக்கு நீ தயார். அப்பிடித்தான?"

"அதெல்லாம்..."

"அச்சச்சோ! அடிச்சுடாதீங்க மேடம், சும்மா தான் கேட்டேன்."

"என்னக் கேக்கறீங்க, நீங்க எப்ப..."

"ம்."

"உங்க கல்யாணம் எப்பன்னு கேக்கறேன்."

"அத என் ஆள்கிட்ட தான் கேக்கணும்."

"அது யாரு?"

"தெரியலையே. இனி எங்க பிறந்து வளந்திருக்காளோ? இல்ல..."



"என்ன ஸார், சொல்லுங்க?"

"இல்ல, நீயாக் கூட இருக்கலாமோ என்னவோ..."

"போதும்..."

"சும்மா விளையாட்டுக்குச் சொன்னேம்மா. எதுக்கும் உங்கிட்ட ஒரு டிஸ்டன்ஸ் மெயின்டெய்ன் பண்ணிக்கறது தான் நல்லதுன்னு தோணுது. கோபத்துல கைய ஏதாவது நீட்டினாலும் சேஃப்..."

"இந்த மாதிரியெல்லாம் இனிமேல் பேசாதீங்க, எனக்குப் பிடிக்காது."

"சரி. விடுங்க மேடம், இனிமேல் இல்ல."

அப்படிச் சொன்னவனை லேசான குற்ற மனப்பான்மையுடன் பார்த்தாள் சுபாஹிணி.

## 8

"சுபா!"

"சொல்லுங்க மம்மி."

"பர்ச்சேஸ் போய்ட்டு வரலாமாம்மா? மளிகை, காய்கறி எல்லாமே காலி."

"இன்னைக்கா?"

"ம்கூம், இப்பக் கிளம்பணும்."

"என்ன மம்மி நீங்க..."

"ஏம்மா போன வாரமே கேட்டேன், இந்த வாரம் போலாம்னு சொன்ன."

“சும்மா ஒரு வார்த்த சொன்னே...”

“சரி. நான் இப்பக் கிளம்பறேன். இப்ப நீ வர்றியா வரலையா?”

“சரி மம்மி, வர்றேன்.”

அடுத்த சில நிமிடங்களில் வெளியே வந்து தனது ஸ்கூட்டியை எடுத்து நிறுத்தியிருந்தாள் சுபாஹிணி.

“என்னமா இது?”

“என்ன மம்மி?”

“டூ வீலர எடுக்கற.”

“பின்ன?”

“மளிகை, ஃப்ரூட்ஸ், வெஜிடபிள்ஸ்னு இன்னும் எவ்வளவோ வாங்க வேண்டியதிருக்கு. கார எடுத்துட்டுப் போலாம்.”

“கார் தான் டாடி எடுத்துட்டுப் போய்ட்டாரே.”

“ஏன் இந்தக் கார்...”

“இதுவா, வேண்டாம் மம்மி.”

“என்னமா புதுக் கார் வாங்கற வரைக்கும் இதுதான நம்ம மெயின் காரா இருந்தது.”

தாய் கேட்பதற்குள், “சரி, வாங்க,” என்று அந்த மாருதி எய்ட் ஹண்ட்ரடைத் தூசி தட்டி வெளியே எடுத்து நிறுத்தப் போனாள்.

“சரி மம்மி, சீக்கிரம் வாங்க.”

“என்னமா கார் ஓட்றதுக்கு நல்லாதான இருக்கு?”

“டாடியோட லேன்ஸர ஓட்டிட்டு இது எப்பிடி நல்லாக்கும்? ஏதோ வேற வழியில்லாததுக்கு வேணும்னா ஓட்டலாம்.”



“கூட வர்றதுக்கு ரொம்பவும் புடிக்கலேன்னா நீ இருந்துக்கோம்மா. பரவாயில்ல. நான் மட்டும் போய்ட்டு வந்துட்றேன்.”

“என்ன நீங்க, நான் என்ன இப்ப வர முடியாதுன்னு சொன்னேனா?”

“ஏன் சொன்னாத்தானா?”

அப்படிக் கேட்ட தாயை ஒரு முறை பார்த்துவிட்டுப் பிறகு காரை ஸ்டார்ட் செய்திருந்தாள் சுபாஹிணி.

நேராகக் காரை அவர்கள் எப்பொழுதும் செல்லும் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோருக்கு விட்டவள், தொடர்ந்து வந்த இரண்டு மணி நேரங்களுக்குள் தாயுடன் சேர்ந்து தேவையான அனைத்தையும் பர்ச்சேஸ் செய்து முடித்தாள்.

“என்ன மம்மி இன்னும் ஏதாவது வாங்கணுமா?”

“இல்லமா. நான் நினைச்சு வந்த எல்லாத்தையும் வாங்கியாச்சு.”

“சரி. எதுக்கு இத்தனை கவர்களத் தூக்கிட்டு நடக்கணும். நீங்க இங்கயே நில்லுங்க. நான் போய் கார எடுத்துட்டு வர்றேன்.”

மகள் சொல்லிவிட்டுச் செல்ல ஒரு ஓரமாகத் தள்ளி நின்றார் நளினி.

திடீரென்று “ஹலோ மேடம்” என்று பக்கவாட்டிலிருந்து வந்த குரலில் திரும்பியவர், அங்கு ஆறடிக்கும் அதிகமான உயரத்தில் மிகுந்த பணக்காரக் களையுடன் அதே சமயம் பணிவுடனும் நின்றிருந்த இளைஞனைப் புரியாது பார்த்தார்.

ஆனாலும் அவனுடைய முகம் நன்கு பார்த்துப் பழக்கப்பட்டது போலவும் தோன்ற, "நீங்க?..." என்று கேட்டார்.

"என்ன மேடம் எப்பிடி யிருக்கீங்க? என்ன தெரியலையா?" என்று அந்த இளைஞன் சற்றே ஏமாற்றத்துடன் கேட்க,

"ஓ தயானந்த், ஞாபகம் வந்துடுச்சு. எப்பிடியிருக்கீங்க?" என்று கேட்டார் நளினி.

"நல்லார்க்கேன் மேடம். மரியாதையெல்லாம் வேண்டாம். என்ன எப்பவும் போல வா போன்னே கூப்புடுங்க."

"ம்கூம். அது நல்லார்க்காது தயா. படிக்கற காலத்துல கூப்புட்டது வேற. அப்புறம் இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

தயானந்த் சொல்ல, "நினைச்சேன். ஆன தயா ஃபேமிலி பேக்ரவுண்ட் எப்பவுமே பெருசுதான?" என்றார்.

"ஏதோ மேட..."

"ம்கூம், ஆன்ட்டி."

"ஓகே ஓகே மே... ம்கூம். ஆன்ட்டி, அப்புறம் என்ன இங்க நின்னுட்டிருக்கீங்க? எனி ஹெல்ப்..."

"பொண்ணு கார எடுத்துட்டு வரப் போயிருக்கா தயா. அப்புறம் உங்கள சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம்..."

"என்ன ஆன்ட்டி அப்பக் கிளம்புன்னு சொல்றீங்களா?"

"அச்சச்சோ, இல்ல தயா!" என்று புன்னகையுடன் நளினி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, காருடன் அருகிலேயே வந்திருந்தாள் சுபாஹிணி.

"என்ன மம்மி, ஒவ்வொன்னா எடுத்துத் தர்றீங்களா?" என்று காரிலிருந்து இறங்கியிருந்தவள், அதற்குப் பிறகு தான்



அங்கு தாயருகில் நின்றிருந்த தனது எம்.டி.தயானந்தைப் பார்த்தாள்.

ஆச்சரியத்துடன், "ஸார், நீங்க எங்க இங்க?" என்று கேட்ட மகளை, "உனக்கு இவரத் தெரியுமா?" என்று கேட்டார் நளினி.

"என்னோட எம்.டி.மம்மி, ஸார் கம்பெனில தான் நான் இப்ப வொர்க் பண்ணிட்டிருக்கேன்."

"அப்படியா?!" என்று ஆவல் கலந்த சந்தோஷத்துடன் கேட்ட நளினி, "ரொம்ப சந்தோஷம். நீங்க அவ்வளவு பெரிய கம்பெனிக்கு எம்.டி.ன்னு நினைக்கும் போது எனக்குப் பெருமையா இருக்கு!" என்று தயானந்தைப் பார்த்து உணர்ந்து சொன்னார்.

"சாதாரண விஷயத்த மிகைப்படுத்திச் சொல்றீங்களோன்னு தோணுது மே..."

"ம்கூம். ஆன்ட்டி."

"சரி தான். ஆன்ட்டி தான் எனக்கும் பிடிச்சிருக்கு!" என்றவன், "ரெண்டு பேரும் தள்ளுங்க. எல்லாக் கவர்களையும் நான் எடுத்து உள்ள வைக்கறேன்!" என்று முன்னே வந்தான்.

"அச்சச்சோ! வேண்டாம். நீங்க இரு..."

"ம்கூம்..." என்று தானே கைநீட்டி சுபாஹிணியிடமும் கொடுக்காமல் வினாடியில் அனைத்ததையும் எடுத்துக் காருக்குள் வைத்திருந்தான் தயானந்த்.

"ஸார். நீங்க ஏன் இதை..."

"ம். இனி என்ன பர்ச்சேஸ்..."

"ம்கூம். இனி வீட்டுக்குத் தான்!" என்று சுபாஹிணி சொல்ல, "வாங்க தயா, வீட்டுக்குப் போய்ட்டுப் போகலாம்," என்று அழைத்தார் நளினி.

''நிஜமாவா ஆன்ட்டி!''

''ஹலோ... பின்ன சும்மாவா கூப்புடுவாங்க?'' என்றாள் சுபாஹினி.

''அப்ப ரொம்ப சந்தோஷம்!'' என்றவன் மொபைலில் தனது டிரைவருக்கு அழைத்து இப்ப வர வேண்டாம், நான் சொல்ற இடத்துக்கு அப்புறமா வாங்க என்று சொல்லி விட்டுத் திரும்பினான்.

''என்ன ஆன்ட்டி, கிளம்பலாமா, உண்மையிலயே நான் உங்க வீட்டுக்கு வர்றேன்.''

''அதுக்கு நாங்க குடுத்து வெச்சிருக்கணும் தயா...''

''எப்படி வருவீங்க? கார்...''

''ஏன், உங்க கார்ல தான்!'' என்று சுபாஹினியைப் பார்த்துச் சொன்னவன், அவளிடமிருந்து கார் சாவியை வாங்கிக் கொண்டு டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்ந்தான்.

''ஸார், நீங்க எதுக்கு இத ஓட்றீங்க, உங்க ஹைட்டுக்குக் கஷ்டந்தான...''

''ஏன், இந்தக் காருக்கென்ன, ஊர்ல பல வருஷங்களா நாங்க இந்தக் காரத்தான் ஓட்டிட்டிருக்கோம். ஏன் இப்பக் கூட.''

''அப்பிடிச் சொல்லுங்க தயா!'' என்று பின் ஸீட்டில் ஏறி அமர்ந்திருந்த நளினி, அந்தக் காரைப் பற்றி மகளின் அபிப்ராயத்தைச் சொல்லியே விட்டிருந்தார்.

சொல்ல வேண்டாமென்று மகள் காட்டிய ஜாடையெல்லாம் அவருடைய கண்களில் துளிகூடப் பட்டிருக்கவில்லை.

''அது சரிதான். இந்தக் காலத்து ஜெனரேஷனுக்கு இது ஓல்ட் மாடல் கார் தான் பிடிக்காது ஆன்ட்டி!'' என்று



தயானந்த் காரை ஸ்டார்ட் செய்திருக்க, ''அப்ப நீங்க எந்தக் காலத்து ஜெனரேஷனாம்?'' என்று பட்டென்று கேட்டிருந்தாள் சுபாஹினி.

''நான் கொஞ்சம் டிஃபரண்ட் டைப், பழச எப்பவும் அவ்வளவு சீக்கிரம் மறக்க மாட்டேன்.''

''அப்ப நாங்க மட்டும் எப்பிடியாம்?''

''அது தான் எப்பிடின்னு ஆன்ட்டி சொன்னாங்களே.''

''அது சும்மா...''

''அப்ப சரிதான், விடு.''

அதற்குப் பிறகு வீடு வந்து சேரும் வரை குருவும் சீடனுமாகத் தாயும் தயானந்தும் கல்லூரிக் காலங்களில் நடந்தவற்றைச் சுவைபடப் பேசிக் கொண்டே வர, தானும் அதை லேசான புன்னகையுடன் பார்த்தபடி வந்தாள் சுபாஹினி.

அடுத்த சில நிமிடங்களில் நளினியின் வீட்டின் முன்பாகக் காரை நிறுத்தியிருந்த தயானந்த், ரசனையுடன் வீட்டைப் பார்த்துக் கொண்டே இறங்கினான்.

பசுமை நிறைந்த செடி கொடி மரங்கள் எனப் பார்க்கவே ரம்மியமாக இருந்த வீட்டின் அழகு மனதை வருடுவதாய் உணர்ந்தான்.

''வீடு ரொம்ப அழகா இருக்கு!''

''சுபாவோட டேஸ்ட் தயா. எங்கயோ வெளியூர் போனப்ப இந்த மாதிரி பார்த்தாளாம். இப்படித்தான் கட்டணும்னு நின்னு அப்புறம் இதே மாடல்ல கட்டி ரெண்டு வருஷமாச்சு.''

தாய் சொல்ல, பெருமையுடன் தன்னைப் பார்த்த தயானந்தின் பார்வையைச் சந்தித்தாள் சுபாஹினி.

''எதுக்கும் உள்ள வந்து பாத்துட்டு அதுக்கப்புறம் வேணும்னா புகழுங்களேன்.''

''பின்ன?'' என்றவன் காரிலிருந்து தானும் சில கவர்களைத் தூக்கிக் கொண்டான்.

அதைப் பார்த்த சுபாஹிணிக்கு தான் தனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அவ்வளவு பெரிய எம்.டி நமக்காக இந்த மாதிரியான வேலைகளையெல்லாம் கூடச் செய்கிறாரே என்று மிகவும் சங்கடமாகிப் போயிற்று.

சில வினாடிகளில் மூவரும் வீட்டிற்குள் வந்திருக்க, ''முதல்ல உக்காருங்க தயா. குடிக்க ஏதாவது எடுத்துட்டு வர்றேன்,'' என்று நகர்ந்தார் நளினி.

''சுபா.''

''மம்மி.''

''நீ கூடப் பேசிட்டிருமா.''

''சரி மம்மி.''

உள்ளே சென்ற நளினி அடுத்த சில வினாடிகளிலேயே ஏற்கெனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த மாம்பழச் சாறைப் பெரிய கண்ணாடி டம்பளர்களில் ஊற்றி எடுத்து வந்தார்.

சர்க்கரை குறைவாகச் சேர்க்கப்பட்ட அந்தக் குளிர்ச்சியான மாம்பழச் சாறு வெயிலுக்கும் தாகத்துக்கும் அமிர்தமாக இனிக்க, புகழ்ந்து கொண்டே குடித்தான் தயானந்த்.

''சும்மா சொல்லாதீங்க!'' என்று சுபாஹிணி சொல்ல, ''அந்தப் பழக்கமே நம்மகிட்ட கிடையாது மேடம்!'' என்றான் அவன்.

''அப்பிடிச் சொல்லுங்க தம்பி!'' என்ற தாயிடம், ''எங்க அப்பிடின்னா இன்னொரு டம்ளர் ஜூஸ் குடிக்கச் சொல்லுங்க பாக்கலாம்!'' என்றாள் சுபாஹிணி.



''ஆசையாத் தான் இருக்கு. அப்புறம் லஞ்ச் சாப்பிட வேண்டாங்கறியா?''

''அதான!'' என்ற நளினி, ''சுபா, தயா தம்பிக்கு நம்ம வீட்டையெல்லாம் சுத்திக் காட்டு. நான் போய் அரைமணி நேரத்துல லஞ்ச் ரெடி பண்ணிடறேன்,'' என்று நகர்ந்தார்.

''வேண்டாம் ஆன்ட்டி. நான் சும்மா தான் சொன்னேன்...''

''அச்சச்சோ! பேசாம இருங்க தயா. லஞ்ச் எல்லாமே தயார் தான். கடைசி சில வேலைகளும் பரிமாறத் தயாரா எடுத்து வைக்க வேண்டிய வேலைகளும் தான் மீதி.''

''இருந்தாலும் உங்களுக்குச் சிர...''

''சிரமமா? நீங்க வந்தது எங்களுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? சுபா...''

தாயின் அழைப்பில் அருகில் வந்திருந்த சுபாஹிணி, ''என்ன மம்மி?'' என்று கேட்க, ''தயா தம்பிக்கு நம்ம வீட்ட சுத்திக்காட்ட சொன்னேனே, ஒரு பதினஞ்சு நிமிஷம்மா. அதுக்குள்ள லஞ்ச் தயாராயிடும்!'' என்று தனது கை வேலைகளைப் பார்த்துக் கொண்டே சொன்னார் நளினி.

ஐயோ இந்த அம்மா வேறு, கார் விஷயத்தில் தான் காலை வாரி விட்டார் என்றால் இப்பொழுது இந்த வசந்த மாளிகையை வேறு சுற்றிக் காட்ட வேண்டுமாமே.

''என்னமா?''

''அவங்களுக்கு நான் கிளம்பாம இன்னும் இருக்கறது பிடிக்கல ஆன்ட்டி.''

''அச்சச்சோ! என்ன தயா, இப்படியெல்லாம் சொல்றீங்க?'' என்று நளினி லேசான பதற்றத்துடன் சொல்ல

"அதான, எங்க எம்.டி.ஸார் எப்பவுமே இந்த மாதிரி ஜோக்கா தான் பேசுவார்மா!" என்று சூழ்நிலையை எளிதாக்க முயன்றாள் சுபாஹினி.

அதே போல தயானந்த்தை நோக்கியும் திரும்பியவள், "நீங்க எவ்வளவு பெரிய மனுஷங்க ஸார்! உங்களுக்குப் போய் மம்மி இந்த மாளிகை வீட்ட சுத்திக் காட்டச் சொல்றாங்களேன்னு ஒரு சின்னத் தயக்கம். அவ்வளவு தான். சரி, வாங்க ஸார். வீட்டப் பாக்கலாம்!" என்று இனிமையாக அழைத்தாள்.

அதாவது பெயரளவில்.

தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசியவன் அடுத்த சில வினாடிகளிலேயே, சரி, நான் கிளம்பறேன் என்று விட்டிருக்க, மனதிற்குள் ஒரு மாதிரியாகப் போயிற்று சுபாஹினிக்கு.

கடவுளே! தன்னால் தானோ என்று பதறியும் போனாள்.

அதே நேரம் நளினி தானும் அருகில் வர, அவரிடமும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந்தான்.

"ஒரு பத்து நிமிஷத்துல சாப்பிட உக்காரலாம், சாப்பிட்டதும் கிளம்பலாமே தயா."

"ஆனா அது வரைக்கும் அப்பா வெயிட் பண்ண மாட்டாரே ஆன்ட்டி. பரவாயில்ல. இன்னொரு நாளைக்கு நிச்சயம் வந்து உங்க வீட்ல சாப்புடுவேன்."

மீண்டுமொரு முறையும் கூடத் தங்கள் இருவரிடமும் சொல்லிவிட்டு தயானந்த் கிளம்பி விட்டிருக்க, ஏனோ அவன் அப்படிச் செய்தது தன்னுடைய முகத்திலேயே ஓங்கி அறைந்ததைப் போலிருந்தது சுபாஹினிக்கு.



"பாவம். தயா சாப்பிடாமக் கூட கிளம்ப வேண்டியதாயிடுச்சு!" என்று தனது தாய் ஆதங்கப்பட, எல்லாமே சும்மா என்ற தனது ஊகத்தை ஏனோ அவளால் தனது தாயிடம் சொல்ல முடிந்திருக்கவில்லை.

பிறகு காரணம் கேட்டால் அவன் கிளம்பியதே தன்னால் தானென்று அதையும் தானே ஒத்துக் கொள்ள வேண்டியதாகி விடுமே.

வேண்டாம். தயானந்த் சொல்லி விட்டுச் சென்ற பொய்யையே தாய் நம்பிக் கொண்டிருக்கட்டும்.

"சரி, வாம்மா. நாம சாப்புடலாம்."

"ஃபைவ் மினிட்ஸ்ல டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன் மம்மி!" என்று தன்னறைக்குள் வந்தவளுக்கு ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

கடவுளே! என்னை ஏன் இப்படி யெல்லாம் சோதிக்கிறாய் என்று நினைத்தவளுக்குக் கண்களும் கூடக் கலங்கி விட்டிருந்தன.

ஆனாலும் என்னவாயிற்று என்று தாய் கேட்டால் பிறகு மாட்டிக் கொள்ள நேரிடுமே என்று உடனே கண்களைத் துடைத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"மம்மி, சாப்பிடலாமா?"

"வாம்மா," என்று நளினி இரண்டு ப்ளேட்களை எடுத்து வைத்துப் பரிமாற, "என்ன மம்மி, கெஸ்ட் ஸ்பெஷல் ஒண்ணுமில்லையா?" என்று கேட்டாள் சுபாஹினி.

"ம்கூம், கெஸ்ட் கிளம்பிட்டதால நோ ஸ்பெஷல்."

"போங்க மம்மி, நீங்க வெரி பேட்!" என்ற மகளை அவளையறியாமலேயே சில வினாடிகள் பார்த்த நளினி பிறகு தானும் சாப்பிடுவதில் முனைந்தாள்.

தாயின் அளவிடும் பார்வை சுபாஹிணியின் கவனத்திலும் படத் தவறவில்லை.

மேலும் முயன்று இயல்பு நிலைக்குத் திரும்பியவள், ''அப்புறம் மம்மி, உங்க எந்த இயர் ஸ்டுடெண்ட் எங்க எம்.டி.?'' என்று கேட்டாள்.

மகள் கேட்க, அதற்குப் பிறகு தனது பழைய புத்திசாலி மாணவன் தயானந்த்தைப் பற்றித் தானும் பெருமையுடன் அனைத்தையும் சொல்லத் தொடங்கி விட்டிருந்தார் நளினி.

தாய் சொல்லச் சொல்ல ஏனோ சுபாஹிணியின் மனம் மேலும் பாரமாகி விட்டிருந்தது.

போதும் இனி வேண்டாமே என்று தாயின் பேச்சை நிறுத்தவும் முடியாமல், அவர் சொல்வதைத் தொடர்ந்து கேட்கவும் முடியாமல் திணறிப் போனாள்.



## 9

''குட்மானிங் ஸார்.''

''வெரி குட்மானிங்.''

''ஸார், இன்னைக்கு ஃபேக்டரில ஏதோ வேலையிருக்குன்னு ஞாபகப்படுத்தச் சொன்னீங்க.''

''சரி தான், அப்புறம் நேத்து நான் கேட்ட ரிப்போர்ட் ரெடியா?''

''ரெடி ஸார்!'' என்ற சுபாஹிணி தன் கையில் தயாராக இருந்த ஃபைலை எம்.டி.தயானந்த்தின் பார்வைக்கு வைத்தாள்.



முதல் நாள் நடந்ததைப் பற்றியெல்லாம் பேசுவானென்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஒரு விதத்தில் அதுவே சந்தோஷம் அளிப்பதாகவும்.

''அப்புறம் நேத்து லஞ்ச் எப்பிடியிருந்தது?''

தயானந்த் கேட்க எதுவும் பேசாமல் சில வினாடிகள் பார்த்தவள், ''மம்மி லஞ்ச் டேஸ்ட்டா தான் இருந்திருக்கணும். ஆனா நேத்து ஏனோ ரொம்ப டல்லா இருந்தது!'' என்றாள்.

''அதாவது இருந்ததே.''

''என்ன ஸார் சொன்னீங்க?''

''ஒன்னுமில்ல.''

''இல்ல, ஏதோ சொன்ன மாதிரியிருந்தது.''

''அப்புறம் ஆன்ட்டி ஏதாவது சொன்னாங்களா?''

''ம்கூம். உங்களப் பத்தி ஒன்னுமே சொல்லல ஸார், அதுலயும் காலேஜ்ல உங்க க்ளாஸ் மேட் உங்க க்ளாஸ் மேட் ஒருத்தன டீஸ் பண்ணிட்டான்னு பெரிய ஹீரோ மாதிரி நீங்க போய் சண்ட போட்டதப் பத்தி மட்டும் ஒண்ணுமே சொல்லல.''

''அட்டா! மேடம் இதையெல்லாம் வேற கவனிச்சிருக்காங்களா?!''

''அந்தச் சண்டைல கால் ஒடிஞ்சு கம்பு வெச்சு ஒரு மாசம் நீங்க நடந்ததப் பத்திக்கூட அவங்க ஒண்ணுமே சொல்லலயாக்கும்.''

''என்ன பண்றது, மத்தவங்களுக்கு ஒரு பிரச்சனைன்னா அத என்னால தாங்கிக்கவே முடியறதில்ல. அதுலயும் எல்லாப் பொண்ணுங்களும் எனக்குத் தங்கை மாதிரி....''

"எல்லாருமேவா?"

"ம், ம் ஆவலப் பாரு. ஒரு சில பொண்ணுங்களத் தவிர."

அப்படிச் சொன்னவனைப் புன்னகையுடன் பார்த்த சுபாஹினி, "அதென்ன சில பொண்ணுங்க?" என்று கேட்டாள்.

"நிறையப் பொண்ணுங்கள மனசுக்குப் பிடிச்சிருக்கலாம். ஆனா கடைசில வொர்க் அவுட் ஆகறது ஒன்னு தான..."

அவன் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. "என்னது!" என்று விளையாட்டுக்குப் பொய்க் கோபத்துடன் கையை ஓங்கியிருந்தாள் சுபாஹினி.

அதை உணர்ந்து லாவகமாகப் பின்னால் நகர்ந்து கொண்ட தயானந்த்தின் முகத்திலும் புன்னகையே நிலவியது.

ஆனால் அதெல்லாம் அவளுடைய கண்களில் கூட விழுந்திருக்கவில்லை. அந்த வினாடியே அந்த இடத்திலிருந்து சென்று விட்டிருந்தாள்.

திடீரென்று என்னவாயிற்று என்று புரியாத பாவனையுடன் பார்த்த தயானந்த், "சுபா..." என்று அழைத்துக் கொண்டே அவளைத் தொடர்ந்து சென்றான்.

அவள் தனது இருக்கையில் அமர்ந்து அப்படியே தலை சாய்த்துக் குலுங்கி அழுது கொண்டிருப்பது தெரிய, பதறிப் போனான்.

"ஏய் சுபா, என்னாச்சு...?"

..........



"சுபாஹினி! உன்னத்தான்!" என்று தயானந்த் அவளுடைய தோளில் தட்ட, அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் அவள்.

"ஹலோ மேடம், என்னாச்சு?"

"ஒன்னுமில்ல."

"என்னப் பாத்தா அவ்வளவு முட்டாளாவா தெரியுது உனக்கு?"

........

"பேசு..."

"உங்களப் பார்த்தா பயமா தான் இருக்கு."

"ஏன்?"

...........

"தெரியல."

"சுபா!"

"எனக்குப் பயமா இருக்கு"

"பயமா, என்னமா?"

"எங்கிட்ட ஏன் இப்படியெல்லாம் நடந்துக்கறீங்க?"

"எப்படி?"

"நீங்க பாட்டுக்கு சாதாரணமா என்னென்னவோ பேசிடறீங்க, ஆனா அதை யெல்லாம் நான் எப்படி எடுத்துக்கறது?"

"ஏதேதோன்னா..." என்று புரியாமல் பார்த்தான் தயானந்த்.

"அன்னைக்கும் அப்படித்தான். ஸ்ரீமதி வந்த அன்னைக்கு ஏதேதோ சொன்னீங்க, அதுக்கப்புறமும்..."

சுபாஹினி என்ன சொல்ல வருகிறாளென்பது இப்பொழுது புரிந்து விட்டிருக்க, ஒருவித இனம் புரியாத பரபரப்பில் தயானந்த்தின் நெஞ்சு குறுகுறுத்தது.

சுபா என்று எதையோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன், பிறகு அப்போதைக்கு எதையும் சொல்ல வேண்டாமென்று முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.

கட்டுப்படுத்திக் கொண்டதோடு மட்டுமல்லாது, அந்த வினாடியே தன்னுடைய இடத்திற்கும் வந்து விட் டிருந்தான்.

சில நிமிடங்களில் தன்னிலை உணர்ந்து முழுமை யாக நடப்பிற்கு வந்திருந்த சுபாஹிணி, தானாகவே தெளிந்தாள்.

தெளிந்து நிமிர்ந்தவள், தயானந்த் அவனுடைய இருக்கையில் அமர்ந்து தனது வேலையில் மும்முரமாகி விட்டிருந்ததைக் கண்டாள்.

அப்படியானால் தன்னுடைய அழுகையைக் கூட அவன் ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்று தானே பொருள்.

இருந்திருந்து அவனுக்கு முன்பாகப் போய் அப்படி அழுது விட்டிருக்கிறோமே என்று கூனிக் குறுகிப் போனாள் சுபாஹிணி.

இப்படிக் கொஞ்சம் கூட மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாதவளாகி விட்டோமே என்று தன் மீதே வெறுப்பு தான் வந்தது.

நேராகச் சென்று குளிர் நீரை வாரி இறைத்து முகத் தைக் கழுவியவள், சில நிமிடங்கள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்ட பிறகே வெளியே வந்தாள்.

ஆனாலும் அதற்குப் பிறகும் கூட ஏனோ தயா னந்தைச் சென்று பார்க்க அவளால் முடிந்திருக்கவில்லை.



அப்போதைய தன் நிலையில் தான் அப்படியே பூமிக் குள்ளேயே போய் விட மாட்டோமா என்னுமளவிற்குத் தர்ம சங்கடமாக உணர்ந்தாள்.

''சுபா!''

தயானந்த் தன்னை அழைக்கும் குரல் கேட்க, அவ னுடைய ஆழ்ந்த குரலிலும் கம்பீரமான தோற்றத்திலும் மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், முகத்தைக் கல்லாக்கிக் கொண்டு, அவ னுக்கு முன்பாக வந்து நின்றாள்.

''வா...'' என்றவன் இயல்பான சில வினாடிப் பார்வை யில் சுபாஹிணியின் அப்போதைய மனநிலையை முழு மையாக அளவிட்டிருந்தான்.

''ஸார்...''

''இப்பவே ஃபேக்டரிக்குக் கிளம்பணும். ஒரு சின்ன ஆனா முக்கியமான வேல...''

''என்னென்ன ஃபைல்ஸ் எடுத்து வைக்கட்டும் ஸார்?''

''நீயும் தான். சீக்கிரம் கிளம்பு.''

.........

''ஏன், என்னாச்சு?''

மீண்டும் நடப்பிற்கு வந்தவளாய், ''இதோ ஸார்...'' என்று தன்னுடைய இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

வந்தவள் அந்த வினாடியே ஒரு முடிவுக்கும் வந்திரு தாள்.

வேண்டாம்.

இனியும் இந்த வேதனை வேண்டவே வேண்டாம்.

இத்தனை நாட்களும் எப்படியோ, ஆனால் இனிமேல் வரப்போகிற ஒவ்வொரு நாளும் தனக்குப் பெரும் சோதனையே என்பது புரிய, அந்த வினாடியே முகம் தெளிந்து நிமிர்ந்தாள்.

சரிதான், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிவிட வேண்டியதுதான்.

அப்படி மட்டும் நடந்து விட்டால், அதற்குப் பிறகு தான் அவனைப் பார்க்க வேண்டிய நிலை வரவே வராதல்லவா?

ஆனால்,

திடீரென்று அதிலும் நம்பிக்கை வர மறுக்க, மீண்டும் சோர்ந்தாள்.

அப்படி ராஜினாமாக் கடிதத்தைத் தான் அனுப்பினால் உடனே அதை ஏற்றுக் கொண்டு இவன் பேசாமல் இருந்து விடுபவனா என்ன!

ம்கூம், இத்தனை நாட்களில் இவனைத் தான் அறிந்த வகையில் வைத்துப் பார்த்தால் தயானந்த் அப்படி எதையும் அவ்வளவு எளிதில் விட்டு விடுபவன் அல்ல என்றே தோன்றியது.

அதோடு இப்பொழுது தான் அவனுக்குத் தன்னுடைய வீட்டைக் கூடத் தெரியுமே.

என்ன ஏதென்று தீர விசாரிக்க வீட்டிற்கே வந்து நின்றால்...

ம்கூம். மாட்டான்.



இவ்வளவு பெரிய கம்பெனியின் எம்.டி. கேவலம் அவனிடம் பணி புரியும் ஒரு சிறு பெண்ணிற்காக அந்த அளவிற்கு இறங்கி வரவே மாட்டான்.

ஆனால் அவனைப் பொறுத்தவரை அப்படியொன்றும் அவன் குருட்டு அந்தஸ்து பார்ப்பவன் போலவும் தெரியவில்லையே.

யதார்த்தமாக, நடப்போடு ஒன்றிப் பழகக் கூடியவனாக அல்லவா அவன் இருக்கிறான்.

ஏன் அப்படித்தானே தனது தாயும் கூடச் சொல்கிறார்.

சோர்ந்தவள் மீண்டும் தெளிவு பெற்று நிமிர்ந்தாள்.

அம்மா தனக்கு உதவி செய்வார்.

நிச்சயம் செய்வார்.

நான் இனி வேலைக்குப் போகவே மாட்டேனென்று ஒரேயடியாக நின்று விட்டால், துளியும் விருப்பமில்லையென்று சொல்பவளை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும், வேண்டாம் தம்பி விட்டு விடலாம் என்று விடுவார்.

அதற்கு மேல் தேவைப்பட்டால் உதவத்தான் தந்தையும் வேறு இருக்கிறாரே.

## 10

"ஹலோ மேடம்!"

தனது முகத்திற்கு முன்பாக யாரோ சொடக்குப் போடுவது போலத் தெரிய, நடப்புக்கு வந்து பார்த்தாள் சுபாஹிணி

தயானந்த் நின்று கொண்டிருப்பது தெரிய, ''ஸார்...'' என்று புன்னகை செய்யவும் முனைந்தாள்.

''என்னமா இவ்வளவு யோசனை, எந்த நாட்டப் புடிக்கப் போற?''

''அதெல்லாம் ஒன்னுமில்லையே!''

''சரி, வா கிளம்பலாம்,'' என்று அவன் அந்த இடத்தை விட்டு நகர, வழக்கமாக ஃபேக்டரிக்குச் செல்லும் பொழுது எடுத்துச் செல்லும் சில ஃபைல்களுடன் தானும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

இருவரும் காரை அடைந்திருக்க, முதலில் தான் ஏறிக் கொண்ட தயானந்த் தனக்குப் பக்கவாட்டுக் கார் கதவைத் திறந்து விடத் தொடர்ந்து தானும் ஏறி அமர்ந்து கொண்டு கதவை மூடினாள் சுபாஹிணி.

அதே நேரம் தன்னை அளவிடுவது போலப் பார்த்த தயானந்த்தின் பார்வையை எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் நேருக்கு நேராக அதே சமயம் இயல்பாகவும் சந்திக்க முயன்று அதில் ஓரளவு வெற்றியும் கண்டாள்.

அதாவது அப்படித்தான் அவளுக்குத் தோன்றியது.

ஆனால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள சுபாஹிணி செய்த முயற்சியனைத்தும் தயானந்த்தின் பார்வையில் படத் தவறவில்லை.

ஏனோ மனம் இளகி விட்டிருக்க, அப்போதைக்கு எதுவும் சொல்லாமல் அவன் சிரித்து மட்டும் வைத்தான்.

இது என்ன இப்படியொரு சிரிப்பு என்று நினைத்துக் கொண்டே அவள் வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டிருக்க, தயானந்த்தும் காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.



சில நிமிடப் பயணத்தில் கார் முக்கியச் சாலையை அடைந்திருக்க, ''ம், அப்புறம்?'' என்ற தயானந்த்தின் குரலில் திரும்பி அவனைப் பார்த்தாள் சுபாஹிணி.

''அப்படி என்னதான் யோசனை? எங்கிட்டயும் சொல்லக் கூடாதா?''

யோசனை இல்லை, பிரச்சனை. அதுவும் உன்னால...

''என்ன மேடம் பேசுங்க?''

''அதெல்லாம் ஒன்னுமில்ல ஸார்,'' என்றவள் மீண்டும் வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டிருக்க, மேலும் சில நிமிடப் பயணத்தில் ஒரு பங்களாவின் முன்பாகக் காரை நிறுத்தினான் தயானந்த்.

அதைப் பார்த்த சுபாஹிணி திகைக்க, ''என்ன பாக்கற?'' என்று கேட்டான்.

...........

''ம், என்ன...''

''இல்ல, இங்க எதுக்கு? இது யார் வீடு?''

''இறங்கி வா, சொல்றேன்.''

''முதல்ல எதுக்குன்னு சொல்லுங்க. வர்றேன்.''

''நான் உன் எம்.டி. உங்கிட்ட விளக்கம் சொல்லிட்டிருக்க வேண்டிய அவசியம் எனக்கில்ல.''

ஏனோ அவனுடைய கோபம் மனதிற்கு இதமாக இருக்க, அதற்கு மேல் எதையும் கேட்கத் தோன்றாமல் தயானந்த்தைத் தொடர்ந்து தானும் இறங்கிக் கொண்டாள்.

அதே போல அவனைத் தொடர்ந்து வீட்டிற்குள் சென்றாள்.

யாருமில்லாத வீட்டிற்குத் தன்னை எதற்காக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறானென்று புரியாமல் கேள்வியாகப் பார்த்தாள்.

அதே நேரம் அவனும் தன்னைப் பார்க்க, அவனுடைய பார்வையை நேருக்கு நேராக எதிர் கொண்டாள்.

''உங்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

கடவுளே! என்ன சொல்லப் போகிறானோ என்று நெஞ்சு தடதடக்க பெரு முயற்சி செய்து தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு சாதாரணமாக அறையை நோட்டமிட்டாள்.

அதாவது அப்படிக் காட்டிக் கொண்டாள்.

''சுபா..''

தயானந்த்தின் மிருதுவான பார்வை தன்னை என்னவோ செய்ய, முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''வா. இங்க வந்து உக்காரு,'' என்றவன் தானும் சென்று சோபாவில் ஒரு ஓரமாக அமர, எதுவும் பேசாமல் பார்த்தாள்.

''என்னமா, வந்து உக்காரு.''

''பரவாயில்ல ஸார், எனக்கு இதுவே சவுகர்யமாதான் இருக்கு. சொல்லுங்க.''

''சுபா! நான் சொல்றத நீ தப்பா எடுத்துக்கக் கூடாது!'' என்றவன், ''ம்கூம். நான் சொல்லப் போற விஷயம் உனக்கும் சந்தோஷம் தரக் கூடியதாத்தான் இருக்கும்!'' என்றான்.

என்ன சொல்லப் போகிறானோ, கடவு...



''ஏன் நீயும் அதத்தான் எதிர்பார்த்துட்டிருக்கேன்னும் தெரியும்.''

எதை எதிர்பார்த்திருக்கிறேனாம்.

ஏன் ஏதேதோ சொல்கிறான்.

''சுபா! எனக்கும் உன்ன ரொம்பப் பிடிச்சிருக்குமா. நானும் உன்ன விரும்பறேன்.''

ஏனோ உடல் லேசாகி விட்டிருக்க, அந்த வினாடியில் எங்கோ வானத்தில் பறப்பதைப் போல உணர்ந்தாள் சுபாஹிணி.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அதற்குப் பிறகு முன்னைக்கும் சேர்த்துப் புத்தி வந்தவளைப் போல இறுக்கத்துடன் நிமிர்ந்தாள்.

''என்னமா?''

நேற்று இவனும் தனது தாயும் பேசிக் கொண்டது தான் அவளுக்கு அப்பொழுது பார்த்து நினைவிற்கு வந்தது.

அதாவது அவன் சொல்வதை வைத்துப் பார்த்தால் எந்த அளவிற்குக் குறைத்து மதிப்பிட்டாலுமே கூட, அந்தஸ்தில் நூறு ஏணிகள் வைத்தாலும் கூடத் தங்களுக்கு எட்டாத உயரத்தில் இருப்பவன் இவன்.

இப்பொழுது இவனாக வருகிறானே என்று மனதைக் காட்டிக் கொடுத்து விட்டுப் பின்வரும் நாட்களில் வேதனைப் படும்படி ஆகி விடக்கூடாது.

நிச்சயம் கூடவே கூடாது.

எப்பாடு பட்டேனும் தன்னுடைய மனதை இவனிடம் காட்டாமல் மறைத்துத் தான் ஆக வேண்டும்.

ஏன் தனது தோழியின் வாழ்க்கை கூட ஒரு பெரும் பணக்காரனை நம்பித்தானே மோசம் போனது.

தான் ஏன் இப்படியெல்லாம் சம்பந்தமில்லாத எதையெதையோ இணைத்து முட்டாள்தனமாக யோசிக்கிறோமென்று எண்ணிய மனதை ஒரு குட்டு வைத்து அடக்கினாள்.

ஏன் தனது தோழியும் கூட எவனோ ஏதோ சொன்னானென்று அதை அப்படியே நம்பித்தானே இப்பொழுது அவனால் ஏமாற்றப்பட்டுப் புத்தி சுவாதீனமில்லாமல் இனித் தனக்கு வாழ்க்கையே இல்லையென்னும் நிலைக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறாள்.

ஆனால் தயானந்த் அப்படியெல்லாம் செய்யக் கூடியவன் அல்லவே...

மீண்டும் அலைபாயத் தொடங்கிய மனதை மேலும் ஒரு குட்டு வைத்து அடக்கினாள்.

தனது உயிர்த் தோழியின் நிலையைப் பார்த்த பின்னரும் கூடத் தனக்குப் புத்தி வராவிட்டால் எப்படி?

அனைத்திற்கும் மேலாகத் தனது தோழி விரும்பிய அவளுடைய காதலன் இந்த தயானந்தின் வளத்தில் பாதியளவு கூட இருக்க மாட்டானே, ஏன்... அதற்கும் குறைவாகத் தானே...

''சுபா! என்னமா, இங்க பாரு?''

''ஸார்...'' என்று திரும்பியவளின் முகபாவனை இப்பொழுது உண்மையிலேயே இயல்பாகி விட்டிருக்க முகத்தில் மேலும் புன்னகையைப் பூசிக் கொண்டாள் சுபாஹிணி.

''ஸாரி ஸார்.''



''என்னமா, எதுக்கு?''

''உங்களுக்கெதுக்கு பாவம்..''

''என்ன சொல்லு?''

''ஒன்னுமில்ல ஸார். அது எம் பிரச்ச...''

''அட அதுதான் என்ன மேடம், அதுவும் உங்க பிரச்சன?''

தயானந்தின் அந்த இயல்பான கேலியும், கனகம்பீரமான குரலும் லேசாகத் தடுமாற்றத்தைக் கொடுத்தாலும், ''சொல்லுங்க ஸார். நீங்க தான் கேலியா ஏதேதோ சொன்ன மாதிரியிருந்தது?'' என்று அப்பொழுது தான் நடப்பிற்கு வந்தவளைப் போல அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''சுபா...''

அவனுடைய அந்த லேசான கோபம் மேலும் தன்னை என்னவோ செய்வதை மனதில் ஒரு வலியுடன் உணர்ந்தாள் சுபாஹிணி.

''சரிதான். நான் சொல்றத உன்னால நம்ப முடியலன்னு நினைக்கறேன், நிஜம்தாம்மா. நீ என்ன ரொம்பவும் டிஸ்டர்ப் பண்ற. ஏன் உனக்கும் அதே நிலை தான்னு எனக்குத் தெரியும்...''

''என்ன ஸார் ஏதேதோ சொல்றீங்க?'' என்று ஆச்சரியமும் சிரிப்பும் ஒன்று சேரக் கேட்டவளைப் பார்த்தான் தயனாந்த்.

''யெஸ் சுபா, நான் உன்னை விரும்பறேன்.''

அந்த வார்த்தைகள் தன்னை அந்த அளவிற்கு சந்தோஷக் கடலில் தள்ளி விடுமென்று அவள் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை.

நெஞ்சு குறுகுறுக்க அந்த இன்ப வேதனை நாடி நரம்பெல்லாம் அலை பாய்வதைப் போல உணர்ந்தாள்.

கடவுளே! இவனை மறுக்க என்னால் முடியுமென்று தோன்றவில்லையே.

''சுபா...''

''ஸாரி ஸார். என்னை மன்னிச்சுடுங்க.''

''ஏன்?''

''நீங்க என்னத் தப்பாப் புரிஞ்சுட்டிருக்கீங்க. ஆமா ஸார், நான் ஒருத்தர உயிருக்குயிரா விரும்பறேன். தயவு செஞ்சு என்ன மன்னிச்சுடுங்க.''

அப்படிச் சொன்னவளை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தான் தயானந்த்.

''ஆமா ஸார், அவரு வீட்ல இன்னும் சம்மதம் கிடைக்கல. அதுக்காகத்தான் காத்துட்டிருக்கோம்.''

''போதும் நீ விளையாடினதெல்லாம்.''

அப்படிச் சொன்னவனை இல்லையென்று மறுப்பதைப் போல நிமிர்ந்தாள் சுபாஹிணி.

''இந்த மாதிரி விஷயத்துல எல்லாம் கூட எந்தப் பொண்ணாவது விளையாடுவாளா ஸார்?''

அப்படிக் கேட்டவளைப் பார்த்தவனுக்கு, அன்று ஸ்ரீமதி வந்த அன்று கூடத் தான் கேட்டுக் கொண்டதற்கு இப்படித்தானே ஏதோ சொன்னாளென்று நினைக்கத் தோன்றியது.

நாலு பேருக்கு இது தெரிய வந்தால் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்றும் கூட.



ஆனாலும் நீங்கள் கேட்பதில் நிச்சயம் ஏதாவது நியாயமிருக்கும். அதற்காக வேண்டுமானால் சம்மதிக்கிறேன் என்றும்.

அப்படியானால் சற்று முன்னர் இவள் சொன்ன அனைத்தும் உண்மையே தானோ?

தன் வழியில் தயானந்த் யோசிப்பது தெரிய, மனம் வலிக்க மேலும் தொடர்ந்தாள்.

''எங்க வீட்ல பிரச்சனையில்ல ஸார். என் பேரண்ட்ஸை என்னால கன்வின்ஸ் பண்ணிட முடியும். ஏன் என் விருப்பம் தெரிஞ்சாலே அவங்களும் யோசிக்காம சம்மதிச்சிடுவாங்க. அந்த அளவுக்கு அவங்க எம்மேல நம்பிக்க வெச்சிருக்காங்க.''

..........

''ஆனா இப்பப் பிரச்சனையே அவரோட வீட்ல. அவரோட அக்கா தப்பான ஒருத்தன லவ் பண்ணி மேரேஜ் பண்ணிக்கிட்டு இப்ப வாழ்க்கையை இழந்து நிக்கறாங்க. அது மட்டுமில்லாம அவருக்குக் கீழ இன்னும் இரண்டு தங்கைகளும் கல்யாண வயசுல இருக்கறதால அவங்களுக்குக் கல்யாணத்த முடிக்கணும். எனக்காக ஒரு ரெண்டு வருஷம் - அது கூட அதிக பட்சம் தான் - காத்திருக்க முடியுமான்னு கேட்டார்.

''என்னவருக்காக இது என்ன, இன்னும் கூட என்ன வேணும்னாலும் செய்யலாமே, நானும் உடனே சரின்னுட்டேன்.

''அவர் அப்படி கேட்டுக்கிட்டும் கூட ஆறு மாசத்துக்கும் மேல ஆச்சு. இப்ப அவரோட முதல் தங்கைக்குக் கல்யாணம் முடிவாயிருக்கு. வர்ற மாசம் கல்யாணம்

இன்னொரு தங்கைக்கும் மும்முரமாப் பார்த்துட்டிருக்காங்க. அதுவும் முடிஞ்சுட்டா அப்புறம்...''

ஏதோ கனவில் சஞ்சரிப்பது போலப் பேசிய சுபாஹினியின் வார்த்தைகளை இவ்வளவு நேரமும் எப்படியோ இப்பொழுது முழுமையாக நம்பி விட்டிருந்தான் தயானந்த்.

அவனுடைய மனம் சுக்கல் நூறாகிப் போயிருக்க, அதே நிலைதான் அப்பொழுது தன் எதிரிலிருப்பவளுக்கும் என்பதை அவன் துளியும் அறிந்திருக்கவில்லை.

ஏன் அதைவிடக் கூட மோசமாக என்பதையும்.

உண்மை நிலைமை இப்படியிருக்கும்போது சற்று முன்னர் அலுவலகத்தில் ஏன் அப்படி நடந்து கொண்டாள்?

ஒருவேளை இப்பொழுது அவள் சொல்வதனைத்தும் பொய்யாக இருந்தால், ஏனோ அலுவலகத்தில் அவள் பேசியதைத் துளியும் அவனால் சந்தேகிக்க முடியவில்லை.

''எங்க வீட்ல இப்ப கொஞ்ச நாளா என் கல்யாணத்தப் பத்திப் பேச ஆரம்பிச்சிருக்காங்க. அதிலிருந்து தப்பிக்க தான் இந்த வேலையும் கூட.''

''மேக்ஸிமம் இன்னும் ஒன் இயர், அதுக்கப்புறம் ரிசைன் பண்... ஸாரி ஸார்..''

''பரவாயில்ல சுபாஹினி. நான்தான் உன்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டேன். இப்ப இருக்கற நிலைமைல நீதான் என்ன மன்னிக்கணும்.''

''அச்சச்சோ! என்ன ஸார் நீங்க, பெரிய வார்த்தையெல்லாம் சொல்...''



''உன்னோட அடக்கம், நேர்மையான குணம், அழகு இப்படி எல்லாமே நான் இதுவரைக்கும் பாத்த பொண்ணுங்கள்ல இருந்து உன்ன வேறுபடுத்திக் காட்டுச்சு...

''ஆனாலும் நான் கொஞ்சம் யோசிச்சிருக்கணும்...''

தயானந்த்தின் தன்னிலை விளக்கம் தனது நெஞ்சைக் கசக்கிப் பிழிவதைப் போல மனதிற்குள் துடித்துப் போனாள் சுபாஹினி.

ஆனாலும் முயன்று இயல்பாகப் பேசினாள்.

''பரவாயில்ல ஸார். நீங்க எதுலயும் டேக் இட் ஈஸி பாலிஸி உடையவர். அதோட ஒரு ஆணா உங்க வட்டத்துல வெளிப்படையாப் பேசியும் பழக்கப்பட்டவர். அதனால மனசுல இருந்ததப் பட்டுன்னு கேட்டுட்டீங்க.

''இதுல என்ன ஸார் இருக்கு? நானும் இதப் பெரிசா எடுத்துக்கல. நீங்களும் இத இத்தோட மறந்துடுங்களேன்..''

''அது சரிதான்!'' என்று லேசாகப் புன்னகைத்த தயானந்த், ''உன் காதல் வெற்றியடைய வாழ்த்துக்கள்!'' என்றான்.

''தேங்க்யூ ஸார்.''

இந்த அளவிற்குக் கூடத் தன்னால் நடிக்க முடியுமா என்று அவளுக்கே ஆச்சரியமாகப் போயிற்று.

ஆனாலும் மனதிற்குப் பிடித்தவனை மறுத்துவிட்டு அவனிடமே தொடர்ந்து வேலை செய்யத் தான் எத்தனை சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதையும், பாவம்! அப்பொழுது அவள் அறிந்திருக்கவில்லை.

# 11

பதினைந்து நாட்கள் சென்றிருந்தன.

இப்பொழுதெல்லாம் இருவரும் வேலை விஷயத்தைத் தவிர வேறு எதைப் பற்றியுமே பேசிக் கொள்வதில்லை.

மன நிம்மதிக்காக இருவருமே அதைத்தான் விரும்பினார்கள் என்பதால் அந்த நிலை அப்படியே தொடரவும் செய்தது.

அந்த வாரக் கடைசியில் ஸ்ரீமதியின் திருமணம் வரவிருக்க, அதை நினைவுபடுத்தினான் தயானந்த்.

இரு வாரங்களுக்கும் முன்பே அவசியம் குடும்பத்தோடு திருமணத்திற்கு வர வேண்டுமென்று ஸ்ரீமதி வந்து அழைத்து விட்டுச் சென்றிருக்க, எப்படிச் செல்வதென்று தெரியாமல் குழம்பிப் போனாள் சுபாஹினி.

ஃப்ளைட் அது, இதென்றெல்லாம் அன்று தயானந்த் சொன்னது அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஆனாலும் அதையெல்லாம் அவன் இப்பொழுதிருக்கும் நிலையில் நினைவில் கூட வைத்திருக்கிறானோ என்னவோ.

ஆனால் அந்தக் குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தயானந்த் தனக்கும் சேர்த்து ஃப்ளைட் டிக்கெட் புக் செய்து விட்டிருப்பதாகத் தெரிவித்ததில், அப்பாடா என்று மனதிற்குள் சற்று நிம்மதியாகக் கூட உணர்ந்தாள் சுபாஹினி.



அந்த அளவிற்கு அந்த இனிமையான பெண்ணான ஸ்ரீமதியின் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

திருமண நாளும் வந்திருக்க, தயானந்த் ஏற்கெனவே சொல்லியிருந்தது போல அவனுடன் திருமணத்திற்குக் கிளம்பியிருந்தாள்.

அவனுடனான ஆகாயப் பயணம் தன்னை இந்த அளவிற்குக் கிளர்ச்சியூட்டுவதாக அமையுமென்று அவள் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஒருவழியாக செக்கிங் முடிந்து இருவரும் ஃப்ளைட்டில் ஏறி அமர்ந்திருக்க, லேசான புன்னகையுடன் ''ஃப்ரியா இரு!'' என்றான் தயானந்த்.

அவனுடைய அந்தப் புன்னகை தன்னை ஏதேதோ செய்வதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''ஃப்ளைட்ல இதுதான் ஃபர்ஸ்ட் டைமா?''

''ம்.''

''பயமா இருந்தா எங் கையப் புடிச்சுக்கோ.''

தயானந்த் சொல்ல, எதுவும் பேசாமல் பார்த்தாள் சுபாஹினி.

''என்ன?'' என்றவனின் பார்வை தன்னை மேலும் ஏதேதோ செய்ய, ஒன்றுமில்லை என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

அவனுடைய பார்வையும், பேச்சும் இயல்பாகத் தான் இருக்கிறதோ? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதைப் போல நாம்தான் அவசியமின்றிக் குழம்புகிறோமோ என்று அவளால் எண்ணாது இருக்க முடியவில்லை.

என்னதான் மெல்லிய ஜரிகையுடையதென்றாலும் பட்டு சுடிதாரிலும், லேசான என்றாலும் வழக்கத்திற்கு மாறான ஒப்பனையிலும், முதல் ஆகாயப் பயணமுமாகத் தனது உடல் வேர்ப்பது வெளிப்படையாகவே தெரிந்தது சுபாஹினிக்கு.

தன் நிலை கண்டு சிரித்த தயானந்தனைச் சற்றே அசடு வழியப் பார்த்தாள்.

தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ளத் தன்னால் இயன்ற மட்டும் முயன்றாள்.

ஆனாலும் ஃப்ளைட் மேலேற ஏற வயிற்றுக்குள் ஏதோ பிசைவதைப் போலிருக்க, தயானந்த் சொன்னது போலவே அவனுடைய கையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன உன் கை இவ்வளவு கூலா இருக்கு, ஃப்ரீயா இரு!" என்றவனைப் பார்த்தவளுக்குச் சூடாக இருந்த அவனுடைய கை உடல் முழுக்க ஒருவித இன்ப வேதனையைப் பரப்புவதை நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது.

எங்கே தன் நிலை அவனுக்கும் தெரிந்து விடுமோ என்னும் பயத்தில், அந்த வினாடியே அவனுக்குச் சந்தேகம் வராத வண்ணம் தனது கையை உருவிக் கொண்டாள்.

என்னதான் தயானந்த் அந்தஸ்தில் பெரிய இடமென்பதை ஏற்கெனவே அவள் அறிந்திருந்தாலும், அன்றுதான் அவனுடைய சொந்தங்கள் அனைவரையும் முதன் முறையாகக் கண்டாள்.

கண்டவள் தன்னையறியாமலேயே மலைத்தும் நின்றாள்.



அந்த அளவிற்கு அவர்கள் அனைவரும் பிரமாதமான குணமுடையவர்களாகவும், மனம் விட்டுப் பழகக் கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

அது மட்டுமல்லாமல் தயானந்த் அவனே தன்னை அனைவரிடமும் அறிமுகப்படுத்தி வைத்ததாலோ என்னவோ தனக்குக் கிடைத்த ஏகபோகக் கவனிப்பிலும் மரியாதையிலுமாகத் திகைத்தும் போனாள்.

அதிலும் தான் அழகாக இருப்பதாக ஏற்கெனவே மிக வும் அழகாக இருந்த அவர்கள் அனைவரும் புகழ்ந்ததில் ஒருவிதச் சங்கடத்தில் நெளிந்தாள் சுபாஹினி.

திரும்பி வரும்போது ஃப்ளைட்டில் தயானந்த் அதைப் பற்றி விசாரிக்க, நடந்ததை மேலோட்டமாகச் சொன்னாள்.

"சுபா!"

தயானந்த்தின் அழைப்பில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சுபாஹினி.

"நான் உன்னவரப் பாக்கணும். அதுக்கு ஏற்பாடு பண்ண முடியுமா?"

"எதுக்கு?"

"சும்மாதான். உன்ன மாதிரி ஒரு பிரமாதமான பொண்ணோட மனசத் திருடியிருக்காரே, வாழ்த்துக்கள் சொல்லணும்."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்."

"வேண்டாமா? சரி விடு."

தயானந்த் அப்படிச் சொல்ல, அதற்குப் பிறகு தான் போன உயிர் திரும்ப வந்தது அவளுக்கு.

அந்த அளவிற்கு எங்கே கண்டிப்பாகப் பார்த்தே ஆக வேண்டுமென்று ஒரேயடியாக நின்று விடுவானோ என்று பயந்து போனாள்.

பிறகு சினிமாவில் எல்லாம் வருவது போலக் காசு கொடுத்துத் தான் நடிக்க ஆளைப் பிடித்து வர வேண்டு மென்று நினைத்ததில் சிரிப்பு தான் வந்தது.

என்னதான் அப்போதைக்கு விட்டு விட்டிருந்தாலும் அவள் மனதிற்குள் நினைத்துப் பயந்து கொண்டிருந்தது போலவே, இரண்டு நாட்களுக்குப் பின்னர் அவன் மீண்டும் கேட்டதில் பேந்த விழித்தாள்.

ஆனால் அது சில வினாடிகள் தான்.

அதற்குள் ஓரளவு சுதாரித்துக் கொண்டவள், ''அதனா லென்ன, கூட்டிட்டு வர்றேனே!'' என்றாள்.

''ஆனா...''

''ம், ஆனா என்ன?''

''அவர் வெளியூர் போயிருக்கார். வர டென் டேஸ் ஆகும்.''

''அடடா, அப்ப இன்னைக்கும் நாங்க பாத்துக்க முடியாதா? சரிதான் விடு,'' என்று தயானந்த் அத்தோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டிருந் தாலும் எங்கே மீண்டும் கேட்பானோ என்ற பயம் இப் பொழுது நிரந்தரமாகவே அவளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

இடையில் வந்த சில நாட்களைப் போல இல்லாமல் இப்பொழுதெல்லாம் தயானந்த் மீண்டும் பழையபடி பேசத் தொடங்கி விட்டிருந்ததில் சுபாஹினி அவளையறி யாமலேயே மனதிற்குள் சற்று இதமாக உணர்ந்தாள்.



அன்று மாலையில் வேலை முடிந்து கிளம்பிய தன்னை தயானந்த் அழைக்க, ''ஸார்!'' என்று அருகில் சென்றாள்.

''அவசரமாகக் கிளம்பணுமா?''

''அப்படியெல்லாம் ஒன்னுமில்ல ஸார்''

''சரி. அப்ப உக்காரு, உன் வீட்டு வழியா நான் ஒரு வேலையா வர வேண்டியதிருக்கு. நானே உன்ன உங்க வீட்ல டிராப் பண்றேன்.''

''உங்களுக்கு எதுக்கு ஸார் சிரமம், அதோட நான் ஸ்கூட்டில இல்ல வந்திருக்....''

''அப்படி ஒன்னும் தெரியலையே. இன்னைக்குக் காலைல உன்ன யாரோ கொண்டு வந்து ட்ராப் பண் ணிட்டல்ல போனாங்க.''

''அட, ஆமாம் ஸார், ஆமாம்,'' என்று மறந்து விட்டவள் போலத் தலையில் லேசாகத் தட்டிக் கொண்டவள், லேசாக அசடு வழிய அவனுக்கு முன்பாக அமர்ந்தாள்.

கடவுளே! இவன் ஏன் இத்தனை கூர்மையாக இருக் கிறான் என்ற எரிச்சலை அவள் குனிந்தபடி தனக்குள் மறைத்துக் கொள்ள முயற்சி செய்ய, என்னிடமேவா என்று வெளிப்படையாகவே சிரித்துக் கொண்டான் தயானந்த்.

சுபாஹினி நிமிர்வதற்குள் தனது முகபாவனையை இயல்பாக்கிக் கொண்டவன், ''என்ன, கிளம்பலாமா?'' என்று கேட்டான்.

''ஓ. கிளம்பலாமே.''

''அப்படியே...''

''என்ன ஸார், சொல்லுங்க.''

''போற வழில அப்படியே உன்னவரப் பாத்துட்டுப் போயிடலாம்,'' என்றவன் தனது பதிலை எதிர்பார்க்காமல் முன்னே நடக்க, நெஞ்சு படபடக்க அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் தனது பதிலை எதிர்பார்க்கவில்லை என்பதி லேயே இன்று தனது இல்லாத காதலனைப் பார்த்து விடுவதில் உறுதியாக இருக்கிறான் என்பது புரிந்தது.

சரிதான், நாமும் உண்மையைச் சொல்லிவிட வேண் டியதுதான்.

சுபாஹிணியும் ஏறி அமர்ந்த பின் காரை ஸ்டார்ட் செய்தவன், ''ம் சொல்லு. எங்க இருப்பார் உன்னவர்?'' என்று அவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

...........

''சுபா, உன்னத்தான்.''

........

''என்ன பாக்கற? எங்க போனா அவரப் பார்க்க....''

''அப்படி ஒருத்தன் இருந்தா தான பாக்கறதுக்கு?''

பட்டென்று கேட்டுவிட்டு அவள் வெளிப்புறமாகத் திரும்பிக் கொண்டு விட்டிருக்க, ''அப்பாடா! இத்தன நாள் காத்திருக்க வேண்டியிருந்திருக்கு, உன் வாயில இருந்து இந்த உண்மையை வர வைக்கறதுக்கு!'' என்றான் தயானந்த்.

அப்படிச் சொன்னவனை உடனே திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

''என்ன ஸ்டன் ஆயிட்டயா?''

.........



''அது மட்டுமா, நான் ஸ்டன் ஆயிடுவேன்னு கூட எதிர்பாத்திருப்ப இல்ல?''

''நான் எதுக்கு அப்படியெல்லாம் எதிர்பார்க்கப் போறேன்?''

அவள் அப்படிக் கேட்டுக் கூட முடித்திருக்கவில்லை, சடன் பிரேக் போட்டு தயானந்த் காரை நிறுத்தியிருந் ததில் அதிர்ந்து போய் மீண்டும் திரும்பி அவனைப் பார்த்தாள்.

''சொல்லு, எதுக்குப் பொய் சொன்ன?''

.......

''பேசு.''

''ம், பொய் சொல்ல வேண்டிய கட்டாயத்த ஏற்படுத் தினதே நீங்க தான்.''

''சுபா...''

.......

''இந்த விஷயத்துல இதுவரைக்கும் நீ விளையாடின தெல்லாம் போதும், இதுக்கு மேல வேண்டாம்.''

''நான் எதுக்கு விளையாடணும்? உங்கள அவாய்ட் பண்றதுக்காகத் தான் இப்படியெல்லாம் செய்யறேன். அதக் கூட உங்களால புரிஞ்சுக்க முடியலையா?''

''அதுக்கான காரணம்?''

''உங்களப் புடிக்காததுதான்.''

''மனசத் தொட்டுச் சொல்லு...''

''அட என்ன ஸார் நீங்க, இந்த விஷயத்துல ஒரு பொண்ணு இதுக்கு மேல எப்படித் தன் மறுப்பக் காட்ட முடியும், சொல்லுங்க?''

"இது தான் பதிலா?"

"இல்ல, முடிவு."

எப்படி காரை நிறுத்தினானோ அதை விட வேகமாக ஸ்டார்ட் செய்தும் இருந்த தயானந்த், நேராகப் போய்ச் சேர்ந்த இடம் சுபாஹிணியின் வீடு.

கண்மண் தெரியாமல் கார் வந்த வேகத்தில் அவள் மிகவும் பயந்து தான் போய் விட்டிருந்தாள்.

சுபாஹிணி இறங்கிக் கொண்டது தான் தாமதம், மீண்டும் அந்த வினாடியே அங்கிருந்து கிளம்பியும் விட்டிருந்தான்.

பாறையைப் போல இறுகியிருந்த தயானந்த்தின் முகம், ஏனோ அவளுடைய மனக் கண்ணிலிருந்து துளியும் மறைய மறுத்தது.



## 12

"வாம்மா."

..........

"ஏன் சுபா, ஏன் டல்லா வர்ற?"

"உன்னத்தாம்மா..."

"தலைவலி மம்மி, நான் போய்க் கொஞ்ச நேரம் படுத்துக்கட்டுமா?"

"இருமா. சூடா ஒரு கப் காபி குடுக்கறேன். குடிச்சுட்டுப் போ."



"ம்கூம். இப்ப ரெஸ்ட், கொஞ்சம் கழிச்சு நானே வர்றேன்."

வழக்கமில்லாத வழக்கமாக மகளுக்கு ஏன் தலைவலி வந்ததென்று நினைத்த நளினி, சரிதான் சற்று நேரம் சென்று ஓய்வெடுக்கட்டுமென்று மீண்டும் தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தார்.

தன்னுடைய அறைக்கு வந்து கதவைத் தாழிட்டுக் கொண்ட சுபாஹிணிக்கு ஓவென்று அழுகை தான் வந்தது.

மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க, படுக்கையில் விழுந்து அழுது தீர்த்தாள்.

ஒரு வழியாகத் தெளிந்து எழுந்தவள், வெகுநேர யோசனைக்குப் பிறகு மனதளவிலும் தெளிந்தாள்.

ஏதோ தோன்ற, உடனே ஓடிச்சென்று மொபைலை எடுத்துத் தயானந்த்துக்கு அழைத்தாள்.

எதிர்முனையிலிருந்து ஸ்விட்ச் ஆஃப் என்று பதில் வர, மீண்டும் சோர்ந்தாள்.

சரிதான், நாளை காலை பார்த்துக் கொள்ளலாமென்று மிகவும் முயன்று தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

என்ன முயன்றும் மனம் சமாதானமடைய மறுக்க, இரவு வெகுநேரம் கழித்தே உறங்கத் தொடங்கினாள்.

ஆனாலும் அதிகாலையிலேயே விழிப்பு வந்திருக்க, மனம் துள்ள சந்தோஷமாக எழுந்து குளிக்கச் சென்றாள்.

அன்று வெள்ளிக்கிழமையும் என்பதால் தலைக்குக் குளித்து விட்டு வந்து கண்ணாடியின் முன்பாக நின்றாள்.

நீண்ட கூந்தலின் மேல் வெறுப்பு வந்து சில மாதங்களுக்கு முன்பு தான் முடியைக் கட்டையாக வெட்டிக் கொண்டு விட்டிருந்தவளுக்கு, ஏன் அப்படிச் செய்தோமென்று இப்பொழுது ஏக்கமாக இருந்தது.

தனக்கு மிகவும் பிடித்த அந்த மயில் கழுத்து வண்ண காட்டன் சேலையை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

தன்னுடைய சந்தன நிறத்திற்கும் ஒல்லியான உடல்வாகிற்கும் அந்தச் சேலை மிகவும் எடுப்பாகவும் பிரமாதமாகவும் இருப்பது தெரிய, தன்னைப் பார்க்கவே மிகவும் பிடித்துப் போனது சுபாஹிணிக்கு.

நீண்ட கூந்தலிருக்கும் போது கூடப் பூவைச் சீண்டாத மகள், ஃப்ரிட்ஜில் தான் கட்டி வைத்திருக்கும் மொட்டு மல்லிகைச் சரத்தில் கொஞ்சத்தை எடுத்துச் சூடிக் கொள்வதைக் கண்டும் காணாதது போலப் பார்த்த நளினிக்குச் சிரிப்புத் தான் வந்தது.

''மம்மி.''

''என்னமா?''

''என் மத்த ஹேண்ட் பேக்ஸ் எல்லாம் எங்க?''

''உன் ரூம்ல தான் பழைய கப்போர்ட்ல இருக்கும் பாரு.''

''எதுக்கு மம்மி இடம் மாத்தி வைக்கறீங்க?'' என்று புலம்பிக் கொண்டே தான் அணிந்திருக்கும் துணிக்குப் பொருத்தமான கைப்பையை எடுத்துக் கொண்டு மீண்டும் ஒரு முறையும் சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள் சுபாஹிணி.

அன்று வழக்கத்திற்கு மாறாக மகளிடம் தெரிந்த மாற்றம் நளினிக்கு மீண்டும் மீண்டும் புன்னகையை வரவழைத்துக் கொண்டே இருந்தது.



''என்னமா தன்னப் போல சிரிக்கற?''

கணவர் வர, ''என்ன கேட்டீங்க?'' என்று கேட்டார்.

''இல்ல, ஏன் தனியா சிரிக்கறேன்னு கேக்கறேன்?''

மகளின் அன்றைய புதுமையான நடவடிக்கைகளைப் பற்றிக் கணவனிடம் சொன்னவருக்கு, என்ன முயன்றும் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

மனைவியைப் பார்த்த நடேசனுக்கும் சிரிப்புத் தான் வந்தது.

''அதுலயும் இடைவரைக்கும் கூந்தல் இருக்கும் போது கூடப் பூவ சீந்தமாட்டா. ஆனா இப்ப அந்த நாலு முடிக்குப் பூ எடுத்து வைச்சுக்கிட்டுப் போறா - பொம்மைக்குப் பூ வெச்ச மாதிரி...''

''விட்டா இன்னைக்கு முழுக்க சிரிச்சுட்டே இருப்ப போலிருக்கு! டிபன் எடுத்து வைமா. ஆஃபீஸ்க்கு எனக்கு லேட்டாயிடும்.''

''இதோ ஒரு நிமிஷங்க,'' என்று நளினி நகர, மனைவி சொன்னதை மனக் கண்ணில் கொண்டு வந்து பார்த்த நடேசனுக்கும் சிரிப்புத் தான் வந்தது.

''ஹலோ...''

தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்த தயானந்த், ''சொல்லுங்கமா, நான் தயா தான் பேசறேன்,'' என்றான்.

............

''ஓ, எத்தன மணிக்கு வர்றீங்க?''

........

"சரி, வாங்கமா. எனக்கு வெளிய கொஞ்சம் வேலையிருக்கு. நீங்க வந்துட்டுப் போனதுக்கப்புறம் வேணும்னாப் போய்க்கறேன்," என்றவன், "சரி, நேர்ல பார்க்கலாம்," என்று போனை வைத்து விட்டிருந்தான்.

அன்று வழக்கத்தை விடவும் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே வந்திருந்த தயானந்த்துக்கு மனம் ஏனோ சற்றுப் பாரமாக இருந்தது.

ஏனென்று அறிந்து கொள்ளவும் ஒன்றும் பிரமாத மூளை தேவையிருக்கவில்லை.

மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியே ஒன்றைப் பேசிக் கொண்டு, இந்த சுபாஹிணி என் இப்படி யெல்லாம் நடந்து கொள்கிறாளென்று நினைத்ததில் எரிச்சலும் கோபமும் ஒரு சேர வந்தன.

சரிதான், சிறு பெண் அவளுக்கே அத்தனை இருக்கும் பொழுது... பார்த்துக் கொள்ளலாமென்று முயன்று வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தான்.

"குட்மார்னிங் ஸார்."

மனதிற்குள் பதட்டமாக இருந்தாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு வழக்கம் போல விஷ் செய்தாள் சுபாஹிணி.

"வெரி பேட்மானிங்!" என்று புன்னகையுடன் சொன்னான் தயானந்த்.

தயானந்திடமிருந்து அப்படியொரு பதில் வந்ததில், செய்வதறியாது திகைத்தாள்.

"போய் வேலயப் பாக்கலாம்னு நினைக்கறேன்."



அந்த வினாடியே தன் இருக்கைக்கு வந்து அமர்ந்திருந்தவள், மனதை அலைபாய விடாமல் வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதற்கு ஏதுவாக அன்று அளவுக்கு அதிகமான ஆடர்களும் வந்து கொண்டே இருந்ததில், வேறு எதைப் பற்றியும் யோசிக்கக் கூட நேரமில்லாத அளவிற்கு வேலையே சரியாக இருந்தது.

தேநீர் இடைவேளையில் எம்.டி.க்கு டீ ஊற்றிக் கொடுத்து விட்டுத் தன்னுடைய இடத்திற்கு வந்து தானும் எடுத்துக் கொண்டாள்.

அதே நேரம் யாரோ உள்ளே வருவதைப் போலிருக்க நிமிர்ந்து பார்த்தாள்.

தயானந்த்தின் பெற்றவர்கள் உள்ளே வந்திருக்க, அவன் அவர்களை வரவேற்பதும் கேட்டது.

அவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்று யோசனையாக இருந்தாலும் ஒரு மரியாதைக்காகத் தானும் எழுந்து வந்து நலம் விசாரித்துப் பேசினாள் சுபாஹிணி.

தயக்கத்துடன் தான்.

ஆனால் தான் தயங்கியதற்கு நேர் மாறாக அவர்கள் தன்னுடைய தாய் தந்தை வரை நலம் விசாரித்து நன்றாகப் பேசியதில் மனதிற்குள் இதமாக உணர்ந்தாள்.

"எங்கமா ஸ்ரீமதியும் மாப்பிள்ளையும் வர்றதா சொன்னாங்க?"

"ஆமாம்பா. அவங்க வந்துட்டிருக்காங்க. இங்க வந்துட்டுத் தான் அப்புறம் வேற வேலையா எங்கயோ போகணும்னு பேசிட்டிருந்தாங்க."

அதே சமயம் சுபாஹினி இரண்டு கப்களில் டீ எடுத்துக் கொண்டு வர, நன்றியுடன் தயானந்த்துடைய பெற்றவர்கள் இருவரும் எடுத்துக் கொண்டனர்.

எவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொள்கிறார்களென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தயானந்த்தும், அவனுடைய தந்தையும் தொழில் விஷயமாக மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருக்க, அங்கிருந்த அன்றைய நாளிதழை எடுத்துப் புரட்டத் தொடங்கி விட்டிருந்தார் அவனுடைய தாய் மகேஸ்வரி.

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் இருவரும் கிளம்பியிருக்க, அடுத்து வந்த சில நிமிடங்களிலேயே, "ஹாய் அத்தான்!" என்று உள்ளே வந்தாள் ஸ்ரீமதி, அவளது கணவனுடன்.

"வாங்க மேடம், அப்புறம் என்ன பண்ணிட்டிருக்கீங்க? எப்படியிருக்கீங்க?" என்ற தயானந்த் தொடர்ந்து உள்ளே வந்த அவளுடைய கணவன் அர்விந்த்தை சந்தோஷமாக வரவேற்றுப் பேசினான்.

அதே சமயம் ஸ்ரீமதி சுபாஹினியை நாடிச் சென்றிருக்க, அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் இருவரும் கிளம்பியிருக்க, தயானந்திடம் வந்து நின்றாள் சுபாஹினி. என்ன என்பதைப் போல அவன் நிமிர்ந்து பார்க்க, "நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்," என்றாள்.

"அஃபீஷியலா ஏதாவது இருந்தா மட்டும் சொல்லு."

"ஸார்... நேத்து நான் அப்பிடி நடந்..."



"சொன்னது காதுல விழுந்திருக்கும்னு நினைக்கறேன்."

தயானந்திடமிருந்து வந்த அந்த அழுத்தமான வார்த்தைகளில் அதற்கு மேல் பேசும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை.

சில வினாடிகள் நின்று பார்த்தவள் உடனே தன்னிடத்திற்கும் வந்து விட்டிருந்தாள்.

## 13

அன்று மாலை வேலை முடிந்து கிளம்பும்பொழுது தயானந்த்திடம் சொல்லிக் கொள்வதற்காக மீண்டும் அவனிடம் வந்து நின்றாள்.

"கிளம்பறேன் ஸார்."

தனது வேலையில் மும்முரமாக இருந்தவன் சுபாஹினியின் குரலில் நிமிர்ந்தான்.

"கிளம்பு. ம்... சொல்லு. என்ன?"

"நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"இப்பக் கொஞ்சம் முக்கியமான வேலையா இருக்கேன், திரும்பவும் எப்பவாவது பாக்கலாமா?"

அப்படியானால் உன்னிடம் பேசுவது எனக்கு அனாவசியம் என்று சொல்வதாகத் தானே பொருளாகிறது.

பட்டென்று தயானந்த்திடமிருந்து வந்த அந்த வார்த்தைகளும் அதிலிருந்த உதாசீனமும் சுபாஹினியின் மனதைப் புண்படுத்தியிருந்தன.

ஆனாலும் அதை அவனிடம் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளாது, ''தேங்க்யூ ஸார்!'' என்று வெளியே வந்திருந்தாள்.

டூ வீலர் பார்க்கிங்கை அடையும் வரை எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், எப்படித் தன்னை உன்னிடம் பேச இனி ஒன்றுமில்லையென்று ஒற்றை வார்த்தையில் முடித்து அனுப்ப அவனால் முடிந்ததென்று வேதனையில் துடித்துப் போனாள்.

கடவுளே! கையருகில் வந்த சொர்க்கத்தை அதன் அருமை புரியாமல் நாமே காலால் உதைத்துத் தள்ளி விட்டோமோ என்று மேலும் ஏதேதோ தோன்றியதில் மனதளவில் முழுமையாக உடைந்து போய் விட்டிருந்தாள்.

இருந்த மன உளைச்சலுக்கிடையில் எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

''வாங்கமா.''

வேலைக்காரம்மாள் கமலம் முன்னே வர, ''மம்மி எங்க?'' என்று கேட்டாள்.

''சொந்தத்துல ஒரு துக்கமாம்மா. உடனே போயாகணும்னு என்ன இருக்கச் சொல்லிட்டுக் கிளம்பினாங்க, அவங்களே உங்க கூடப் பேசிக்கறேன்னு சொன்னாங்க.''

ஓ! யாராக இருக்கும்...

''சுபாம்மா, இருங்க. காபி, டிபன் எடுத்துட்டு வர்றேன்.''

வேண்டாம் என்று சொல்லப் போனவள், ''சரி, எடுத்துட்டு வாங்க,'' என்று சோஃபாவில் அமர்ந்தாள்.



இல்லையென்றால் மீண்டும், மீண்டும் வந்து கேட்டுக் கொண்டே இருப்பார்களே என்று நினைத்தவள் அந்த இடைவெளியில் தாய்க்கு அழைத்துப் பேசினாள்.

இன்று இரவு நானும், உன் தந்தையும் வருவதற்கில்லை. கமலம்மாவின் துணையுடனேயே நீ இருந்து கொள். காலையில் நேரத்தில் வந்து விடுவோமென்று தாய் போனை வைத்து விட்டிருக்க, ''போன்ல யாருங்கம்மா, அம்மாவா?'' என்று கேட்டுக் கொண்டே டிபன் காபியுடன் வந்தாள் கமலம்.

''ஆமாம்மா, காலைல தான் வருவாங்களாம். உங்கள இன்னைக்கு நைட் இங்கயே இருக்கச் சொன்னாங்க...''

''அம்மா போகும்போதே அந்த மாதிரி தான் சொல்லிட்டுப் போனாங்க சுபாம்மா. ஒன்னும் பிரச்சனையில்ல. நான் வீட்ல கூப்புட்டு சொல்லிட்டேன்.''

''அப்ப சரிதான்,'' என்ற சுபாஹிணி, ''நைட்டுக்கு டிபன் தோச மட்டும் போதும். அதுகூட நான் சொன்னதுக்கப்புறமா செஞ்சுக்கலாம்,'' என்று கமலம்மாவிடமிருந்து டிபனையும் காபியையும் வாங்கிக் கொண்டு தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்தாள் சுபாஹிணி.

யோசிக்காமல் முட்டாள்தனமாக நடந்து கொண்டு விட்டு இப்பொழுது பதறித் துடித்த நெஞ்சைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது விழித்தாள்.

இவனிடம் மட்டும் வேலைக்குப் போய்ச் சேர்ந்திருக்காமல் இவனைப் பார்க்காமல் மட்டும் இருந்திருந்தால் என்று எங்கெங்கோ சென்ற எண்ணங்களை அப்போதைக்குத் துளியும் அவசியமற்றதென்று ஒதுக்கினாள்.

ஒன்று நடந்து முடிந்து விட்ட பிறகு அதைப் பற்றி யோசிப்பது முட்டாள்தனம். மனம் மேலும் வருத்த மடைவதைத் தவிர அதனால் கிடைக்கப் போவது ஒன்று மில்லை.

எது எப்படியோ சிறு பெண்ணாகத் துள்ளித் திரிந்து கொண்டிருந்த தன்னை இப்பொழுது இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டிருந்த தயானந்த்தை நினைத்ததில் மனம் மேலும் பாரமாகித் தான் போனது சுபாஹிணிக்கு.

அவன் மட்டும் ஆரம்ப நாட்களில் நடந்து கொண் டது போலவே எம்.டி. என்னும் பெயரில் இடைவெளி கடைப்பிடித்திருந்தால் கூடத் தன்னை அதாவது அவனைக் கண்டதும் தன்னையறியாமலேயே கட்ட விழ்ந்து போயிருந்த தனது எண்ண ஓட்டங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்திருப்பாளோ என் னவோ? ஆனால் அதற்கும் வழியில்லாமல் அவன் அத்தை பெண் காதல் என்றெல்லாம் ஏதேதோ பேசிய தில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும் மனதளவில் சுபாஹிணியிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டதென்னவோ உண்மை.

பிறகு அதுவே கொஞ்சம் கொஞ்சமாகக் காதலாகவும்.

சரியாக அதே வேளையில் தயானந்த்தும் அவனுடைய காதலை வெளிப்படுத்த, அவளால் அதைத் துளியும் நம்ப முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் உள்ளுக்குள் அவள் அடைந்த சந்தோஷத் திற்கு அளவே இல்லை யென்று தான் சொல்ல வேண் டும்.



அதே சமயம் அதைவிட அதிகமாகவே பயமும் வந்து அவளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

சினிமாவில், கதைகளில் எல்லாம் இனி எப்படியோ, ஆனால் நடைமுறை வாழ்க்கையில் காதல் என்னும் வார்த்தையை சுபாஹிணி முதன் முறையாகக் கண் கூடாக உணர்ந்தது அவளுடைய உயிர்த் தோழியின் விஷயத்தில்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் உடன்படித்த பணக் கார மாணவனை யாரும் அறியாமல் காதலித்த உயிர்த் தோழியின் காதலை சுபாஹிணி அறிந்திருக்கவில்லை.

அவள் அறிய நேரும்போதோ காதலன் கைவிட்டு விட்டான் என்னும் ஏமாற்றத்தில் தோழி கிட்டத்தட்ட மனநோயாளியாகி விட்டிருந்தாள்.

எவ்வளவு துடிப்பான, புத்திசாலித்தனமான பெண் ணைக் காதல் இப்படியாக்கி விட்டதே என்று அவள் முதலில் உணர்ந்தது ஆச்சரியத்தைத் தான்.

இப்படி முதன் முறையாகக் காதலைப் பற்றிய அறிமுகமே சுபாஹிணிக்குக் கசப்பான அனுபவமாகி விட்டிருந்தது என்பதே உண்மை.

தொடக்கத்தில் தோழி பழையபடி நன்றாகி விடுவாள் என்ற நம்பிக்கை அவளுக்கும் நிறையவே இருந்தது.

ஆனால் போகப் போக, அதாவது உயிரென நம்பி யிருந்த அவளுடைய காதலன் அவளைக் கைவிட்டு விட்டான் என்பதை எண்ணி எண்ணியே முற்றிலுமாக மனம் பேதலித்துப் போய்... இப்பொழுது தோழி இருப்பது மனநோய் மருத்துவமனையில்.

அதுவும் தோழி அவளுடைய பெற்றவர்களுக்குப் பல ஆண்டுகள் தவமிருந்து பெற்ற ஒற்றைப் பெண்.

தோழி மட்டுமல்லாது அவளைப் பெற்றவர்களும் பட்ட ஏன் பட்டுக் கொண்டிருக்கும் அவஸ்தை அப்பப்பா...!

தன்னாலும்கூட அது இந்த ஜென்மத்தில் மறந்து விடக் கூடிய ஒன்றா என்ன?

அந்தக் கடவுளின் புண்ணியம் இருந்து ஒருவேளை தோழி மீண்டு வந்தால்... ம்கூம். மறுபிறவி எடுத்து வந்தால்...

அதற்காகத்தான், அந்த நம்பிக்கையுடன் தான் தோழியைப் பெற்றவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் அவள் அறிவாள்.

அந்த நம்பிக்கை சுபாஹிணிக்கும் நிறையவே இருக்கிறது.

தோழி மீண்டும் பழையபடி மீண்டு எழுந்து வர வேண்டும் என்பதற்காக அவள் தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் தானாகவே சென்று செய்து கொடுத்துக் கொண்டும் இருக்கிறாள்.

அந்த வேதனையின் தாக்கம் மனதிற்குள் அதிகமாக இருந்ததால்தான், தன்னால் தயானந்த்தின் காதலை அவன் சொன்னதும் உடனே ஏற்றுக் கொள்ள முடியவில்லையோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஏதேதோ எண்ணிக் கலங்கிய மனதை மீண்டும் நடப்பிற்குக் கொண்டு வந்து யோசித்தாள் சுபாஹிணி.



கடவுளே! நான் இப்பொழுது என்ன செய்யட்டும் என்று வாய்விட்டே கேட்டுக் கொண்டாள்.

எத்தனை முறை தயானந்த் அவனுடைய மனதை வெளிப்படுத்தினான்.

ஏன் அப்பொழுதெல்லாம் சரியென்று சொல்லாமல் போனோம்.

அப்பொழுது போல ஏன் இப்பொழுதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாமல் நெஞ்சு இப்படிப் பாரமாக இருக்கிறது?

யோசித்துச் செயல்படாமல் மிகப்பெரிய தவறு செய்து விட்டோமோ?

தயானந்த்தை மறந்து தன்னால் இருந்து விட முடியுமா என்று கற்பனை செய்து பார்த்தவளுக்குச் சில வினாடிகளிலேயே நிச்சயம் தன்னால் அது முடியாது என்பது தெள்ளத் தெளிவானது.

அப்படியானால்...

தனக்கும் தோழியின் நிலையே தானா?

தோழியை (அவள்) நம்பிய காதலன் கைவிட்டான் என்றால், இங்கு நமக்கு நாமே அல்லவா தலையில் மண்ணை வாரிக் கொட்டிக் கொண்டிருக்கிறோம்.

இயல்பிலேயே இளகிய மனம் கொண்ட சுபாஹிணி இப்பொழுது முழுவதுமாக உடைந்து போய் விட்டிருந்தாள்.

ஒரு வழியாகச் சிறிது நேரத்தில் ஓரளவு தன்னைச் சமாளித்துக் கொண்டவளுக்கு, ஏதேதோ எண்ண ஓட்டங்களுக்கிடையே மீண்டும் அழுகை தான் வந்தது.

அதற்குப் பிறகு என்ன முயன்றும் மனதைத் திசை திருப்பிக் கொள்ள அவளால் முடிந்திருக்கவில்லை.

கடவுளே! நமக்கும் தோழியின் நிலையே தானோ என்ற எண்ணம் தோன்றியதில் அச்சத்தில் உறைந்து போய் விட்டிருந்தாள்.

இல்லை.

இல்லவே இல்லை.

நிச்சயம் அந்த அளவிற்கெல்லாம் ஒன்றும் ஆகி விடாது.

அதற்கு விடவும் கூடாது.

என்ன தோன்றியதோ, உடனே ஓடிச் சென்று மொபைலை எடுத்துத் தயானந்த்திற்கு அழைத்திருந்தாள் சுபாஹிணி.

உடனே ரிங் போக, அதற்குப் பிறகு தான் இயல்பாக மூச்சு விடக்கூட முடிந்தது.

ஆனால் அதுவும் சில வினாடிகள் தான். அடுத்த வினாடியே மீண்டும் ஒரு இனம் புரியாத பயம் வந்து அவளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

அதற்கு மேல் எதையும் எண்ணி மனதைக் குழப்பிக் கொண்டிருக்க வழியில்லாமல் எதிர்முனையில் தயானந்த் அழைப்பை அட்டெண்ட் செய்து விட்டிருக்க, ஹலோ என்ற அவனுடைய கம்பீரமான குரலில் கைகால்களெல்லாம் விட்டுப்போக, மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

சில வினாடிகள் எடுத்துத் தன்னை ஓரளவு சமன் படுத்திக் கொண்டவள், "நான் சுபா பேசறேன்!" என்றாள்.



ஆனால் அதைச் சொல்வதற்கே அவள் மிகவும் பிரம்மப் பிரயத்தனப்பட்டுப் போனாள்.

"என்னமா, சொல்லு?" என்றவனின் கேள்வியில் மீண்டும் ஒருவாறு நடப்புக்கு வந்திருந்தவள், "நான்... நான் இப்பவே உங்களப் பாக்கணும்!" என்றும் சொல்லி விட்டிருந்தாள்.

எதிர்முனையின் மௌனம் அவளை மிகவும் பதறச் செய்து விட்டிருந்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

"நான் இங்க பக்கத்துல தான் இருக்கேன். பத்து நிமிஷத்துல அங்க வர்றேன். நீ வெளிய வந்து நில்லு," என்று அவன் போனை வைத்திருக்க, ஓடிச் சென்று கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்தாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள அழுவதற்கான அறிகுறிகள் முகத்தில் நன்றாகத் தெரிவதைக் கண்டாள்.

உடனே சென்று கை கால் முகம் கழுவிக் கொண்டு வந்தவள், அவன் சொல்லியிருந்த நேரத்திற்குள் கிளம்பி வெளியே வந்திருந்தாள்.

சொன்னது போல அடுத்த சில வினாடிகளிலேயே தயானந்த்தின் கார் வந்து நிற்க, அவன் கதவைத் திறந்து விட்டதும் ஏறி அமர்ந்து கொண்டு கதவை மூடினாள்.

அவனும் அப்போதைக்கு எதையும் கேட்காமல் காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, தானும் வெளியே வேடிக்கை பார்த்தபடி அதாவது அப்படிக் காட்டிக் கொண்டு வந்தாள் சுபாஹிணி.

# 14

பதினைந்து நிமிடப் பயணத்தில் அவன் ஒரு வீட்டிற்கு முன்பாகக் காரை நிறுத்தியிருக்க, வீடு மிகவும் பழமையானதாக இருக்கிறதோ என்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

காரை உள்ளே விட்டு ஆஃப் செய்தவன், "இறங்கி வா," என்று விட்டுப் பிறகு தானும் இறங்கிக் கொண்டான்.

தன்னைக் கேள்வியாக நோக்கிக் கொண்டே இறங்கியவளிடம், "இது நம்ம பழைய வீடு. இப்ப நாலஞ்சு வருஷமா குடோனா பயன்படுத்திட்டு இருக்கோம்!" என்றான்.

அந்தப் பெரிய குடோனுக்குப் பக்கவாட்டில் இருந்த அந்தச் சிறு வீட்டைக் கையிலிருந்த சாவி கொண்டு திறந்தவன், "வா," என்று உள்ளே சென்றான்.

உள்ளே சென்றவன் முதல் வேலையாக அந்த அறையின் மின் விசிறியையும், மின்சார விளக்கையும் ஆன் செய்தான்.

சற்றே தயக்கத்துடன் படியருகில் நின்றவளிடம், "பயப்படாம வா. அப்பிடியெல்லாம் நான் உன்ன எதுவும் செஞ்சுட மாட்டேன்!" என்றான்.



லேசான விரக்தியுடன் அழுத்தமாக வந்த தயானந்தின் வார்த்தைகளில் மனதிற்குள் ஒரு மாதிரியாகிப் போயிற்று சுபாஹிணிக்கு.

தன்னுடைய தயக்கம் தான் அவனுக்குக் கோபத்தை வரவழைத்திருக்கிறது என்பது புரிய, தன்னையே நொந்தவளாக எதுவும் வித்யாசமாகத் தெரியாதவாறு அந்த வினாடியே சகஜமாக வீட்டிற்குள் வந்திருந்தாள்.

"ஆஃபீஸ்ல இருந்து அப்பிடியே வந்துட்டதுல நல்ல பசி, நீயும் எதுவும் சாப்பிட்டிருக்க மாட்டேன்னு நினைக்கறேன்."

தயானந்த் கேட்க, "ஆமாம்," என்றாள்.

"உனக்கொரு தண்டன. நான் போய் டீ கலக்கப் போறேன். நீ அதக் குடிக்கப் போற!" என்று அவன் உள் அறைக்குச் சென்றிருக்க, தானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள் சுபாஹிணி.

சென்றவள் அங்கு ஒரு குட்டிச் சமையலறையே இருக்க, அதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"என்ன பாக்கற? நான் நல்லா சமைப்பேன் தெரியுமா?"

என்னது, இவன் சமைப்பானா? பெண் பிள்ளையான தனக்கே சமையலில் ஏ.பி.ஸி. தெரியாதே.

"என்ன நம்பமாட்டியா? பின்ன ஃபாரின்ல நாலு வருஷம் பட்டினியா இருந்தேன்னு நினைச்சியா?...

"ஐயா நல்லா சமைப்பேனாக்கும்..."

...............

''என்ன மேடம், எதாவது பேசுங்க, இல்லன்னா என் கையால சமைக்கவே ஆரம்பிச்சுடுவேன். அப்புறம் அதையும் நீ சாப்பிட்டாகணும். சொல்லிட்டேன்.''

தயானந்த் சொல்ல, ''ஐயோ! வேண்டாம்!'' என்று அவசரமாகச் சொன்னாள் சுபாஹிணி.

''ம், அந்தப் பயம் இருக்கட்டும்.''

''நான் வேணும்னா டீ போட்டுத் தரட்டுமா?''

சுபாஹிணி கேட்க, ''அப்பாடா!'' என்று பெருமூச் செறிந்தான் அவன்.

''வேண்டாம்மா, நீ ஒரு வார்த்த கேட்டதே குடிச்ச மாதிரி ஆயிடுச்சு.''

அப்படிச் சொல்லிக் கொண்டே அவன் டீ கலக்க எத் தனிக்க, ''அப்புறம் எதுக்கு ஸார் திரும்பவும் டீ போட் டீங்க?'' என்று கேட்டாள் சுபாஹிணி.

''ம்...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவனின் பாவனையில் இப்பொழுது இருவரும் நன்றாகவே சிரித்து விட்டிருந்தனர்.

''சரி, அப்பிடித்தான் மேடம். நீங்க உக்காருங்க. நான் போட்டுத் தர்றேன்னு ஒரு வார்த்த... ம்கூம்... அதுசரி, வீட்டுக்கு வந்தப்பவே கழுத்தப் புடிச்சு வெளிய தள்ளாத குறையா அனுப்பி விட்டவளாச்சே...''

''நீங்களா ஏதேதோ கற்பன பண்ணிக்கறீங்களே, தள்ளுங்க, நான் டீ கலக்கறேன்,'' என்று அருகில் வந்து நின்றிருந்தவளை மேலிருந்து கீழாகப் பார்த்தான் தயா னந்த்.

''என்ன பாக்கறீங்க?''



''பின்ன திரும்பவும் பாக்கறதுக்கு நான் உயிரோட இருப்பேனோ என்னவோ தெரியலையே.''

''என்ன கிண்டலா, ஒரு டீ குடிக்கறதுல யாருக்காவது உயிர் போயிடுமாக்கு...''

''சாதாரணமாப் பாத்தா சான்ஸ் குறைவு தான். நீதான் கோபத்தோட இருக்கியே. எங்காவது பழி வாங்கிட்டா?''

''நானொன்னும் அப்பிடியெல்லாம் பண்ணமாட் டேன்!'' என்ற சுபாஹிணியின் கண்கள் கலங்கி விட் டிருக்க, ''ஹலோ மேடம், இங்க பாருங்க,'' என்று அவ ளுடைய முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான்.

''என்னமா?''

...............

''ம், சொல்லு.''

''தயா.....''

அப்படி அழைத்ததால் வந்த ஆவலைத் தனக்குள் மறைத்துக் கொண்டு சாதாரணமாகப் பார்த்தான் தயா னந்த்.

''ம், என்ன, சொல்லு?''

''நான்.... நான்...''

''ம்கூம், இப்பிடி கண் கலங்கினா நீ எதுவும் சொல்ல வேண்டாம். நானும் கேக்கத் தயாரில்...''

'' என்ன... மன்னிப்பீங்களா?''

''எதுக்கு?''

''நான் உங்ககிட்ட நிறையப் பொய் சொல்லிட்டேன்.''

அப்படிச் சொன்ன தன்னை எதுவும் பேசாமல் பார்த்த வனை நெஞ்சு கனக்கப் பார்த்தாள்.

''அதையெல்லாம் பொய்னு எதுக்கு சொல்லணும்? என்னப் பிடிக்காததால அவாய்ட் பண்றதுக்காகக் கூட நீ அப்பிடிச் சொல்லியிருக்கலாம் இல்லையா? என் அப்பிடின்னு தான நீயே சொன்ன.''

''இல்ல, இல்லவே இல்ல.''

''பின்ன?''

''நான்... நான் உங்கள...''

..............

''எனக்கும் உங்கள ரொம்பப் பிடிச்சிருக்கு, ஆரம்பத்துல இருந்தே தான்...''

''வேண்டாம்மா. நீ நீயாவே இரு. அதுதான் எனக்கும் பிடிக்...''

''ஐயோ! என்னப் புரிஞ்சுக்கோங்களேன். நானும் அதுக்குத் தான் முயற்சி பண்றேன்...''

''அதுதான் நானும் சொல்றேன். முயற்சி பண்ணிக் கொண்டு வர்ற எதுவும் ரொம்ப நாள் நிலைக்காது...''

''அச்சச்சோ! நான் அந்த மாதிரி அர்த்தத்துல சொல்ல வர்ல...''

''வேண்டாம்மா. விட்ரு, ஃப்ரியா இரு.''

''அப்பிடி இருக்கத் தான் நானும் ரொம்ப ஆசப்பட்றேன் தயா. தயவு செஞ்சு நான் சொல்றதக் கேளுங்களேன் ப்ளீஸ்...''

தயா என்ற சுபாஹினியின் அழைப்பு தன்னை என்னவோ செய்ய, அவனுடைய மௌனத்தையே சம்மதமாக ஏற்றுத் தான் சொல்ல நினைத்ததைச் சொன்னாள் சுபாஹினி.



''இத்தன நாளும் நான் என்னையே ஏமாத்திக்கிட்டு முட்டாள்தனமா நடந்துக்கிட்டிருக்கேன்னு எனக்கே இப்பதான் புரியுது.''

''இனிமேல் நிச்சயம் நான் அந்த மாதிரியெல்லாம் நடந்துக்கவே மாட்டேன்...''

அப்பொழுதும் தயானந்த் மௌனமே சாதிக்க, நெஞ்சே பிளந்து விட்டதோ என்பதைப் போன்ற வேதனையை அனுபவித்தாள் சுபாஹினி.

''எம்மேல உங்களுக்கு இன்னும் கோபம் தான்னு புரியுது...''

''உம் மேல எதுக்காக நான் கோபப்படணும்? இப்போதைக்கு உன் வேதனையத் தீர்க்க முடியாத நிலைல நான் இருக்கேன். அத எடுத்துச் சொன்னாலும் உனக்குப் புரியுமோ என்னவோ...''

கடவுளே! கடைசியில் தான் எண்ணி அஞ்சியது போலவே நடந்து விட்டதே.

அப்படியானால் இனிமேல் தனக்கும் தனது தோழியின் நிலை தான்...

''என்னமா, பேசு.''

''கடவுளே! தப்புப் பண்ணிட்டேனே!'' என்று தனக்குத் தானே மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டவள், அந்த இடத்தை விட்டு நகரப் போனாள்.

ஆனால் அதற்குள் அவளுடைய கையைப் பிடித்திருந்த தயானந்த், ''எங்க போற?'' என்று கேட்டான்.

.............

''சுபா.''

..............

"பேசுமா..."

...........

"ம்...."

"நான் பண்ணினது ரொம்பப் பெரிய தப்புதான் ஆனா அதுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? அதுவும் வாழ்க்கை முழுமைக்குமான மறக்கவே முடியாத தண்..."

அதற்கு மேல் பேச முடியாமல் குரல் கரகரத்து விட்டிருக்க, தனது கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கி விட்டிருந்தாள் சுபாஹிணி.

"சுபா! என்னாச்சு? இங்க பாரு..." என்று லேசான பதற்றத்துடன் அழைத்தவனுக்கு, அதென்ன வாழ்க்கை முழுவதற்குமான தண்டனை என்று ஏதேதோ சொல்கிறாளென்ற எண்ணம் தான் ஓடியது.

ஒரு சில வினாடிகளிலேயே அனைத்தும் புரிந்து விட்டிருக்க, "சுபா..." என்று மனம் உருகிப் போய் அழைத்தான் தயானந்த்.

ஆனால் அவன் அழைத்தது சுபாஹிணியின் காதுகளில் கூட விழுந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு அவளுடைய அழுகை மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே போனதே தவிர சற்றும் குறைந்திருக்கவில்லை.

அவளாகவே தெளியட்டும் என்று மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியவாறு நின்றவனால் தொடர்ந்து அப்படி நிற்க முடிந்திருக்கவில்லை. மனம் கேட்காமல், "சுபா,



இங்க பாரு," என்று அவளுடைய கைகளைப் பிடித்து இழுத்தான்.

"ம்கூம்... அழக்கூடாது!" என்று சற்று அழுத்தமான குரலில் சொன்னவன், "ம் சொல்லு. இப்ப என்ன பண்ணலாம்?" என்று மெல்லிய குரலில் கேட்டான்.

அப்படிக் கேட்டவனை உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு பார்த்தாள் சுபாஹிணி.

அவனுடைய அந்தப் பார்வை தன்னை ஏதேதோ செய்ய, "இப்ப நானும் உங்கள உயிருக்குயிரா லவ் பண்றேன் தயா!" என்றாள்.

ஏனோ அந்த வினாடியில் தயானந்தின் உடல் சிலிர்த்துப் போக, அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "எப்பிடி நம்பறது?" என்று கேட்டான்.

இப்படிக் கேட்டால் என்ன சொல்வது?

...........

"ம்?"

விழுங்குவதைப் போலத் தன்னைப் பார்த்தவனின் பார்வையில் சுபாஹிணி தன்னை மறந்து நிற்க, அந்த வினாடியில் அவளைத் தன்னருகில் இழுத்திருந்தான் தயானந்த்.

சில வினாடிகள் அவனுடைய பார்வையை நேருக்கு நேராகச் சந்தித்த சுபாஹிணி, அதற்கு மேல் முடியாமல் கண்கள் சொக்க அவனுடைய மார்பிலேயே சாய்ந்தாள்.

"தயா... தயா..." என்று மெல்லிய குரலில் அரற்றியவளைத் தானும் தன்னை மறந்து இறுக அணைத்துக் கொண்டான் தயானந்த்.

எவ்வளவு நேரம் அப்படி இருந்தார்களோ, முதலில் தன்னிலை உணர்ந்து நடப்பிற்கு வந்தது சுபாஹிணி.

அடுத்த சில வினாடிகளிலேயே சுபாஹிணியிடம் அசைவை உணர்ந்து தானும் நடப்பிற்கு வந்திருந்த தயானந்த். "என் சுபா!" என்று மெல்லிய குரலில் அவளுடைய காதருகே கிசுகிசுத்தான்.

ஆனாலும் அவளைத் தனது அணைப்பிலிருந்து விடுவிக்க மனமற்றவனாய் மேலும் வாகாக அணைத்துக் கொண்டான்.

மிகவும் மென்மையாகத்தான்.

மேலும் சில நிமிடங்களுக்குப் பிறகே மீண்டும் இருவரும் நடப்பிற்கு வந்திருக்க.

"சுபா...." என்று ஆசையாக அழைத்தான் தயானந்த்.

"தயா! என்ன நீங்க மன்னிப்பீங்களா?"

"அப்புறம் இவ்வளவு நேரமும் என்ன பண்ணிட்டிருந்தேனாம்?"

"ஓ!... அப்பிடின்னா அடிக்கடி தப்புப் பண்ணலாம் போலிருக்கே."

தன்னையறியாமல் அப்படிச் சொல்லி விட்டிருந்தவளை மீண்டும் தன்னருகில் இழுத்திருந்தவன், "அதுக்கு நான் எப்பவுமே தயார்!" என்று அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

முகம் இரத்தமெனச் சிவந்து விட்டிருக்க, அந்த வினாடியே அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்திருந்தாள் சுபாஹிணி.



கையை உயர்த்தி மணி பார்த்தவன், சுபா என்று அவளை அழைத்துப் பார்த்தான்.

இன்னும் பதினைந்து நிமிடங்களில் பிஸினஸ் மீட்டிங் ஒன்றிற்காக ஹோட்டல் பாரத்தில் தான் இருந்தாக வேண்டுமென்பது நினைவிற்கு வர, அடுத்த சில நிமிடங்களுக்குள் கண்ணாடியில் பார்த்துத் தனது ஆடையையும் முகத்தையும் சீர்படுத்திக் கொண்டு வெளியே வந்திருந்தான்.

அங்கு ஹாலில் இருக்கும் சோஃபாவில் சுபாஹிணி அமர்ந்திருக்க, புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

ஏற்கெனவே படபடவென்று அடித்துக் கொண்டிருந்த மனது, அவனுடைய பார்வையில் இப்பொழுது மேலும் அதிகமாக அடித்துக் கொண்டது.

"என்ன மேடம் கிளம்பலாமா?"

"ம்."

"என்ன, சொல்லு?"

"நீங்க டீ சாப்புட்லயா?"

"விருந்தே சாப்டாச்சு, இனி டீ என்ன பெரிய விஷயம். ஓ! உனக்கு வேணு..."

"ஏன் நீங்க மட்டும் தான் விருந்து சாப்டீங்களாக்கும்? நானு..."

சுபாஹிணி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை.

"ஓஹா..." என்று அர்த்த புஷ்டியுடன் சிரித்துக் கொண்டே காரில் ஏறி அமர்ந்திருந்தவன், அவளுக்காகத் தனது பக்கவாட்டுக் கார் கதவைத் திறந்து விட்டிருந்தான்.

தயானந்த்தின் புன்னகையில், கடவுளே! இருந்திருந்து நாமாகப் போய் இப்படி வாயை விட்டிருக்கிறோமே என்று தோன்றி விட்டிருக்க, வெட்கத்துடன் தானும் ஏறி அமர்ந்து கொண்டு கதவை மூடினாள்.

கதவை மூடிவிட்டு யதேச்சையாகத் திரும்பிய வளுக்கு, அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவள் என்ன என்பதைப் போலப் பார்க்க, ''தினமும் தான் பசிக்கும். கொஞ்சம் கருண காட்டுமா. பட்டினி போட்டுடாத!'' என்றான்.

அவனுடைய கேலியில் முகம் மேலும் சிவந்து விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு வெளியே பார்த்தாள்.

''மௌனம் சம்மதத்துக்கு அறிகுறின்னு சொல்லு வாங்க, அது சரிதான். உனக்கும் என்னோட நிலை தான!'' என்று உல்லாசமாகச் சிரித்துக் கொண்டே அவன் காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, அப்பிடியெல்லாம் ஒண்ணுமில்லையே என்று வாய் வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின சுபாஹிணிக்கு.

## 15

வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டிருந்த பிறகும் கூட அவளால் ஏனோ இயல்பு நிலைக்குத் திரும்ப முடிந்திருக்க வில்லை.



மொத்தத்தில் மிகவும் சந்தோஷமாக இருந்தாள்.

ஒரு வித இன்ப வேதனை வந்து இடைவிடாது நெஞ்சைக் குறுகுறுக்கச் செய்து கொண்டே இருப்பதைப் போல உணர்ந்தாள்.

கமலத்திற்காக உண்டதாகப் பெயர் செய்து விட்டுத் தன்னறைக்கு வந்தவள், எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

தயானந்த்தின் கேலி மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்ததில் தன்னையறியாமலேயே முகம் சிவந்து போய்க் கொண்டிருந்தாள்.

நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த மிகப்பெரிய பாரம் இறங்கி விட்டிருந்ததில் மனமும், உடலும் லேசாகி விட்டிருந்ததைப் போல உல்லாசமாக உணர்ந்தாள்.

என்னதான் தூங்குவதற்காகப் படுக்கையில் சென்று விழுந்திருந்தாலும் ஏதேதோ இனிமையான என்ன ஓட்டங்களில் தூக்கம் அருகில் கூட வர மாட்டேனென்று விட்டிருக்க, இரவு வெகு நேரத்திற்குப் பிறகே தூங்கத் தொடங்கினாள்.

ஆனாலும் காலையில் எப்பொழுதும் போலவே படுக்கையை விட்டு எழுந்திருந்தவள் குளித்துக் கிளம்பி வேலைக்குச் செல்வதற்குத் தயாராக வெளியே வந்தாள்.

வெளியே வந்தவள் கமலம் டிஃபனைத் தயாராக டேபிளின் மீது எடுத்து வைத்திருக்க, வந்து சாப்பிட அமர்ந்தாள்.

உடனே கமலம் பரிமாறுவதற்காக வர, ''பரவாயில் லமா. நானே எடுத்து வெச்சுக்குவேன். நீங்க போய்

தயானந்த் ஆள் பார்க்கவே களைத்துப் போய் ஒரு சுற்று இளைத்துப் போய் விட்டதைப் போலவும் தெரிய, என்னவோ ஏதோவென்று மனதிற்குள் பயந்துதான் போனாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். ''அப்புறம் மேடம் எப்பிடியிருக்கீங்க?'' என்று தயானந்த் புன்னகையுடன் பார்த்ததில் தன்னைச் சுற்றியிருக்கும் உலகையே சில வினாடிகள் மறந்து போய் விட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். கடந்த மூன்று நாட்களாகத் தன்னை அழைத்துப் பேசாததற்கும், தன்னை மறந்திருந்ததற்கும் காரணம் கேட்க வேண்டும், அவசியமிருந்தால் சண்டையிட வேண்டுமென்று நினைத்திருந்ததும் கூட.

''எனக்கென்ன, நான் ரொம்ப நல்லார்க்கேன். ஆமா, உங்களுக்கு என்னாச்சு?''

''எனக்கென்ன, நானும் நல்லா இருக்கேன்...''

''அப்புறம் ஏன் பாக்க ரொம்ப டல்லாத் தெரியறீங்க?''

..............

''என்ன தயா, சொல்லுங்க.''

''ஸ்ரீமதியோட ஹஸ்பெண்ட் ஆக்ஸிடெண்ட்ல இறந்துட்டார்மா.''

''என்னது?''

''ஆமா சுபா, ஸாரிமா. லாஸ்ட் த்ரீ டேஸா எனக்கு உன் ஞாபகமே சுத்தமா இல்லாமப் போயிடுச்சு. இல்லன்னா சொல்லியிருப்பேன்...''

''அத விடுங்க தயா, எப்பிடி இந்த மாதிரி...''



''மூணு நாளைக்கு முன்னாடி டூர் போய்ட்டுத் திரும்பினப்ப அவங்க வந்த கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சு. அதல ஸ்ரீமதி மயக்கமாயிட்டா, அவளோட வீட்டுக்காரர் அரவிந்த் ஸ்பாட் அவுட்...''

''கடவுளே...''

''கடவுள் புண்ணியத்துல நேத்து மதியம் ஸ்ரீமதி மயக்கம் தெளிஞ்சு எழுந்துட்டா...''

''நீங்க சொல்றத என்னால சுத்தமா நம்பவே முடியல. இருந்திருந்து ஸ்ரீமதிக்கு எப்பிடி இந்த மாதிரியெல்லாம் நடக்கலாம். அதுலயும் அவங்களோட பெத்தவங்களுக்கு எப்பிடியிருக்கும்...''

''ஆமாம்மா, அவங்களதான் கண்கொண்டு பாக்கக் கூட முடியல. அதோட ஸ்ரீமதிய ட்ரீட்மெண்ட்டுக்காக இங்க சென்னைக்கு இன்னைக்கு மதியம் அழைச்சுட்டு வர்றாங்க.''

''ஸ்ரீமதிக்குப் பயப்படற மாதிரி எதுவும்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லமா. இருந்தாலும் கம்ப்ளீட் செக்கப் பண்ணிக்கலாம்னு வர்றாங்க.''

''நல்லது தான். அவங்க வந்ததும் சொல்றீங்களா தயா, நான் போய்ப் பாத்துட்டு வந்துடறேன்.''

''இப்பப் போனா நடந்ததையெல்லாம் திரும்பத் திரும்ப நினைச்சு இன்னும் டல்லாயிடுவா. அங்க இருந்து இப்ப சென்னைக்கு அழைச்சிட்டு வர்றதுக்கான முக்கியமான காரணமே அந்த மாதிரியான பிரச்சனைய அவாய்ட் பண்ணணுங்கறது தான். இன்னும் சில நாள் போகட்டும்மா. அதுக்கப்புறம் வேணும்னா போய்ப் பாத்துட்டு வா.''

"சரிதான் தயா."

அதற்குப் பிறகு வேலையே இருவருக்கும் சரியாக இருந்தது. வேறு எதைப் பற்றியுமே பேச முடிந்திருக்கவில்லை.

அடுத்த சில மணி நேரங்களில் தயானந்த் மருத்துவமனைக்குக் கிளம்பி விட்டிருக்க, கிளம்பும் பொழுது அவன் கொடுத்துவிட்டுச் சென்றிருந்த வேலைகளைச் செய்வதில் முனைந்தாள் சுபாஹிணி.

## 16

மேலும் பத்து நாட்கள் சென்றிருந்தன.

மருத்துவ மனையிலிருக்கும் தனது அத்தை மகள் ஸ்ரீமதியைத் தினமும் சென்று பார்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் தயானந்த்.

ஸ்ரீமதி இப்பொழுது சில நாட்களாக ஓரளவு பழைய படி ஆகிவிட்டாள் என்பதைத் தயானந்த்தின் மூலமாகத் தெரிந்து கொண்ட சுபாஹிணி, அவனுடன் அன்று அவளைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தாள்.

பார்ப்பதற்கே மிகவும் மெலிந்து இவளா திருமணத்தன்று தான் பார்த்த பெண் என்று அதிர்ச்சியடையும் அளவிற்கு இருந்த ஸ்ரீமதியை மனதில் ஒரு வலியுடன் கண்டாள் சுபாஹிணி.

மிகவும் முயன்று இயல்பாக அவள் பேசியதையும்.



நடந்ததை நினைவு படுத்தாமல் அதே சமயம் இயல்பான விஷயங்களை யதார்த்தமாகப் பேசி விட்டு வருவதற்குள் சற்று சிரமப்பட்டுத் தான் போனாள்.

தயானந்த்தும் தன்னுடனே கிளம்பி விட்டிருக்க, ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

தான் ஏறி அமர்ந்து கொண்டதும் அவன் தனக்குப் பக்கவாட்டுக் கார் கதவைத் திறந்து விட்டிருக்க தானும் ஏறி அமர்ந்து கொண்டு கதவை மூடினாள் சுபாஹிணி.

"என்னமா?"

"இல்ல, நீங்க இங்க இருந்துட்டு அப்புறமா வருவீங்கன்னு நினைச்சேன்."

"அப்பிடிதான் நினைச்சு வந்தேன். ஆனா ஸ்ரீ ஏனோ ரொம்ப டல்லா இருக்கா. ரெஸ்ட் எடுக்கட்டும்."

"உண்மையலயே அவங்க இந்த மாதிரி ஒரு நிலைல இருப்பாங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல தயா. இனி எந்தக் காலத்துல அவங்க தங்களோட சோகத்த மறக்கறது?"

"முன்னாடி இருந்ததுக்கு இப்ப எவ்வளவோ பரவாயில்லமா. இனிமேலும் காலம் அவங்க காயத்தக் கொஞ்சம் கொஞ்சமா சரியாக்கிடும்!" என்று உணர்ந்து சொன்னவன், தன்னை மெச்சும் பார்வை பார்க்க, புரியாமல் பார்த்தாள் சுபாஹிணி.

அல்லது தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதோ?

"ரொம்ப நன்றி சுபா."

"எதுக்கு?"

''ஸ்ரீமதிகிட்ட பழச எதையும் ஞாபகப்படுத்தாம பாத்து நடந்துக்கிட்டதுக்கு.''

''ஓ. ஆனா நான் அதுக்கு எவ்வளவு சிரமப்பட்டேன்னு எனக்குத் தான் தெரியும்.''

''தெரிஞ்சது.''

''பாவம் தயா, ஸ்ரீமதி...''

''சுபா!''

..............

''சுபா, இங்க பாரு... ஏய் கூல் மா...''

தன்னையறியாமலேயே கண்கள் கலங்கியவளைத் தன்னருகில் இழுத்துச் சமாதானப்படுத்தினான் தயானந்த்.

ஆனால் சுற்றுப்புறம் உணர்ந்து அடுத்த சில வினாடிகளிலேயே நடப்பிற்கு வந்திருந்த சுபாஹினி, அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு நகர்ந்து அமர்ந்தாள்.

அதை இயல்பாக எடுத்துக் கொண்ட தயானந்த் தானும் அந்த வினாடியே காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, அவளும் வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

''தயா.''

''சொல்லுமா.''

''நான் இப்பிடியே கிளம்பிக்கட்டுமா?''

''பின்ன, டைம் பாரு நாலரையாச்சு. இந்த நேரத்துக்கு வீட்டுக்குப் போகாம வேற எங்க போவாங்க?''

''தேங்க்யூ எம்.டி.ஸார். எங்க இப்ப ஆஃபீஸ் போகணும்னு சொல்லிடுவீங்களோன்னு பயந்துட்டேன்.''



''ஏன் அப்படியென்ன பயம் ஆஃபீஸ்க்குப் போறதுக்கு...?''

..............

''ம்... பேசு.''

..............

''ஏன்னா இன்னைக்கு எங்க மம்மி டாடியோட இருபத்தஞ்சாவது கல்யாண நாள்.''

''அதனால....''

''அதுக்கு நான் போய்த் தான் எல்லாத்தையும் ரெடி பண்ணணும். அதோட...''

''ம்....''

''இன்னைக்கு ஸெகண்ட் ஹாஃப் லீவ் கேக்கலாம்னு நினைச்சுட்டு வந்தேன்...''

''ஓ. நான் இல்லாததனால நீ கிளம்ப முடியாமப் போயிடுச்சாக்கும். சரிதான் மேடம். இப்பவாவது உடனே வீட்ல கொண்டு போய் விட்றேன். வாங்க.''

''தேங்க்யூ.''

''அவ்வளவுதானா?''

''வேறென்ன?''

''அப்பிடித்தான் சும்மா பேருக்காவது வீட்டுக்கு வாங்கன்னு ஒரு வார்த்த கூப்புட மாட்டீங்களாக்கும்...''

''ஒரு வார்த்த என்ன ஸார், நிறைய வார்த்த அதுவும் ரொம்ப அக்கறையாவே கூப்புட்றேன். இன்னைக்கு நடக்கற எங்க வீட்டு ஃபங்ஷனுக்கு வாங்க.''

''அது சரி...''

''நான் ஸீரியஸா தான் தயா இன்வைட் பண்றேன். வாங்...''

''இல்லமா தேங்க்ஸ். இன்னொரு நாள் வர்றேன்.''

''இல்ல. இன்னைக்கு நீங்க வரணும், ஒரு வாரமாவே எனக்கும் உங்கள இன்னைக்கு நடக்கப்போற ஃபங்ஷ னுக்கு இன்வைட் பண்ணணுங்கற யோசனை தான். ஆனா எப்பிடிக் கூப்புட்றதுன்னு தான் தயக்கமா இருந்தது.''

''ஏன்...?''

''ஏற்கெனவே துக்கம் நடந்து எல்லாரும் கவலையா இருக்கறப்ப, நாம எப்பிடி இப்பிடி ஒரு ஃபங்ஷனுக்கு இன்வைட் பண்றதுன்னு தான்...''

''இப்பிடியும் ஒரு தயக்கமா, சரி. இப்ப நீ என்ன சொல்ற- நான் வரணுமா? வேண்டாமா?''

''ப்ளீஸ் வாங்களேன்...''

''எத்தன மணிக்கு ஃபங்ஷன்?''

''ஏழு மணிக்கு, ஆனா நீங்க இப்பவே வாங்க.''

''அதுசரி, ஆறு மணிக்கு வேற வேல ஒன்னிருக்கு, அத முடிச்சுட்டு முடிஞ்சா வர்றேன்.''

''நீங்க வர மாட்டீங்க, சும்மா தான் சொல்றீங்க.''

''இல்லமா, நிச்சயம் வர ட்ரை பண்றேன், வருவேன்.''

இரவு மணி ஏழை நெருங்க நெருங்க, தயானந்த்தின் வரவை வழி மேல் விழி வைத்து எதிர்பார்க்கலானாள் சுபாஹிணி.



அவன் ஒன்றைச் சொன்னால் நிச்சயம் செய்து விடு வான் என்பதால் மிகுந்த நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

அதே நேரம் தனது கையிலிருக்கும் மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தாள்.

எம்.டி.தயானந்த் என்று வர, உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்த வளுக்கு அழுகை வந்துவிடும் போல ஆகி விட்டிருந் தது.

ஆனாலும் அன்றைக்கு இரண்டாவது முறையாகச் சுற்றுப்புறத்தை உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''என்னமா உங்க எம்.டி.ஸார் என்ன சொல்றார்?'' என்ற தமக்கை விசாகினி அருகில் வர, ''நினைச்ச மாதிரி வர முடியலையாம். அதனால எனக்காகப் பாத்துட்டிருக்க வேண்டாம்னு சொன்னார்,'' என்றாள்.

''அப்பவே நினைச்சேன், நீ தான் என்னவோ வானத் துக்கும் பூமிக்கும் குதிச்ச...''

பெரிய மகள் சொல்லிக்கூட முடித்திருக்கவில்லை. ''வினி'' என்று அவளை அழைத்து எதுவும் பேச வேண் டாமே என்பதைப் போல ஜாடை காட்டினார் நளினி. யாரும் அறியாத வண்ணம் தான். முக்கியமாக சுபா ஹிணி.

அடுத்த சில மணி நேரங்களில் விசேஷம் முடிந்து அனைவரும் கிளம்பி விட்டிருக்க, தானும் உணவை முடித்துக் கொண்டு தூங்குவதற்காகத் தன்னறைக்கு வந்து சேர்ந்தாள் சுபாஹிணி.

வேலைக்கு நடுவில் வருவதற்கில்லையென்று அவசர கதியில் அழைத்துச் சொன்னவன் நிச்சயம் மீண்டும் அழைப்பான் என்று மிகவும் எதிர்பார்த்தவள் அதற்கும் ஒரு முறை ஏமாந்தாள்.

சரிதான், தானே அழைக்கலாமென்று யோசனை போக, ஆனால் அதை அவன் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று தயக்கமாகவும் இருந்தது.

இப்பொழுது தான் நெருங்க நெருங்க அவன் விலகிச் செல்கிறானோ என்று பயமாகவும்.

ஏதேதோ எண்ணங்களுக்கிடையே சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தவள், பிறகு உடனே தயானந்திற்கு அழைத்து விட்டிருந்தாள்.

ஒன்று, இரண்டு என முழு ரிங் போய் இணைப்புதுண்டாகும் வரை கூட தனது அழைப்பை அவன் அட்டெண்ட் செய்திருக்காததில், சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் ஒரு முறையும் கூட முயன்றாள்.

ஆனால் அதற்கும் பலன் இருக்கவில்லை.

சரிதான், வேலை மும்முரத்தில் அட்டெண்ட் செய்து பேச முடியாதிருந்திருக்கலாம். வேலை முடிந்ததும் அவனாகவே அழைப்பானென்று இரவு பதினொரு மணி வரை கூடக் காத்திருந்தவள் அதற்குப் பிறகே படுக்கைக்குச் சென்றாள்.

படுக்கைக்குச் சென்ற பின்னரும் கூட வெகு நேரம் கழித்தே தூங்கத் தொடங்கினாள்.



## 17

“குட்மானிங் ஸார்.”

தனக்கு எதிரே வந்து நின்றவளைப் புன்னகையுடன் நிமிர்ந்து பார்த்தான் தயானந்த்.

“வெரி குட்மானிங் சுபா.”

“நேத்து நைட் பத்து மணிக்கு ரெண்டு தடவ எம் மொபைலுக்குக் கூப்புட்டிருப்ப போலிருக்கு. நான் அதப் பாக்கும் போதே நேரம் பதினொரு மணிக்கு மேல ஆயிடுச்சு. அதான் கூப்புட முடியல.”

............

“ஓ! மேடம்க்குக் கோபமாக்கும். காலைல கூப்புட்டிருப்பேன். அப்புறம் சரி, இன்னும் ஒன் அவர்ல கம்பெனில பாக்கத்தான போறோம்னு விட்டுட்டேன்.”

ஓ! அப்படியானால் தன்னிடம் பேசுவது இவனுக்கு அத்தனை சிரமமாக இருக்கிறதோ?

“சுபா....”

...........

“ஸாரிமா.”

ஏனோ மனதிற்கு ஒரு மாதிரியாகி விட்டிருக்க, எங்கே அங்கே நின்றால் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவோமோ என்று தன்னிடத்திற்கு வந்திருந்தாள்.

அடுத்த சில நிமிடங்களிலேயே இயல்புக்கு வந்திருந்த சுபாஹிணி, அதற்குப் பிறகு வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஒரு மணி நேரம் சென்றிருக்கும், எம்.டி. அழைக்க எழுந்து சென்றாள்.

''சொல்லுங்க ஸார்.''

''கிளம்பு.''

திடீரென்று அப்படிச் சொன்னவனை அவள் பார்க்க, ''ஃபேக்டரிக்கு,'' என்றான்.

''நானும் வரணுமா?''

''கண்டிப்பா. வழக்கமா போறப்ப எடுத்துட்டுப் போற ஃபைல்ஸ எடுத்துட்டு வா. அஞ்சு நிமிஷத்துல கிளம்பணும்.''

அன்று முழுவதும் ஃபேக்டரியில் இருவருக்கும் வேலையே சரியாக இருந்தது.

தயானந்த் சொல்லச் சொல்ல எள் எனும் முன் எண்ணெயாக நின்று அனைத்து வேலைகளையும் சிறப்பாகச் செய்தாள் சுபாஹிணி.

வேலை மும்முரத்தில் மனதினில் இருந்த சிறு பாரங்களெல்லாம் கூட இருந்த இடம் தெரியாமல் காணாமல் போயிருந்ததை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள்.

நேரமும் வழக்கமாகத் தான் வேலை முடிந்து செல்வதை விடவும் அரை மணி நேரம் அதிகமாகவே ஆகிவிட்டிருந்ததையும்,

சரியாக அதே நேரம் தயானந்த்தும் தன்னை நோக்கி வருவதைக் கண்டவள், அவனருகில் சென்றாள்.



''என்ன, கிளம்பலாமா?''

தயானந்த் கேட்க சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''கிளம்பறதுக்காக ரொம்ப ஆவலா வெய்ட் பண்ணிட்டிருக்க போலிருக்கு?''

''அப்பிடியெல்லாம் இல்ல ஸார், என் டூவீலர் தான் ஆஃபீஸ்ல இருக்கு. அங்க போய் நான் அத எடுத்துட்டுக் கிளம்பணும். அதான்.''

''சரிதான். கிளம்பலாம், வா.''

தயானந்த் முன்னே நடக்க, அவனைத் தொடர்ந்தாள்.

''அப்புறம்?'' என்று புன்னகையுடன் தன்னைப் பார்த்தவனைப் புரியாமல் பார்த்தாள்.

''வீட்ல இன்னைக்கு என்ன ஃபங்ஷன்?''

''அதப்பத்தி உங்களுக்கென்ன. இனிமேல் எதுக்குமே நான் உங்கள இன்வைட் பண்ணப் போறதில்ல.''

''நிஜமாவா?''

''ஆமாம்.''

''அடடா, இப்பிடிச் சொல்லிட்டயே சுபா, இது நியாயமா?''

தயானந்த்தின் கேலிச் சிரிப்பில் அவளுக்கிருந்த கோபம் மேலும் அதிகம் தான் ஆகியிருந்தது.

விசேஷத்திற்கு அழைத்ததற்கு அவன் வராமல் இருந்தது கூடப் பரவாயில்லை, வேலை மும்முரத்தில் எப்படியோ வர முடியாது போயிருக்கலாம்.

ஆனால் இவனோ மேலும் மேலும் ஏளனம் அல்லவா செய்து கொண்டே இருக்கிறான்.

கண்களைக் கரித்துக் கொண்டு வர, அவன் பார்க்கத் தான் அழ வேண்டாமே என்று முயன்று அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நீங்க வேணும்னா ஏதாவது வேலையிருந்தா இருந்துக்கோங்க, நானே போய் வண்டிய எடுத்துட்டுப் போய்க்கறேன்.''

''அதுசரி, உங்கூட உன் அழகான முகத்தப் பாத்துட்டே வர்றத விடவும் எனக்கென்ன வேற முக்கியமான வேல?''

தயானந்த்தின் வார்த்தைகளும், புன்னகையும் துளி கூட இனிக்கவில்லை சுபாஹிணிக்கு.

மாறாக இதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை என்று எரிச்சல் தான் வந்தது.

அத்தோடு மட்டும் நின்று விடாமல் தயானந்த்தின் கேலி மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றதில், எரிச்சலும் கூடத் தோன்றி விட்டிருந்தது.

அதைத் துளியும் மறைக்காமல் அப்படியே முகத்திலும் காட்டினாள்.

''அதுதான் ஸாரி கேட்டேனே. நானும் பாதில கிளம்பி வர்றதுக்கு எவ்வளவோ முயற்சி செஞ்சேன் சுபா. ஆனா மீட்டிங் கம்ப்ளீட் ஆனதுக்கப்புறம் தான் போகணும்னு ரொம்பவும் கம்பல் பண்ணி எல்லாரும் சேந்து இருக்க வெச்சுட்டாங்கமா. புரிஞ்சுக்கோ.''

................

''சுபா.''

அவனுக்குப் பதிலேதும் சொல்லாமல் அவள் பாட்டுக்கு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வர, உடனே காரை நிறுத்தி விட்டிருந்தான் தயானந்த்.



''சுபா, இங்க பாரு.''

தயானந்த்தின் அழைப்பில் அவனைத் திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

''சொல்லு. என்ன கோபம், ஏன் இப்பிடி இருக்க?''

''அச்சச்சோ! எனக்கென்ன கோபம். நான் நல்லாத்தான இருக்கேன்.''

''சரிதான். நம்பிக்கறேன்...''

''ஸார், வீட்ல அம்மா காத்துட்டிருப்பாங்க. உடனே கிளம்பினாக் கொஞ்சம் நல்லார்க்கும்.''

சுபாஹிணி முடித்துக் கூட இருக்கவில்லை. உடனே காரை ஸ்டார்ட் செய்திருந்தான் தயானந்த்.

அடுத்த பத்து நிமிடங்களில் கார் கம்பெனியை அடைந்திருக்க, உடனே இறங்கிக் கொண்டாள்.

இனிச் சென்று தனது டூ வீலரை எடுத்துக் கொண்டு கிளம்ப வேண்டியது தான் என்று நினைத்தவளுக்கு, தயானந்த் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சற்றே திரும்பி, ''நான் கிளம்பறேன் தயா,'' என்றாள்.

சொன்னவளுக்கு அவளை யறியாமலேயே சிரிப்பு வந்து விட்டிருக்க, எதுவும் பேசாமல் பார்த்தான் தயானந்த்.

''நான் நாளைக்கு மதியம் உங்க வீட்டுக்கு வர்றேன், லஞ்ச்சுக்கு.''

அப்படிச் சொன்னவனை மேலும் புன்னகை விரிவடையப் பார்த்தாள் சுபாஹிணி.

''சரிதான், ஒட்ற தண்ணீல நிச்சயம் எழுதி வெச்சுக்கறேன், விடுங்க,'' என்றவள், ''சரி தயா, பாக்கலாம்,'' என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

அப்பொழுது சுபா என்று அவன் ஓர் அடி எடுத்து வைத்ததையும் அவனுடைய பார்வை மாறியதையும் கண்டும் காணாததைப் போல வெளியே வந்திருந்த சுபாஹிணி அடுத்த சில வினாடிகளில் டூ வீலர் ஸ்டேண்டில் நிறுத்தப்பட்டிருந்த தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

என்னதான் வெளிப்படையாகத் தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் தயானந்தின் பார்வை மாறியதை நினைத்து நினைத்து உள்ளம் பூரித்துப் போனாள் சுபாஹிணி.

மறுநாள் காலையிலிருந்தே சுபாஹிணிக்குச் சற்றும் இருப்புக் கொள்ளவில்லை.

அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டிருக்க, ஞாயிற்றுக் கிழமை என்று கூடப் பாராமல் உடனே எழுந்து வழக்கம் போலத் தனது வேலைகளைச் செய்யத் தொடங்கி விட்டிருந்தாள்.

''மம்மி, காபி கிடைக்குமா? என்ன மம்மி ஆச்சரியமாப் பாக்கறீங்க?''

''இன்னைக்கு சன்டே.''

''சரி, அதுக்கென்ன?''

''எப்பவும் எழறத விடவும் கூட நேரத்துலயே எழுந்திருக்க!''



தாயிடம் சொல்லலாமா அல்லது எதற்கும் முதலில் தயானந்திடம் ஒரு முறை கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்ட பிறகு பார்த்துக் கொள்ளலாமா?

''என்னமா, என்ன யோசனை?''

''அதெல்லாம் இல்ல மம்மி. இன்னைக்கு எங்க எம்.டி. தயானந்த் ம்கூம் உங்க பழைய ஸ்டூண்ட் மதியம் லஞ்சுக்கு நம்ம வீட்டுக்கு வர்றேன்னு சொன்னார்.''

''ஓ அப்படியா!''

ஒருவேளை அவன் வராவிட்டால் என்ற யோசனை சுபாஹிணியின் மனதில் ஓடிக் கொண்டிருக்க, ''சரிதான். வரட்டும், ரொம்ப சந்தோஷம்!'' என்றார் நளினி.

''ஒரு ரெண்டு நிமிஷம் கண்ணா, உனக்கு காஃபி எடுத்துட்டு வர்றேன்.''

''ஒண்ணும் அவசரமில்ல. மெதுவாவே எடுத்துட்டு வாங்க மம்மி, நான் எல்லாத்தையும் ஒதுக்கி வெச்சுட்டிருக்கேன்.''

ஏன், ஏற்கெனவே அனைத்தும் ஒழுங்காகவும் சுத்தமாகவும் தானே இருக்கிறதென்று கேட்க நினைத்த நளினி பிறகு வேண்டாமென்று மகளுக்கு காஃபி எடுத்து வருவதற்காகப் புன்னகையுடன் உள்ளே சென்று விட்டிருந்தார்.

எதற்கும் தயானந்த்திற்கு அழைத்து உறுதி செய்து கொண்டு விடலாமென்று ஒரு வேகத்தில் மொபைலைக் கையில் எடுத்திருந்த சுபாஹிணி, பிறகு அதற்கும் மனம் வராமல் மொபைலைக் கீழே வைத்தாள்.

ம்கூம். இன்று நிச்சயம் தயானந்த் வருவான்.

அவனாகவே வேறு சொன்னானே.

முதல் நாளே சுபாஹிணியின் அக்கா குடும்பமும் கிளம்பி விட்டிருக்க, அன்று வீட்டில் தாய் தந்தையுடன் அவள் மட்டுமே இருந்தாள்.

அன்று மகளின் பரபரப்பும், சந்தோஷமும் அவர்களுக்குப் புதுமையாக இருந்தாலும், அவர்கள் அவசரப்பட்டு எதையும் சொல்லி விட்டிருக்கவில்லை.

ஒருவேளை இன்றைக்கும் மகளுடைய எம்.டி. தயானந்த் வராவிட்டால், ஏனோ மகளை நினைத்துப் பார்க்கவே பாவமாக இருந்தது நளினிக்கு.

முதல் நாள் அவள் மிகவும் எதிர்பார்த்து ஏமாந்தது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஏன் சில நாட்களாக இப்படியெல்லாம் வித்யாசமாக நடந்து கொள்கிறாளென்று ஆச்சரியமாகவும்.

தனது நிலை இப்படியிருக்கக் கணவனுக்கோ மகளின் செய்கைகள் எரிச்சலைத் தோற்றுவித்திருந்ததையும் அவரால் உணர முடிந்திருந்தது.

## 18

"சுபாம்மா."

"சொல்லுங்க மம்மி."

"லஞ்ச்சுக்கு ஏற்கெனவே முடிவு செஞ்சபடி எல்லாத்தையும் செஞ்சுடலாம் இல்லையாம்மா? இல்ல இன்னும் ஏதாவது..."



"போதும் மம்மி, எத்தன தடவ தான் அதையே திரும்பத் திரும்பக் கேப்பீங்க?"

"ஏம்மா நான் சாதாரணமாத்தான கேக்கறேன்?"

"அச்சச்சோ! என்ன மம்மி நீங்க? உங்க டேஸ்ட்ல நீங்களே பிரமாதமா செய்வீங்களே, என்னை ஏன் இன்னைக்குப் புதுசா கேக்கறீங்கன்னு கேக்கறேன். வேறொன்றுமில்ல."

"ஓ, அப்புறம் சுபாம்மா..."

"சொல்லுங்க மம்மி, இன்னும் என்ன?"

"மதியம் ஒரு மணிக்குள்ள எல்லாம் ரெடியாயிட்டா போதுமில்லையா?"

"போதும் மம்மி."

"சுபா."

தந்தை தன்னை அழைத்துக் கொண்டே ஹாலுக்கு வர, "டாடி, சொல்லுங்க," என்று அருகில் சென்றாள்.

"எனக்கு வெளிய ஒரு முக்கியமான வேலமா. அப்பிடியே நம்ம ஆஃபீஸ்க்கும் போகணும். போய்ட்டு வந்துடட்டுமா?"

"என்ன டாடி, இன்னைக்கு எங்க எம்.டி. வர்றார்..."

"அதுக்குள்ள வந்துடுவேம்மா."

"போங்க டாடி. நீங்க வர மாட்டீங்க, ஆஃபீஸ்க்கு மட்டும் போய்ட்டீங்கன்னா உங்களுக்கு நேரம் போறதே தெரியாது."

"இல்லடாம்மா, நிச்சயம் ஒரு மணிக்குள்ள வந்துடுவேன்."

.............

''உன் மம்மி வேற ஏதேதோ ஸ்பெஷலா லஞ்ச் எல்லாம் ரெடி பண்றதா சொல்லிட்டிருக்கும் போது வராம இருக்க முடியுமா சொல்லு? இல்ல, உன் அம்மா தான் நான் அத வந்து டேஸ்ட் பண்ணாம இருக்க விட்டுடுவாளா என்ன?''

''சரி. போய்ட்டு வாங்க டாடி. ஆனா கரெக்டா சொன்ன நேரத்துக்கு வந்துடணும்.''

''சரிடாம்மா,'' என்று தந்தை கிளம்ப, ஏற்கெனவே சரியாக இருந்ததனைத்தையும் மீண்டும் மீண்டும் துடைத்து எடுத்து வைத்தாள்.

சிறிது நேரத்தில் அந்த வேலையும் போரடித்து விட, உடனே துணிகளை எடுத்துக் கொண்டு குளிப்பதற்காகச் சென்றாள்.

குளிக்கச் சென்ற மகள் என்றுமில்லாத அதிசயமாக அன்று குளித்துவிட்டுச் சேலையை உடுத்திக் கொண்டு வர, ஆச்சரியமாகப் பார்த்தார் நளினி.

''என்ன மம்மி பாக்கறீங்க, நல்லா இல்லையா?''

''பிரமாதமா இருக்குடாம்மா, என் கண்ணே பட்டுடும் போல...''

''ச்சு... விடுங்க மம்மி, ஒரு சேஞ்ச்சுக்கு இருக்கட்டுமேன்னு புடவையக் கட்டினேன். அப்புறம் கிச்சன்ல ஏதாவது வேலையிருக்கா மம்மி?''

''அதுசரி, கமலம்மாகிட்ட எனக்கே ஒரு வேலையுமில்ல. நீ போய் உன் வேலைகள வேணும்னா பாருமா. சன்டே ஒரு நாள் தான உனக்கும் லீவ்....''



''சரி மம்மி,'' என்று தாய்க்குப் பதில் சொல்லிக் கொண்டே கிச்சனுக்கு வந்தவள், கமலத்திடம் கேட்டு ஒரு கப் காஃபியை வாங்கிக் கொண்டு தன்னறைக்கு வந்திருந்தாள்.

மீண்டும் ஒரு முறையும் கூடக் கண்ணாடியின் முன்பு நின்று தன்னைத் திருத்திக் கொண்டவள், கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி பன்னிரண்டாகியிருக்க, மீண்டும் தயானந்த் வருவானோ மாட்டானோ என்ற பயம் வந்து அவளை ஒரு வழி செய்யத் தொடங்கி விட்டிருந்தது.

தனக்கு எப்படியோ, ஆனால் பெற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்று பயம் வந்து விட்டிருந்தது.

அதிலும் வீட்டிற்கு வரப்போகும் விருந்தாளிக்காக என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு ஆசையாகவும் கூட.

சொன்னது போலச் சரியாக ஒரு மணிக்குத் தந்தையும் வந்து விட்டிருக்க, தயானந்த் இன்னும் வரவில்லையே என்று யோசனை போனது சுபாஹிணிக்கு.

அதேநேரம் வாசலில் ஒரு கார் வந்து நிற்க, ஆவலுடன் எழுந்து வெளியே வந்தாள்.

அது தயானந்தின் கார் தான் என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு தான் அவளால் இயல்பாக மூச்சு விடக் கூட முடிந்தது.

மனம் படபடவென்று அடித்துக்கொள்ள, வராண்டா வாசற்படியிலிருந்து இறங்கி அருகில் சென்றாள்.

டிரைவர் ஸீட்டிலிருந்து தயானந்த் இறங்கிக் கொண் டிருக்க, அது யார் மறுபக்கத்திலிருந்து இறங்குவது என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''அட ஸ்ரீமதி...''

உடனே நடப்பிற்கு வந்தவளாக, வேகமாகக் காரின் அருகே வந்திருந்தாள்.

''வாங்க ஸார். வா ஸ்ரீ, வா!''

''சுபா, எப்பிடியிருக்க?''

ஸ்ரீமதி கேட்க, ''நான் நல்லார்க்கேன். நீ வந்திருக் கறதத் தான் என்னால நம்பவே முடியல. ஸ்வீட் சர்ப் ரைஸா இருக்கு!'' என்று அவளுடைய கையைப் பிடித்து சந்தோஷத்துடன் உள்ளே அழைத்துக் கொண்டு வந் தாள்.

அதே நேரம் சுபாஹிணியின் பெற்றவர்களும் வந்த விருந்தினரை வரவேற்பதற்காக வெளியே வந்திருக்க, முதலில் ஸ்ரீமதியை அழைத்துக் கொண்டு உள்ளேயே வந்திருந்தாள் சுபாஹிணி.

தொடர்ந்து பெற்றவர்களும் தயானந்த்தை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு வருவது தெரிந்தது.

தாயுடன் சேர்ந்து தானும் வந்தவர்களுக்குப் பழச்சாறு கொடுத்து உபசரித்தாள் சுபாஹிணி.

தயானந்த்தும், தந்தையும் மும்முரமாகப் பேசத் தொடங்கி விட்டிருப்பது தெரிய, அவள் ஸ்ரீமதியுடன் உள் ளறைக்கு வந்திருந்தாள்.

அவர்களுக்கும் தடையற்றுப் பொதுவாகப் பேச விஷ யங்கள் நிறைய இருந்தன.



சாதாரணமாக என்றால் பிரச்சனையே இல்லை தான், ஆனால் ஸ்ரீமதியின் மனதைப் புண்படுத்தி விடக் கூடா தென்று பார்த்துப் பார்த்துப் பேச வேண்டியிருந்ததே அவளுக்கும் சிறிது தயக்கத்தைக் கொடுத்து விட் டிருந்தது.

அதே நேரம் உள்ளே வந்த நளினி தானும் ஸ்ரீமதி யுடன் சில நிமிடங்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

''என்னமா குடிக்காம டம்ளர அப்பிடியே வெச் சிருக்க?''

''வேண்டாமேன்னு பாத்தேன் ஆன்ட்டி. அப்புறம் லஞ்ச் சாப்பிட முடியாதே.''

''அதனால தான் கொஞ்சமாக் குடுத்திருக்கேன்,'' என்ற நளினி மீண்டும் ஒரு முறையும் அக்கறையுடன் குடிக்கச் சொல்லி உபசரித்தார்.

மகள் நடந்ததனைத்தையும் முன்பே ஒரு முறை சொல்லியிருந்தது நினைவிற்கு வர, அவரும் தப்பித் தவறிக்கூட வாய் விட்டு விடாமல் பொதுவான விஷயங் களைப் பற்றி மட்டுமே பேசினார்.

எங்கே தாய் தான் எப்பொழுதோ சொல்லியிருந்ததை மறந்து ஸ்ரீமதியிடம் எதையாவது கேட்டு விடுவாரோ என்று மிகவும் பயந்து போயிருந்த சுபாஹிணிக்கும் அதற்குப் பிறகு தான் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

சிறிது நேரத்தில் அனைவரும் சாப்பிட அமர, தாயு டன் சேர்ந்து தானும் ஆசையாகப் பரிமாறினாள் சுபா ஹிணி.

பிறகு தானும் அமர்ந்து கொண்டாள்.

அனைவரும் சேர்ந்து ஸ்ரீமதியை நன்கு பேசிச் சிரிக்க வைத்தனர்.

அதே சமயம் அது வித்யாசமாகத் தெரியாதபடியும் பார்த்துக் கொண்டனர்.

பல நாட்களுக்குப் பிறகு அவள் வாய் விட்டுச் சிரித்ததில் தயானந்த்துக்கும் மிகுந்த சந்தோஷம்.

அதைக் கடைசியில் ஸ்ரீமதி அறியாத வண்ணம் அனைவரிடமும் குறிப்பிட்டுச் சொல்லி நன்றி சொல்லி விட்டே கிளம்பினான்.

உணவை முடித்துக் கொண்ட சிறிது நேரத்திலேயே இருவரும் கிளம்பி விட்டிருக்க, வீட்டினர் மூவரும் அவர்களை வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டு அவர்களுடைய கார் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்து விட்டே வீட்டிற்குள் வந்தார்கள்.

''சுபா.''

''டாடி.''

''நானும் கூட என்னவோன்னு நினைச்சிருந்தேன். உண்மைலயே உங்க பாஸ் ரொம்ப கிரேட் தாம்மா. அதுலயும் இந்தச் சின்ன வயசுலயே எவ்வளவு சாதிச்சிருக்கார்...''

''முதல்ல அவரு மம்மி ஸ்டூண்ட் டாடி. அதுக்கப்புறம் தான் எனக்கு பாஸ்.''

''அது சரிதாம்மா, ஆனா நாம இப்ப இருக்கறதைத் தான பாக்கணும்.''

''அது சரி தான்,'' என்று தானும் கணவனை ஆமோதித்தார் நளினி.



''மத்ததெல்லாம் கூட இருக்கட்டும். முதல்ல எவ்வளவு தன்னடக்கம்!'' என்று உணர்ந்து சொன்னவர், சில நாட்களுக்கு முன்பு தயானந்த்தைத் தான் வெளியே சந்திக்க நேர்ந்தது முதல் அவன் வீட்டிற்கு வந்து சென்றது வரை கூட அனைத்தையும் சொன்னார்.

''அத நான் டாடிகிட்ட ஏற்கெனவே சொல்லிட்டேன் மம்மி,'' என்று சுபாஹினி சொல்ல, ''ஆமா, அந்தப் பொண்ணு ஸ்ரீமதி தயானந்த்தோட அத்த பொண்ணு இல்லையாம்மா?'' என்று கேட்டார் நடேசன்.

''ஆமா டாடி. ஏன் கேக்கறீங்க?''

''ஸ்ரீமதியத் தான் உன் பாஸ் கல்யாணம் பண்ணிக்கப் போறார் போலிருக்கு, இல்லையா?''

தந்தையின் கேள்வியில் மனதிற்குள் மிகவும் அதிர்ச்சியடைந்து விட்டிருந்தாள் சுபாஹினி.

''என்னமா, ஸ்டன்னாயிட்ட?''

''ம்கூம், நான் வேற ஒரு யோசனைல இருந்தேன். என்ன டாடி கேட்டீங்க?''

''இல்ல, அந்த ஸ்ரீமதிக்கும், தயானந்த்துக்கும் நல்ல பொருத்தம்னு சொன்னேன்''

''ஏன் டாடி அப்பிடிச் சொல்றீங்க?'' என்று தனக்கு அது அனாவசியம் என்பதைப் போலக் காட்டிக் கொண்டு கேட்டவளால் தந்தை எப்பொழுதுமே அவசியமில்லாதவற்றைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடியவரல்லவே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''எது எப்படியோ, ஆனா ஸ்ரீமதி ரொம்ப லட்சணமா இருக்கா.''

தாய் சொல்ல, "இப்ப ரொம்பவும் டல்லாயிட்டா மம்மி. ஆக்ஸிடண்ட்டுக்கு முன்னாடி மட்டும் நீங்க அவளப் பாத்திருக்கணும்!" என்று உணர்ந்து சொன்னாள்.

"அது சரிதாம்மா, பாத்தாலே தெரியுதே. குணத்துலயும் பிரமாதமானவளா இருக்கா. எப்பிடியோ திரும்பவும் அவ வாழ்க்கைல வசந்தம் வந்தா சரிதான்."

"அதுலயும் ஸ்ரீமதி சிரிக்கறதப் பாத்த தயானந்த்துக்கும் தான் எவ்வளவு சந்தோஷம்!" என்று சொன்ன தாயையும் அதை ஆமோதித்த தந்தையையும் முகத்திலிருக்கும் புன்னகை மறையாதவாறு பார்த்தபடி அமர்ந்திருந்தாள் சுபாஹிணி.

ஆனால் அந்த முயற்சியுமே கூடத் தொடர்ந்து கை கொடுத்திருக்கவில்லை.

தயானந்த்திற்கும் ஸ்ரீமதிக்கும் திருமணம் நடக்க விருப்பதைப் போலவே பெற்றவர்கள் பேசிக் கொண்டிருந்ததில், மனம் இடிந்து போய் விட்டிருந்தாள்.

"என்னமா, ஏன் திடீர்னு டல்லாயிட்ட?"

"என்னன்னு தெரியலமா, தல வலிக்கிது."

"என்னடாம்மா, இன்னும் உனக்கு அந்தத் தலவலிப் பிரச்சன சரியாகவே இல்லையா? எதுக்கும் போய் செக் பண்ணிடலாம்மா. கண்ணாடி போட வேண்டியதிருந்தாலும் இருக்கும்."

"சரி தான் மம்மி," என்றவள், "நான் போய்க் கொஞ்சம் படுத்துக்கறேன்," என்று எழுந்து தன்னறைக்கு வந்திருந்தாள்.

பொய் சொல்லிவிட்டு வந்தவளுக்கு, இப்பொழுது உண்மையாகவே தலை விண்விண்ணென்று வலியால் தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது.



எதையுமே செய்யத் தோன்றாமல் அப்படியே படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.

ஆனால் உள்ளுக்குள் மனம் மட்டும் ஊமையாய் அழுது கொண்டே இருந்தது.

ஒருவேளை தனது பெற்றவர்கள் பேசிக் கொள்வது போலத்தான் நடக்குமோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் அம்மா அப்பாவின் பார்வைக்கு ஏன் அந்த மாதிரிப் படப் போகிறது.

ஏன் சில நாட்களாகத் தயானந்த்துமே கூட வித்யாசமாகத் தானே நடந்து கொள்கிறான்.

இல்லை.

விடக் கூடாது.

எக் காரணத்தைக் கொண்டும் அந்த மாதிரி எதுவும் நடந்து விடத் தான் விட்டு விடவே கூடாது.

ஏனோ அப்படியொரு எண்ணம் தோன்றி விட்ட பிறகு சில வினாடிகள் கூட அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை.

உடனே தனது மொபைலை எடுத்துத் தயானந்த்திற்கு அழைத்து விட்டிருந்தாள்.

உடனே தொடர்பு கிடைத்து விட்டிருக்க, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு -

"நான் உங்களப் பாக்கணும்," என்றாள்.

அதற்கு எதிர்முனையில் தயானந்த் சொன்ன பதில் ஏற்கெனவே அவளுக்கிருந்த பயத்தை மேலும் பலமடங்கு அதிகப்படுத்தி யிருந்தது.

அழைத்து விட்டதற்காகச் சில வார்த்தைகள் பேசி விட்டு, முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு போனை வைப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது.

தொடர்ந்து யோசிக்க யோசிக்க, இப்பொழுது பயத்தோடு கோபமும் சேர்ந்து வந்திருந்தது சுபாஹிணிக்கு.

தயானந்த் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறானென்று எரிச்சலாகவும்.

அவனே சொல்வதை வைத்துப் பார்த்தால் அவனுக்குத் தன் மீது துளியும் அக்கறையோ ஏன் எதுவுமே இல்லை என்பது போலத்தானே படுகிறது.

சரிதான் போகட்டும்.

ஸ்ரீமதியை அவன் மருத்துவரிடம் அழைத்துச் சென்றால் என்ன அல்லது வேறு எங்கேனும் கேளிக்கை, கொண்டாட்டங்களுக்கு அழைத்துச் சென்றால் தான் எனக்கென்ன?

என்னதான் எதையெதையோ, எண்ணி முயன்று மனதைத் தேற்றிக் கொண்டு விட்டிருந்தாலும், தொடர்ந்து சுபாஹிணியால் நிம்மதியாக இருக்க முடிந்திருக்கவில்லை.

சரிதான். பார்க்க முடியாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. அவனுக்கும் பாவம் எத்தனையோ வேலைகள் இருக்கும் தான். கடைசிக்கு என்ன விஷயம் எதற்காக அழைத்தாய் என்றாவது ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம் அல்லவா?

அது சரி.



அப்படிக் கேட்குமளவிற்கு இருந்திருந்தால் தன்னைப் பார்ப்பதற்காக நேரிலேயே கூடக் கிளம்பி வந்திருக்க மாட்டானா என்ன!

கடவுளே! நான் ஏன் இப்படி இருக்கிறேன்.

ஏன் என் மனம் இந்தப் பாடு படுகிறது.

நடந்ததையெல்லாம் ஒரு கெட்ட கனவாக எண்ணி நாம் ஏன் அவனை மறந்து விட முயற்சி செய்யக் கூடாது.

அப்படி நினைத்தது தான் தாமதம், தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு அழுகை வந்து விட்டிருக்க, படுக்கையில் விழுந்து வெகுநேரம் அழுது தீர்த்தாள்.

பிறகு ஒரு வழியாக எழுந்து அமர்ந்தவள், அப்போதைக்குத் தெளிந்தும் இருந்தாள்.

## 19

ஒரு வாரம் சென்றிருந்தது.

பெங்களூரிலிருந்து ஸ்ரீமதியின் மன மாறுதலுக்காக அவளுடைய குடும்பம் சென்னைக்குக் குடி பெயர்ந்திருந்தது.

அதனால் இப்பொழுதெல்லாம் தயானந்த் பெரும்பாலும் இருப்பது அவளுடைய வீட்டில் தான்.

அவனே சொல்வதை வைத்துத் தனக்குள் யோசித்த போது சுபாஹிணிக்கு அப்படித்தான் தோன்றியது.

"சுபா."

தயானந்த் அழைக்க, எழுந்து சென்றாள் சுபாஹிணி.

''நான் ஒரு பெண்டிங் லிஸ்ட் தர்றேன். அத எல்லாத்தையும் ஒரு வாரத்துக்குள்ள முடிச்சிடு.''

''ஓ.கே.ஸார்.''

''அப்பதான் நான் வந்ததும் புது ஆடருக்கான வேலைய ஸ்டார்ட் பண்ண முடியும்,'' என்றவன், ''ஏன்னு கேக்க மாட்டியா?'' என்றான்.

அப்படிக் கேட்டவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் சுபாஹிணி.

''ஒரு வாரத்துக்கு நான் இங்க இருக்க மாட்டேன். ஒரு முக்கியமான வேலையா வெளியூர் போறேன்.''

அவன் சொல்வதைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விடுவாளென்று நினைத்திருந்தானோ என்னவோ, தன்னுடைய எதிரொலிக்காக அவன் காத்திருப்பது தெரிந்தது.

என்னவோ இங்கே இருந்தால் மட்டும் சிறு கணமும் தன்னைப் பிரியாமல் தோளோடு தோள் சேர்த்துக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிற மாதிரியல்லவா கேட்கிறான்.

''என்னமா?''

''சரிதான் ஸார். உங்க கம்பெனி, உங்க வேல, உங்க இஷ்டம். இதுல நான் கருத்துச் சொல்ல என்ன இருக்கு?''

விரக்தியுடன் அப்படிச் சொன்னவளை முயன்று வந்த சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு பார்த்தான் தயானந்த்.

''ம். அப்புறம்?''



தயானந்த்தின் கேலியிலும், கிண்டல் பார்வையிலும், ''எனக்கு வேலையிருக்கு!'' என்று பட்டென்று சொல்லி விட்டுத் தன்னிடத்திற்கு வந்திருந்தாள் சுபாஹிணி.

''சுபா, நில்லு.''

அவன் அழைத்தது கேட்டாலும், காதில் விழாதது போலக் காட்டிக் கொண்டு வந்தவள் அவனே சொன்னது போல வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதாவது அப்படிக் காட்டிக் கொண்டாள். அவ்வளவே.

அதற்கே அவள் எவ்வளவோ சிரமப்பட வேண்டியிருந்தது.

அவன் அதை அப்போதைக்கு வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும், சுபாஹிணியின் கோபமும் ஆதங்கமும் தயானந்த்திற்கும் புரியவே செய்தது.

என்னதான் தான் வேலைப் பளுவில் சிக்கி விழி பிதுங்கிக் கொண்டிருந்தாலும் அது சுபாஹிணிக்குத் தெரியாத, புரியாத பட்சத்தில் அவள் தன்னைத் தவறாகத் தானே நினைக்க வாய்ப்பிருக்கிறதென்று நினைக்கத் தோன்றியது.

சுபாஹிணியின் கோபத்திற்கான காரணம் புரிந்து விட்ட பிறகு ஏனோ அவனால் தொடர்ந்து இயல்பாக இருக்க முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் தொடர்ந்து வந்து கொண்டே இருந்த வேலைகளுக்கு மத்தியில் ஏன் அதற்குப் பிறகும் கூட அவன் அதை மறந்து தான் போனான்.

''நான் கிளம்பறேன் ஸார்,'' என்று வேலை நேரம் முடிந்து சுபாஹிணி கைப்பையுடன் வந்து நின்ற பிறகு தான் அவனுக்கு மீண்டும் அவளுடைய நினைவே வந்தது.

''இருமா. உங்கூடக் கொஞ்சம் பேசணும். நானும் வர்றேன்.''

தயானந்த் சொல்ல, ''இல்ல, நான் உடனே கிளம்பியாகணும். எனக்கு அவசரமா செய்ய வேண்டிய வேல ஒண்ணு இருக்கு,'' என்றாள்.

''சரி. ஒரு பத்து நிமிஷம் உக்காரு. பேசிட்...''

''இல்ல ஸார். நான் உடனே கிளம்பியாகணும்.''

''சுபா...''

''அட என்ன ஸார் நீங்க, டியூட்டி டைம் தான் முடிஞ்சதே, அப்புறமென்ன?''

''புரிஞ்சுக்கோ...''

''ஸாரி!'' என்றவள், அதற்கு மேல் வினாடி கூடத் தயங்காமல் உடனே கிளம்பி விட்டிருந்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் வீடு வந்து சேர்ந்திருந்த சுபாஹிணிக்கு, அதற்குப் பிறகோ அவன் அத்தனை முறை சொன்னானே, இருந்து என்னதான் சொல்ல வருகிறானென்று கேட்டுவிட்டு வந்திருக்கலாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

காரணமே இல்லாமல் தன் மீதே கோபம் கோபமாக வந்தது அவளுக்கு.

இது என்ன வாழ்க்கை என்று நினைத்தவளுக்கு அழுகை வந்துவிடும் போலாகி விட்டிருந்தது.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க, உடனே எடுத்துப் பார்த்தாள்.

ஸ்ரீமதி.



உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்த சுபாஹிணி, சில நிமிடங்கள் பேசிவிட்டு மொபைலைக் கீழே வைத்திருந்தாள்.

''என்னமா, யாரு போன்ல?''

''வாங்க மம்மி. இவ்வளவு நேரம் எங்க போயிருந்தீங்க?''

''மாடியில வடகம் காயப் போட்டத எடுக்கப் போனேம்மா. இப்பதான் வந்தியா?''

''ம், போன்ல ஸ்ரீமதிமா.''

''அப்பிடியா, நல்லார்க்காளா?''

''ஆமாம்மா. அப்புறம் நம்மள நாளைக்கு நைட்டு அவங்க வீட்டுக்கு டின்னருக்கு இன்வைட் பண்ணினா. கண்டிப்பா மூணு பேரும் வரணும்னு சொன்னா...''

''என்ன விசேஷம்?''

''சும்மாதான். அவங்க வீட்ல குடும்பத்தோட எல்லாரும் இங்க சென்னைக்குப் போன வாரம் தான குடி வந்திருக்காங்க.''

''சரிதாம்மா. நீ வேணும்னாப் போய்ட்டு வா. டாடி ரெண்டு நாள் வேலையா மதியம் தான் வெளியூர் கிளம்பினார். இனி அவர் திரும்ப ரெண்டு நாளாகும்.''

''அப்ப நாளைக்கு நீங்க எங்கூட வாங்க.''

''பாக்கலாம்மா. நாளைக்குப் பௌர்ணமிக்குக் கோவிலுக்கு வேற போக வேண்டியதிருக்கும்னு நினைக்கறேன்.''

முதலில் சுபாஹிணியும் போகக் கூடாதென்று தான் நினைத்திருந்தாள்.

ஆனால் அதற்கு வழியில்லாமல் மேலும் இரண்டு முறையும் கூட ஸ்ரீமதி அழைத்து விட்டிருந்ததால், அவள் சென்று வர வேண்டியதாகி விட்டது.

தாய் கோவிலுக்குச் செல்வதால் வர முடியாதென்று விட்டிருக்க, அப்படியே வேலை முடிந்ததும் தான் மட்டும் சென்று வந்து விட முடிவு செய்திருந்தாள் சுபாஹினி.

வேலை முடிந்து மாலையில் அப்படியே ஸ்ரீமதியின் வீட்டிற்குச் சென்று வர வேண்டியிருந்ததால் அன்று பார்த்துப் பார்த்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் சுபாஹினி.

இரவு தான் மட்டும் தனியாக வர நேரிடுமே என்று அன்று ஸ்கூட்டியைத் தவிர்த்துவிட்டு வழக்கமாகச் செல்லும் கால் டேக்ஸியில் தான் வேலைக்கே சென்றாள்.

அவசியப்பட்டால் மாலையும் அழைக்கிறேனென்று சொன்னவள், கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு கம்பெனிக்குள் சென்றாள்.

அன்று ஏனோ வழக்கத்திற்கு மாறாக தயானந்த்தை எதிர்கொள்ள வேண்டுமென்ற எண்ணமே மிகுந்த படபடப்பை ஏற்படுத்தியிருந்தது.

எதிர்பார்த்தது போலவே அன்று தனக்கு முன்னே தயானந்த் வந்திருக்க, வழக்கம் போல அவனுக்கு விஷ் செய்துவிட்டுத் தன்னிடத்திற்கு வந்திருந்தாள் சுபாஹினி.

கூர்மையாகத் தன்மேல் விழுந்த அவனுடைய பார்வையைக் கண்டும் காணாதது போலக் காட்டிக் கொண்டு



வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள்.

தயானந்த் சொல்லச் சொல்ல அவனுடைய டேபிளுக்கு முன்பாக இருந்த சேரில் அமர்ந்து குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள் சுபாஹினி.

தயானந்த்தின் அருகாமையும், அவனுடைய கனகம்பீரமான குரலும், அன்று தன்னை ஏதேதோ செய்ய, முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு அவன் சொல்லும் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

தயானந்த்திற்கும் சுபாஹினியின் அந்த நிலை புரியவே செய்தது.

அவனுடைய நிலையும் அது தான். ஏன், அதற்கும் ஒருபடி மேலாகவே என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

திடீரென்று யாரோ உள்ளே வருவதைப் போலிருக்க, ஒரு சேர இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

ஸ்ரீமதி உள்ளே வந்து கொண்டிருக்க, ''வா, என்ன இந்த நேரத்துக்கு?'' என்று ஆச்சரியத்துடன் வரவேற்றான் தயானந்த்.

''ஆமாம் அத்தான். உங்களப் பாக்கத்தான்!'' என்ற ஸ்ரீமதி தன்னைப் புன்னகையுடன் பார்க்க, தானும் சிரித்தாள் சுபாஹினி.

''அட, ஆச்சரியமா இருக்...''

''அது தான் இல்ல, நான் வந்தது சுபாவப் பாக்கறதுக்காக,'' என்று அவசரமாகச் சொன்னாள்.

''அட, இது அதவிட ஆச்சரியமா இருக்கே.''

"ம். இதுல உங்களுக்கு என்ன ஆச்சரியம், நான் என் ஃப்ரண்டப் பாக்க வந்தேன்."

"சரி மேடம், பாருங்க, பேசுங்க..."

"தேங்க்ஸ்!" என்று திரும்பி சுபாஹினியைப் பார்த்த ஸ்ரீமதி, "சுபா, நீ எங்கூடக் கொஞ்சம் நேரத்துலயே கிளம்ப முடியுமா?" என்று கேட்டாள்.

"நேரத்துலயேவா, ஏன்?"

"ம், சும்மாதான். இல்லன்னா நீ பாட்டுக்கு வீட்டுக்கு வராமலே போய்ட்டேன்னா..."

"அச்சச்சோ, நிச்சயம் வருவேன் ஸ்ரீ."

"அப்ப இப்பவே வா, போலாம். டியூட்டி டைம் முடியறதுக்கு இன்னும் ஒன் அவர் தான இருக்கு."

சிறு குழந்தை போல ஸ்ரீமதி கட்டாயப்படுத்த, உடனே தயக்கத்துடன் திரும்பித் தயானந்த்தைப் பார்த்தாள் சுபாஹினி.

தொடர்ந்து ஸ்ரீமதியும்.

சுபாஹினி எதுவும் பேசாமல் அவனைப் பார்க்க, "ப்ளீஸ் அத்தான்..." என்றாள் ஸ்ரீமதி.

"அப்பாடா, இப்பவாவது ரெண்டு பேருக்கும் நானும் ஒரு மனுஷன் இங்க இருக்கறது ஞாபகம் வந்ததே."

"என்னது, ஞாபகம் வர்றதா, எனக்குப் பயமே உங்கள நினைச்சு தான். எங்க ரொம்ப நேரம் வேல வாங்கி சுபாவ வீட்டுக்கு வர விடாமப் பண்ணிடுவீங்களோன்னு தான் இப்பக் கூட நான் கிளம்பி வந்ததாக்கும்."



"அது சரி," என்றவன், "சரி தான் மேடம். அதுக்காவது கொஞ்ச நேரம் வெய்ட் பண்ண முடியுமா?" என்று கேட்டான்.

"ஷ்யூர் அத்தான், ஆனா..."

"ம், இனியும் என்ன?"

"ஸாரி."

"எதுக்கு?"

"டியூட்டி டைம்ல வந்து இப்பிடி டிஸ்டர்ப் பண்றதுக்காகத் தான் அத்தான். இனிமேல் நிச்சயம் இந்த மாதிரி நடந்துக்க மாட்டேன்."

"பரவாயில்லமா, தொடர்ந்து நீ இதே மாதிரி செய்ய மாட்டேன்னு எனக்கும் தெரியும்!" என்றவன் இந்த மாதிரி வேலை நேரத் தலையீடுகளில் தனக்குச் சுத்தமாக விருப்பமில்லை என்பதைச் சொல்லாமல் சொன்னான்.

## 20

ஸ்ரீமதியுடன் அவளுடைய வீட்டிற்கு வந்திருந்த சுபாஹிணிக்கு ஏனோ அனைத்துமே வித்யாசமாக இருந்தது.

அதாவது அவளுடைய வீட்டினரின் செய்கையில் ஏதோ செயற்கைத்தனம் தெரிகிறதோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நேரம் போகப் போக அந்த எண்ணம் அதிகமானதோடு, கடைசியில் அது உறுதியும் ஆனது.

வெகுளித்தனமாக ஸ்ரீமதி அவள் பாட்டிற்கு சுபா சுபா என்று தன்னைப் பிடித்துக் கொண்டு விட்டிருக்க, அதை அவளுடைய பெற்றவர்கள் விரும்பவில்லையோ என்று நினைக்கத் தோன்றியது.

சும்மா என்றால் எப்படியோ, இப்பொழுது தான் மீண்டும் பழையபடி சிரிக்கத் தொடங்கியிருக்கும் மகள் ஸ்ரீமதியின் முகத்தில் தெரியும் சந்தோஷத்தை அழித்து விட அவர்களாலும் முடிந்திருக்கவில்லை என்பதே உண்மை.

''ஸ்ரீ!'' என்று அழைத்துக் கொண்டே அவளுடைய தாய் காவேரி வர, ''என்னமா?'' என்று கேட்டாள் அவள்.

''ஒரு சின்ன உதவி செய்ய முடியுமாம்மா?''

''என்னமா, சொல்லுங்க?''

''உங்க அப்பா கூட ஒரு பத்து நிமிஷம் வெளிய போய்ட்டு வர முடியுமாம்மா?''

''எதுக்குமா?''

''உன் டிரஸ்ஸத் தைச்சு ரெடியா வெச்சிருக்காங்களாம். கூடப் போய்ப் பாத்து வாங்கிட்டு வரணும்.''

''ஓ, போறேனே!'' என்ற ஸ்ரீமதி, ''வா சுபா,'' என்று சுபாஹிணியையும் அழைத்தாள்.

''போனதும் பத்து நிமிஷத்துல வரப் போற, அதுக்கு சுபா எதுக்குமா? நானும் அவளும் கிச்சன்ல ஒரு சின்ன வேலையிருக்கு, நீங்க வர்றதுக்குள்ள முடிச்சுடறோமே.''

''சரிதான்மா, நீங்க பாருங்க,'' என்றவள், ''உடனே வந்துட்றேன் சுபா,'' என்று விட்டுத் தனது தந்தையுடன் கிளம்பினாள்.



கணவனும், மகளும் சென்ற கார் கண்களை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த காவேரி, உடனே சுபாஹிணியை நோக்கித் திரும்பினார்.

''வாடியம்மா வா, இந்த சந்தர்ப்பத்துக்காக நானும் எவ்வளவு நாளாக் காத்துட்டிருக்கேன் தெரியுமா?'' என்றவர், ''ஆனா அது எப்பிடி உனக்குத் தெரியும், உன் கண்ணத்தான் வேற ஒண்ணு எதையும் பாக்கவிடாம மறைச்சுட்டிருக்கே!'' என்றார்.

ஏளனத்துடன் தன்னைப் பார்த்து ஏதேதோ சொல்லும் ஸ்ரீமதியின் தாயைப் புரியாமல் பார்த்தாள் சுபாஹிணி.

''என்ன பாக்கற? என்ன பண்ணுவியோ ஏது பண்ணு வியோ தெரியாது. நீ உடனே வேலய விட்டு நின்னா கணும்.''

............

''என்னடி பாக்கற? உன் வேஷமெல்லாம் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுக்காத. தயாவ நீ உன் கைக்குள் வெச்சுட்டிருக்கறது வரைக்கும் எனக்கும் எல்லாமே தெரியும்.

''தயாவுக்கும், ஸ்ரீக்கும் தான் அவங்க சின்ன வயசுல இருந்தே கல்யாணம் நடக்கும்னு நாங்க எல்லாரும் நம் பிக்கையோட இருந்தோம். யார் கண் பட்டதோ இடைல கொஞ்சங் கூட நினைச்சே பாக்க முடியாத அளவுக்கு ஏதேதோ நடந்து போச்சு.

''ஆனா அதையெல்லாம் கெட்ட கனவா நாங்க மறந்துட்டோம், ஸ்ரீயும் மறந்துட்டு வந்துட்டிருக்கா. ஆனா இப்ப இந்த நேரத்துல எங்களுக்கெல்லாம் பெரிய தலவலியா இருக்கறது நீ தான்.''

''ஸ்ரீமதிய தயாவுக்கு எப்பவுமே ரொம்பவும் புடிக்கும். அதுலயும் அவ படுத்ததுக்கப்புறம் தயா அவள எப்பிடிக் கண்ணுக்குள்ள வெச்சுப் பாத்துக்கிட்டான் தெரியுமா?

''எங்க நிலம உனக்குப் புரியறது கஷ்டந்தான். என் புரியாதுன்னே கூட சொல்லிடலாம். சரி, மத்ததெல்லாம் எதுக்கு? விஷயத்துக்கு வர்றேன். நல்லாக் கேட்டுக்கோ, ஒரு வார வேலையா நாளைக்குக் காலைல தயானந்த் வெளியூர் கிளம்பறான். அவன் திரும்பி வரும் போது நீ வேலைல இருக்கக் கூடாது. சொல்லாமக் கொள்ளாம ஓடிப் போயிருக்கணும். சொல்லிட்டேன்.''

..............

''என்னடி, பேசு.''

காவேரியின் அதட்டலில் தான் நடப்பிற்கே வந்திருந்தாள் சுபாஹினி. வந்தவள் தனக்கு எதிரே கோபத்துடன் நின்று கொண்டிருப்பவருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள்.

''உன்னோட அப்பாவித்தனமான நடிப்புக்கும், வெள்ளத் தோலுக்கும் தயானந்த் வேணும்னா மயங்கலாம். எங்கிட்ட உன் பப்பெல்லாம் வேகாதுங்கறதப் புரிஞ்சுக்கோ.

''உனக்கென்னடியம்மா, நீ பாக்கவும் பிரமாதமா வெள்ளத் தோலோட முக்கியமா உடல்ல எந்தக் குறையும் இல்லாம நல்லாத்தான இருக்க! தயானந்த் என்ன, அவன விடவும் பெரிய பணக்காரங்களக் கூட நீ நினைச்சா சுலபமா வளைச்சுடலாம்.''



..........

''உன்னக் கெஞ்சிக் கேட்டுக்கறேன், எம் பொண்ணுக்குத் துரோகம் பண்ணிடாத. உனக்கே அதுக்கு மனசு வராதுன்னு தான் நினைக்கறேன். ஏன்னா அவமேல உனக்கும் கொஞ்சம் அக்கறை இருக்குங்கறது எனக்கும் தெரியும்...''

எதிரிலிருப்பவர் இன்னும் என்னென்னவெல்லாம் சொன்னாரோ, அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த சுபாஹினிக்கு ஏனோ நெஞ்சு நடுங்கிக் கொண்டிருக்க, மனம் கனத்துப் போய்விட்டிருந்தது.

சிறிதும் யோசிக்காமல் என்னவெல்லாம் சொல்லி விட்டார். அதுவும் எவ்வளவு சுலபமாக.

தான் மட்டும் நினைத்தால் பெரிய பணக்காரர்களைக் கூட எளிதில் வளைத்து விடலாமாமே.

இவரும் ஒரு பெண்ணைத்தானே பெற்றிருக்கிறார், இந்த மாதிரியெல்லாம் பேச இவரால் எப்படி முடிகிறது.

தொடர்ந்து யோசனை போனதில் கண்களைக் கரித்துக் கொண்டு வர, இவருக்கு முன்பாகத் தன்னை இன்னும் கீழிறக்கிக் கொள்ள வேண்டாமென்று முயன்று வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''தயவுசெஞ்சு நான் சொன்னதையெல்லாம் உன் மனசுக்குள்ள வெச்சுக்கோடியம்மா. அத விட்டுட்டு எங்காவது என்னக் காட்டிக் குடுத்துடாத.

''யாருக்கு எப்பிடியோ, முதல்ல ஸ்ரீமதி தாங்கிக்க மாட்டா. ஏன்னா தயானந்த் அவளுக்குத் தான்னு அவ ரொம்பவும் நம்பிட்டிருக்கா, என்ன, பேசு....''

காவேரியின் அதட்டலில், நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் சுபாஹினி.

''என்ன... நான் சொன்னதெல்லாம் உன் மண்டைக்குள்ள ஏறுச்சா இல்லையா?

மிகவும் முயன்று, ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''இதக்கூட ஏன் சொல்றேன்னா ஸ்ரீக்கு எந்த அதிர்ச்சியும் கண்டிப்பாக் குடுக்கவே கூடாதுன்னு டாக்டர் ஸ்ட்ரிக்டா சொல்லியிருக்கார். அதான்.

''முக்கியமா இப்பிடி முகத்தத் தூக்கி வெச்சுட்டிருக்கறத முதல்ல விடுமா. சாதாரணமா எப்பிடி இருப்பியோ அந்த மாதிரி இருந்து வந்த வேலைய முடிச்சுட்டுக் கிளம்பிடு.''

கடவுளே! இன்று ஏன் எனக்கு இப்படி அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாகக் கொடுக்கிறாய் என்று நினைத்தவளுக்கு வார்த்தைகளால் காவேரி மேலும் ஒரு அறை கொடுத்திருந்தார் என்றால் அது சற்றும் மிகையல்ல.

''வேலைக்கு மட்டும் தான் வரக் கூடாது போலிருக்குன்னு நினைச்சுக்காத. இந்த வீட்டுக்கும் தான். இங்க நீ வந்திருக்கறது இதுவே முதலும் கடைசியுமா இருக்கட்டும். உனக்கும் ரோஷம் கொஞ்சமாவது இருக்கும்னு நினைக்கறேன். பாத்து நடந்துக்கோ.''

அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தவளை அவருடைய வார்த்தைகள் தான் மீண்டும் நடப்பிற்குக் கொண்டு வந்து விட்டிருந்தன.

சை! என்ன மாதிரி மனிதர்கள் என்று விரக்தியுடன் நினைத்துக் கொண்டாள்.



ஏனோ அந்த வீட்டிற்குள் நிற்பதே முள்ளின் மேல் நிற்பதைப் போன்றதொரு வலியையும், அவஸ்தையையும் உண்டாக்கி விட்டிருக்க, உடனே கிளம்பி விட்டால் என்னவென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

இருந்திருந்து தன்னைப் போய் ஒருவர் இந்த மாதிரியெல்லாம் நடத்துவதா?

வீட்டிற்கு வர வேண்டாம், முகத்தில் கூட விழிக்க வேண்டாம் என்பதைப் போலெல்லாம் சொல்வதா?

அதுவும் ரோஷம் என்பது கொஞ்சமாவது இருந்தால் பார்த்து நடந்து கொள்வதாமே!

அது சரிதான். உண்மையிலேயே ரோஷம் கொஞ்சமாவது இருக்கிற பெண்ணாகத் தான் இருந்திருந்தால் அங்கிருந்து கிளம்பிச் சென்றே வெகுநேரம் ஆகியிருக்க வேண்டும்.

யதேச்சையாகத் திரும்பியவளுக்கு அவளுடைய கைப்பை கண்களில் பட, அதை எடுத்துக் கொண்டு கிளம்புவதற்காக உடனே இரண்டு அடி கூட எடுத்து வைத்திருந்தாள் சுபாஹினி.

ஆனால் அதே நேரம், ''சுபா!'' என்று ஸ்ரீமதியின் குரல் கேட்க, அதை எடுக்காமலே திரும்பினாள்.

''நான் போனதே வேஸ்ட்மா. இன்னும் அவங்க தைச்சே முடிக்கல!'' என்று அருகில் வந்திருந்த ஸ்ரீமதி, அப்பொழுது தான் சுபாஹினியின் முகத்தை நன்றாகப் பார்த்தவளாக, ''ஏய் சுபா, என்னாச்சு?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டாள்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சுபாஹிணி விழிக்க, உடனே தன் வாயைத் திறந்திருந்தார் ஸ்ரீமதியின் தாய் காவேரி.

"அதையேம்மா கேக்கற?"

"என்ன மம்மி, என்னாச்சு, சொல்லுங்க..?"

"சுபாஹிணியோட தூரத்துச் சொந்தத்துல ஒரு அத்தையாம். ரொம்ப நாளா உடம்புக்குச் சரியில்லாம படுத்துட்டிருந்தாங்களாம். ஆனாலும் இறந்துட்டாங்கன்ற போது மனசுக்குக் கஷ்டமாதான இருக்கும்..."

"ஓ, ஸாரி சுபா! உன் நிலம புரியாம நான் பாட்டுக்கு ஏதேதோ உளறிட்டேன். அப்ப நீ இப்பவே...."

"ம்கூம். அதெல்லாம் இல்லாம, அவங்க இருக்கறது கோயம்புத்தூருக்குப் பக்கத்துல ஏதோ ஒரு கிராமத்துல. அதனால இப்பப் போகலையாம். பாவம், அத சொல்றதுக்குள்ளயே சுபா ரொம்பவும் டல்லாயிட்டா.."

"இருக்காதா பின்ன. அம்மா, எங்க ரெண்டு பேருக்கும் காஃபி குடுக்கறீங்களா?

"அச்சச்சோ! நான் ஒரு பைத்தியம். இதக்கூட மறந்து போய்ட்டேன் பாரு. இதோ ரெண்டு நிமிஷத்துல எடுத்துட்டு வர்றேம்மா."

"மெதுவா வாங்கமா. ஒன்னும் அவசரமில்ல."

"வா சுபா. முதல்ல வந்து முகம் கழுவி முடிய ஒதுக்கிக்கோ. வா, அப்பதான் உனக்கும் கொஞ்சம் பரவாயில்லாம இருக்கும்."

மனதிற்குள் ஒரு பெரிய போராட்டமே நடந்து கொண்டிருக்க, ஒரு வார்த்தை கூட ஆட்சேபிக்காமல் பொம்மை



போல ஸ்ரீமதி சொல்வதையெல்லாம் செய்தாள் சுபாஹிணி.

உடனே கிளம்பி விட வேண்டுமென்று துடித்த மனதை, முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

பாவம், ஸ்ரீமதி தன்னை எவ்வளவு ஆசையாக அழைத்துக் கொண்டு வந்தாள்! அது எந்த அளவிற்குப் பெரிய தண்டனையாக இருந்தாலும் அவளுக்காக நாம் இன்னும் சிறிது நேரம் அதைப் பொறுத்துப் போகத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்களில் தாய் இரண்டு கப்களில் காபியுடன் வர அதில் ஒன்றை எடுத்து சுபாஹிணியின் கைகளில் வைத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள் ஸ்ரீமதி.

"எங்களுக்குக் கிச்சன்ல ஏதாவது வேலையிருக்கா மம்மி?"

"இல்லடாம்மா. சிம்பிள் டிஃபன்தானே. நானே செஞ்சு எல்லாத்தையும் பரிமாறத் தயாரா டேபிள்ல கூட எடுத்து வெச்சாச்சு."

"அப்பிடியா! அப்ப தயா அத்தான் மட்டும் வந்தாப் போதும்னு சொல்றீங்க, இல்லையா?"

"ஆமாம்மா, பாவம்! அவருக்கும் நினைப்பெல்லாம் இங்க குறிப்பா உம் மேல தான் இருக்கும்."

ஸ்ரீமதியின் தாய் பேசுவது அனைத்துமே முரண்பாடாகப் பட்டது சுபாஹிணிக்கு. அல்லது தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதா?

தயானந்த்தைப் பொறுத்தவரை அவன் வேலை நேரத்தில் அது எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும் கூட வினாடி நினைத்துப் பார்க்க மாட்டானே என்றும்.

# 21

என்னதான் மனதிற்குள் பாரம் அப்படியே இருந்தாலும் கூட ஸ்ரீமதியிடம் பேசிக் கொண்டிருந்ததில் எவ்வளவோ இதமாக உணர்ந்தாள் சுபாஹிணி.

அவள் உடனே கிளம்பாமல் இருந்து விட்டதற்கு மற்றொரு காரணமும் இருக்கவே செய்தது.

அது தயானந்த்.

ஏனோ அவனைப் பார்க்காமல், சில விஷயங்களை அவனிடம் தெளிவுபடுத்திக் கொள்ளாமல் செல்வதைப் பற்றி அவளால் நினைத்துப் பார்க்கக் கூட முடிந்திருக்கவில்லை.

ஏற்கெனவே அன்று அவனிடம் நிச்சயம் பேசி விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தவள் என்பதால் தயானந்த்தின் வருகைக்காக ஆவலையும், ஆதங்கத்தையும் மனதிற்குள் மறைத்துக் கொண்டு காத்திருக்கலானாள்.

மேலும் அரை மணி நேரத்தில், தயானந்த்தின் கார் வந்து வாசலில் நிற்க அவனைப் பார்ப்பதற்காக ஓடினாள் ஸ்ரீமதி.

தயானந்த்தின் வருகையால் தோன்றிய அவளுடைய பரபரப்பையும் சந்தோஷத்தையும் மனம் வலிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் சுபாஹிணி. ஆனால் அது சில வினாடிகள் தான். உடனே தனது தவறான எண்ணப் போக்கினை உணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டாள்.



சிறிது நேரத்தில் இரவு உணவு பரிமாறப்பட, ஸ்ரீமதியின் கட்டாயத்தில் கொஞ்சம் கொறித்து வைத்தாள்.

தயானந்த்தின் புன்னகையிலும், அவனுடைய கம்பீரமான குரலிலும் பேச்சிலும் கண்களைக் கரித்துக் கொண்டு வர, குனிந்து உண்பதைப் போலத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

ஆனால் அது தயானந்த்தின் கவனத்தில் படத் தவறியிருக்கவில்லை.

ஸ்ரீமதியின் குடும்பத்தினருக்கும், தயானந்த்திற்கும் இடையே பேச விஷயங்கள் நிறைய இருக்க, அவர்களுக்கிடையே தன்னை அதிகப்படியாக உணர்ந்து நெளியத் தொடங்கினாள் சுபாஹிணி.

அதைப் புரிந்து கொண்ட தயானந்த் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்காதவாறு பேச்சின் திசையை மாற்ற, விஷயம் புரியாவிட்டாலும் தானும் அதற்கு மிகவும் உதவினாள் ஸ்ரீமதி.

சுபாஹிணியின் அவஸ்தை ஏனோ தயானந்த்தின் மனதை இளக்கி விட்டிருந்தது.

அதனாலோ என்னவோ உண்டு முடித்த சில நிமிடங்களிலேயே அவன் கிளம்புகிறேனென்று எழுந்து விட்டிருக்க, ''உடனேவா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஸ்ரீமதி.

''பின்ன, டின்னர்க்காகக் கூப்புட்ட. அது முடிஞ்சது. இனிக் கிளம்ப வேண்டியதுதான?''

''போங்க அத்தான். தயவுசெஞ்சு இதுக்கு மேல ஒரு வார்த்த கூட எதுவும் சொல்லாதீங்க.''

''அட என்னமா..''

''நீங்க பேசாதீங்க.''

''அச்சச்சோ! ஸ்ரீக்குக் கோபமா. ஸாரிடாம்மா. நா நாளைக்குக் காலைல நேரத்துல எழுந்து கிளம்ப வேண் டாமா சொல்லு,'' என்று அக்கறையுடன் ஸ்ரீமதியை சமாதானப்படுத்தினான் தயானந்த்.

சரியாக அதே நேரம் ஸ்ரீமதியின் தாயைத் திரும்பிப் பார்த்த சுபாஹிணிக்கு அவருடைய கண்களில் தெரிந்த அந்த ஏளனச் சிரிப்பிற்கான காரணம் ஏதோ கொஞ்சம் புரிவதைப் போலிருந்தது.

அடுத்த சில வினாடிகளில் தயானந்த் அந்தக் குடும்பத்து உறுப்பினர்கள் மூவரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பத் தயாராகியிருக்க, ''நாமளும் சுபாவ அவங்க வீட்ல கொண்டு போய் விட்டுட்டு வரணும் டாடி,'' என்றாள் ஸ்ரீமதி.

''இல்ல. என்ன பஸ் ஸ்டேண்ட்ல விட்டாப் போதும். நானே போய்க்குவேன்,'' என்று அவசரமாக இடையிட்டுச் சொன்ன சுபாஹிணியின் குரல், ''நான் கொண்டு போய் விட்டுட்றேன்,'' என்ற தயானந்தின் கன கம்பீரமான வார்த்தைகளில் யாருடைய காதுகளிலும் விழுந்து கூட இருக்கவில்லை.

அவனுடைய வார்த்தைகளுக்கு மேல் எதையும் பேசத் தோன்றாமல் அனைவரும் அமைதி காக்க, ''ஒரு நிமிஷம் எங் கூட வா ஸ்ரீ. கார்ல நீ கேட்ட புக்ஸ் எல்லாம் இருக்கு. எடுத்துட்டு வந்துடுவியாம்,'' என்று நடந்தான்.

ஸ்ரீமதியும் இதோ அத்தான் என்று உடனே அவனைப் பின் தொடர, திரும்பி வெகு அலட்சியமாக சுபாஹிணியைப் பார்த்தார் காவேரி.



''பார்த்தியா! இதுக்கு மேல உனக்கு இனி என்ன விளக்கம் வேணும், சொல்லு. இங்க நாம இத்தன பேரு இருக்கும் போது எதுக்காக தயா ஸ்ரீய மட்டும் தன்னோட கூட்டிட்டுப் போகணும்?''

..................

''இப்பப் புரியுதா, நான் சொன்னதையெல்லாம் எந்தக் காரணத்தக் கொண்டும் அலட்சியப்படுத்திடாத. அப்புறம் நீ பின்னாடி ரொம்பவும் வருத்தப்பட வேண்டிய தாயிடும். சொல்லிட்டேன்.''

''என்னமா எல்லாத்தையும் விளக்கமா எடுத்துச் சொல்லிட்டயா?''

கணவன் கேட்க, ''அதெல்லாம் செருப்பால அடிச்ச மாதிரி!'' என்று பட்டென்று காவேரியிடமிருந்து பதில் வந்திருந்தது.

''அப்படியொன்னும் தெரியலயே. நீ மட்டும் அந்த மாதிரி பேசியிருந்தா இப்பிடி ஆற அமர உக்காந்து இந்தப் பொண்ணும் தான் விருந்து சாப்பிட்டிருப்பாளா என்ன?''

அதுவரை எப்படியோ, ஸ்ரீமதியின் தந்தை சொன்ன வார்த்தைகளில் இப்பொழுது உண்மையிலேயே செருப்பால் அடி வாங்கியதைப் போலத் துடித்துப் போனாள் சுபாஹிணி.

கடவுளே! அப்படியானால் தன்னை விரட்டியடிப்பதில் ஸ்ரீமதியின் தந்தையுமா உடந்தை!

ஆனால் அவர்கள் பேசுவதை நன்கு கவனித்ததில் தான் ஸ்ரீமதியின் தாயை விடவும் கூடத் தந்தை தீவிரமாக இருப்பது தெரிந்தது.

தொடர்ந்து சில வினாடிகளில் தயானந்தும் ஸ்ரீமதியும் திரும்பியிருக்க, சுபாஹினியிடம், "இன்னொரு தடவ சொல்ல வைக்க மாட்டேன்னு நினைக்கறேன்." என்று எச்சரிப்பது போல அடிக் குரலில் மீண்டுமொரு முறை சொல்லி முடித்தாள் காவேரி.

"என்ன, கிளம்பலாமா?"

தயானந்த் கேட்க, தயக்கத்துடன், "நான் வேணும்னா..." என்று ஏதோ சொல்ல வந்த சுபாஹினியின் செய்கை அவனுக்கு மிகுந்த கோபத்தினை வரவழைத்திருந்தது.

ஆனாலும் அப்பொழுது அதைக் காட்டிக் கொள்ளாமல், மீண்டுமொரு முறை பொதுவாக அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சுபாஹினியுடன் கிளம்பினான்.

சுபாஹினி தானும் மீண்டுமொரு முறை ஸ்ரீமதியிடம் விடை பெற்றுக் கொள்ள, "நிச்சயம் இன்னொரு நாள் நீ தங்கற மாதிரி வரணும் சுபா," என்று தானும் தனது தோழிக்கு விடை கொடுத்தாள் ஸ்ரீமதி.

தயானந்த் முதலில் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்திருக்க, அவர்களை வழியனுப்புவதற்காக அனைவருமே வெளியே வாசல் வரை வந்திருந்தனர்.

தான் ஏறுவதற்காகத் தயானந்த் காத்திருப்பது தெரிய, பின் பக்கமாக ஏறப் போனாள் சுபாஹினி.

ஆனால் அதற்கு விடாமல் தடுத்திருந்தான் தயானந்த்.

ஒரே அதட்டலில் சுபாஹினியைத் தன்னருகில் முன் பக்கமாக ஏறி அமரச் செய்திருந்தான்.



அனைவரும் பார்க்கிறார்களே என்ற பயமும் பதட்டமும் அவளை ஒரு வழி செய்து கொண்டிருக்க, மீண்டும் ஒரு தலையசைவுடன் காரை ஸ்டார்ட் செய்திருந்தான் தயானந்த்.

வழியிலும் தயானந்த் எதுவுமே பேசியிருக்கவில்லை. பேசும் மனநிலையில் அவன் இருக்கவில்லை என்பதோடு, அதை எதிர்பார்க்கும் மனநிலையில் சுபாஹினியும் இருக்கவில்லை.

இருவரின் உள்ளங்களுமே இருவேறு மனநிலைகளில் துடித்துக் கொண்டிருந்தன.

கார் ஏதோ புதிய பாதையில் செல்வது தெரிந்தாலும், அதைப்பற்றி எதையும் கேட்கத் தோன்றாமல் அமர்ந்திருந்தாள்.

அப்படியே தான் கேட்டாலும் அதைக் காது கொடுத்துக் கேட்டுப் பதில் சொல்லும் மன நிலையில் அவன் இல்லை யென்பதும்,

"இறங்கு."

## 22

தயானந்த்தின் உணர்ச்சி துடைக்கப்பட்ட குரலில் தான் கார் நின்று விட்டிருந்ததையே உணர்ந்தாள் சுபாஹினி.

அதே நேரம் செக்யூரிட்டி ஓடி வந்து பணிந்து நிற்க, வண்டிய உள்ள போட வேண்டாம். இப்பக் கிளம்பணும் என்றான்.

"சரிங்கய்யா!" என்றவனுக்கு எப்பொழுதும் புன்னகையுடன் சில வார்த்தைகள் பேசும் முதலாளி அன்று ஏனோ கோபத்துடன் இருப்பது தெரிந்தது.

சில வினாடிகளிலேயே அது அவனுடைய வீடு என்பதைப் புரிந்து கொண்டாள் சுபாஹிணி.

தயானந்த்தைத் தொடர்ந்து தானும் அவனுடைய அந்த மாளிகை போன்ற வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தாள்.

வேலைக்காரி போலத் தோற்றமளித்த ஒரு பெண்மணி பணிவுடன் வந்து நிற்பது தெரிய, அவளைப் பார்த்தாள்.

தன்னைத் தொடர்ந்து தயானந்த் தானும் பார்க்க, ''டிபன் எடுத்து வைக்கட்டுமாங்கய்யா?'' என்று கேட்டாள் அவள்

''நாங்க சாப்டாச்சு.''

''...''

''குடிக்கறதுக்கு ஏதா....''

''வேணும்னா ஹார்லிக்ஸ் ஃப்ளாஸ்க்குல கொண்டு வந்து இங்க வெச்சுடு, சூடா இருக்கட்டும்.''

''சரிங்கய்யா.''

எதிர்ப்பட்டவர்கள் அனைவரையும் கூர்ந்து கவனித்தாள் சுபாஹிணி

தங்களது முதலாளியின் மீதிருந்த நம்பிக்கையோ அல்லது பயமோ அவனுடன் வந்த தன்னை யாரும் ஒரு பொருட்டாகக் கூட எடுத்துக் கொள்ளவில்லை என்பது புரிந்தது.

''வா,'' என்றவன் படிகளில் மேலே ஏற, தயக்கத்துடன் அவனைத் தொடர்ந்தாள்.

இனம் புரியாத ஒருவிதப் பயம் வந்து அவளை என்னவோ செய்ய, ஒரு வேளை இதுதான் இவனுடனான



கடைசிச் சந்திப்பாக இருக்குமோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அதைச் சொல்லத்தான் தன்னை இப்பொழுது தனியாக அழைத்துச் செல்கிறானோ?

ஆம்.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் காரணமே இல்லாமல் ஏன் இப்படிப் பாராமுகமாக நடந்து கொள்ளப் போகிறான்.

அந்தச் சில வினாடிகளுக்குள் இல்லாத எதையெதையோ எண்ணி சுபாஹிணியின் பூவுடல் பதறத் தொடங்கி விட்டிருக்க, அதைத் துளியும் அறியாதவனாய்த் தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்ததும் கோபத்துடன் திரும்பினான்.

கடவுளே! ஏன் இப்படிப் பார்க்கிறான்?

என்ன சொல்லப் போகிறான்?

''சொல்லு, நீ உம் மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்க?''

தயானந்த் கேட்க, புரியாமல் பார்த்தாள் சுபாஹிணி.

''நான் கேட்டா பதில் வந்தாகணும்.''

அவனுடைய அதட்டலில் நடப்பு புரிந்தவளாய், ''அத நான் கேக்கணும்,'' என்றாள்.

''என்ன, விளையாட்றியா?''

''யாரு, நானா?''

''போதும்...''

............

''சொல்லுங்க தயா, நான் அப்பிடி என்ன தப்பு செஞ்சேன்? ஆரம்பத்துல நான் உங்ககிட்டப் பொய் சொன்னது தப்புதான். ஒத்துக்கறேன். அத தயவுசெஞ்சு மறந்து மன்னிப்பீங்களா?''

''முடியாது.''

பட்டென்று அப்படிச் சொன்னவனை ஏமாற்றத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். பாவமாகவும்.

''முடிச்சுட்டயா, இல்ல இன்னும் இருக்கா?''

தயானந்தின் கோபமும், வெறுப்புக் கலந்த பார்வையும் ஏற்கெனவே இடிந்து போயிருந்தவளை மேலும் மனம் நோகச் செய்து விட்டிருந்தது.

கண்களைக் கரித்துக் கொண்டு வர, அப்படியே குனிந்து கொண்டாள்.

''நான் கேள்வி கேட்டா பதில் வந்தாகணும்.''

..................

''சுபா..!''

தயானந்தின் அதட்டல் காதில் விழுந்தாலும், பொங்கி வந்த அழுகையும் ஆதங்கமும் அவளைப் பேச விடாமல் செய்திருந்தன.

சுபாஹிணியின் நிலை இப்படியிருக்க, கோபத்துடன் அவளுக்கு முன்பாக வந்து நின்றிருந்தான் தயானந்த்.

''சுபா...''

அவனுடைய அழைப்பில், உடனே நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

அதே நேரம் அவளுடைய கண்களில் இருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் கீழே விழுந்து சிதறி



யிருக்க, மேலும் வந்த அழுகையை உதட்டைக் கடித்துக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

மூச்சுக் காற்று தன் மேல் விழுமளவிற்கு வந்து நின்றிருந்த தயானந்தின் அருகாமையில் அவளையறியாமலேயே சுபாஹிணியின் மெல்லிய பூவுடல் நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது.

''என்னமா, என்னாச்சு?''

சுபாஹிணியின் அந்த நிலை அவனுக்கும் அப்பொழுது தான் முழுமையாகப் புரிந்தது என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

''சுபா, இங்க பாரு.''

ஏதோ நடந்திருக்கிறது.

இல்லையென்றால் சும்மா சரிக்குச் சரி பேசும் பெண் என் இப்படிக் கண் கலங்க வேண்டும்?

சுபாஹிணியின் அழுகை இப்பொழுது மேலும் அதிகமாகியிருக்க, ''சுபா...'' என்று அவளுடைய முகவாயைப் பற்றி மெல்ல நிமிர்த்தினான்.

''என்னமா?''

''தயா...''

''ம், ஆமாம், சொல்லு.''

''நீங்க..... உங்களுக்கு.....''

''ம்...''

...............

''சொல்லு சுபா, யாரு என்ன சொன்னாங்க?''

..................

"சரி. நேரடியா விஷயத்துக்கே வர்றேன். அத்தை என்ன சொன்னாங்க?"

அப்படிக் கேட்டவனை உடனே நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

"எதுவா இருந்தாலும் பேசுமா, என்ன..."

"தயா, உங்களுக்கு...."

"ம்."

"உங்களுக்கு என்னப் பிடிக்கும் தான?"

"அட, இது என்ன கேள்வி, அதுவும் இப்பிடி திடீர்னு?"

"ப்ளீஸ் சொல்லுங்க."

"எந்த மாதிரி சொல்லணும்?"

..................

"என்ன பாக்கற? எப்பிடி சொல்லணும்? எப்பிடி சொன்னா உனக்குப் பிடிக்கும்?"

"ப்ளீஸ் தயா, விளையாடாதீங்க...."

"ஓ அப்பிடி சொல்லணுமா? "என்றவன் உடனே சுபாஹிணியைத் தன்னருகில் இழுத்து அவனுடைய கைகளுக்குள் கொண்டு வந்திருந்தான்.

தன்னை அப்படியே விழுங்குவதைப் போலப் பார்த்த தயானந்தின் பார்வையில் முகம் சூடாகிச் சிவந்து விட்டிருக்க, தொடர்ந்து அவனுடைய அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் ஒரு வித மயக்கத்தில் அவளுடைய கண்கள் மூடிக் கொண்டன.

"சுபா...."

............



ஆவலுடன் சுபாஹிணியை அழைத்த தயானந்தின் கைகள் இப்பொழுது அவளுடைய முகத்தை ஆசையுடன் ஏந்தியிருக்க, அதற்கு மேல் முடியாமல் அப்படியே அவனுடைய மார்பில் சாய்ந்தாள் சுபாஹிணி.

அவளுடைய நிலை அப்படியிருக்க, தயானந்தின் நிலை பற்றியோ கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

எங்கே அவளுக்கு வலித்து விடுமோ என்னுமளவிற்கு மென்மையாக அணைத்துக் கொண்டவன், "சுபா!" என்று மெல்லிய குரலில் அழைத்துக் கொண்டே அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

அதை உணர்ந்தவளாய் சுபாஹிணி தானும் அவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொள்ள, அதற்குப் பிறகு அவ்விருவரின் நிலை பற்றியும் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

எவ்வளவு நேரம் அப்படிப் பின்னிப் பிணைந்து இருவரும் தங்களை மறந்து நின்றிருந்தார்களோ, அதில் முதலில் தன்னிலை உணர்ந்து கொண்டது சுபாஹிணியே.

தயானந்தின் அந்த அணைப்பிற்காகவும், அருகாமைக்காகவும் மனம் எவ்வளவோ ஏங்கினாலும், வேண்டாம் இது சரியல்ல என்று அவளுடைய பெண்மையின் உள்ளுணர்வு எச்சரிக்க நிமிர்ந்தாள்.

ஆனால் அதெல்லாம் தயானந்திடம் துளியும் எடுபட்டிருக்கவில்லை.

"சுபா!" என்று மேலும் அவளை அருகில் இழுத்துத் தனது மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

காட்டாற்று வெள்ளத்தைக் கையால் தடுக்க முயற்சிப்பதைப் போலத் தயானந்த்திடம் தன்னுடைய மறுப்பெல்லாம் தவிடு பொடியாகியிருக்க, மீண்டும் அவனுடைய கைகளில் பச்சை மண்ணாகிப் போனாள் சுபாஹிணி.

மீண்டும் வெகு நேரத்திற்குப் பிறகே இருவரும் தங்களுடைய நிலையை உணர்ந்து நடப்பிற்கு வந்திருந்தனர்.

அவ்வளவு நேரமும் தயானந்த்தின் மீது கொடியாகப் பின்னிக் கொண்டிருந்த சுபாஹிணி இப்பொழுது அவனுடைய அணைப்பு தளர்ந்ததில் தடுமாறி விழப்போக, அதற்கு விடாமல் மீண்டும் அவளைத் தனது கைகளில் ஏந்திக் கொண்டான்.

''பாத்தியா, இதுக்குத் தான் பாதியில அவசரப்படக் கூடாதுன்னு சொல்றது.....''

காதருகில் முணுமுணுத்த தயானந்தின் குரலில் முகம் இரத்தமெனச் சிவந்து விட்டிருக்க, ''ப்ளீஸ் தயா...'' என்று கெஞ்சினாள் சுபாஹிணி.

''நானும் அதத்தான் சொல்றேன்... ஏய், என்னாச்சு? இப்ப ஏன் கண் கலங்கற?.....''

................

''என்னடா?'' என்று காதல் பொங்கக் கரிசனத்துடன் கேட்டவனை நிமிர்ந்து பார்த்த சுபாஹிணி, ''ப்ளீஸ் புரிஞ்சுக்கோடா. உன் விஷயத்துல எனக்கு எம்மேலயே நம்பிக்கையில்ல!'' என்று தயக்கத்துடன் என்றாலும் ஒரு வழியாகச் சொல்லியே விட்டிருந்தாள்.



அவளுடைய வார்த்தைகளில் தயானந்த்தின் நாடி நரம்பெல்லாம் மீண்டும் ஒருவித இன்ப வேதனை பீறிட்டுப் பாய, ''சுபா!'' என்று பொங்கி வந்த காதலுடன் ஓரடி எடுத்து வைத்திருந்தான்.

ஆனால் அதற்குள் அவனுடைய கைகளுக்குச் சிக்காமல் சற்றுத் தள்ளி நின்றிருந்த சுபாஹிணி, ப்ளீஸ் இனி வேண்டாமே என்பதைப் போலக் கண்களால் கெஞ்சினாள்.

''தயவு செஞ்சு அந்த மாதிரி பாக்காதீங்க தயா.''

''ஏன்?''

''இது தப்பு.''

''சுபா...'' என்று மேலும் நெருங்கி வந்தவனைத் தன்னால் இயன்ற மட்டும் பிடித்துத் தள்ளினாள் சுபாஹிணி.

''எத்தன நாள் பசி! இன்னும் ஒரே முறை, கடைசிக்கு ஒரே ஒரு கிஸ்!'' என்று அவன் இறைஞ்சுவதைப் போலத் தனது உதட்டைக் காட்டிக் கேட்க, ''ம்கூம். முடியாது. போடா!'' என்று ஒரேயடியாக மறுத்து விட்டிருந்தாள் சுபாஹிணி.

''வேண்டாம்மா. இது பாவம்.''

''ம்கூம். இது தப்பு தயா, போதும். இவ்வளவு நேரம் இப்பிடி இருந்ததே அதிகம்...''

''அதிகமா?''

''ப்ளீஸ்... அப்பிடி சிரிக்காதீங்க, வாங்க கிளம்பலாம்.''

''ம்கூம், நான் கேட்டது கிடைக்காம சான்ஸே இல்ல.''

''புரிஞ்சுக்கோடா ப்ளீஸ், எனக்கு ரொம்ப பயம இருக்கு.''

''உன் பயத்தப் போக்க நான் என்ன செய்யணும் சொல்லு?''

''என்ன இப்பவே என்னோட வீட்ல கொண்டு போய் விட்டுடுங்க, ப்ளீஸ்....''

''அப்ப நான் கேட்டது?''

''ம்கூம். வேண்டாமே எனக்கு ப...''

''சரி வா, உங்கிட்டிருந்து அத எப்பிடி வாங்கிக்கற துன்னு எனக்குத் தெரியும்,'' என்று சற்றே கோபத்துடன் தயானந்த் வெளியே செல்வதற்காக இரண்டு அடி எடுத்து வைத்திருக்க, அவனுடைய அந்த நிலையைப் பார்த்துப் பாவமாக இருந்தது சுபாஹிணிக்கு. ஏனோ பயமாகவும்.

தயானந்த் முதலில் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்திருக்க, தானும் ஏறி அமர்ந்து கொண்டாள்.

தயானந்த்தின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகம் மனதைக் கசக்கிப் பிழிவதைப் போலிருக்க, பாவம்! அவன் கேட்பதை நாமும் தான் கொடுத்திருக்க வேண்டுமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

உன்னிடமிருந்து அதை எப்படிப் பெற்றுக் கொள்வ தென்று எனக்கும் தெரியுமென்றானே!

ஒரு வேளை....

ம்கூம், என் தயா அப்படிப்பட்டவனல்ல.

அவன் மட்டும் நினைத்திருந்தால் தன்னை அவனுடைய அந்த அறைக்குள் என்ன செய்திருக்க முடியாது?

அவன் தன்னை விடவும் கூடத் தனது உள்ளத்தைத் தான் அதிகம் நேசிக்கிறான்.



''எம் மேல கோபமா தயா?''

அப்படிக் கேட்டவளை உடனே திரும்பிப் பார்த்தான் தயானந்த்.

''இல்லடா. உம்மேல எப்பிடிக் கோபப்பட முடியும் சொல்லு.அதுவும் என்னால...''

''ஸாரி தயா...''

''வேண்டாம்மா. விட்டுடு.''

சில வினாடிகள் அப்படியே அமைதியாகக் கழிந்தது.

''நான் வெளியூர் ட்ரிப்ப கேன்சல் பண்ணிடப் போறேன்.''

திடீரென்று அப்படிச் சொன்னவனைத் திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

''ஏன்?''

''உண்மைய சொல்லணுமா?''

''நீங்க பொய் சொல்ல மாட்டிங்க, உங்களால அது முடியாதுங்கறது எனக்குத் தெரியும்.''

''ஓ, உன்னப் பாக்காம ஒரு வாரம் என்னால இருக்க முடியாது.''

''தயா.....''

.................

''வேண்டாம் தயா. என்னால உங்களுக்கு வேல கெடக் கூடாது. தினமும் நாம ரெண்டு பேரும் போன்ல பேசிக்கலாம், ரொம்ப நேரம்.''

''உண்மையா?...''

''நிச்சயமா.''

...சா விடு. இன்னொரு வாரம் பட்டினி போட வேண்டியதிருக்கும். அது நமக்குப் பழக்கப்பட்டது தான்.

''ஆனா வயித்துப் பசிக்கும் இந்தப் பசிக்கும் நிறைய வித்யாசமிருக்கு.''

..................

''என்ன பாக்கற? வயித்துப் பசி சாப்பிடச் சாப்பிடக் குறையும். ஆனா இது...''

தயானந்த்தின் பார்வையில் மேலும் முகம் சூடாகிச் சிவந்து விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாகக் காட்ட முயன்று தோற்றாள் சுபாஹிணி.

ஆனால் சுபாஹிணியின் உதடுகளில் அந்த வினாடி நிலைத்திருந்த தயானந்த்தின் பார்வையோ, மேலமேல என்னக் கொல்லாதடா என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

அவனுடைய பார்வையின் பொருள் சுபாஹிணிக்கும் புரிய, மேலும் ஒரு இன்ப அவஸ்தை வந்து அவளைப் பற்றிக் கொண்டு விட்டிருந்தது.

அதற்குப் பிறகு காருக்குள் ஒருவித அமைதி நிலவ, அதைக் கலைக்க இருவருக்குமே மனம் வந்திருக்கவில்லை.

ஏதோ ஒரு இனம் புரியாத கிறக்கத்தில் இருவரும் தங்களை மறந்து போயிருந்தனர். முக்கியமாக சுபாஹிணி.

''சுபா, ஆன்ட்டி வர்றாங்க,'' என்ற அவனுடைய வார்த்தைகளில் தான் முழுமையாக நடப்பிற்கு வந்து வெளியே பார்த்தாள்.

தயானந்த் சொன்னது போலவே தனது தாய் வராண்டாவில் இருந்து இறங்கி கேட்டருகில் வந்திருக்க, சுபாஹிணியுடன் அவன் தானும் இறங்கினான்.



தாய் என்ன நினைப்பாரோ என்று சுபாஹிணியின் மனம் தவிக்கத் தொடங்கி விட்டிருக்க, மற்ற இருவருமே வெகு இயல்பாகப் பேசிக் கொண்டனர்.

அதாவது அப்படித்தான் சுபாஹிணிக்குத் தோன்றியது.

''என்ன சுபா?'' என்ற தாயின் வார்த்தைகளில் நிமிர்ந்தவள், ''நீங்க எப்ப மம்மி வந்தீங்க?'' என்று அவசரமாகக் கேட்டாள்.

''உக்காருங்க தயா.''

''உக்காரலாம் ஆன்ட்டி. நீங்களும் இப்பதான் வந்திருக்கீங்க. உங்க வேலயப் பாருங்க ஆன்ட்டி. நான் கிளம்பறேன்.''

''இனியென்ன, தூங்கப் போக வேண்டியது தான். சுபா தான் குளிக்கப் போவா. இதோ ஒரு நிமிஷம். வர்றேன்,'' என்று வீட்டிற்குள் சென்றார்.

அவர் உள்ளே செல்வதற்காகவே காத்திருந்தவனைப் போல, உடனே நிமிர்ந்து சுபாஹிணியைப் பார்த்தவன், 'இன்னைக்குமா?' என்று மெல்லிய குரலில் ஒரு விதப் புன்னகையுடன் கேட்டான்.

''என்ன இன்னைக்குமா?''

''நானெல்லாம் குறைஞ்சது இன்னும் ரெண்டு நாளைக்காவது குளிக்க மாட்டேன்பா.''

அவன் சொல்ல வந்தது ஏதோ கொஞ்சம் புரிவதைப் போலிருக்க, விளையாட்டாய் முறைத்தாள்.

''ஐயோ வேண்டாம்மா, பயமா இருக்கு.''

''இந்தாங்க தயா தண்ணி, எடுத்துக்கோங்க.''

தேங்க்ஸ் ஆன்ட்டி. நானே கேக்கலாம்னு இருந்தேன்,'' என்று அவன் வாங்கிக் கொள்ள ஒரே நிமிஷம், குடிக்க ஏதாவது கொண்டு வர்றேன் என்று அவன் மறுப்பதற்கு இடம் கொடுக்காமல் மீண்டும் உள்ளே சென்றிருந்தார் நளினி.

போகிற வழியில் மகளை அழைத்தவர், ''என்னமா பண்ற, ஒரு ரெண்டு நிமிஷம் உங்க ஸார் கூட உட்கார்ந்து பேசிட்டிரு. நான் இதோ வர்றேன்,'' என்று விட்டுப் போனார்.

''சரி மம்மி,'' என்று தயக்கத்துடன் தயானந்த்துக்கு எதிரே இருந்த சோஃபாவில் வந்து அமர்ந்திருந்தவள் நிமிர்ந்து தயானந்த்தைப் பார்த்தாள்.

''நல்ல அத்தெ இல்ல?''

''ம், என்ன பண்றது, விஷயம் எதுவும் தெரியாததால உங்கள ரொம்ப நல்லவர்னு நினைச்சுட்டிருக்காங்க.''

''அப்ப விஷயத்த சொல்லிட்டாப் போயிடுச்சு.''

''என்ன விஷயத்த?...''

''நம்ம லவ் மேட்டரத்தான்.''

''ஐயோ! வேண்டாம்.''

''ம்கூம். அதெல்லாம் முடியாது. மாமா வேற இல்ல. இதுதான் சரியான டைம். உன்ன நம்பினா இந்த ஜென்மத்துல நம்ம கல்யாணம் நடக்கறது சந்தேகம்...''

''ப்ளீஸ் தயா, விளையாடாதீங்க.''

''அதுக்குத்தான் நானும் பாக்கறேன்.''

''ஐயோ! அம்மா வர்றாங்க.''



ட்ரேயில் சில பீங்கான் கப்களுடன் நளினி வர, ''எதுக்கு ஆன்ட்டி இப்ப இதெல்லாம்?'' என்று கேட்டான்.

''ஏன் தயா, நம்ம வீட்டுக்கு வந்துட்டு சும்மா போறதா? எடுத்துக்கோங்க.''

''அப்புறம் ஆன்ட்டி, உங்ககிட்ட நானொரு விஷயம் சொல்லணும்.''

''சொல்லுங்க தயா,'' என்ற நளினி, மகளின் முகத்தில் தெரிந்த பதட்டத்தையும் பயத்தையும் கவனிக்கத் தவறவில்லை.

ஆனாலும் அதைக் கண்டும் காணாதது போலக் காட்டிக் கொண்டு தயானந்த்தைப் பார்த்தார்.

''ஒரு வாரத்துக்கு நான் ஊர்ல இருக்க மாட்டேன். ஒரு ஆடர் விஷயமா வெளியூர் போறேன். அதனால சுபா தான் எல்லாத்தையும் பாத்துக்கணும்.''

''அப்படியா! அந்த அளவுக்கு சுபா எல்லாத்தையும் கத்துக்கிட்டாளா?''

''அதெல்லாம் ஆன்ட்டி, அதனால இந்த ஒரு வாரத்துக்கு மட்டும் சுபா வேல முடிஞ்சு வீட்டுக்கு வரக் கொஞ்சம் லேட்டாகலாம்.''

''அதனால ஒன்னும் பிரச்சனையில்ல தயா....''

''அப்பிடி லேட்டாகற நாட்கள்ல வீட்ல கொண்டு வந்து விடச் சொல்லி நானே டிரைவர்கிட்ட ஒரு வார்த்த சொல்லிடறேன்.''

''சரிதான் தயா.''

மேலும் சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு தயானந்த் கிளம்ப, அதற்குப் பிறகே சுபாஹிணியால் இயல்பாக மூச்சு விட முடிந்தது.

''சுபா!''

தாய் அழைக்க, ''சொல்லுங்க மம்மி,'' என்று திரும்பினாள்.

''ஏதாவது பிரச்சனையா?''

ஏன், எதற்காகத் திடீரென்று இப்படிக் கேட்கிறார்?

''இல்ல, உனக்கு ஏதாவது பிரச்சனையான்னு கேட்டேன்.''

''அதெல்லாம் ஒன்னுமில்லையே. ஏன் மம்மி கேக்கறீங்க?''

''இல்ல, கொஞ்சம் முன்னாடி திடீர்னு நீ எதுக்கோ பயந்துட்ட மாதிரி எனக்குப் பட்டது. அதான் கேட்டேன்.''

''அச்சச்சோ! என்ன மம்மி நீங்க...''

''தயானந்தப் பத்தி என்ன நினைக்கற?''

கடவுளே! இதையேன் தன்னிடம், அதுவும் இப்பொழுது கேட்கிறார்?

''சொல்லுமா, நீ என்ன நினைக்கற?''

''ரொம்ப நல்ல டைப் மம்மி. டீஸன்டா நடந்துக்குவார்....''

''அது எனக்கும் தெரியும்மா. ஆனாலும் ஊர் உலகத்துக்காகவும் நாம பாக்க வேண்டியதிருக்கே.''

''மம்மி....''

''காலைல ஒரேயடியா நீ போகக் கூடாதுன்னு நான் சொல்லியிருந்தா, உனக்கு எம்மேல கோபந்தான் வந்திருக்கும். ஆனா இனிமேல் நீ இதையெல்லாம் கொஞ்சம் அவாய்ட் பண்ணிடறது நல்லதுன்னு நினைக்கறேன்.''



.................

''என்னம்மா, பேசு.''

''சரிதான் மம்மி....''

''பெத்த குழந்தைங்க மேல நம்பிக்க வெச்சிருக்கற பேரண்ட்ஸ் தான் சுதந்திரம் குடுப்பாங்க. அந்த நம்பிக்க எங்களுக்கும் உம்மேல நிறையவே இருக்கு....''

அப்படிச் சொன்ன தாயை சுபாஹிணி நிமிர்ந்து பார்க்க, ''ஆனா அதக் காப்பாத்திக்கறது உன் கைல தான் இருக்கு!'' என்று விட்டு உள்ளே சென்று விட்டிருந்தார் நளினி.

எவ்வளவு நேரம் அதே இடத்தில் அப்படியே நின்றிருந்தாளோ அவள் அறியாள்.

கால்கள் வேரோடி விட்டாற் போல வெகுநேரம் ஏதேதோ எண்ண ஓட்டங்கள் அலைமோத நின்று விட்டிருந்தவள் பத்து முறை அடித்து ஓய்ந்த கடிகாரத்தின் ஒலியில் தான் நடப்புக்கு வந்து நிமிர்ந்தாள்.

தாயின் அறையில் மின்விளக்கு அணைக்கப்பட்டு விட்டிருக்க, தானும் தூங்குவதற்காகத் தன்னுடைய அறைக்கு வந்திருந்தாள் சுபாஹிணி.

ஏதோ மிகப் பெரிய தவறு செய்து விட்டதைப் போல மனம் கலங்கிப் போயிருக்க, எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே படுக்கையில் அமர்ந்து விட்டிருந்தாள்.

தன்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கும் தனது பெற்றவர்களுக்குத் தான் உண்மையிலேயே மிகப் பெரிய நம்பிக்கைத் துரோகத்தைச் செய்து கொண்டிருக்கிறோமோ?

அது தனது தாய்க்கும் தெரிந்து போய் விட்டதோ?

அதனால் தான் அவர் மறைமுகமாகத் தன்னை எச் சரித்தாரோ?

ஏனோ சற்று முன் இருந்த சந்தோஷமெல்லாம் துணிகொண்டு துடைத்தாற் போலக் காணாமல் போய் விட்டிருக்க, அந்த இடத்தில், ஒரு மிகப் பெரிய பாரம் வந்து அமர்ந்து கொண்டு விட்டதைப் போல வேதனை யுடன் உணர்ந்தாள்.

நாம் இன்னும் சிறிது எச்சரிக்கையுடன் நடந்து கொண் டிருக்கலாமோ என்று நினைத்த சுபாஹிணி, அதை இப்பொழுது நினைத்து வருந்துவதால் என்ன பய னென்று தன்னையே நொந்து கொண்டாள்.

கிளம்பும் பொழுது தயானந்த் அர்த்த புஷ்டியுடன் தன்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சென்றது தான் நினை விற்கு வந்தது.

அதே நேரம் அந்த நினைவின் நாயகனே தன்னை மொபைலில் அழைக்கக் கைகள் நடுங்க அழைப்பை அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

''ஹலோ...''

................

''ம், நான் திரும்பவும் கூப்புடட்டுமா தயா? அம்மா இருக்காங்க,'' என்றவள் அவனுடைய பதிலுக்காகக் காத்தி ராமல் போனை வைத்திருந்தாள்.

தயானந்த்தின் கன கம்பீரமான குரலும், பேச்சும் அவளை மேலும் மனம் நடுங்கச் செய்து விட்டிருக்க, பேசாமல் அப்படியே படுத்துக் கொண்டு விட்டிருந்தாள்.



ஆனாலும் சற்றும் இரக்கமே இல்லாத தூக்கம் வெகு நேரம் கழித்தே போனால் போகிறதென்று வந்து அவ ளுடைய கண்களைத் தழுவிக் கொண்டது.

# 23

''சுபா!''

''மம்மி, சொல்லுங்க.''

''ஏன் டல்லாத் தெரியற? நைட் தூங்கலையா?''

''நல்லாத் தூங்கினேன் மம்மி.''

''சரிதான். டிஃபன் எடுத்துக்கோ. வாடா.''

''காஃபி மட்டும் போதுமே, ப்ளீஸ்.''

''ஏன்?''

''டிஃபன் பாக்ஸ்ல எடுத்துட்டுப் போய் ஆஃபீஸ்ல சாப்புட்டுக்கறேன்.''

''ஓ. எம்.டி. இல்லாத தைரியத்துல பிரேக் பாஸ்ட் கூட ஆஃபீஸ்லயா?''

புன்னகையுடன் கேட்டுக் கொண்டே தாய் நகர, இன்னும் ஒரு வாரத்திற்கு என் தயாவைப் பார்க்காமல் எப்படி இருக்கப் போகிறேனென்று அவளுடைய மனம் ஊமையாய் அழுதது.

அடுத்த அரை மணி நேரத்தில் அலுவலகம் வந் தடைந்திருந்த சுபாஹிணி, தொடர்ந்து வந்த சில வினாடி களில் தன்னிடத்திற்கும் வந்து சேர்ந்திருந்தாள்.

செய்வதற்கு வேலைகள் நிறைய இருப்பது நினைவிற்கு வர, மனதைத் திசை திருப்ப அதுதான் ஒரே சிறந்த வழியென்று கவனத்தை வேலையில் திருப்பினாள்.

அவள் நினைத்தது போலவே நேரம் பறந்து போயிருக்க, மதிய உணவிற்குக் கைப் பையை எடுத்துக் கொண்டு எழுந்தாள்.

அப்பொழுது தான் காலை உணவைத் தான் சுத்தமாக மறந்து விட்டிருந்தது நினைவிற்கு வந்தது.

தாய் அறியாமல் அதைக் கீழே கொட்டி விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் மதிய உணவை முடித்துக் கொண்டு தன்னிடத்திற்கும் வந்து சேர்ந்திருந்தாள் சுபாஹினி.

ஏனோ மனமும், உடலும் சோர்ந்து போய் விட்டதைப் போலத் தோன்ற, அப்படியே இருக்கையில் சாய்ந்து அமர்ந்து விட்டிருந்தாள்.

அந்த அமைதியான நேரத்தில் தயானந்த்தின் நினைவு தான் வந்தது.

முதல் நாள் இரவு நடந்ததும்.

அந்த நினைவுகளில் உடல் சிலிர்க்க ஏனோ தயானந்த்தை அப்பொழுதே பார்க்க வேண்டும் போல அவளுடைய மனம் ஏங்கத் தொடங்கி விட்டிருந்தது.

இந்த நேரம் அவனும் தன்னைத் தான் நினைத்துக் கொண்டிருப்பானோ?

ம்கூம். இருக்காது.

அப்படியிருந்தால் அழைத்திருப்பானே.



அப்படி நினைத்தவளுக்கு அதற்குப் பிறகு தான் இரவு தான் மீண்டும் அழைப்பதாகச் சொல்லிவிட்டுப் பிறகு அழைக்காமலே விட்டு விட்டிருக்கிறோமே என்பது நினைவிற்கு வந்தது.

மேலும் யோசனை போக, தயானந்த் மீது கோபம் கோபமாக வந்தது சுபாஹினிக்கு.

இரவு ஒரு விநாடியில் தன்னைக் கதிகலங்கச் செய்து விட்டானே.

அவன் மட்டும் அப்படி நடந்து கொண்டிருக்காவிட்டால் தாயும் தன்னைக் கடிந்து கொண்டிருக்க மாட்டாரோ.

தானும் தயானந்த்துடன் இரவு வெகு நேரம் ஆசையுடன் பேசியிருக்கலாம்.

மனம் துள்ள இன்றாவது அது நடக்க வேண்டுமென்று ஆவலுடன் நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

தன் மீது எவ்வளவு அன்பும், காதலும் இருந்தால் முதல் நாள் இரவு அப்படி நடந்து கொண்டிருப்பான்.

மற்றது எப்படியோ, சற்றும் பிரிக்க முடியாத அளவிற்குத் தயானந்த் தன்னுடன் இரண்டறக் கலந்து விட்டிருந்ததை சுபாஹினி உணர்ந்து கொண்டதும் அப்போது தான்.

அவனைக் கூட யாராவது மறுப்பார்களா?

முக்கியமாகத் தன்னைப் பெற்றவர்கள்.

ம்கூம், மாட்டார்கள்.

முதலில் யோசித்தாலும், பிறகு சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார்கள்.

திடீரென்று யாரோ உள்ளே வந்ததைப் போலிருக்க, தன்னிடத்திலிருந்து எழுந்து தன்னுடைய அறையை விட்டு வெளியே வந்தாள்.

ஒருவேளை அது தன்னுடைய பிரமைதானோ?

''வாம்மா, வா.''

தயானந்தின் டேபிள் அருகே ஸ்ரீமதியின் தந்தை வந்து நின்றிருக்க, இவர் எங்கே இங்கே என்று அதிர்ச்சியுடன் பார்த்தாள் சுபாஹினி.

''என்ன பாக்கற? திடீர்னு இங்க அதுவும் இப்ப நீ என்ன எதிர்பாக்கல, இல்லையா?

''சரி. அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு எவ்வளவு பணம் வேணும், சொல்லு?

''என்ன, ஒன்னுமே புரியாதவ மாதிரி பாக்கற?... சும்மா போகச் சொன்னா பாவம் உனக்கும் கஷ்டமாத் தான இருக்கும். சொல்லு, எவ்வளவு எதிர்பாக்கற?''

......................

''என்ன... பேசு?''

இவர்கள் தன்னைப் பற்றி என்னவென்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? முதலில் நாம் ஏன் அவசியமே இல்லாமல் இவர்களைப் பார்த்தெல்லாம் கூடப் பயந்து நடுங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

''வாயில என்ன....''

''நீங்க என்னத் தப்பாப் புரிஞ்சுட்டிருக்கீங்க.''

''அது சரிதான், அத யோசிச்சுட்டு தான் பேசலாம்னு கிளம்பி வந்தேன். சொல்லு. எவ்வளவு பணம் எதிர் பாக்கற?''



என்ன முயன்றும் இப்பொழுது சுபாஹினியால் கோபத்தைத் துளியும் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''சொல்லுங்க, உங்களுக்கு எவ்வளவு பணம் வேணும் - நீங்க என்னத் தொந்தரவு பண்ணாம இருக்கறதுக்கு?''

அப்படிக் கேட்ட சுபாஹினியை ஸ்ரீமதியின் தந்தை ராகவன், 'என்ன திமிரா?'' என்று கேட்க, ''இல்ல ஸார், நிஜமா தான் கேக்கறேன்,'' என்றாள் சுபாஹினி.

''எங்கிட்ட சரிக்கு சரி பேசறது உனக்கு நல்லதில்ல.''

''தெரியும். எனக்கும் எப்பவுமே வயசுல பெரியவங்களுக்கு மரியாத குடுத்துத்தான் பழக்கம். ஏன் சொல்றேன்னா நானும் அந்த மாதிரி குடும்பத்துல இருந்து தான் வந்திருக்கேன்.''

''சரிதான். உன் கதையெல்லாம் எனக்கெதுக்கு? நானும் நேரடியா விஷயத்துக்கு வர்றேன். கேட்டுக்கோ. நீ தயானந்த விட்டுப் போயிடணும். அதுக்காக நீ வேற என்ன எதிர்பார்த்தாலும் எப்பாடு பட்டேனும் அதக் குடுக்க நாங்களும் தயாரா தான் இருக்கோம். சொல்லு.''

''என் உயிரே போனாலும் நீங்க நினைக்கறது நடக்காது.''

அப்படிச் சொன்னவளை அதிர்ச்சியுடன் பார்த்தார் ராகவன்.

அதாவது முயன்று தன்னை அப்படிக் காட்டிக் கொண்டார்.

''என்னமா சொல்ற?''

''ஆமா. ஸார், தயவு செஞ்சு இனிமேல் இந்த விஷயத்துல நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்.''

''அப்பிடின்னா...''

தயக்கத்துடன் என்றாலும் தாங்கள் இருவரும் மனதார நேசிக்கும் விஷயத்தைச் சொல்லியே விட்டிருந்தாள் சுபாஹினி

''கடவுளே....''

''என்ன அங்கிள், என்னாச்சு?''

நிற்கச் சக்தியற்றவராய் அவர் உடனே அருகிலிருக்கும் டேபிளைப் பற்றிக் கொண்டு நிற்க, உண்மையிலேயே பதறித்தான் போனாள் அவள்.

''அங்கிள்...''

''எனக்கே நீ சொன்னது இவ்வளவு பெரிய அதிர்ச்சியா இருக்கே! அப்ப ஸ்ரீமதிக்கு.....''

அவர் பாட்டுக்குப் புலம்பத் தொடங்கிவிட்டிருக்க, அதில் பொய் இருக்கும் என ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட சுபாஹினியால் சந்தேகம் கொள்ள முடிந்திருக்க வில்லை.

ஏதோ தான் தவறு செய்து விட்டதைப் போலக் கலங்கிப் போனாள்.

கடவுளே! அப்படியானால் ஸ்ரீமதியும் தயானந்த்தை விரும்புகிறாளா?

''அம்மா....''

ராகவன் தன்னை அழைக்கும் குரல் கேட்க, அதற்குப் பிறகு தான் அவர் இன்னும் அங்கு இருப்பதையே உணர்ந் தாள்.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணி கிடைக்குமாம்மா?''



''இதோ அங்கிள்!'' என்றவள் சில வினாடிகளில் ஒரு பெரிய கண்ணாடி டம்ளர் நிறையக் குளிர்நீரை எடுத்து வந்து குடிக்கக் கொடுத்தாள்.

அவர் அதை முழுவதையும் மெதுவாகக் குடித்து முடிக்கும் வரை காத்திருந்து டம்ளரை வாங்கிக் கொண் டவள், இன்னும் என்னவெல்லாம் சொல்லப் போகி றாரோ என்பதைப் போல அவருடைய முகத்தையே பார்த் தாள்.

''சரிதாம்மா. இனி அவங்கவங்க தலைல என்ன எழுதி யிருக்கோ, அதுதான நடக்கும்.''

அவருடைய அந்த வார்த்தைகளில் ஏனோ நெஞ்சு நடுங்கி விட்டிருந்தது சுபாஹிணிக்கு.

''ஊனமாப் பிறந்ததோட அவளோட கஷ்டம் தீந்துடுச் சுன்னு நினைச்சோம். ஆனா அதுக்கு மேலயும் என்ன வெல்லாம்.....''

ஒரு தந்தையாக மகளைப் பற்றிய அவருடைய கவலை புரிய, ''கவலப்படாதீங்க அங்கிள்!'' என்று ஆறு தல் சொன்னாள்.

''எப்பிடிமா கவலப்படாம இருக்க முடியும்? அவளே ரொம்பவும் கேக்கறாளேன்னு தான் சென்னைக்குக் குடி வந்தோம். நடந்தத ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்து போக அது எடுத்துக்கற முயற்சி எங்களுக்குத் தெரியா துன்னு நினைச்சுட்டிருக்கா.

''எந்நேரமும் வாழ்க்கையே முடிஞ்சு போய்ட்ட மாதிரி விட்டத்த வெறிச்சுட்டு அவ உட்காந்துட்டிருக்கறதப் பாக்கும் போது பெத்தவங்களான எங்க மனசு எப்பிடித் துடிச்சுப் போகுது தெரியுமா?

''நிச்சயம் எங்கள மாதிரி இப்பிடியொரு நிலம, இனி வாழ்க்கைல வேறெந்தப் பெத்தவங்களுக்கும் வந்துடவே கூடாது.

''அதே சமயம் அவ எந்த நம்பிக்கைல தன் மனச ஆறுதல் படுத்திக்கறான்னு எங்களுக்கும் புரியாம இல்ல. ஆனா இப்ப அதுவும் இல்லேன்னு ஆகும் போது, எந்தப் பிடிப்புமே இல்லாம இனி வாழ்க்கைல அவ ளோட கதி தான் என்ன?''

ஸ்ரீமதியின் துன்பத்தை சுபாஹிணியாலும் உள்ளது உள்ளபடி அப்படியே புரிந்து கொள்ள முடிந்தது.

அது புரிந்ததாலேயே மேலும் மனமுடைந்து போனாள் என்று தான் சொல்ல வேண்டும்.

சரிதான். அவளுக்காகத் தான் தயானந்த்தை விட்டுக் கொடுத்து விடலாம் தான்.

ஆனால் அவனை இழந்து விட்ட பிறகு தனக்கும் தான் வாழ்க்கையில் என்ன பிடிப்பு இருக்கிறது.

ஏன், எதுவுமே இல்லையே.

முதலில் அவனை விட்டுக் கொடுத்து விடுவதென்பது தன்னாலும் தான் அவ்வளவு எளிதாக முடிகிற காரியமா?

அதற்குப் பதிலாகத் தனது உயிரை விட்டு விடுவது கூடச் சுலபமாயிற்றே என்று தோன்றிவிட்டிருக்க, அந்த வினாடியே சுபாஹிணியின் கண்கள் அவளையறியாம லேயே கலங்கி விட்டிருந்தன.

திடீரென்று ஏதோ தோன்றியவளாகத் தனது கண் களைத் துடைத்துக் கொண்டாள் சுபாஹிணி.



வேண்டாம். மேலும் இதைப்பற்றிஇப்போதைக்கு எந்த முடிவுக்கும் வந்து விட வேண்டாம்.

ஏனென்றால் எதுவானாலும் நினைத்து விடுவது எளிது.

''என்ன மன்னிச்சுடுமா, ம்கூம். எங்கள...''

ஸ்ரீமதியின் தந்தை சொல்ல, ''அச்சச்சோ! என்ன அங் கிள் பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?'' என்று பதறிப் போனாள்.

''பெத்த பாசம் எப்பிடி எப்பிடியோ கீழ இறங்கி நடந் துக்கிட்டோம். போதும். இனி எதுவானாலும் ஸ்ரீமதி யோட தலவிதிப்படியே நடக்கட்டும். சும்மா ஆதங்கப் பட்டு என்ன ஆயிடப் போகுது. ஆனா...''

''என்ன அங்கிள், சொல்லுங்க.''

''எனக்கு நீ ஒரு உதவி செய்யணும்மா. ரொம்பவும் சின்ன உதவி தான்....''

''என்ன அங்கிள்? சொல்லுங்க...''

''நாளைக்கோ, இல்ல இந்த வாரத்துக்குள்ள ஏதோ ஒரு நாள் ஸ்ரீமதிய இங்க அனுப்பறோம்மா. நீதான் எப்பிடி யாவது அவ கூடப் பேசி அவ மனச மாத்தணும்.''

..................

''நான் சொல்ல வர்ற மாத்தறது வேறமா. தயா னந்தப் பத்தியில்ல. அவ உடனே இல்லன்னாலும் கொஞ்சம் கொஞ்சமாவாவது பழைய நிலைக்கு வரணும். திரும்பவும் நாங்க எங்க மகள, எங்க பழைய துடிப்பு நிறைஞ்ச மகளாப் பாக்கணும்.''

...கூட நான் ஏன் உங்கிட்டக் கேக்கறேன்னா, நீ உன்னத் தன்னோட உயிர்த் தோழியா நினைக்கறா. அதான். எந்நேரமும் உன்னப்பத்தியும் தயாவப் பத்தியும் மட்டும் தான் பேசிட்டிருக்கா. அதாவது ரெண்டு வேற வேற கோணங்கல்ல.''

''அப்பிடிப் பேசற அந்த நேரத்துல மட்டும் தான் முகத்துல சந்தோஷம் தெரியுது, முக்கியமா கவல தெரியல....''

''சரிதான் அங்கிள். ஸ்ரீக்காக என்னால என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் நான் நிச்சயம் செய்யறேன். ஏன், தினமுமே கூட கொஞ்ச கொஞ்ச நேரம் முடிஞ்ச அளவுக்கு லஞ்ச் டைமாப் பாத்து நீங்க அவள இங்க அனுப்பி வைங்க. அவளோட சந்தோஷம் தான் என்னோட சந்தோஷமும். கவலப்படாதீங்க.''

''சரிதாம்மா. அப்ப நான் கிளம்பறேன்.''

''ஏதாவது குடிக்கறீங்களா அங்கிள்? டீ குடுக்....''

''வேண்டாம்மா. நீ உபசரிச்சதே போதும்!'' என்ற ராகவன் உடனே கிளம்பி விட்டிருக்க, மீண்டும் ஒரு இனம் புரியாத வேதனை வந்து சுபாஹிணியின் மனதை இறுகச் செய்து விட்டிருந்தது.

ஸ்ரீமதியின் தந்தை கோபப்பட்டுப் பேசியிருந்தால் இனி எப்படியோ, ஆனால் அவர் உள்ளதை உள்ளபடி பேசியதில் முழுமையாக மனமுடைந்து போய் விட்டிருந்தாள் சுபாஹிணி. மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர, அப்போதைக்கு வேண்டாமென்று முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



# 24

அன்றோடு தயானந்த் வெளியூர் சென்று மூன்று நாட்கள் முடிவடைந்திருந்தன.

அவனுடன் பேச வேண்டும், அவனை உடனே பார்க்க வேண்டும் என்பதைப் போலெல்லாம் மிகவும் பயங்கரமாகத் தோன்றிக் கொண்டே இருந்ததில் மேலும் அதிகமான பயத்தில் நடுங்கிப் போனாள், சுபாஹிணி.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

தயானந்த்தை மறந்து விடுமாறு ஸ்ரீமதியின் தந்தை ராகவன் அன்று தனது மகளிடம் சென்று சொன்ன போது, அப்போதைக்கு அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அதற்குப் பிறகு அவள் தற்கொலைக்கு முயன்றதே சுபாஹிணியின் அந்தப் பயத்திற்கான காரணம்.

எப்படியோ கடவுளின் புண்ணியத்தில் பாட்டில் நிறைய இருந்த தூக்க மாத்திரைகளை எடுத்து வைத்துக் கொண்டு அதை விழுங்க முயன்றபோது பார்த்துத் தடுத்து விட்டிருந்தனர்.

அதைப் பார்த்துப் பயந்து நடுங்கிப் போன பெற்றவர்கள் மேலே என்ன செய்வதென்று தெரியாமல் தன்னை அழைக்க, உடனே ஓடினாள் சுபாஹிணி.

வீட்டில் நிலவிய மயான அமைதி அவளுடைய நெஞ்சுக் கூட்டிற்குள்ளேயே குளிரைப் பரப்பியிருக்க, ஸ்ரீமதியின் அறையை நாடிப் போனாள்.

ஸ்ரீமதியுடன் அவளைப் பெற்றவர்களும் அருகி லேயே இருக்க, கீழே குறுகி அமர்ந்திருந்த ஸ்ரீமதி அவளுடைய முழங்கால்களில் முகம் புதைத்துக் கேவிக் கொண்டிருந்தது தெரிந்தது.

அழுகை இப்பொழுது கேவலாக மாறியிருந்ததையும் சுபாஹிணியால் புரிந்து கொள்ள முடிந்தது.

''வாம்மா,'' என்று ராகவன் தன்னை வரவேற்கத் தானும் நிமிர்ந்து பார்த்தாள் ஸ்ரீமதி.

தானும், ''வா சுபா!'' என்று ஆவலுடன் வரவேற்றாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

மீண்டும் முகம் கறுத்து விட்டிருக்க, அழுகையுடன் குனிந்து கொண்டாள்.

ஸ்ரீமதியின் தாயும் உடன் சேர்ந்து அழுது கொண்டிருப் பது தெரிய, அவர்களுக்கு என்ன ஆறுதல் சொல்வ தென்று தெரியாமல் விழித்தாள் சுபாஹிணி.

''காவேரி.''

கணவன் அழைக்க, நிமிர்ந்து பார்த்தார் காவேரி.

''எல்லாருக்கும் குடிக்கறதுக்கு ஏதாவது கொண்டு வந் தாப் பரவாயில்லாம இருக்கும், முக்கியமா ஸ்ரீமதிக்கு.''

கொஞ்சம் இருங்க என்பதைப் போல அவர் கணவ னுக்கு ஜாடை காட்ட அதெல்லாம் சுபாஹிணியின் கவனத்தில் கூடப் பட்டிருக்கவில்லை.

தரையில், தானும் ஸ்ரீமதிக்கு அருகில் சென்று அமர்ந் திருந்தாள்.

''ஸ்ரீ! இங்க பாரு.''



''......''

''அது சரி, நான் யாரு உனக்கு அட்வைஸ் பண்ண?''

''ஐயோ! நீயும் கொல்லாத சுபா. நீங்க யார் என்ன சொன்னாலும் சரிதான். ஆனா என்னால அவர மறக்க முடியாது. ம்கூம். இந்த ஜென்மத்துல மறக்கவே முடியாது, ப்ளீஸ் எல்லாரும் என்னக் கொஞ்சம் தனியா விட்றீங் களா?''

.........

''ப்ளீஸ் சுபா. என்ன மன்னிச்சுடு. நாம இன்னொரு நாள் பாக்கலாம். சரியா?''

ஸ்ரீமதி கேட்க, சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் சுபாஹிணி.

அவ்வளவு நேரமும் எப்படியோ, ஆனால் அந்த வினாடி யில் மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

உடனே அவள் எழுந்து வெளியே வந்து விட்டிருக்க, ஸ்ரீமதியைப் பெற்றவர்களும் அவளை எழுப்பி மாத்திரை கொடுத்துப் படுக்கச் செய்து விட்டு வெளியே வந்தனர்.

''ஸாரிமா.''

அப்படிச் சொன்ன ஸ்ரீமதியின் தந்தையை நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

''ஸ்ரீமதியால எல்லாருக்கும் எவ்வளவு தொல்....''

''தயவுசெஞ்சு அவளப்பத்தி தப்பா எதுவும் சொல்லா தீங்க அங்கிள்.''

''நீயும் தயானந்த்தும் ஒருத்தருக்கொருத்தர் நேசிக்கறீங் கன்னு ஸ்ரீகிட்ட சொன்னது நாந்தாம்மா. அப்பிடியாவது

அவ மேலமேல தப்பான கற்பனைகளை வளத்துத் தன்னைச் சிரமப்படுத்திக்க வேண்டாமேன்னு தான் சொன்னேன். ஆனா......''

''என்ன ஆனா, இப்பக் கவலப்பட்டு என்ன பிரயோசனம்? இன்னும் ஒரு நிமிஷம் மட்டும் நாம அவளைப் பாக்காம இருந்திருந்தா அவளோட நிலம என்ன ஆகியிருக்கும்...''

காவேரி மீண்டும் அழத்தொடங்கிவிட்டிருக்க, தானும் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தார் ராகவன்.

''எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலமா. பேசாம நாங்க மூனு பேரும் ஒரேயடியாப் போய்ச் சேந்துடலாமோன்னு கூட சில சமயம் தோனிடுது.''

ராகவன் சொல்ல, அது சுபாஹிணியின் காதுகளில் கூட விழுந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு வேறு ஒரு யோசனையில் மும்முரமாக இருந்தவள் அப்பொழுது தான் நடப்பிற்கு வந்தவளாய் நிமிர்ந்து ராகவனைப் பார்த்தாள்.

''நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன் அங்கிள்.''

என்ன என்பதைப் போலக் கணவன் மனைவி இருவரும் பார்க்க, ''இன்னைக்குத் தான் நான் வேலைக்கு வர்ற கடைசி நாள்!'' என்றாள்.

''வேண்டாம்மா. அவசரப்பட்டு நீ எந்த முடிவுக்கும் வந்துடாத.''

மனதிற்குள் சந்தோஷமும் நிம்மதியும் ஒருசேரத் தோன்றியிருந்தாலும், சும்மா பெயருக்கு மறுத்தார் ராகவன்.



அவசரப்பட்டு அப்படிச் சொன்ன கணவனைக் காவேரி கோபத்துடன் முறைக்க, அதை எதையுமே அறியாதவளாய் மேலும் தொடர்ந்தாள் சுபாஹிணி.

''இல்ல அங்கிள். நானும் ரொம்ப யோசிச்சுத் தான் இந்த முடிவ எடுத்திருக்கேன். நீங்களே சொன்ன மாதிரி எனக்கு வேற வாழ்க்கை அமைச்சுக்கறதுக்கு வழிகள் நிறைய இருக்கு. ஆனா ஸ்ரீக்கு அப்பிடியில்ல.''

அதைச் சொல்லும் பொழுது சுபாஹிணியின் மனம் துடித்த துடிப்பை அவளைப் போலவே மற்றவர்களும் அறிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு சுபாஹிணியின் மனம் ஒரு வித விரக்தியில் இறுகிப் போய்விட்டிருந்தது.

தனது முடிவைச் சொல்லி விட்டவள் மற்றவர்களின் பதிலுக்காகக் காத்திருக்கவுமில்லை.

பொதுவாக ஒருமுறை விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டிருந்தாள்.

கிளம்பி வந்தவள், நேராகத் தன்னுடைய இடத்திற்கு வந்து அமர்ந்திருந்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் அப்படிச் சொல்லிவிட்டு வந்துவிட்டோமோ என்று இப்பொழுது அவள் மனம் துடிக்கத் தொடங்கிவிட்டிருக்க, மீண்டும் அலைபாயத் தொடங்கிய மனதை முயன்று கல்லாக்கிக் கொண்டாள்.

ஆனாலும் தனிமை அவளுடைய மென்மையான பூவுடலை நடுங்கச் செய்திருந்ததோடு, கொஞ்சம் கொஞ்சமாக அவளை நடப்பிற்கும் திருப்பிக் கொண்டிருந்தது.

நேரம் போகப்போகப் பயம் மேலும் அதிகமாகிக் கொண்டே தான் சென்றதே தவிரத் துளியும் குறைந்திருக்கவில்லை.

வேண்டாம், இதற்கு மேல் இங்கே அமர்ந்திருக்க வேண்டாமென்று நினைத்தவள் உடனே எழுந்து சென்று ஒரு வெள்ளைப் பேப்பரை எடுத்துத் தனது இருபத்து நான்கு மணி நேர ராஜினாமாக் கடிதத்தை எழுதிக் கையெழுத்திட்டு தயானந்த்தின் டேபிளில் அவன் வந்ததும் பார்வைக்குப் படும் விதமாக வைத்து விட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள்.

அழுகை கண்களை மறைக்க, ஓவென்று கதறி அழத் தயாராக இருந்த மனதைச் சுற்றுப்புறத்தை உணர்ந்து கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் அதெல்லாம் வீடு வந்து சேரும்வரை மட்டுமே,

கடவுளே! இனித் தனக்கு வாழ்க்கையில் என்ன இருக்கிறது?

''சுபா!''

உள்ளே வந்த மகள் எதையோ இலக்கற்று வெறித்த வண்ணம் அப்படியே நின்றிருக்க, மேலும் சில முறையும் கூட அழைத்துப் பார்த்தார் நளினி.

ஆனால் அதெல்லாம் அவளுடைய காதுகளில் கூட விழுந்திருக்காததில், அருகில் வந்து மகளின் தோளைத் தொட்டார்.

''சுபா, இங்க பாரு.''

தாயின் அழைப்பில் திரும்பி அவரைப் பார்த்தாள் சுபாஹிணி.



பேயறைந்தாற் போலிருந்த மகளின் முகத்தைப் பார்த்தவர், உண்மையிலேயே பதறித்தான் போய் விட்டிருந்தார்.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, ''சுபா, என்னமா, ஏன் ஒரு மாதிரியிருக்க?'' என்று சாதாரணமாகக் கேட்டார்.

தாயின் கரிசனமான விசாரிப்பில் அவ்வளவு நேரமும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்ததனைத்தும் பீறிட்டுக் கொண்டு வெளியே வந்திருந்தது.

''மம்மி...'' என்று கதறத் தொடங்கியிருந்த மகளை சோஃபாவிற்கு அழைத்து வந்தவர், தன்னருகில் அமரச் செய்திருந்தார்.

''சுபா, இங்க பாரு...''

நளினி என்ன முயன்றும் சுபாஹிணியின் அழுகை நின்றிருக்கவில்லை. மாறாக அதிகம் தான் ஆகியிருந்தது.

சுபாஹிணி அப்படியே தாயின் மடியில் முகம் புதைத்துக் கொண்டு விட்டிருக்க, மகளின் அழுகை ஓய்வதற்காக நளினி தானும் காத்திருந்தார்.

கடவுளே! என்றுமில்லாத வழக்கமாக இன்று என்ன ஆயிற்று இந்தப் பெண்ணிற்கு என்று அவருடைய மனமும் உள்ளுக்குள் கலங்கிப் போய்விட்டிருந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

மகளின் அழுகையின் தீவிரம் சற்றே குறைந்திருக்க, அவளே தெளிந்து எழட்டுமென்று பேசாமல் காத்திருந்தார்.

அவர் நினைத்து போலவே அடுத்த சில வினாடி களில் அழுகை ஓய்ந்து எழுந்து அமர்ந்திருந்த சுபா ஹிணி, லேசாக அசடு வழியத் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த தாயைப் பார்த்தாள்.

''என்னடாம்மா, என்னாச்சு?''

''மம்மி...''

''ம்... சொல்லு.''

ஏதோ சொல்ல வந்தவளுக்கு அந்த வார்த்தைகளை முந்திக் கொண்டு மீண்டும் அழுகை வந்திருக்க, ''போதும் சுபா!'' என்று இப்பொழுது அதட்டினார் நளினி.

''சொல்லு, என்ன பிரச்சன உனக்கு?''

''அது வந்து.. மம்மி...''

''ம்... சொல்லுமா.''

''மம்மி, நான் இனிமேல் வேலைக்குப் போகமாட்டேன்.''

''அட, இவ்வளவு தானா விஷயம்?'' என்று புன்னகை செய்தவர், ''ஆமா, அதுக்கு என்ன காரணம்னு நான் தெரிஞ் சுக்கலாமா?'' என்று வெகு சாதாரணமாகக் கேட்டார்.

''பிடிக்கல.''

''ஓ, எல்லாம் சரிதான். ஆனா உங்க எம்.டி. இல்லாத நேரத்துல இப்பிடி திடீர்னு போகாம விட்டுட்றது தப்பில் லையா?''

''வேற வழியில்ல.''

''உன் பிரச்சனை என்னங்கறத நீ சொன்னா, வேற வழி இருக்கா இல்லையாங்கறத நான் சொல்லுவேன்.''



''அது ஒன்னுமில்ல மம்மி.''

''ஒன்னுமில்லையா, அப்ப ஒன்னுமில்லாததுக்குதான் இவ்வளவு நேரமும் இப்பிடி அழுதியா? நான் உங்கிட்ட இத எதிர்பார்க்கல சுபா. நான் உன் அம்மாவா கேக்கல. ஃப்ரண்டா கேக்கறேன். உம்மனசுல இருக்கறத சொல்லு. உன் பிரச்சனைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கறதோட உன் மனசுல இருக்கற பாரமும் காணாமப்போயிடும்.''

''போகாது மம்மி!'' என்றவளுக்கு மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் முயன்று வாயைத் திறந்து பேசினாள்.

''அவர...''

''ம்.''

''அவர, தயாவ இனிமேல் நான் பாக்கக் கூடாது.''

மகளின் தயா என்ற வார்த்தை மனதில் உறைத்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், ''ஏன்?'' என்று கேட்டார்.

''ஸ்ரீமதி....''

''ம்... சொல்லுமா.''

''ஸ்ரீமதிக்கும் அவருக்கும் கல்யாணம் நடக்கப் போகுது.''

''சரி. அதுக்கும், நீ தயானந்தப் பாக்க் கூடாதுன்ற துக்கும் என்ன சம்பந்தமிருக்கு?''

..........

''என்னாச்சு, பேசு.''

''ப்ளீஸ் மம்மி... இதுக்கு மேல என்ன எதுவும் கேக்கா தீங்களேன்.....''

மீண்டும் சுபாஹிணி தனது கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டிருக்க, இப் பொழுது எரிச்சல்தான் வந்தது நளினிக்கு.

"சுபா, இங்க பாரு."

.........

"சுபா!"

தாயின் அதட்டலில் மீண்டும் நடப்புக்கு வந்திருந்த சுபாஹிணி, "ஏன்னா நானும் அவரும் ஒருத்தர ஒருத்தர் விரும்பறோம்!" என்று எங்கோ பார்த்துக் கொண்டு என்றாலும் சொல்லியே விட்டிருந்தாள்.

சில வினாடிகள் அங்கே குண்டூசி விழுந்தால் கூடக் கேட்கும் விதமாக ஒரு வித அமைதி நிலவியது.

ஆனால் அதை முதலில் கலைத்தது நளினி.

"என்னமா, ஏதேதோ சொல்ற!"

"என்ன மன்னிச்சுடுங்க."

"மன்னிக்கறது இருக்கட்டும் முட்டாள். தலையும் புரியாம காலும் புரியாம நீ என்ன பேசறேங்கறது கூடத் தெரியாம.... நான் தாம்மா முட்டாள். நீ இல்ல. உன்ன வேலைக்கே அனுப்பியிருக்கக் கூடாது. இப்ப இப்பிடிக் கவலப்பட வேண்டிய அவசியமும் வந்திருக்காது பாரு."

தாயும் புலம்பத் தொடங்கி விட்டிருக்க, "ப்ளீஸ் மம்மி... நீங்க அவசரப்பட்டு எதையும் சொல்லிட வேண்டாம்," என்று வேதனையுடன் கேட்டுக் கொண்டாள்.

"அப்ப நடந்ததக் கொஞ்சம் புரியற மாதிரி சொல்லித் தொல."

தாய் கோபத்துடன் கேட்க, மேலோட்டமாக என்றாலும் ஆரம்பம் முதல் நடந்ததனைத்தையும் சொல்லி விட்டிருந்தாள் சுபாஹிணி.



"ஓ, இப்ப தியாகி ஆயிட்டிங்களாக்கும்!"

தாயின் ஏளனம் மனதில் உறைத்தாலும், "உன் அக்காவ விடவும் உனக்கு நிறையச் சுதந்திரம் கொடுத்து நல்லாத்தானமா வளத்தோம். ஒருவேள அதுதான் நாங்க பண்ணின தப்பா?" என்று கேட்டவரைக் கண்கள் கலங்கப் பார்த்தாள்.

"ப்ளீஸ் மம்மி, இது முழுக்க என்னோட தப்பு தான். தயவுசெஞ்சு நீங்க ஃபீல் பண்ண....."

"எப்பிடிமா அப்பிடி இருக்க முடியும்? ஏன்னா நான் உன்னப் பெத்தவ. உன்ன விடவும் கூட உன்னுடைய குணத்தப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். சும்மாவே நீ ரொம்பவும் இளகின மனசுக்காரி. இப்ப இவ்வளவு பெரிய....."

"ப்ளீஸ் மம்மி, இத இத்தோட விட்டுடுங்க."

மகள் மனதிற்குள் படும் வேதனை புரிய, தானும் அதற்கு மேல் எதையும் சொல்ல வேண்டாமே என்று பேசாமல் இருந்து விட்டிருந்தார்.

மகள் செய்வது சரியல்ல என்பது மனதிற்குள் படவே செய்தாலும், பிறகு எதைச் செய்தால் சரியாக இருக்குமென்பது தெரியாமல். அவராலும் உடனே எதையும் சொல்லிவிட முடிந்திருக்கவில்லை.

தான் சும்மா இருக்காமல் தாயையும் சேர்த்துக் குழப்பிக் கவலைப்பட வைத்து விட்டோமோ என்று சுபாஹிணியின் வேதனை இப்பொழுது இரட்டிப்பாகி விட்டிருந்தது.

அதுதான் உண்மை நிலையாகவும் இருக்க, இது இனி தனது கணவனுக்குத் தெரிந்தால் என்னவாகுமோ என்று

...யுடைய கவலையும் இரண்டு மடங்காகி விட்டிருந்தது.

தாயின் உபசரிப்பில் இரண்டு வாய் உண்டவள், தூங்கப் போவதாகச் சொல்லிவிட்டு எழுந்தாள்.

''சுபா!''

தாய் அழைக்க என்னவென்பதைப் போலப்பார்த்தாள்.

''மனசப் போட்டுக் குழப்பிக்காதமா. எல்லாம் நல்லபடியா நடக்கும்.''

தாயின் ஆறுதல் வார்த்தைகளில் சரி யென்பதைப் போலத் தலையை ஆட்டியவள், அவருக்காக முயன்று சிரித்தும் வைத்தாள்.

மகளின் மனம் புரிய நளினியின் மனம் மேலும் உருகிப் போனது.

''நான் வேணும்னா இன்னைக்கு உங்கூட வந்து படுத்துக்கட்டுமா?''

சில வினாடி யோசித்தவள், உடனே, ''வேண்டாம் மம்மி!'' என்று விட்டிருந்தாள்.

''சரிதான். கண்டதையும் யோசிக்காம போய்ப் படுத்துத் தூங்கு.''

''வேணும்னா ஒன்னு பண்றீங்களா மம்மி?''

''என்னமா?''

''நான் தூங்கற வரைக்கும் மட்டும் வந்து என் பக்கத்...ல உக்காந்துக்கறீங்களா?''

''சரிதான்மா. வர்றேன்.''

'உங்களுக்குச் சிரமம்னா வேண்டா..''



''சிரமம்னு நினைச்சிருந்தா கேட்டிருக்கவே மாட்டேன்!''

என்றவர், ''ரொம்பவும் டீப்பா எதையும் திங்க் பண்ணாதமா. ஃப்ரீயா இரு.'' என்றார்.

சொன்னது போலத் தாய் வந்து தன்னருகில் அமர்ந்திருக்க, அவருக்காகக் கண்களை மூடிப் படுத்துக் கொண்டாள் சுபாஹினி.

ஆனால் போகப்போக அதுவே தூக்கமாகவும் மாறியிருக்க, மெல்லிய பெட்ஷீட்டால் போர்த்தி விட்டுச் சத்தம் செய்யாமல் கதவை மூடிக் கொண்டு வெளியே வந்திருந்தார் நளினி.

## 25

''மம்மி!''

சமையல் வேலையில் மும்முரமாக இருந்த நளினி மகளின் அழைப்பில் நிமிர்ந்தார்.

''வாம்மா. நல்லாத் தூங்கினயா?''

''ஆமாம் மம்மி. நைட் நீங்க எப்ப எழுந்து போனீங்கன்னு கூடத் தெரியாது, இப்பக் கொஞ்சம் முன்னாடி தான் கண் விழிச்சேன்னாப் பார்த்துக்கோங்களேன்.''

''சரிதான், பிரஸ் பண்ணிட்டு வாம்மா. காஃபி கலக்கறேன்.''

''பண்ணியாச்சுமா. குடுங்க.''

''இதோ....''

''மம்மி, ஒரு விஷயம்.''

''என்ன சொல்லு.''

''ரேவதி அம்மா ரெண்டு நாளைக்கு முன்னாடி கூப்புட்டிருந்தாங்க.''

''சரி.''

''அவளுக்கு இப்ப மனநிலை எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்காம் மம்மி. எல்லார் கூடவும் நல்லாப் பேசக் கூட செய்யறாளாம்.''

''அட, கேக்கவே ரொம்ப சந்தோஷமா இருக்குமா.''

''அது மட்டுமில்ல மம்மி....''

''என்னமா?''

''நான் போய் இன்னைக்கு அவளப்பாத்துட்டு வரட்டுமா?''

''சரிதான், நானும் வர்றேன். ரெண்டு பேரும் போய்ட்டு வரலாம்.''

''தேங்க்யூ மம்மி!'' என்று சந்தோஷமாகச் சொன்னவள், தாய் நீட்டிய காபி கப்பை வாங்கிக் கொண்டாள்.

''அப்புறம் மம்மி...''

''ம்...''

''ரேவதி ட்ரீட்மெண்ட்டுக்காகப் பெங்களூருக்குப் போகணுமாம்....''

''சொல்றதக் கொஞ்சம் முழுசா சொல்லி முடி சுபா, உம் முகத்தையே பாத்துட்டிருக்க முடியாது. எனக்கும் எத்தனையோ வேலையிருக்கு.''

''அவகூட பெங்களூருக்கு நானும் போய்ட்டு வரட்டுமா?''



''எதுக்கு?''

''நாலு நாள் தான் மம்மி, மிஞ்சிப் போனா ஒரு வாரம். அவ்வளவுதான் ப்ளீஸ்....''

மகளின் கெஞ்சல் நளினிக்கு எரிச்சலைத் தான் வரவழைத்திருந்தது.

என்ன பெண்களோ!

பெற்றவர்களைப் பற்றியெல்லாம் துளியும் எண்ணிப் பார்க்காமல் காதல், மண்ணாங்கட்டி என்று பிரச்சனைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு இப்படிக் கண்ணைக் கசக்கிக் கொண்டு நிற்கிறார்களே என்றிருந்தது.

''என்ன மம்மி?''

''உங்க அப்பா என்ன சொல்லப் போறாரோ....''

''ப்ளீஸ் மம்மி... என்ன விட்டா அவளுக்கும் தான் யாரு இருக்...''

''சரிசரி, போகும்போது பாக்கலாம், விடு.''

''போகும் போதுன்னா நாளைக்கு மதியம் கிளம்பியாகணும்....''

''வயசுப் பொண்ணுங்க நீங்க ரெண்டு பேர் மட்டும் தனியாப் போய்.....''

''இல்லில்ல மம்மி, ரேவதியோட அம்மா அப்பாவும் வர்றாங்க.''

''ரேவதியோட அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்லிட்டிருந்த?''

''இப்ப ஓரளவுக்குப் பரவாயில்லையாம். அதான் நானும் கூடப் போகப் போறேனே..''

......

"ப்ளீஸ் மம்மி."

சரிதான் போய்விட்டு வரட்டும், மகளுக்கும் மனதிற்குச் சற்று ஆறுதலாகவேனும் இருக்குமே என்று நினைக்கத் தோன்றியது.

"ப்ளீஸ் மம்மி."

"சரி சரி. போய்ட்டு வா. முதல்ல காபியக் குடி. ஆறிடும். அப்புறம் சுபா."

"என்ன மம்மி, சொல்லுங்க?"

"நீ பண்றது பெரிய தப்புமா. உன்ன நம்பிக் கம்பெனிய ஒப்படைச்சுட்டு உங்க பாஸ் வெளியூர் போயிருக்கற நேரத்துல நீ இப்பிடி சொல்லாமக் கொள்ளாம....."

..........

"என்ன, பேசு."

"நான் முடிவு எடுத்தது, எடுத்ததுதான். அதுல மாற்...."

"நீ, உன் முடிவு இதப் பத்தியெல்லாம் இங்க யாரு கேட்டா. ஏற்கெனவே மனசு நொந்து போய்க் கிடக்கறயேன்னு பாக்கறேன். இல்லைன்னா நீ செஞ்சிருக்கற காரியத்துக்கும், எனக்கு வர்ற கோபத்துக்கும்...."

..........

"தயானந்த் கிட்டிருந்து நிச்சயம் போன் வரும்...."

"வந்தா இனிமேல் சுபா வேலைக்கு வர மாட்டான்னு சொல்லிடுங்க."

"ம், இனியும் உன்ன வேலைக்குப் போகவிடுவோம்னு வேற நீ நினைச்சுட்டிருக்கியா? என்னவோ போம்மா,



உங்க அப்பாவ நினைச்சாத்தான் எனக்கு ரொம்பவும் பயமா இருக்கு."

.........

"போதும்மா. தயவுசெஞ்சு எங்க மானம் மரியாதையைக் கெடுத்துத் தெருவுல நிக்க வெச்சுடாத. இத்தோடவாவது திருந்திக்கோ."

தாயின் கோபமும், ஏளனமும் மனதைத் தைக்கத் துடித்துப் போனாள் சுபாஹிணி.

சரிதான், ஒரு அக்கறையுள்ள தாயாக அவராலும் தான் வேறு என்ன சொல்ல முடியுமென்று நினைக்கத் தோன்றியது.

ஏற்கெனவே முடிவு செய்தது போல அடுத்த நாள் தனது தோழி ரேவதியுடைய சிகிச்சைக்காக அவளுடன் பெங்களூர் கிளம்பி விட்டிருந்தாள் சுபாஹிணி.

என்னதான் முன்னைக்கு இப்பொழுது எவ்வளவோ தேறியிருந்தாலும் சற்றும் உயிர்த்துடிப்பே இல்லாமல் இலக்கற்று எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தோழியைப் பார்க்கப் பார்க்க அவளுடைய மனம் மேலும் அதிகமாக இறுகிப் போய்விட்டிருந்தது.

எந்த அளவிற்குத் துள்ளித் திரிந்து கொண்டு துடிப்பாக இருந்தாள்.

இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் காதல் தன்னையும் இதே நிலைக்குக் கொண்டு வந்து விட்டு விடுமோ?

மனம் கேள்வி கேட்க, ம்கூம் அப்படியெல்லாம் ஆகவே ஆகாது என்று சர்வ நிச்சயமாக அடித்துச் சொல்ல அ ளாலும் முடிந்திருக்கவில்லை.

...வள்! அப்படியானால்....

ஸ்ரீமதியைப் பற்றிக் கவலைப்படாமல் நான் இன்னும் கொஞ்சம் சுயநலமாக நடந்து கொண்டிருக்க வேண்டுமோ?

அவசரப்பட்டுத் தவறான முடிவை எடுத்துவிட்டேனோ...

ஆம், அப்படித்தான்.

அனைத்தையும் எப்பொழுதும் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டே இருப்பது நல்லதல்ல என்று தாய் கூடச் சொன்னாரே.

அதற்குப் பிறகு தான் நான்கு நாட்கள் முடிந்து விட்டிருந்த நிலையிலும் கூடத் தயானந்த் தன்னை அழைத்துப் பேசாதது நினைவிற்கு வந்தது.

அதற்கான காரணமும், அதாவது முதலில் தான் அழைத்துப் பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறான் என்பதும் அவளுக்குப் புரியாமலில்லை.

மற்றது எப்படியோ, தயானந்த்தைப் பிரிந்து, மறந்து முதலில் தன்னால் வாழ முடியுமா?

ம்கூம். முடியாது.

முடியவே முடியாது.

அதற்கு மேல் முயன்றால் இதோ இந்தத் தோழியின் நிலை தான் தனக்கும்.

மனம் பாரமாகி விட்டிருக்கக் கண்கள் அதன் பாட்டிற்குக் கண்ணீரை வடிக்கத் தொடங்கி விட்டிருந்தது தெரிந்தது.

சில வினாடிகளில் தன்னிலை உணர்ந்து அவசரமாக நடப்பிற்கு வந்திருந்தவள் உடனே கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



ட்ரெய்ன் சீராகப் போய்க் கொண்டிருக்க, தோழியும், அவளைப் பெற்றவர்களும் நன்றாக உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

பாவம், எத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படியொரு நிம்மதியான உறக்கமோ என்று சத்தம் செய்யாமல் தானும் பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

## 26

தோழியின் சிகிச்சையை இன்னும் பதினைந்து நாட்களுக்கு நீடித்தாக வேண்டுமென்று மருத்துவர்கள் சொல்லிவிட்டிருந்ததால் தான் அன்றே ஊருக்குத் திரும்ப ஆயத்தமானாள் சுபாஹிணி.

என்னதான் முடிவு செய்து விட்டிருந்தாலும் ஊருக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணமே அவளுக்கு மிகுந்த பயத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது.

முதல் நாளோடு ஒரு வாரம் முடிந்திருக்க, அன்று தயானந்த் வேலைக்கு வந்திருப்பான் என்பது நினைவுக்கு வந்தது.

வந்ததும் தனது ராஜினாமாக் கடிதத்தைப் பார்த்திருப்பான்.

ஒருவேளை யாராவது அதை அகற்றியிருந்தால்...

ம்கூம், வழியே இல்லை.

தயானந்தைத் தவிர, அந்த அறைக்குள் செல்வது தான் ஒருத்தி மட்டுமே.

அதனால் நிச்சயம் அந்தக் கடிதம் அவனுடைய கண்களுக்குப் பட்டிருக்கும்.

எடுத்துப் படித்தும் இருப்பான். கூடவே கோபப் பட்டும்.

ஒருவேளை, சரிதான் போகிறாளென்று மனதைத் தேற்றிக் கொண்டிருந்தால்...

தேற்றிக் கொள்வதென்ன, நல்லதாகிப் போயிற்றென்று தன் நினைவுகளைத் துடைத்தெறிந்திருந்தால்...

மனம் பாரமாகி விட்டிருக்கக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது சுபாஹினிக்கு.

ஆமாம், அப்படித்தான் நடந்திருக்க வேண்டும்.

இல்லையென்றால், என்ன ஏதென்று விசாரிப்பதற்காகவாவது இந்நேரம் தன்னை அழைத்திருக்க வேண்டுமே.

சுபாஹினி வீடு வந்து சேர்ந்த போது மணி ஒன்பதுக்கும் மேலேயே ஆகிவிட்டிருந்தது.

தந்தை ஹால் சோஃபாவில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, தாய் சமையலறையில் இருப்பது தெரிந்தது.

யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்த தந்தை, ''வா!'' என்றுவிட்டு மீண்டும் தனது கவனத்தைத் திருப்பிக் கொண்டு விட்டிருந்தது ஏனோ வித்யாசமாகப் பட்டது அவளுக்கு.

என்ன நடந்திருக்கும்?

ஒருவேளை தாய் நடந்ததைத் தந்தையிடம் சொல்லியிருப்பாரோ?



உடனே தாயை நாடிச் சென்றாள்.

''வாம்மா, இப்பதான் வர்றியா?''

''ம், டாடி ஏன் மம்மி கோபமா இருக்கார்?''

''..........''

''உங்களைத் தான் மம்மி..''

''சொல்றேன். முதல்ல நீ ஏதாவது சாப்புடு.''

''ம்கூம், நீங்க முதல்ல சொல்லுங்க.''

''முதல்ல நீ போய் குளிச்சுட்டு வாம்மா. ட்ரெய்ன்ல வந்த கசகசப்பு...''

''ஐயோ! விஷயம் என்ன? அதச் சொல்லுங்க முதல்ல.''

''உன் பாஸ் தயானந்த் கொஞ்சம் முன்னாடி வீட்டுக்கு வந்துட்டுப் போனார்.''

ஏனோ பக்கென்றுவிட, ''எதுக்கு?'' என்று கேட்டாள்.

''நீ ஏன் வேலைக்கு வரலேங்கறதத் தெரிஞ்சுக்கறதுக்காக.''

''ஓ, வேறென்ன....''

''உன்னக் கல்யாணம் பண்ணிக்க ஆசப்பட்றதா உங்க அப்பாகிட்ட சொன்னார்,'' என்ற நளினி மகளின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

''............''

''அதுக்கு டாடி என்ன....''

''அவர் டென்ஷனாயி ஏதேதோ பேசிட்டார்,'' என்ற தாயைப் பயத்துடன் பார்த்தாள் சுபாஹினி.

''ஆனா தயானந்த் ரொம்பப் பொறுமையாப் பேசினதால பிரச்சனை 'எதுவும் ஆயிடல.''

கூடவே நானும் நிறைய எடுத்துச் சொல்லி உங்கப்பாவோட மனச மாத்தியிருக்கேன் என்று நினைத்துக் கொண்ட நளினி அதை வெளியே சொல்லவில்லை.

மேலே என்ன நடந்ததென்பதைத் தெரிந்து கொள்ள மகள் ஆவலாக இருப்பது தெரிய, விஷயத்தைச் சொன்னார்.

''தயா வீட்ல இருந்து அதாவது அவரோட அம்மா அப்பா உன்னப் பொண்ணு கேட்டு நாளைக்கு நம்ம வீட்டுக்கு வர்றாங்க.''

அப்படிச் சொன்ன தாயை அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

''என்னமா?''

''அப்புறம் ஸ்ரீமதியோட நில...''

''போதும். இதுக்கு மேல பினாத்தாத. அப்பிடி நீ சொல்ற மாதிரி உண்மையிலேயே ஏதாவது இருந்தா அத தயா யோசிக்காம இருந்திருப்பாரா?

''ம்கூம். இனிமேல் பேர் சொல்லக் கூடாதுப்பா. மாப்பிள்ளைன்னு தான் சொல்லணும்!'' என்று லேசான புன்னகையுடன் சொன்ன தாய் சூழ்நிலையை எளிதாக்க முயற்சி செய்வது புரிந்தது.

ஆனால் அதைப் புரிந்து கொள்ளும் மன நிலையில் சுபாஹிணி இருக்கவில்லை.

தலை மிகவும் பாரமாகியிருக்க, நிறைய யோசிக்க வேண்டும் போல மனம் பரபரத்தது.

''என்னமா, அப்பிடி என்ன யோசன?''

...........



''சுபா, உன்னத்தான்.''

''இது சரியா? ம்ம்.....''

''ம், இதக் கொஞ்சம் முன்னாடி யோசிச்சிருந்தா நல்லா இருந்திருக்கும். உன் மனசுலயும் ஆசைய வளத்துக்கிட்டு அவரையும் கஷ்டப்படுத்....''

''நான் கொஞ்சம் யோசிக்கணும். இது எப்பிடி சரியாகு.....''

''முட்டாள் மாதிரி உளறாத சுபா. கடவுளே! இதுக்கு முடிவு தான் என்னன்னு பயந்து குழம்பிப் போய்க்கிடந்தேன். கடவுளாப் பாத்து ஒரு நல்ல வழியக் காட்டியிருக்கார்னு நிம்மதியா இருக்கு. இத நீயே கெடுத்துக்காதமா. உன் நல்லதுக்குத் தான் சொல்றேன்.''

''இருந்தாலும்...''

''பேசாமப்போம்மா. ரொம்பவும் கேட்டாங்கன்னு உன்னப் பொண்ணு பாக்க வரச் சொல்லி வாக்குக் குடுத்துட்டமே, இப்ப அவங்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம முதல்லயே உங்கப்பா கோபமா இருக்கார். இதுல நீ வேற இனி புதுசா ஒரு பிரச்சனையக் கிளப்பாத.''

''அதுலயும் அவங்க உங்கக்காவோட புகுந்த வீட்டுக்காரங்களுக்கு நெருங்கின சொந்தம் வேற. எனக்கே இவ்வளவு தயக்கமா இருக்கே. இனி உங்கப்பா பாவம் என்ன சொல்லிச் சமாளிக்கப் போறாரோ?

''நாம சொல்ல வர்றத அவங்களும் கோபப்படாம புரிஞ்சுக்க வேற செய்யணும்.''

தாய் பாட்டுக்குப் புலம்பிக் கொண்டிருக்க, தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்தாள் சுபாஹிணி.

என்ன இது, இவர்கள் பாட்டுக்கு விட்டால் இன்னும் கூடப் புதிது புதிதாக ஏதேதோ சொல்வார்கள் போலிருக்கிறதே.

மொத்தத்தில் தன்னைப்பற்றி இங்கே யாரும் ஒரு வினாடி யோசித்துப் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை.

அப்படி நினைத்தவள் உடனே தன்னைத் திருத்திக் கொண்டாள்.

பாவம், தன்னால் தான் பெற்றவர்களுக்கும் இப்பொழுது மனக்கஷ்டம்...

தயானந்த் வீட்டில் இருந்து நாளை உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்று தாய் சொன்னது மீண்டும் காதுகளில் ஒலிக்க, ஏதோ இனம் புரியாத ஒருவித உணர்வு வந்து அவளைச் சூழ்ந்து கொண்டதைப் போலிருந்தது.

எவ்வளவு சந்தோஷமான, ஆனந்தத்தில் துள்ளிக் குதிக்கக் கூடிய விஷயம்.

ஆனால் நமக்கு ஏன் துளியும் ஆர்வமில்லாமல் இந்த மாதிரி இருக்கிறது.

யோசித்துப் பார்த்ததில் அதற்கான காரணமும் விளங்கியது.

ஸ்ரீமதியே அதற்குக் காரணம்.

தனது தாயே ஒருமுறை சொன்னது போலப் பெரிய தியாகியாக விட்டுக்கொடுத்துவிட்டுச் சுவரில் அடிக்கப் பட்ட பந்து போல இப்பொழுது மீண்டும் சென்று நின்றால் அது நன்றாக இருக்குமா?

ஸ்ரீமதி மீண்டும் ஏதேனும் தவறான முடிவுக்குச் சென்று விட்டால்,



அதற்குத் தானே காரணமாவதா?

யோசிக்க, யோசிக்க, மனம் மேலும் மேலும் சோர்ந்து தான் போனதே தவிர, அதனால் வேறு ஒன்றும் மிஞ்சியிருக்கவில்லை.

ஒருவேளை தயானந்த் தனக்கு அழைப்பானோ என்று எதிர்பார்த்து அந்த விதத்திலும் சோர்ந்தாள்.

இரவு வெகு நேரம் கழித்துத் தூங்கியதாலோ என்னவோ, காலையிலும் தாமதமாகவே எழுந்தாள்.

எழுந்தவள் மெதுவாகக் காலைக் கடன்களை முடித்தாள்.

ஏனோ தனது அறையை விட்டு வெளியே செல்லவே தயக்கமாக இருந்தது.

சரியாக அதே நேரம் தன்னைத் தாய் அழைப்பது கேட்க, வெளியே வந்தாள்.

“என்ன மம்மி?”

“இல்ல, அப்பவே எழுந்துட்டியே, ஏன் இன்னும் வெளிய வராம இருக்கேன்னு கூப்புட்டேன்..”

“ஓ, காபி வேணும்.”

“இதோ ஒரு நிமிஷம். திரும்பவும் உள்ள போயிடாத. அப்பா உங்கூடப் பேசணும்னு சொல்லிட்டிருந்தார்.”

தந்தைக்காகக் காத்திருந்தவளுக்கு மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

கடவுளே! இனித் தந்தை என்ன கேட்பாரோ?

“என்னமா, இப்பதான் எழுந்தியா?”

தந்தை வர, “ஆமாம் டாடி!” என்றாள்.

''பாத்து ஒரு வாரமாச்சு. எப்பிடியிருக்க?''

''நல்லாருக்கேன்...''

''உடம்புக்கு ஏதாவது பிரச்சனையா? சளி, ஏதாவது...''

''அதெல்லாம் ஒன்னுமில்லையே. நான் நல்லா தான் இருக்கேன்.''

''அது சரிதான். நீ நல்லாதான் இருக்க..''

அப்படிச் சொன்ன தந்தையை நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹினி.

''என்னமா, ஏதேதோ நடந்துட்டிருக்கு. ஆனா உங்கிட்டிருந்து மட்டும் எந்த ரியாக்ஷனையுமே காணோம்...''

..............

''பரவாயில்ல. நம்ம பொண்ணு, மத்த சில வயசுப் பொண்ணுங்க மாதிரி, நாம கொடுக்கற சுதந்திரத்த மிஸ்யூஸ் பண்ணிக்காம நல்லவிதமா நடந்துக்கறான்னு இப்ப சில நாளைக்கு முன்னாடி தான் நினைச்சேன். ஆனா நீ....''

அதே நேரம் நளினி காபி ட்ரேயுடன் வர, தனது தந்தையைத் தொடர்ந்து தானும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டாள் சுபாஹினி.

............

''என்னமா, ஏதாவது பேசு.''

கணவன் சொல்ல, ''அவ என்னங்க பேசுவா? அதுதான் இன்னைக்கு அவங்களும் பொண்ணு பாக்க வர்றதா சொல்லிட்டாங்களே.....''

''நீ கொஞ்சம் பேசாம இருக்கியா?''



கோபத்துடன் கணவன் சொல்லிவிட்ட பிறகு நளினியாலும் அதற்கு மேல் எதையும் பேச முடிந்திருக்க வில்லை.

''என்னமா உன் மௌனத்துக்கு என்னதான் அர்த்தம், ஒருவேளை உனக்கு தயானந்த் சொன்ன மாதிரியெல்லாம் எதுவும் இல்லையா?''

''பேசு சுபா.''

நளினி மகளை அதட்ட, தானும் பார்த்தார் நடேசன்.

''அவர் சொன்னதெல்லாம் நிஜம் தான்பா. எனக்கும் அவரப் பிடிக்கும்...''

''சரி. அப்ப வேறென்ன பிரச்சன?''

........

''பேசு...''

''அதெல்லாம் ஒன்னுமில்ல.''

மகள் அப்படிச் சொன்ன பிறகு தான் நளினியால் இயல்பாக மூச்சு விடக் கூட முடிந்தது.

''கொஞ்சம் முன்னாடி தான் தயானந்த் கூப்புட்டார்.''

நடேசன் சொல்ல, தாயும் மகளும் உடனே அவரை நிமிர்ந்து பார்த்தனர்.

''பதினோரு மணிக்கு நல்ல நேரமாம். அவங்க அப்பா அம்மா கூட வர்றதா சொன்னார்.''

கணவர் சொன்னதைக் கேட்டு நளினி சந்தோஷமாகச் சிரிக்க, ''என்ன, உனக்கு சந்தோஷமில்லையா?'' என்று மகளைப் பார்த்தார் நடேசன்.

சற்று முயன்றே என்றாலும் சுபாஹினியும் உடனே புன்னகையுடன் தலையை ஆட்ட, இப்பொழுது அனைவரது முகங்களிலுமே சந்தோஷம் நிறைந்திருந்தது.

# 27

சொன்னது போலப் பதினோரு மணிக்குச் சுபாஹிணியைப் பெண் பார்க்க தயானந்தின் வீட்டிலிருந்து வந்திருக்க, அதற்கு முன்பே மகளை அதிகப்படியாகத் தெரியாத வண்ணம் அதே சமயம் பார்க்க நன்றாக இருக்கும் படியும் அலங்காரம் செய்ய வைத்திருந்தார் நளினி.

ஏற்கெனவே நல்ல அழகியான சுபாஹிணி இப்பொழுது பார்க்க மேலும் பிரமாதமாகத் தெரிந்தாள்.

மகளின் கையில் டிபன் ப்ளேட்களைக் கொடுத்து மகளை அவளுடைய வருங்காலப் புகுந்த வீட்டுச் சொந்தங்களுக்குக் கொடுத்து உபசரிக்கச் சொல்ல, தாய் சொன்னது போலச் செய்தாள் சுபாஹிணி.

சும்மா என்றால் எப்படியோ, அப்போதிருந்த மனநிலையில் அவளால் நிமிர்ந்து பார்க்கக் கூட முடிந்திருக்கவில்லை.

முக்கியமாகத் தயானந்த்திற்குக் கொடுக்க நேர்ந்த போது அவளுடைய கைகள் நடுங்கிவிட்டிருந்தன.

எப்படியோ டிபன் ப்ளேட்டை இறுகப் பிடித்து அது வெளியே தெரிந்து விடாதபடி ஓரளவு சமாளித்தாள் எனலாம்.

சாஸ்திர சம்பிரதாயங்களென்று நிறையப் பாராமல் பெரியவர்கள் நால்வரும் நன்றாகப் பேசிக் கொள்வது



தெரிய, தயானந்தைப் போலவே தானும் அமைதி காத்தாள் சுபாஹிணி.

அதிலிருந்தே தயானந்த்தின் கோபம் அவளுக்கு விளங்கியது.

மற்றப்படி அவனுடைய முகத்தை நிமிர்ந்து பார்ப்பதைப் பற்றியெல்லாம் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடிந்திருக்கவில்லை.

''ம், பொண்ணும் மாப்பிள்ளையும் ஏற்கனவே நல்லாப் புரிஞ்சு தெரிஞ்சுக்கிட்டவங்க. அதனால ஏதாவது தனியாப் பேச வேண்டியிருக்கான்னு கூடக் கேக்க முடியாமப் போயிடுச்சு...''

தயானந்த்தின் தாய் புன்னகையுடன் சொல்லிக் கூட முடிந்திருக்கவில்லை. ''இல்ல, நாங்க தனியாப் பேசணும்,'' என்று உடனே சொன்னான் தயானந்த்.

அவன் சொன்னதைக் கேட்டுப் பெரியவர்கள் அனைவருமே புன்னகை செய்ய, சுபாஹிணிக்கோ நெஞ்சுக்குள் திக்கென்றது.

''ஏனப்பா தினமும் போன்ல அவ்வளவு நேரம் பேசிக்கறீங்களே பத்தாது?''

கேலியாகத் தாய் கேட்க, ''ஆனாலும் நேர்ல பாத்துப் பேசற மாதிரி இருக்குமா?'' என்று எழுந்திருந்தான்.

மற்றவர்களுக்காகவோ என்னவோ, ''வா சுபா,'' என்று புன்னகையுடன் தன்னை அழைத்து விட்டு தயானந்த் மாடிப் படிகளில் ஏறத் தொடங்கியிருக்க, அவனுடைய சொந்த வீட்டைப் போல எவ்வளவு யதார்த்தமாகச் செல்கிறான் என்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பார்ப்பவர்களுக்கு எதுவும் வித்யாசமாகத் தெரிந்து விடாதபடி தானும் புன்னகையை முகத்தில் பூசிக் கொண்ட சுபாஹினி, தயானந்தைப் பின் தொடர்ந்தாள்.

அவன் மொட்டை மாடியின் கடைக்கோடிக்கே சென்றிருக்க, தானும் சென்றாள்.

''உலகம் ரொம்பச் சின்னது இல்ல?''

மெதுவாக என்றாலும் அடிக்குரலில் அழுத்தத்துடன் கேட்டவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''நம்பிக் கொடுத்துட்டுப் போன பொறுப்புகளப் பாதில விட்டுட்டு ஓடினது கூடப் பரவாயில்ல. ஆனா அதுக்கும் மேல...''

தான் அழைத்துப் பேசவில்லை என்கிறானோ?

ஏன், அவன் அழைத்திருக்கலாமே.

முதலில் இப்படியெல்லாம் செய்திருக்கிறாள் என்றால் அதற்கு ஏதேனும் காரணமிருக்கும் என்பதைக் கூடவா இவனால் யூகிக்க முடியவில்லை.

இல்லை, தெரிந்துமே தெரியாதது போல நடிக்கிறானா?

''சரிதான். உன் தகுதிக்கு மீறி உங்கிட்ட நிறைய எதிர்பார்த்ததும் உன்ன நம்பினதும் என்னோட தப்பு. அதுக்காக உன்ன எப்பிடிக் குத்தம் சொல்ல முடியும்?''

..........

''உனக்கு வேணும்னா நிமிஷத்துக்கு நிமிஷம் குணத்த மாத்திக்கற மாதிரி மனசையும் ஏன் ஆளையே மாத்திக்கற திறம கூட இருக்கலாம். ஆனா நான் என்னப் பெத்தவங்ககிட்ட ஏற்கெனவே முடிவு செஞ்சபடி உன்ன என்



னோட வருங்கால மனைவின்னு முடிவா சொல்லிட்டேன்.''

கடவுளே! இன்னும் எப்படியெல்லாம் இவன் வார்த்தைகள் என்னும் கூர் அம்புகளால் தன்னைக் குத்திக் காயப்படுத்தப் போகிறான்.

''என்ன பாக்கற, உன்ன மாதிரி நினைச்ச நேரம் மனச மாத்திக்கற கேவலமான குணம் எனக்கு இல்ல பாரு. அதான். அட, நான் வேற உனக்கு இதெல்லாம் அனா வசியங்கறத மறந்துட்டு ஏதேதோ உளறிட்டிருக்கேன். சரிதான். விஷயத்துக்கு வர்றேன். நல்லா கேட்டுக்கோ. ஆரம்பத்துல அவங்களுக்கு இந்தக் கல்யாணத்துல விருப்பமில்லேன்னாலும் என்னோட வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து இறங்கி வந்திருக்காங்க. உனக்கு எப்பிடியோ... சொன்ன வார்த்தையைக் காப்பாத்தி எல்லாத்தையும் நல்ல விதமாக் கொண்டு போக வேண்டிய கடமை எனக்கு நிறைய இருக்கு.''

சரிதான், இவன் பெரிய கடமை வீரன் தான். ஆனால் நித்தம் ஒரு நிறம் மாறும் தன்னிடம் எந்த தைரியத்தில் இவன் இதைச் சொல்கிறான்.

தனக்குள் புகுந்து தனது மனதைப் படித்து விட்டவன் போல, அதற்கும் தயானந்த் விளக்கம் கொடுக்க, சுபாஹினியால் தான் தன்னுடைய முக பாவனையை வெளியே காட்டாமல் மறைத்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''உன்னோட குணம் தெரிஞ்சதுனால தான் உன்ன இப்பிடித் தனியாக் கூட்டிட்டு வந்து பேசிட்டிருக்கேன். அதோட இனிமேல் நீ உன்னப் பெத்தவங்களுக்காகவும் பாத்தாகணுங்கறத மறந்துடாத.''

''இதக்கூட இப்ப ஏன் குறியிட்டுச் சொல்றேன்னா, உன்ன மாதிரியில்லாம அவங்க ரொம்ப நல்லவங்களா இருக்காங்கன்ற ஒரே காரணத்துக்காகத் தான்.''

இவன் தன்னுடைய தயானந்த் தானா?

இந்த அளவிற்குக் கூடத் தன்னைக் காயப்படுத்த இவனால் எப்படி முடிந்தது?

தன் மனம் படும்பாடு இவனுக்குப் புரியவில்லையா? அல்லது அதைப்பற்றிய கவலையில்லையா?

இத்தனை பேசியவன், ஒரு வார்த்தை ஏன் இப்படிச் செய்தாயென்று கேட்டிருக்கக் கூடாதா?

எப்படிக் கேட்பான்?

அவனுக்குத்தான் அவனைத் தவிர மற்ற யாருடைய உணர்ச்சிகளைப் பற்றியுமே துளியும் கவலையில்லையே.

சுபாஹிணி இப்படி நினைத்துக் கொண்டிருக்க, தயானந்திற்கும் கவனம் முழுவதும் அவள் மீது தான் இருந்தது.

ஒரே ஒரு வார இடைவெளியில் ஆளே இப்படி மெலிந்து, பார்க்கவும் உயிர்த் துடிப்பே இல்லாமல் என்னவாக இருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தான் குணத்தைப் போலவே ஆளையும் மாற்றுகிறவளாமே!

இந்தப் பிறவிக்கு இவன் ஒருவன் போதாதா? அதற்கு வழியில்லாமல் போய்விடுமோ என்று தான் தவிக்கும் தவிப்பு இவனுக்கு எங்கே தெரியப் போகிறது.

ஒன்றையுமே அறியாமல் என்னவெல்லாம் பேசி விட்டான்.



அதுவும் எவ்வளவு எளிதாக!

மனம் கனத்து விட்டிருக்க, கண்களும் கலங்கிப் போய் விட்டிருந்தன சுபாஹிணிக்கு.

ஆனாலும் எங்கோ வேடிக்கை பார்ப்பது போல சற்றுத் தள்ளி நின்று கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சுபாஹிணியின் நிலை இப்படியிருக்க, அது தயானந்திற்கும் புரியவே செய்தது.

சற்று அதிகப்படியாகத்தான் பேசிவிட்டோமோ என்று அவனுக்கும் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

உடனே சரிதான், படட்டுமே என்று மீண்டும் அந்த இடத்தில் எரிச்சல் வந்து அமர்ந்து கொண்டு விட்டிருந்தது.

மேலும் சிறிது நேரத்தில், திருமண நிச்சயத்திற்கான தேதியை வீட்டுப் பெரியவர்களிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத் தெரிவிக்கிறோம், உங்களுக்கும் சவுகரியப்படும் பட்சத்தில் அன்றே விஷேசத்தை வைத்துக் கொள்வோமென்று தயானந்தின் குடும்பம் கிளம்பியிருக்க, அவர்களை நளினியும் நடேசனும் வாசல் வரை சென்று வழியனுப்பி விட்டு வந்தார்கள்.

''சுபா எங்க?''

கணவன் கேட்க, ''டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வருவாளுங்க,'' என்றார் நளினி.

''நானும் கூட என்னவோன்னு நினைச்சேம்மா. தயானந்த் மாதிரியே ஏன் அவரவிடவும் கூடக் கொஞ்சம் பழகறதுக்கு இலகுவா அவரப் பெத்தவங்க ரொம்ப நல்ல டைப்பாத் தெரியறாங்க.''

அது சரிதாங்க. ஆனா இனிமேலாவது மாப்பிள்ளைன்னு சொல்லுங்களேன். பேர் சொல்லி எதுக்கு....''

''சரிதான்.''

''என்னங்க, சொல்லுங்க....''

''இல்ல, மாப்பிள்ள கோபமாய் பாக்கறதுக்குக் கொஞ்சம் கடுமையாத் தெரியற மாதிரி இல்ல.''

பின்னே உங்கள் மகளின் தப்புத் தப்பான அதுவும் முட்டாள்தனமான கற்பனைகளால் வந்த கோபமாக இருக்கும் என்று நினைத்த நளினியால் அதை அப்படியே வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

''என்னமா?''

''இல்ல, இனி அவருக்கு என்ன ஜாப் டென்ஷனோ?''

அது சரி. அப்படிப் பார்த்தால் எப்பொழுதும் தான் வேலைகள் இருக்கும். அதற்காகக் கோபமாகவே தான் இருப்பார் என்றால் எப்படி என்று நினைத்துக் கொண்ட நடேசனாலும் மனைவியைப் போலவே தான் நினைத்ததை வெளியே சொல்ல முடிந்திருக்கவில்லை.

## 28

மேலும் ஒரு வாரம் சென்றிருந்தது.

தயானந்த், சுபாஹினியின் திருமண நிச்சயதார்த்மும் இனிதே நடந்து முடிந்தது.

என்னதான் வெளியே இயல்பாகக் காட்டிக் கொண்லும், உள்ளுக்குள் அவர்கள் இருவருடைய மனநிலை



யுமே இருவேறு உணர்ச்சிகளால் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

முக்கியமாக சுபாஹினியால் துளியும் இயல்பாக இருக்க முடிந்திருக்கவில்லை.

தான் ஏதோ மிகப்பெரிய தவறைச் செய்து கொண்டிருப்பது போல நிம்மதியின்றித் தவித்தாள்.

திருமணமென்றால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும், அதுவும் மனம் விருப்பியவனைக் கைப் பிடிப்பதென்றால் சொல்லவே வேண்டாம்.

ஆனால் நமக்கு ஏன் இப்படியிருக்கிறது?

இனி வரும் நாட்களிலும் இதே மனநிலை தொடர்ந்தால் என்ன செய்வது? ஒருவேளை இதை விடவும் கூட நிலமை மோசமானால்...

வெறும் நாட்களிலெல்லாம் கூடத் தன்னை அழைத்துப் பேசும் ஸ்ரீமதி இப்பொழுது அழைக்காததிலிருந்தே அவளுக்குத் தன்மேல் இருக்கும் கோபத்தை சுபாஹினியால் புரிந்து கொள்ள முடிந்தது.

இவள் மௌனத்தால் தனது கோபத்தைக் காண்பிக்கிறாள் என்றால், அவளுடைய பெற்றவர்கள் அதிலும் சற்றும் சம்பந்தமில்லாதபொழுதே கோபத்துடன் மிரட்டியவர்கள் வேறு, இப்பொழுது என்னவெல்லாம் சொல்லப் போகிறார்களோ, எப்படியெல்லாம் நடந்து கொள்ளப் போகிறார்களோ என்று.

அதை நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

அதிலும் தயானந்த்தை நினைத்தால் அதைவிட அதிகமாகவே.

மேலும் பத்து நாட்களும் சென்றிருந்தன.

திருமணத்திற்கு இன்னும் பதினைந்து நாட்களே இருக்க, திருமண ஏற்பாடுகள் அனைத்தும் துரிதகதியில் நடந்த வண்ணமிருந்தன.

சுபாஹினி நினைத்துப் பயந்தது போலெல்லாம் நிலமை மேலும் மோசமாகி விடவில்லை என்றாலும், சுமுக நிலையும் ஏற்பட்டிருக்கவில்லை.

தயானந்த்தைப் பெற்றவர்கள் தங்களுடைய வருங்கால மருமகளுக்கென்று பட்டுப் புடவைகள், நகைகள் என்று அளவில்லாமல் கொண்டு வந்து குவித்துக் கொண்டே இருக்க,

சுபாஹினியின் பெற்றவர்களோ அதற்கு நாங்களும் சற்றும் சளைத்தவர்கள் இல்லை என்பதைக் காட்டினார்கள்.

மற்றவர்களின் மனநிலை இப்படியிருக்க, தயானந்த்தைப் போலவே சுபாஹினிக்கும் இவையனைத்தையும் பார்த்து எரிச்சலே மேலோங்கியது.

ஆனாலும் அதை மற்றவர்கள் அறியாத வண்ணம் பார்த்துக் கொண்டனர்.

அதேபோல அவர்கள் இருவரும் கடைசியாகப் பார்த்துக் கொண்டதும் திருமண நிச்சயத்தின் போதுதான்.

திருமண நாள் நெருங்க நெருங்க முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்குத் தயானந்தைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்றெல்லாம் ஆவல் மிகவும் அதிகமாகியிருந்ததில் திகைத்துப் போனாள் சுபாஹினி.

அதிலும் நாளுக்கு நாள் தீவிரமடைந்து கொண்டே போன ந்த எண்ணப் போக்கில் செய்வதறியாது திகைத்தாள்.



நாம் இப்படி வினாடி கூட வீண் செய்யாது அவனையே நினைத்துக் கொண்டிருக்க, அவன் தன்னை நாளொன்றுக்கு ஒரு முறையேனும் நினைத்துப் பார்ப்பானா என்று வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்.

மகளின் நிலை அவளுடைய தாய் நளினிக்கும் புரியவே செய்தது.

அதே சமயம் திருமணம் முடிந்தால் அனைத்தும் சரியாகி விடுமென்ற நம்பிக்கையும் அவருக்கு இருக்கவே செய்தது.

"சுபா!"

தாய் அழைக்கத் திரும்பினாள் சுபாஹினி.

"மாப்பிள்ள கூடப் பேசினியா?"

..........

"என்ன சுபா, அப்பிடித்தான் முதல்ல நீயே கூப்புட்டுப் பேசேன்..."

"அதெல்லாம் நான் பேசிட்டுத் தான் இருக்கேன்."

"அதுசரி. நம்பிகிறேன்!" என்றவர், "சரி விடு. கல்யாணமாயிட்டா எல்லாம் சரியாயிடும்!" என்றும் சொன்னார்.

சர்வ நிச்சயமாகச் சொன்ன தாயின் வார்த்தைகளில் ஏனோ நம்பிக்கை ஏற்பட மறுத்தது சுபாஹினிக்கு.

ஏனென்றால் தயானந்த்தின் குணத்தைப் பற்றி மற்றவர்கள் சொல்வதோடு மட்டுமல்லாமல் தானும் நன்கு அறிந்தவளாயிற்றே.

"என்னமா?"

"ஒன்னுமில்ல மம்மி."

''அப்புறம் ஸ்ரீமதி இன்னும் பெங்களூர்ல இருந்து வரலையாம்மா?''

அப்படியானால் அவள் இப்பொழுது உள்ளூரில் இல்லையா?

''அவ எப்ப ஊருக்குப் போனா...?''

''சரியாத் தெரியலமா. நிச்சயத்தப்பக் கேட்டதுக்கு அவ ஊருக்குப் போயிருக்கறதா சம்பந்தியம்மா சொன்னாங்க.''

ஓ, அதனால் தான் அவள் தன்னை அழைத்துப் பேச வில்லையாக்கும்!

ஏன் அவள் மனம் வைத்தால் ஊரிலிருந்து கூட அழைத்துப் பேச முடியாதா என்ன என்று கேள்வி கேட்ட மனச்சாட்சியை ஒரு குட்டு வைத்து அடக்கினாள்.

பாவம், அவளும் தான் இனி என்ன மன நிலையில் இருக்கிறாளோ?

நல்லவற்றைச் சொல்லித் தரும் பெற்றவர்கள் என்றாலும் கூடப் பரவாயில்லையென்று சொல்லலாம்.

''எது எப்பிடியோ மாப்பிள்ள ரொம்பவும் கோபக்காரராம்மா. உங்க அத்த கூட சொன்னாங்க. ஆனா கோபமிருக்கற அளவுக்குக் குணமும் இருக்குன்னார். அது நமக்கும் தெரியாதா என்ன?''

.........

''என்னதான் பணத்த நாம பெருசா மதிக்கறதில்லேன்னாலும் கூட, மாப்பிள்ள குடும்பத்து கூட ஒப்பிடும் போது நாமெல்லாம் அவங்க பக்கத்துல நிக்கக் கூடத் தகுதியில்லாதவங்கமா. இதக் கூட நான் இப்ப எதுக்கு



சொல்றேன்னா அவங்க வீட்டுப் பிள்ளையே ஆக
டுட்டாருங்கறதோட நம்ம மேலயும் அவங்க ரொம்ப நம்பிக்கையும், மரியாதையும் வெச்சிருக்கறாங்க.

''அத நாமளே குறைச்சுக்கக் கூடாது பாரு. அதனால சொல்றேன்.

''அது மட்டுமில்லாம நீ முன்னாடி ஒரு முற சொன்ன மாதிரியெல்லாம் எதுவுமே இல்ல போலிருக்குமா. ஸ்ரீமதியோட எண்ணம் அந்த மாதிரி இருந்திருந்தா இவ்வளவு நல்ல மனுஷங்க அதப் பொருட்படுத்தாம இருப்பாங்களா என்ன? வேணும்னா ஸ்ரீமதியப் பெத்தவங்களுக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் இருக்கலாம்னு தோனுது.''

தாய் மிகச் சரியாக ஊகித்திருக்க, ''பாவம், இந்த விஷயத்துல அவங்களையும் யாரும் ஒன்னும் சொல்றதுக்கில்ல. சின்ன வயசுலிருந்தே மனசுக்குள்ள அந்தமாதிரி ஒரு எண்ணத்தோட இருந்தவங்களாச்சே. நடப்புக்கு வர இன்னும் கொஞ்ச நாள் ஆகலாங்கறதால நடுவுல வர்ற நம்மேலே குறிப்பா உம்மேல கோபப்படவும் செய்யலாம்,'' என்ற தாயை நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

''ஆமாம்மா, மாப்பிள்ளைக்கோ இல்ல அவரப் பெத்தவங்களுக்கோ அந்த மாதிரி ஒரு எண்ணம் துளி கூட இல்லேங்கற போது நீயும் அதப் பொருட்படுத்தாம விட்ரு. அவ்வளவுதான்.''

நளினி பாட்டுக்குச் சொல்லிக் கொண்டே போக, தாய் ஏன் இவ்வளவு சொல்கிறாரென்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஒருவேளை ஸ்ரீமதியின் பெற்றோர் தாயிடம் பேசியிருப்பார்களோ?

தன்னை மிரட்டியது போலவே தாயையும் மிரட்டியிருப் பார்களோ?

ம்கூம். இருக்காது.

அந்த அளவிற்கு அவர்களுக்குத் துணிச்சல் இருப்பது போல அவளுக்குத் தோன்றவில்லை.

அதேபோல அவர்களுடைய அந்த ஆசையில் நியாயமும் இல்லையே.

மற்றது எப்படியோ, துளியும் விருப்பமில்லாத மாப்பிள்ளையைக் கையைக் காலைக் கட்டியா தூக்கிக் கொண்டு போய் மணவறையில் அமர வைக்க முடியும்.

அதிலும் தயானந்த்தை.

ம்கூம், அது கற்பனையில் கூட நடக்காத ஒன்றாயிற்றே.

உண்மை நிலை இப்படியிருக்க, நாம்தான் தேவையில்லாமல் மனதைக் குழப்பிக் கொண்டிருக்கிறோமோ?

அனைத்திற்கும் மேலாகத் தனது தந்தையே எப்பொழுது முழு ஈடுபாட்டுடனும் சந்தோஷத்துடனும் திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் பார்த்துப் பார்த்துச் செய்கிறாரோ, அதற்குமேல் நிச்சயம் பயப்படும்படியாகவெல்லாம் எதுவும் நடந்திருக்க வாய்ப்பே இல்லை.

கடைசியாகப் பார்த்தால் இப்போதைய பிரச்சனையே தயானந்த்துக்கும் தனக்கும் இடையே இருக்கும் கருத்து வேறுபாடு மட்டுமே தானோ என்பதைப் பல நாட்களுக்குப் பிறகு ஓரளவு சரியாகவே ஊகித்திருந்தாள் சுபாஹிணி.

அதிலும் முக்கியமான தவறு தன் மேல் தான் என்பதையும்.



ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்,

என்னதான் தவறு தன்மீதே இருந்தாலும் கூட எடுத்த எடுப்பில் அப்படியெல்லாம் பேசுவதா?

அன்பு வைத்து விட்டவர்களைக் கோபித்துக் கொள்ள மனம் வராதாமே!

அப்படியானால் தயானந்த்திற்குத் தன் மீது உண்மையான அன்பு இல்லையோ?

வெறும் உடல் கவர்ச்சி மட்டுமே தானோ?

ம்கூம். இல்லை,

தன் தயா அப்படிப்பட்டவன் இல்லை.

அந்த மாதிரி மட்டும் இருந்தால் அவனுடைய அணுகுமுறையே வேறு மாதிரி இருந்திருக்கும்.

அவன் மனதிற்கும், அது சார்ந்த உணர்வுகளுக்குமே முதலில் முக்கியத்துவம் கொடுப்பவன்.

சரிதான்.

அப்படிப் பார்த்தால் தவறு முழுவதுமே இப்பொழுது தன் மீது தானா?

பேசாமல் இருப்பதினால் தன்னையறியாமலேயே தவறை மேலும் பெரிதுபடுத்திக் கொண்டிருக்கிறோமா?

இதேநிலை நீடித்தால் அனைத்துமே கைமீறிப் போய் விடுமோ?

''என்னமா, நீயேன் இப்ப டல்லாயிட்ட?''

''அதெல்லாம் ஒன்னுமில்ல மம்மி.''

''அதத்தான் நானும் சொல்றேன், ஒன்னுமே இல்லாதத் தான் நீயும் பெரிசு பண்ணிட்டிருக்க. முதல்ல

மாப்பிள்ளையைக் கூப்புட்டுப் பேசுமா. நீயே இவ்வளவு பாக்கும் போது அவரு உன்ன விடவும் ஒருபடி மேல இருக்கறதுல என்ன ஆச்சரியம்?''

அப்படியானால் தான் மட்டுமென்ன, வேண்டுமென்றேவா அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோம்.

நடந்தது என்னவென்பதை மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாது. சரிதான். அது தன் தயாவாலும் முடியா விட்டால் எப்படி?

அதை விட அவன் தன்னை இன்னும் கேவலமாக ஏதேதோ அல்லவா சொல்கிறான்.

நினைக்க, நினைக்கத் துளியும் மனம் ஆற மறுத்தது சுபாஹினிக்கு.

எப்பொழுதும் போல மனம் மிகவும் கனத்துப்போக, கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

எப்பொழுது தன் மனதைத் தன் தயாவாலேயே புரிந்து கொள்ள முடியவில்லையோ அதற்கு மேல் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

''எம்மனசுக்குப் பட்டத சொல்லிட்டேன் சுபா. இனி நீயே யோசிச்சு நடந்துக்கோ!'' என்று தாய் மீண்டும் அவருடைய வேலையில் மும்முரமாகி விட்டிருக்க, அங்கிருந்த இருக்கையில் தொப்பென அமர்ந்தாள்.

இவ்வளவு நாளும் தயானந்த்திடம் பேசாமல் இருந்தது மனதை உறுத்திக் கொண்டிருந்ததென்றால், இப்பொழுது அதற்குக் காரணமும் தானே என்றல்லவா ஆகிவிட்டது.

''அப்புறம் சுபா...'' மீண்டும் தாய் அழைக்க, ''என்னமா?'' என்றாள்.



''மாப்பிள்ள கூடக் கொஞ்சம் பேசணுமேம்மா... என்ன பாக்கற?''

''இல்ல, எதுக்குப் பேசணும்?''

''உனக்காக அவங்க செய்யச் சொல்லி ஆடர் குடுத்திருந்த நகைகளெல்லாம் வந்துடுச்சுமா. அத அவர்கிட்ட ஒரு வார்த்த சொல்லணும். அவ்வளவுதான்.''

''நீங்களே சொல்...''

''அது நல்லார்க்காதுன்னு தெரிஞ்சும் மாப்பிள்ள வீட்டுக்குக் கூப்புட்டேம்மா. ஆனா விஷயத்த சொல்ல முடியல. உன் அத்தையும் மாமாவும் பத்திரிகை குடுக்கற விஷயமா வெளியூர் போயிட்டாங்களாம்.''

............

''அதோட இத நாங்க சொல்றத விடவும் மாப்பிள்ள கிட்ட நீயே கூப்புட்டு சொல்லிடேன்.''

தான் எப்படி... அதுவும் தயானந்த்திடம்.

''என்னமா?''

''விடுங்க மம்மி. நாளைக்கு அவங்க வெளியூர்ல இருந்து வந்ததும் சொல்லிடலாம்.''

''என்னமா விளையாட்றியா? அந்த நகைகளோட மதிப்பு தெரியுமா உனக்கு? நகையெல்லாம் கைக்கு வந்ததும் ஒரு போன் பண்ணிட்டாப் பரவாயில்லைன்னு சம்பந்தியம்மா குறிச்சு சொல்லிட்டுப் போனாங்க சுபா.''

...........

''என்ன சுபா....''

''ஐயோ! இப்ப என்ன என்னதான் பண்ணச் சொல்றீங்க?''

வழக்கமில்லாத பழக்கமாக மகளின் கோபம் நளினியையும் கோபம் கொள்ளச் செய்துவிட்டிருந்தது.

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவர் ஹால் டெலிபோன் ஒலிக்க முதலில் அதை எடுத்துப் பேசிவிட நகர்ந்தார்.

அந்த இடைவெளியில் தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்திருந்த சுபாஹிணிக்கு, அதைச் சாக்காக வைத்து நாமும் தான் தயாவை அழைத்துப் பேசினால் என்னவென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆமாம், அப்படித்தான் செய்ய வேண்டும்.

ஆனாலும் அவனிடம் எப்படிப் பேசுவது? முதலில் தான் பேசினால் அதற்கு மதிப்பளித்து அவனும் பேசினால் அல்லவா?

ஒருவேளை மீண்டும் ஒரு முறையும் அவன் தன்னை உதாசீனப்படுத்தினால், பிறகு அதைத் தன்னால் தாங்கிக் கொள்ளவே முடியாதே.

''சுபா..''

சந்தோஷமாகத் தன்னை அழைத்துக் கொண்டே வந்த தாயைப் புரியாமல் பார்த்தாள் சுபாஹிணி.

''இப்பப் பேசினது மாப்பிள்ள தாம்மா...''

........

''நகைகள் இன்னைக்குக் கொண்டு வருவாங்கன்னு ஞாபகப்படுத்தத் தான் கூப்புட்டிருக்கார். அதுக்குள்ள வந்து குடுத்துட்டுப் போய்ட்டாங்க. அத சொல்லத்தான் இப்ப நாங்க உங்களுக்குக் கூப்பிடலாம்னு இருந்தோம்னு நான் முந்திக்கிட்டேன்.''



........

''அதோட எல்லாரப் பத்தியும் நலம் விசாரிச்சார்.''

அது சரிதான். ஆனால் தன்னைப் பற்றி விசாரித்தாரா?

''என்னமா?''

''சரிதாம்மா. ஒரு பிரச்சன தீந்துடுச்சு.''

''இதுல பிரச்சன எங்கிருந்துமா வந்தது?''

''ப்ளீஸ், என்னக் கொஞ்சம் தனியா விட்றீங்களா?''

''சரிதான். நீயும் தான் சின்னப் பொண்ணா என்ன, எல்லாத்தையும் சொல்லிக் குடுக்கறதுக்கு.'' என்று தாய் வெளியே சென்று விட்டிருக்க அதற்கு மேல் ஒன்றும் முடியாமல் அமர்ந்து விட்டிருந்தாள் சுபாஹிணி.

தனாக அழைத்துப் பேசும் வரை அவன் அழைக்க மாட்டான் என்பது இப்பொழுது தெள்ளத் தெளிவாகியிருந்தது.

இதைப் புரிந்து கொள்ள நாமும் இத்தனை நாட்கள் எடுத்துக் கொண்டிருக்க வேண்டாமோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நினைத்தவள் உடனே அதைச் செயல்படுத்த முனைந்தாள்.

கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு தயானந்திடம் பேசுவதற்காகத் தனது மொபைலை எடுத்து அவனுக்கு டயல் செய்திருந்தாள்.

கை கால்களோடு சேர்த்து உள்ளமும் பதறிவிட்டிருக்க அந்த நடுக்கம் குரலில் தெரிந்து விடாதவாறு மொபைலை காதில் வைத்து இணைப்புக்காகக் காத்திருக்கலானாள்.

...ாக, அந்த சில வினாடிகளே சில யுகங்களாகத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

அதிகம் காத்திருக்க வைக்காமல் எதிர்முனையில் தயானந்த் அட்டெண்ட் செய்திருக்க, முயன்று வரவழைத்த இயல்பான குரலில், ''ஹலோ நான் சுபா பேசறேன்.'' என்றாள்.

அவள் அப்படி நினைத்துக் கொண்டிருந்தாலும் குரல் பிசிறடித்து விட்டிருந்ததென்னவோ உண்மை.

''ஓ, சொல்லு. என்ன விஷயம்?''

கணீரென்று ஒலித்த தயானந்த்தின் குரலில் இவன் தனது தயானந்த் தானா என்றிருந்தது சுபாஹிணிக்கு.

அவனுடைய குரல் எப்பொழுதுமே கணீரென்று கம்பீரமாகத் தான் ஒலிக்குமென்றாலும், நீண்ட இடைவெளி அவளை அவ்வாறு எண்ண வைத்திருந்தது.

''நான்..''

''ம்.''

''சும்மா தான் கூப்....''

''சரிதான். சந்தோஷம். ஆனா இப்ப நான் ஒரு முக்கியமான வேலைல இருக்கேன். பேச ஏதாவது இருந்தா அப்புறமா கூப்புட்றியா?''

ஓ! இல்லாவிட்டால் அழைத்துத் தொல்லை பண்ணாதே என்று சொல்லாமல் சொல்கிறானோ?

மீண்டும் நடப்பிற்கு வந்து சரி வைக்கறேன் என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் இணைப்பைத் துண்டித்து வெகு நேரமாகி விட்டிருந்தது தெரிந்தது.



ஏனோ அவனுடைய செய்கையால் முகத்திலேயே ஓங்கி அறை வாங்கியதைப் போலிருக்க, உதட்டைக் கடித்து வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

அப்படியானால் அவன் இன்னும் தன் மீது கோபமாகத் தான் இருக்கிறான்.

அது தெரியாமல் இந்த முட்டாள் மனது தான் எதை யெதையோ எண்ணித் தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொண்டு விட்டிருக்கிறது.

எவ்வளவு நாட்களுக்குப் பிறகு அழைக்கிறாள்! இரண்டு வார்த்தைகள் நல்ல விதமாகப் பேசலாம் என்று கூடப் பார்க்கவில்லையே.

மனம் மிகவும் பாரமாகி விட்டிருக்க மீண்டும் பழைய படி அவளுடைய மனம் கூட்டுக்குள் நத்தையாகச் சுருட்டிக் கொண்டு விட்டிருந்தது.

நாட்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

திருமணத்திற்கு இன்னும் சில நாட்களே இருக்கின்ற நிலையில், ஸ்ரீமதியிடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வந்திருக்க அட்டெண்ட் செய்து பேசினாள்.

அச்சத்துடன் தான்.

ஆனால் அவள் மனதிற்குள் எண்ணிப் பயந்து கொண்டிருந்தது போலெல்லாம் இல்லாமல் ஸ்ரீமதி இயல்பாகப் பேசியதில் ஓரளவு பரவாயில்லாமல் நிம்மதியாக உணர்ந்தாள் எனலாம்,

அதற்கு மேல் பழையபடி இயல்பாகப் பேச சுபாஹிணியால் முடிந்திருக்கவில்லை,

அப்படித் தான் பேசுவதை ஸ்ரீமதி விரும்பவில்லை என்பதையும்.

எப்படியோ இந்த அளவேனும் பேசினாளே என்றிருந்தது.

# 29

திருமண நாளும் இனிதே விடிந்தது.

இயற்கையிலேயே நல்ல அழகியான சுபாஹிணி இப்பொழுது மணப்பெண் அலங்காரத்தில் தேவதை போல ஜொலித்தாள்.

தனக்காக இல்லாவிட்டாலும் மற்றவர்களுக்காக முகத்தை இயல்பான புன்னகையுடன் வைத்துக் கொண்டாள்.

மற்றப்படி திருமணத்திற்கு வந்திருந்தவர்களின் பாராட்டிலும் கிண்டல் கேலியிலும் மணப்பெண்ணின் நாணம் தானாகவே வந்து குடிகொண்டு விட்டிருந்தது.

திருமணத்திற்கு வந்திருக்கும் விருந்தினர் கூட்டத்தைப் பார்த்து மற்றவர்களைப் போலவே சுபாஹிணி தானும் மனதிற்குள் திகைத்துத் தான் போனாள்.

அதில் நான்கில் மூன்று பங்கிற்கும் மேல் மணமகன் அதாவது தயானந்த் இல்ல அழைப்பின் பேரில் திருமணத்திற்கு வந்தவர்களாக இருந்தார்கள்.

இத்தனைக்கும் மணப்பெண் சுபாஹிணியின் பக்கமிருந்தும் சொந்தங்கள், பழகியவர்கள், தெரிந்தவர்கள்



என ஒருவர் விடாமல் அனைவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் அதெல்லாம் சிறிது நேரம் தான்,

அதற்குப் பிறகு தன்னை மணவறையில் அமர வைத்து விட்டிருக்க, மணமகன் கோலத்திலிருந்த தயானந்த்தின் அருகாமையில் தன்னை ஏன் சுற்றியிருந்தவர்கள் அனைவரையுமே மறந்து போய் விட்டிருந்தாள் சுபாஹிணி.

சாஸ்திர சம்பிரதாயங்களெல்லாம் இனிதே நடந்தேற, தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் தயானந்த்தின் திருமதியாகிப் போனாள்.

அந்த நிமிடத்தில் எங்கெங்கோ சுற்றி அலைந்து விட்டுக் கடைசியாகத் தனது புகலிடத்திற்கு வந்து பாதுகாப்பாக அடைக்கலம் புகுந்து விட்டாற் போல ஒருவித இனம் புரியாத அமைதி வந்து அவளுடைய உள்ளத்தில் குடிகொண்டு விட்டிருந்தது,

கூடவே இன்னதென்று வார்த்தைகளால் விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித சந்தோஷமும்.

இவை அனைத்திற்கும் மேலாகவும் மனதிற்குள் ஒன்றை ஆச்சரியத்துடன் உணர்ந்தாள் சுபாஹிணி.

அது முன்பு மலையாகத் தோன்றி அச்சத்தை அளித்துக் கொண்டிருந்த பிரச்சனைகள் அனைத்தும் இப்பொழுது தயானந்த்தின் அருகில் மடுவாகத் தேய்ந்து கடுகாகச் சிறுத்துப் போனதையும்.

அதே மனநிலையில் தயானந்த்தின் அருகாமையிலும் இருந்தவளுக்குப் பின் மாலை வரை கூட மற்றவர்கள் சொல்லச் சொல்ல அனைத்தையும் செய்ய நேர்ந்தது துளியும் சோர்வைக் கொடுத்திருக்கவில்லை.

ஏன், இரவின் தனிமையில் கணவனைத் தனியாகச் சந்திக்கும் வரையும் கூட அதே உற்சாகமான மனநிலையில் தான் இருந்தாள் சுபாஹிணி.

ஆவலும் ஆசையும் ஒன்று சேர உள்ளே வந்த மனைவியைப் பார்த்தான் தயானந்த்.

''வா.''

கணவனின் வரவேற்பில் அது இரத்தினச் சுருக்கமான ஒற்றை வார்த்தையாகவே இருந்தாலும் உள்ளே வந்திருந்தவள் கையிலிருந்த பால் சொம்பினைக் கொண்டு போய் அங்கிருந்த டேபிளின் மீது வைத்தாள்.

வைத்தவள் கணவனை நோக்கித் திரும்ப, அந்த வினாடியில் அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

உள்ளம் படபடவென்று அடித்துக் கொள்ள, ''பால் ஊத்திக் குடுக்கட்டுமா?'' என்று கேட்டாள்.

''நோ ஃபார்மாலிட்டிஸ். உனக்கு டயர்டா இருக்கும். நீ போய்த் தூங்கு.''

கணவனின் அந்த வார்த்தைகளில் ஏதோ வித்யாசமாகத் தெரிகிறதோ?

ஏதோ என்ன, விரக்தி....

''என்ன பாக்கற?''

''ஒண்ணுமில்ல,'' என்று மெல்லிய குரலில் என்றாலும் உடனே சொல்லியிருந்தாள்.

ஆனாலும் மனைவி தொடர்ந்து அதே இடத்தில் அப்படியே நின்று கொண்டிருக்க, ''சொன்னது காதுல விழுந்திருக்கும்னு நினைக்கிறேன்,'' என்றான் தயானந்த்.



''எனக்கு டயர்டா இல்ல.''

''சந்தோஷம்.''

''உங்களுக்கு இன்னும் எம்மேல கோபம்னு நினைக்கறேன்.''

''உம்மேல கோபப்பட நான் யாரு?''

''என் பக்கமும் ஏதாவது நியாயமிருக்கலாம் தயா. புரிஞ்சுக்கோ...''

''சரிதான். அவசியம் வரும்போது புரிஞ்சுக்க முயற்சி பண்றேன்.''

''இது தான் உங்க முடிவா?''

''இப்ப என்ன வேணும் உனக்கு?''

''நீங்க பழையபடி என் பழைய தயாவா மாற..''

''எனக்கு டயர்டா இருக்கு. ஏதாவது முக்கியமா இருந்தா மட்டும் சொல்லு. நான் போய்த் தூங்கணும்.''

கணவனின் ஏளனத்தில் கண்களைக் கரித்துக் கொண்டு வர, மனதிற்குள் இருந்த சந்தோஷமனைத்தும் சுக்கல் நூறாகிப் போனது.

''அப்ப இனி எப்பவுமே எங்கிட்டப் பழையபடி பேச மாட்டிங்களா?''

.........

''உங்களத்தான்..''

''தெரியல. அதுக்குக் காலம் தான் பதில் சொல்லணும்.''

''ரொம்பவும் பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க தயா.''

''என்ன பண்றது, நீ கேக்கற கேள்வி அந்த மாதிரியிருக்கே...''

"போதுமே ப்ளீஸ், ஏற்கெனவே மனசளவுல எவ்வளவோ வேதனைப் பட்டுட்டேன்."

"அதுக்குக் காரணம் நானா இருந்தா மன்னிச்சுடு."

என்ன ஏளனம்!

கடவுளே! ஏன் என்னை இப்படியெல்லாம் சோதிக்கிறாய்? தான், தன்னுடையது என்று தானும் சுயநலமாக இருந்திருக்க வேண்டுமோ?

ஆனால் அப்படி மற்றவர்களுடைய உணர்ச்சிகளை உதாசீனப்படுத்தத் தான் கற்றதில்லையே!

"தயவுசெஞ்சு நான் சொல்றத மட்டும் கொஞ்சம் முழுசாக் கேக்க முடியுமா?"

அப்படிச் சொன்ன தன்னை ஏளனத்துடன் பார்த்துச் சிரித்த கணவனை வேதனையுடன் பார்த்தாள் சுபாஹினி.

"அது சரி. இத்தன நாட்கள்ல நீயும் யோசிச்சு ஏதாவது ஒன்னக் கண்டுபிடிச்சிருக்க மாட்டியா என்ன?"

"ஐயோ! என்னையும் தான் கொஞ்சம் பேச விடுங்களேன். நடந்த உண்மையே இருக்கும்போது எதுக்காக யோசிச்சு சொல்லணும்..."

"அதுக்கு ரொம்ப நாள் கடந்து போச்சுன்னு நினைக்கறேன். ஒருவேள நீ இத நான் வெளியூர் போய்ட்டு வந்தபோது சொல்லியிருந்தா நானும் கேட்டிருப்பேனா இருக்கும்."

"மன்னிக்கணும், நடந்தத மறந்துட்டிங்கன்னு நினைக்கறேன். அப்பக்கூட நீங்க எனக்குப் பேச வாய்ப்பே குடுக்கல..."



.........

"அது மட்டுமில்ல. இன்னும் ஏதேதோ மனச மாத்தற மாதிரி ஆளயும் மாத்த......"

"ஓ, அப்பக் கூட நான் எதுவுமே பேசியிருக்காம உன் கால்ல விழுந்திருக்கணும்னு சொல்றியா?"

"அச்சச்சோ. அப்ப திடீர்னு நீங்க.... உங்களப் பாத்த சந்தோஷ அதிர்ச்சியில வாயடைச்சு நின்னுட்டேன்னு....."

"அப்ப மட்டும் தான?"

ஏன், அதற்குப் பிறகு வந்த நாட்களிலும் கூட நீ நினைத்திருந்தால் பேசியிருக்கலாம் என்கிறானோ?

"போதும்மா. விட்டுடு. எனக்கு உம்மேல கோபமெல்லாம் எதுவுமில்ல."

கடவுளே! தன் தயானந்த் இப்படிப் பேச மாட்டானே!

அவனுடைய அணுகு முறையே வேறாக இருக்குமே!

ஐயோ! என் மனதறிந்து நான் எந்தத் தவறையும் செய்யவில்லையே என்று சுபாஹினியின் மனம் ஊமையாய் அழுதது.

"நீயும் போய்ப் படுத்துக்கோ," என்று தயானந்த் இரண்டு அடி எடுத்து வைத்திருக்க, வேகமாக அவனுக்கு முன்பாக வந்து நின்றிருந்தாள் சுபாஹினி.

"நான் சொல்றதயும் கொஞ்சம் கேட்டுட்டுப் போங்க."

"வேண்டாம்மா. நானும் சாதாரண மனுஷன் தான். என்ன ரொம்பவும் சோதிக்காத."

"ஏன், என்ன பண்ணிடுவீங்க?"

..........

''உங்ககிட்டதான்...''

''வழிய விடு சுபா.''

''மாட்டேன்.''

''அப்புறம் நீ வருத்தப்படுவ.''

''இன்னுமா, வாய்ப்பே இல்ல.''

அப்படிச் சொன்ன மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்த தயானந்த்தின் பார்வை கோபத்தில் துடித்துக்கொண்டிருந்த மனைவியின் உதடுகளின் மீது விழுந்திருந்தது.

மனதிற்குள் ஏதேதோ தோன்றிவிட்டிருக்க, திடீரென்று நடப்புக்கு வந்தவனாய் மனைவியை ஒதுக்கித் தள்ளி நிறுத்திவிட்டு மேலும் இரண்டு அடி எடுத்து வைத்திருந்தான்.

ஆனால் அதற்கு மேல் விடாமல் எட்டிக் கணவனின் கையைப் பிடித்திருந்தாள் சுபாஹினி.

''எனக்குப் பதில் சொல்லிட்டுப் போங்க.''

அப்படிக் கேட்ட மனைவியைத் திரும்பிப் பார்த்த தயானந்தால் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போக, மனைவியை இழுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

கணவனின் அந்த திடீர்ச் செய்கையில் திகைத்துத் தடுமாறிய சுபாஹினி, இப்பொழுது அவனுடைய அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காகத் திமிறினாள்.

ஆனால் அவளுடைய முயற்சியெல்லாம் துளியும் பயனற்றுப் போகக், குனிந்து மனைவியின் காதருகே கிசுகிசுத்தான் தயானந்த்,



''என்ன, நிச்சயம் பதில் தெரிஞ்சாகணுமா?''

''இது சரியில்ல, நான் கேக்க.....''

அதற்கு மேல் ஒரு வினாடி கூட அவன் தனது மனைவியைப் பேச விட்டிருக்கவில்லை.

அவளது முகத்தைத் தனது கைகளில் ஏந்தி, அவளுடைய உதடுகளைத் தனது உதடுகளால் சிறைப் பிடித்திருந்தான்.

முதலில் கணவனைத் தடுக்க முயன்ற சுபாஹினி பிறகு தானும் தன்னையறியாமலேயே அவனை இறுக அணைத்து அவன் மீதே சாய்ந்தாள்.

## 30

''சுபா!''

தாய் அழைக்கத் திரும்பினாள் சுபாஹினி.

''டிஃபன் எல்லாம் ரெடியா டேபிள்ல எடுத்து வெச்சாச் சுமா. மாப்பிள்ளையச் சாப்பிட அழைச்சுட்டு வர்றியா?''

''டாடி.''

''அவரும் இப்ப வந்துடுவார். நீ முதல்ல போய் மாப்பிள்ளையைக் கூட்டிட்டு வா.''

''இதோ...'' என்று நகர்ந்தவளுக்கு உள்ளம் படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தது.

கடவுளே! அவனை எப்படி நேருக்கு நேராகப் பார்ப்பது?

இரவு தான் கணவனின் கைகளில் தொய்ந்தது தான் நினைவிற்கு வந்தது.

அது மட்டுமா?

அதற்குப் பிறகும் கூட...

யோசனையுடனேயே தங்களுடைய அறை வாயில் வரை வந்திருந்தவள், அப்பொழுது தான் குளித்து விட்டு வேஷ்டி பனியனுடன் வெளியே வந்த கணவனைப் பார்த்தாள்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அதற்கு மேல் அவனைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் முகம் சிவந்து விட்டிருக்க அப்படியே குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

சும்மா என்றால் எப்படியோ மனைவியை அந்த நிலையில் பார்த்த தயானந்த்தாலும் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது போக, அவளை உள்ளே இழுத்துக் கதவைத் தாழிட்டிருந்தான்.

அன்றே கணவன், மனைவி இருவரும் தயானந்த்தின் சொந்த ஊரான பெங்களூருக்குப் பயணமானார்கள்.

அது ஆகாய வழிப் பயணமாக இருக்க, முன்பு ஒரு முறை அவனுடன் செல்ல நேர்ந்தது தான் நினைவுக்கு வந்தது, சுபாஹிணிக்கு.

ஆனாலும் இன்று சொல்லாமலே விமானம் மேல் எழும்ப ஆயத்தமானதும், கணவனின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

தான் அப்படிச் செய்ததில் கணவனின் பார்வை மாறியிருக்க, மறுபக்கமாகத் திரும்பி உதட்டைக் கடித்துத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முயன்றாள்.



மனைவியின் முயற்சி புரிய மனதிற்குள் சிரித்துக் கொண்ட தயானந்த், அவளுடைய கையை எடுத்துத் தனது மடியில் வைத்துக் கொண்டான்.

முதலில் கையை இழுத்துக் கொள்ள நினைத்த சுபாஹிணி பிறகு வேண்டாமென்று விட்டுவிட்டிருக்க, இருவரின் பார்வைகளும் சில வினாடிகள் சந்தித்துப் பின் மீண்டும் பிரிந்தன.

தன்னுடைய புகுந்த வீட்டுச் சொந்தங்களைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே ஓரளவு தெரியுமென்றாலும், அன்று முழுமையாகத் தெரிந்து கொள்ள நேர்ந்தது மிகுந்த சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் ஒரு சேரக் கொடுத்திருந்தது சுபாஹிணிக்கு.

அந்த அளவிற்கு அவர்கள் அனைவருமே பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்களாக இருந்தார்கள்.

அது தங்கள் வீட்டுப் பிள்ளையான தயானந்த்தின் மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பு மற்றும் மரியாதையின் காரணமாகத்தான் என்பதைப் புரிந்து கொள்ள அவளுக்கும் பிரமாத மூளை தேவையிருக்கவில்லை.

தன் கணவனை யாருக்குத் தான் பிடிக்காது என்று பெருமையுடன் நினைக்கத் தோன்றியது.

''இங்க வாம்மா.''

தனது அத்தை அழைக்க எழுந்து சென்றாள் சுபாஹிணி.

''அப்புறம் இந்த ஊரு பிடிச்சிருக்காம்மா?''

''ஓ! ரொம்பப் பிடிச்சிருக்கு அத்தெ. ஊர மட்டுமில்ல. உங்க எல்லாரையுமே ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''ஓ, அப்படியா? அப்ப ரொம்ப சந்தோஷம். நானும் கூ...''

"என்ன அத்தெ, சொல்லுங்க."

"இல்ல, கல்யாணத்துக்கு முன்னாடி நீ ஏனோ பாக்கறதுக்குக் கொஞ்சம் டல்லாத் தெரிஞ்சியா, நானும் என்னவோ ஏதோன்னு நினைச்சுட்டேன்."

..........

"அதுலயும் உம் புருஷன் வேற கோபக்காரனாச்சே..."

"அப்பிடியெல்லாம் ஒன்னுமில்லையே. அவர் ரொம்பவும் நல்ல....."

தனது அத்தையின் முகத்தில் தெரிந்த சிரிப்பில் உடனே பேச்சை நிறுத்திக் கொண்டவள், அவருடைய பார்வையைத் தொடர்ந்து தானும் திரும்பிப் பார்த்தாள். தனது கணவன் உள்ளே வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அதற்குள் தங்களுக்கு மிக அருகிலேயே வந்திருந்த மகனை அதே புன்னகையுடன் பார்த்தார் பரமேஸ்வரி.

"என்னமா?"

"ஒரே நாள்ல எம் மருமக இப்பிடித் தலைகீழா மாறிட்டாளே, அத நினைச்சு சிரிச்சேன்."

"தலைகீழான்னா?"

"இல்ல, நீயே கோபக்காரன். நீ சொல்றது தான் எப்பவும் நடந்தாகணும்னு நிக்கறவன். கடைசிக்கு சுபாவாவது வந்து உன் காதப் புடிச்சுத் திருகி உன்ன வழிக்குக் கொண்டு வருவான்னு பாத்தேன். ஆனா இப்பக் கடைசில அவளும்..."

"அவளும்?"



"உன் புகழப் பாடறாளே. இப்ப யாரு தான் உன்ன மிரட்டறது?"

அர்த்தத்துடன் தன் மீது விழுந்த கணவனின் பார்வையில் சுபா குனிந்து கொண்டு விட்டிருக்க, "அதுக்கென்ன அத்தெ. நாளைக்கு மகனோ, மகளோ வந்து கேட்கட்டுமே!" என்று வந்தாள் அந்த வீட்டின் பெரிய மருமகள் சாருமதி.

"ஏன் அண்ணி திடீர்னு கட்சி மாறிட்டிங்க?"

"அச்சச்சோ! நான் எங்க தயா மாறினேன், அத்தெ புலம்பினாங்களேன்னு ஆறுதல் சொன்னேன்."

"அது சரிடியம்மா. எப்பிடித்தான் வீட்ல எல்லாருக்குமே தகுந்த மாதிரி பேசி உன்னால தப்பிச்சுக்க முடியுதே போ."

"என்ன அத்தெ பண்றது? இந்த மாதிரி ஒரு குடும்பத்துக்கு மூத்த மருமகளா வந்துட்டு இனி நான் வேற எப்பிடி இருக்கறது, சொல்லுங்க?"

"நீங்க ஏதோ உள் அர்த்தத்தோட பேசற மாதிரியல்ல தெரியுது?" என்ற தயானந்த், "என்ன சுபா, அப்படித் தான?" என்று தனது மனைவியையும் பேச்சுக்குள் இழுக்க, "உள்ளர்த்தமா, எல்லாருமே நல்லவங்களா இருக்கற பட்சத்துல யாருடைய மனசையும் நாம புண்படுத்திடக் கூடாதேன்னு பாக்கறேன், வேறென்ன?" என்றாள் சாருமதி.

"அது சரிதான். நான் வேணும்னா ஒன்னு செய்யறேன் அண்ணி."

"என்ன தயா, சொல்லுங்க."

"சுபாவையும் கொஞ்ச நாளைக்கு உங்ககூட விட்டுட்றேன். எப்பிடிப் பேச்சுலையே எல்லாரையும் சமாளிக்கறத அவளும் கத்துக்கட்டும்."

"ஆனா அது முடியாதே."

"ஏன்?"

"மத்தவங்கள சமாளிக்கறது இருக்கட்டும். ஆனா உங்ககிட்ட எந்தப் பப்பும் வேகாதே..."

"என்ன நடக்குது இங்க, வட்ட மேசை மாநாடா?"

தனது மாமனார் உள்ளே வர, உடனே எழப்போனாள் சுபாஹிணி.

ஆனால் அடடா இதுவல்லவா மரியாத என்று அதைக் கண்டு அனைவரும் கிண்டலடிக்கத் தொடங்கி விட்டிருந்தனர்.

முக்கியமாகத் தனது அத்தையும், சாருமதியும்.

அன்று மாலையே தயானந்த் தனது மனைவியுடன் தேனிலவு கிளம்பி விட்டிருக்க, ஒரு நாளாவது இங்கு இருந்து விட்டுப் பிறகு செல்லலாமே என்று கேட்காதவர்கள் குறைவு.

ஆனால் தனது கணவன் ஒன்றை நினைத்துவிட்டால் பிறகு அது நடக்காமல் இருக்குமா என்ன?

வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் கணவனுடனான அந்தப் பயணத்தை மனதிற்குள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள் சுபாஹிணி.

அது தயானந்த்திற்கும் புரியாமல் இல்லை.



அவனும் அதை ஈடு செய்யும் வகையில் மனைவியைத் தனது உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான்.

கணவன் தன்னிடம் கோபப்பட்டதெல்லாம் முன் பிறவியில் நடந்ததோ என்பதைப் போல திருமணத்திற்கு முன்பு நடந்ததையெல்லாம் சுத்தமாக மறந்து போய் விட்டிருந்தாள் சுபாஹிணி.

அதாவது தயானந்த் மறக்க வைத்திருந்தான்.

தங்கள் இருவருக்கும் மத்தியில் அன்பைத் தவிர வேறு எதுவுமே நுழைய முடியாத அளவிற்கு இருவரும் பின்னிப் பிணைந்திருந்தனர்.

## 31

தேனிலவை முடித்துக் கொண்ட பத்து நாட்களுக்குப் பிறகு கணவன் மனைவி இருவரும் அன்று மீண்டும் சென்னை திரும்பியிருந்தார்கள்.

அன்று ஆஃபீஸ் செல்ல வேண்டுமென்று முதல் நாளே கணவன் சொல்லியிருந்ததில் அதிகாலையிலேயே தூக்கம் கலைந்திருந்தது சுபாஹிணிக்கு.

கணவன் நல்ல தூக்கத்திலிருப்பது தெரிய, சத்தம் செய்யாமல் கட்டிலின் மறுபக்கமாக இறங்க எத்தனித்தாள்.

ஆனால் அதற்குள் தானும் தூக்கம் கலைந்து விழித்திருந்த தயானந்த், மனைவியை மீண்டும் தன்னருகில்

''என்னமா? எங்க போற?''

''டைம் பாருங்க. அஞ்சாகுது. இனி எழுந்தா தான சரியா இருக்கும்.''

''ஏன் நீ எங்க போகப்போற?''

''நானெங்கயும் போகல. நீங்கதான் எட்டு மணிக்கு ஆஃபீஸ் போகணும்.''

''சரி.''

''என்ன சரி, நானென்ன கதையா சொல்லிட்டிருக்கேன், எழுந்திருங்க முதல்ல...''

சுபாஹிணி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை, மனைவியை இழுத்து இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

''அச்சோ! என்னங்க நீங்க....''

''நானுங்கூட என்னவோ ஏதோன்னு நினைச்சுட்டேன். இனிமேல் இந்த மாதிரி அர்த்த ராத்திரியில எழற வேலையெல்லாம் வெச்சுக்காத.''

ஸீரியஸாகக் கணவன் சொல்ல, என்ன முயன்றும் சுபாஹிணியால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அது சரி. ஐந்து மணி ஐயாவுக்கு அர்த்த ராத்திரியாக்கும்.

மீண்டும் தயானந்த் மனைவியை எழ விட்டபோது ஆறு மணிக்கு மேல் ஆகியிருந்தது.

நன்கு வெளிச்சம் வந்து விட்டிருக்க, வேகமாக எழுந்து சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சமையலறைக்குப் போனாள்.



சென்றவள் சில நிமிடங்களில் தனக்கும் கணவனுக்குமாகக் காபியை எடுத்துக் கொண்டு மீண்டும் தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள்.

''குட்மார்னிங் ஸார்.''

''ம்கூம். பேட் மார்னிங்.''

''ஏனோ?''

''இன்னைக்கு ஆஃபீஸ் போகணுமே.''

''அப்பப் போகாதீங்க.''

''அது எப்பிடி முடியும்?''

''ஏன், முதலாளி நீங்க தான?''

''அதனால தான் பாக்க வேண்டியிருக்கு. இல்லன்னா....''

''இல்லன்னா?''

''வேற வேலயப் பாத்துட்டுப் போய்ட்டாப் போகுதுன்னு இப்பிடியே ஜாலியா இருந்துடலாம்.''

''ம், அதுவும் எத்தன நாளைக்காம்? எப்பிடியிருந்தாலும் ஒரு நாளைக்குப் போய்த்தான ஆகணும்.''

''எப்பிடியோ என்னத் துரத்தி விட்றதுல குறியா இருக்க.''

''யாரு நானா? நீங்க ஆஃபீஸ் கிளம்பிட்டா மொட்டு மொட்டுன்னு தனியா உக்காந்துட்டிருக்கணுமேன்னு எம் மனசு பட்ற பாடு எனக்குத் தான தெரியும்.''

''அடப் பரவாயில்லையே, சரிதான். அப்ப நீயும் எங்க கூட வந்துடு.''

''எங்க?''

''ஆஃபீஸ்க்குத் தான்.''

"ஓ நான் ரெடி. வரட்டுமா தயா?"

"இன்னைக்கு வேண்டாம்மா. கொஞ்ச நாள் போகட்டும்."

"ஏனோ?"

"ம். அத..."

"ம்கூம். உன்னக் கூடவே வெச்சுப் பாத்துட்டிருந்தா வேல ஓடாதுன்னெல்லாம் சொன்னா நான் ஒத்துக்க மாட்டேன்."

"அப்ப உண்மைய சொல்லக் கூடாதுன்னு சொல்ற?"

"ப்ளீஸ் தயா, என்னையும் உங்ககூடக் கூட்டிட்டுப் போங்களேன்."

"ஷ்யூர்மா. ஆனா இன்னைக்கு நீ உங்க அம்மா வீட்டுக்குப் போய்ட்டு வா."

"ம்கூம்."

"அட, இது என்ன அதிசயம்! பிறந்த வீட்டுக்குப் போறதுன்னா எல்லாப் பொண்ணுங்களும் நீ, நான்னு போட்டி போடுவாங்கன்னு தான் கேள்விப்பட்டிருக்கேன்."

"நீ மொத்தமாக் கேள்விப்பட்டதையெல்லாம் நினைச்சுப் பேசாதடா, உம் பொண்டாட்டி எப்பிடிங்கறதத் தெரிஞ்சுக்கிட்டுப் பேசு."

"எப்பிடியோ?"

"நீங்க பேசாதீங்க."

"அச்சச்சோ, என்ன இப்பிடிக் கோபம்..."

"எனக்கு மட்டும் எப்பவும் உங்களப் பாத்துட்டு, உங்க கூடவே இருக்கணும்னு தோனக் கூடாதா தயா?"



அப்படிக் கேட்ட மனைவியைத் தன்னருகில் இழுத்திருந்தான் தயானந்த்.

"சுபா...."

........

"அப்ப நான் இன்னைக்கு ஆஃபீஸ்க்குப் போகாம விட்டுடவா?"

கணவன் ஸீரியஸாகக் கேட்ட பாவனையில், பக்கென்று சிரித்து விட்டிருந்தாள் சுபாஹினி.

"இப்ப நான் என்ன தான் செய்யட்டும் வாயாடி?"

"ஆஃபீஸ் கிளம்புங்க. ஆனா ஈவினிங் சீக்கிரம் வந்துடணும். நான் உங்களுக்காக ஆவலாக் காத்துட்டிருப்பேனாக்கும்."

"அத நீ சொல்ல வேற செய்யணுமா?" என்று மனைவியை அருகில் இழுத்து அணைத்திருந்தவன், மீண்டும் விடுவித்தபோது சிறிது நேரம் கடந்து விட்டிருந்தது.

தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பி விட்டிருக்க, அவனை வழியனுப்பி விட்டு வீட்டிற்குள் வந்திருந்தாள் சுபாஹினி

கணவன் கிளம்பி விட்டிருந்ததில் எதையோ இழந்து விட்டதைப் போல மனம் பாரமாகியிருக்க, எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

அதற்குப் பிறகும் வெகு நேரம் கழித்தே மீண்டும் நடப்பிற்கு வந்திருந்தவள், எழுந்து வேலைகளைப் பார்க்கத் தொடங்கினாள்

இடையில் தனது தாய்க்கும், அத்தைக்கும் அழைத்துப் பேசினாள்.

கூடவே இரண்டு முறை கணவனுக்கும்.

அதற்குப் பிறகு மதிய உணவு, குட்டித் தூக்கமென மேலும் ஒரு மணி நேரமும் சென்று விட்டிருக்க, பழைய படி மீண்டும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தாள்.

ஒரு வழியாக நேரம் மாலை ஐந்தாகியிருக்க, கணவனின் வரவுக்காக ஆவலுடன் வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கலானாள்.

எதிர்பார்த்தது போலவே அடுத்த சில நிமிடங்களில் கணவனும் வந்திருக்க, ''வாங்க!'' என்று சந்தோஷத்துடன் வரவேற்றாள்.

ஆவலே உருவாகத் தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த மனைவியின் பாவனையில் தயானந்த்திற்குச் சிரிப்பு வந்து விட்டிருந்தது,

''என்ன... என்ன சிரிப்பு?''

ரோஷத்துடன் மனைவி கேட்க, ''அப்புறம் காலைல இருந்து என்ன பண்ணிட்டிருந்த?'' என்று கேட்டான்.

''ம்....''

''ம், என்ன?''

''ஈ ஓட்டிட்டிருந்தேன்.''

''அட அப்ப ரொம்ப பிஸியா இருந்திருப்பபோல?''

''பின்ன சும்மாவா?''

''ஆனா பாவம் இடையில ரொம்ப நேரம், ஓட்ட ஈ கூடக் கிடைக்கல போலிருக்கு.''

........



''பேங்களூருக்குக் கூப்புட்டு ஒரு மணி நேரம் யாரோ ஒரே அறுவையாம்.''

''நான் ஒன்னும் அறுக்கல.''

''அது சரிதான். பிளேடுன்னு தான் அம்மா சொன்னாங்க.''

''அத்தெ அப்பிடியெல்லாம் சொல்லியிருக்கவே மாட்டாங்க.''

''மாட்டாங்களா? வேணும்னா போன் பண்ணிக் கேட்டுப் பாரு.''

''போடா, நீ பேசாத...''

அவள் சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. சரியாக அதே நேரம் வேலைக்காரம்மாள் அம்புஜம் கையில் டிபன், டீ, ட்ரேயுடன் ஹாலுக்குள் வர நாக்கைக் கடித்துக் கொண்டாள் சுபாஹிணி.

வந்தவள், ''டிஃபனுங்கய்யா!'' என்று சொல்லிக் கொண்டே ட்ரேயை டீபாயின் மீது வைத்திருக்க, ''சரிமா. நீங்க போங்க. எடுத்துக்கறோம்,'' என்று அவரை அனுப்பியிருந்தான் தயானந்த்.

கடவுளே! மற்றவர்கள் கேட்கக் கணவனை என்ன வார்த்தை சொல்லிவிட்டோமென்று சுபாஹிணியின் உள்ளம் பதறிவிட்டிருக்க, அது அவளுடைய முகத்திலும் அப்படியே பிரதிபலித்தது.

சரியாக அதே நேரம் கணவனும் தன்னை நிமிர்ந்து பார்க்க, இறுகிப் போயிருந்த அவனுடைய முகத்தைக் கண்டு பயந்து போனாள் என்று தான் சொல்ல வேண்டும்.

ஐயோ! கொஞ்சமும் இடம் பொருள் பார்க்காமல் என்ன வார்த்தை சொல்லிவிட்டோமென்று நினைத்த தில் கண்களைக் கரித்துக் கொண்டு அழுகை கூட வந்து விட்டிருந்தது.

நாலு பேர் வந்து போகும் இடமென்று கூடப் பார்க் காமல் மனைவி அப்படிச் சொல்லி விட்டிருந்ததில் தயானந்த்திற்கும் கோபம் தான் என்றாலும், மனைவியின் நிலை புரிய இப்பொழுது அவனுடைய உள்ளம் உருகிப் போனது,

ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் இறுகிய முகத்துடன், ''சுபா, இங்க பாரு. நீ உன்மனசுல என்னதான் நினைச்சுட்டிருக்க?'' என்று கோபத்துடன் கேட்டான்.

ஆனால் ஏற்கெனவே குற்றக் குறுகுறுப்புடன் இருந்த சுபாஹிணிக்கோ கணவன் சும்மா கேலிக்குத் தான் அப்படிக் கேட்கிறான் என்பது மனதில் பட்டிருக்கவில்லை,

''ஸாரி, ஏதோ ஒரு வேகத்துல அவங்க வர்றதப் பாக்காம சொல்லிட்டேன். மன்னிச்சுடுங்க!'' என்றவளின் கண்கள் இப்பொழுது நன்றாகவே கலங்கி விட்டிருக்க,

அதைக் காதில் கூட வாங்கிக் கொள்ளாமல் கோபத் துடன் திரும்பிக் கொண்டான்.

மனைவி பயத்துடன் தன்னையே பார்த்துக் கொண் டிருப்பது தெரிந்தாலும் சரிதான் என்ன தான் செய்கிறா ளென்று பார்ப்போமென்று அதே முக பாவனையுடன் தங்களுடைய அறைக்கும் வந்து விட்டிருந்தான்.

கணவனின் கோபம் சுபாஹிணியின் மெல்லிய மனதை உலுக்கி விட்டிருக்க, சென்று படுக்கையில் விழுந்து அழத் தொடங்கி விட்டிருந்தாள்.



சரியாக அதே நேரம் குளியலறையிலிருந்து வெளியே வந்திருந்த தயானந்த் தனது மொபைல் ஒலிக்கச் சென்று எடுத்துப் பேசினான்.

பேசி முடித்தவன் உடனே வெளியே கிளம்புவதற்குத் தயாரானான்.

மனைவியிடம் ஒரு வார்த்தை சொல்லி விடலா மென்று திரும்பியவனுக்கு அவள் குப்புற விழுந்து அழுது கொண்டிருப்பது தெரிய, சமாதானப்படுத்த நேரமில் லாமல் கிளம்பியே விட்டிருந்தான்.

மீண்டும் அவன் வீடு திரும்பியபோது இரவு மணி பதினொன்றுக்கும் மேலாகி விட்டிருந்தது.

வரத் தாமதமாகுமென்று இடையில் மனைவியை அழைத்துச் சொல்லி விடத்தான் நினைத்தான் என் றாலும் இருந்த டென்ஷனில் முடிந்திருக்கவில்லை.

காரைத் தான் பார்க் செய்து விடுவதாக டிரைவர் வந்து வாங்கிக் கொள்ள, உடனே தங்களுடைய அறைக்கு வந்திருந்தான் தயானந்த்.

மின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருக்க, மனைவி படுக்கையில் மறுபக்கமாகத் திரும்பிப் படுத் திருந்தது தெரிந்தது.

சத்தம் செய்யாமல் அருகில் சென்று பார்த்தான்.

அவள் நல்ல தூக்கத்திலிருப்பது தெரிந்தது.

சரிதான், தூங்கட்டுமென்று அவன் ஓரடி எடுத்து வைத்திருக்க, எட்டிக் கணவனின் கையைப் பிடித்திருந் தாள் சுபாஹிணி.

உடனே திரும்பி மனைவியைப் பார்த்த தயானந்த், ''நீ இன்னும் தூங்கலையா?'' என்று கேட்டான்.

"ம்கூம்."

"என்னமா?"

..........

"சுபா!"

..........

"என்னடா பேசு. திடீர்னு ஒரு அவசரம். அதான் போக வேண்டியதாயிடுச்சு. நடுவுல போன் பண்ணி விஷயத்த சொல்லக்கூட முடியல."

அப்படி என்ன ஆயிற்று என்று சுபாஹிணி மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்க, "எம்மேல கோபமா?" என்று கேட்டான் தயானந்த்.

என்னது கோபமாவா?

அப்படியானால் இப்பொழுது கணவனுக்குத் தன் மீது கோபமில்லையா?

"என்னமா?"

"அப்ப உங்களுக்கு எம் மேல கோபமில்லையா?"

"என்னது, ஏன்..."

புரியாமல் கணவன் கேட்ட பாவனையில் சிரிப்பு வந்து விட்டிருந்தது சுபாஹிணிக்கு.

உடனே எதற்காக மனைவி அப்படிக் கேட்கிறாளென்பது தயானந்திற்கும் புரிந்து விட்டிருக்க, "அது எப்படி இல்லாம இருக்கும்?" என்றான்.

"போடா, சமாளிக்காத."

"என்னது திரும்பவுமா, அப்ப சொன்னதே தப்பு..."



"ஆமான்டா, அப்படித்தான் சொல்லுவேன். எப்பவுமே சொல்லுவேன்."

மனைவியின் சிறு பிள்ளைத்தனமான பேச்சில் சிரிப்பு வந்து விட்டிருந்தாலும், மறைத்துக் கொண்டு, "இரு உன்ன..." என்று கையை ஓங்கிக் கொண்டு குனிந்தான்.

ஆனால் அதே நேரம் தனது இரு கைகளையும் கணவனின் கழுத்தைச் சுற்றி மாலையாகப் போட்டிருந்த சுபாஹிணி, "நீ எம்மேல கோபமா இருப்பேன்னு பாத்தா நான் உம்மேல கோபமா இருக்கறதா நீ நினைச்சுட்டிருக்கியேடா!" என்று விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஏய், என்ன நீ திரும்பத் திரும்ப..."

ஆனால் அந்த வினாடியில் கணவனை மேலும் தன்னருகில் இழுத்துக் கொண்டிருந்த சுபாஹிணி, "தயா!" என்று இறுக அணைத்துக் கொண்டாள்.

மனைவியின் நிலை புரிந்த தயானந்துக்கோ அவனுடைய நிலை பற்றிச் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.

## 32

நாட்கள் அதன் பாட்டிற்கு இறக்கை கட்டிக் கொண்டு பறந்த வண்ணமிருந்தன.

புதுமணத் தம்பதி இருவரும் அன்பால் ஒருடல் ஈருயிராகிப் போயிருந்தார்கள்.

அன்றோடு திருமணம் நடந்து ஒரு மாதம் நிறைவடைந்திருந்தது

அழைப்பின் பேரில் கிட்டத்தட்ட அனைத்து உறவினர்களின் வீட்டிற்குமே விருந்துக்குப் போய் வந்திருந்தார்கள்.

ஸ்ரீமதியின் வீட்டைத் தவிர. ஏதோ சில காரணங்களால் அவர்கள் பெரும்பாலும் இருப்பதே பெங்களூரில் தான் என்று கணவன் ஒரிரு முறை சொல்லியிருந்தது நினைவிற்கு வர, ஒரு விதத்தில் அதுவே நிம்மதியைக் கொடுத்திருந்தது சுபாஹினிக்கு.

ஆனால் அவளுடைய அந்த நிம்மதிக்கோ ஆயுள் மிகவும் குறைவாக இருந்தது.

''சுபா!''

அலுவலகத்திலிருந்து வந்த கணவனைச் சந்தோஷமாக வரவேற்றாள்.

''வாங்க, வாங்க.''

''என்ன இவ்வளவு சந்தோஷம்?''

''பின்ன நேரத்துலயே வந்திருக்கீங்களே.''

''ஆமாம்மா. அது சரிதான். சீக்கிரம் கிளம்பு.''

''ஏன், எங்க போகணும்?''

''அது சர்ப்ரைஸ்.''

''அப்படி எங்க போகப் போறோம், ம்...''

''ரொம்ப யோசிக்காத. எனக்கு வெளிய வேற ஒரு முக்கியமான வேலையும் இருக்கு. சீக்கிரம்...'' என்று கணவன் தான் குளிப்பதற்காகச் சென்று விட்டிருக்க, தானும் சென்று கிளம்பத் தொடங்கியிருந்தாள் சுபாஹினி.

கணவன் கிளம்பி வருவதற்குள் சுபாஹினி தான் தயாராகக் கிளம்பிக் காத்திருக்க தயானந்த் தானும் சில



வினாடிகளிலேயே, ''கிளம்பலாமா?'' என்று வந்திருந்தான்.

''நான் ரெடிப்பா.''

''அட, ஆச்சரியமா இருக்கே.''

''பின்ன, சரி, இப்பவாவது சொல்லுங்க, எங்க போகப் போறோம்?''

''ஸ்ரீ வீட்டுக்கு.''

கடவுளே! அவர்களுடைய வீட்டிற்கா செல்லப் போகிறோம்.

''என்னமா, என்ன யோசன?''

''இல்ல, அவங்க பெங்களூர்ல இருக்கறதா இல்ல சொன்னீங்க?''

''ஆமாம்மா. ஆனா இனிமேல் இங்க தான் இருப்பாங்க.''

''ஓ.''

''என்ன சுபா?''

''இன்னொரு நாள் வேணும்னா போய்க்கலாமா?''

''ஏன்?''

............

''அட என்ன நீ, விட்டா திரும்பத் திரும்ப யோசிச்சுட்டே இருப்ப போலிருக்கு.

''என்னமா கிளம்பு,'' என்று மீண்டுமொரு முறையும் கணவன் சொல்ல, உடனே எழுந்திருந்தாள்.

ஏனோ மனதிற்குள் அபாய மணி ஒலித்தது.

எந்தவொரு சம்பந்தமும் இல்லாத பொழுதே மிரட்டியவர்களாயிற்றே என்று அவளையறியாமலேயே ஒரு

எச்சரிக்கை உணர்வு வந்து சூழ்ந்து கொண்டு விட்டிருந்தது.

மனைவி ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய்திருந்த தயானந்துக்கும் அவளுடைய தயக்கமும் தயக்கத்திற்கான காரணமும் புரியவே செய்தது.

ஆனாலும் அதை எதையுமே அவன் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

ஏனென்றால் அவனுடைய அத்தையின் குணம் அவன் அறியாததல்லவே.

''என்ன சுபா?''

''அவங்க வீட்ல இருந்து கொஞ்சம் சீக்கிரம் திரும்ப முடியுமா...''

''ஏன், அவங்க வீட்டுக்குப் போறதுல உனக்கு விருப்பமில்ல. அப்படித்தான?''

''அச்சச்சோ! என்ன தயா நீங்க? ஒன்பது மணிக்கு டி.வி.ல எனக்குப் புடிச்ச ப்ரொக்ராம் ஒண்ணு வருது. எல்லா வாரமும் அதத் தவறாம பாத்துட்டிருக்கேன். அதான். ஏன் சிரிக்கறீங்க?''

''சரிதான், முடிஞ்ச அளவுக்கு அந்த டைமுக்குள்ள வந்துடலாம்.''

...............

''முடியலேன்னா அவங்க வீட்லயும் டி.வி. இருக்கு.''

அடுத்த அரை மணி நேரத்தில் ஸ்ரீமதியின் வீட்டு வாசலில் வந்து கார் நின்றிருக்க, கணவனைத் தொடர்ந்து தானும் இறங்கியிருந்தாள் சுபாஹிணி.

''அடடா, அத்தான், சுபா, வாங்க, வாங்க!''



கார் வந்து நின்ற ஒலி கேட்டு வாசலுக்கு வந்து பார்த்த ஸ்ரீமதி, சந்தோஷ ஆச்சரியத்துடன் இருவரையும் வரவேற்றாள்.

''என்ன இவ்வளவு ஆச்சரியம்?''

''பின்ன, இப்படி ஆனந்த அதிர்ச்சி குடுத்தா...''

''எங்கயோ போகத் தயாரா கிளம்பியிருப்பபோல...''

''அது சரிதான். ஆனா இனி அது முடியாது.''

''ஏன்?''

''ஏன்னா நாங்க கிளம்பினதே உங்க வீட்டுக்கு வர்றதுக்காகத்தான.''

''இத நான் நம்பணுமா?''

''இதோ அம்மா வர்றாங்க. வேணும்னா அவங்ககிட்டயே கேளுங்க,'' என்ற ஸ்ரீமதி சுபாஹிணியின் அருகில் வந்து சந்தோஷமாக அவளுடைய கைப்பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

''வாங்க மாப்பிள்ளை ஸார், நாங்க எல்லாரும் இந்த உலகத்துல தான் இருக்கறோங்கறது இப்பவாவது ஞாபகம் வந்ததுக்கு சந்தோஷம்.''

''என்ன அத்தை ஜோக்கடிக்கறீங்க?''

''ஜோக்கா, நான் உண்மையத் தான்பா சொல்றேன்.''

''அது சரி, எங்க அத்தை, மாமாவக் காணல?''

''ஏதோ வேலையா மதியம் போனதுப்பா, இப்ப வந்துடுவார்.''

''ஓ, அப்ப நீங்க ரெண்டு பேர் மட்டும் தான் அங்க நம்ம வீட்டுக்கு வரலாம்னு கிளம்பினீங்களா?''

''இல்லில்ல. அவரும்தான். வந்ததும் சேந்து கிளம்பலாம்னு இருந்தோம்.''

சரியாக அதே நேரம் ராகவனும் உள்ளே வர, ''இதோ உங்க மாமாவே வந்துட்டார் தயா!'' என்றார் காவேரி.

''அட இதென்ன அதிசயம், நாங்க வந்துடுவோம்னு அதுக்குள்ள முந்திக்கிட்டு நீங்களே வந்துட்டீங்களா தயா?''

''என்ன மாமா நீங்க, பெரிய மனுஷங்களுக்கு ஆயிரம் வேலைகளிருக்கும். அடிக்கடி ப்ரொக்ராம் சேஞ்ச் ஆகும்.''

''யாரச் சொல்ற நீ, என்னயா இல்ல உன்னயேவா? எங்கப்பா சுபா?''

''இதோ உள்ள ஸ்ரீகூடப் பேசிட்டிருக்கா,'' என்ற காவேரி காபி, ஸ்நேக்ஸ் எடுத்து வருவதற்காகச் சமையலறைக்குச் செல்ல ராகவனும், தயானந்தும் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

காவேரி இருவருக்கும் ஸ்நேக்ஸ் கொண்டு வந்து கொடுக்க, இருவரும் எடுத்துக் கொண்டனர்.

''அம்மா.''

''என்ன ஸ்ரீ.''

''டிரைவர் கூட நான் ஏர்போர்ட் வரைக்கும் போய்ட்டு வந்துடட்டுமா?''

''ஏம்மா?''

''ஷ்யாமும், ஸ்வேதாவும் வந்துட்டாங்களாம். முதல்ல இங்க வர்றதா சொல்றாங்க. அதிசயமா அவங்களே கூப்புட்டிருக்காங்க,'' என்ற ஸ்ரீமதி சிறிது நேரத்தில் வந்து விடுவதாக அனைவரிடமும் சொல்லி விட்டு டிரைவருடன் கிளம்பியே விட்டிருந்தாள்.



''அது யார் அத்தை ஷ்யாம், ஸ்வேதா?''

தயானந்த் கேட்க, ''அங்க பெங்களூர்ல நம்ம வீட்டுக்குப் பக்கத்து வீட்ல இருக்காங்க தயா. நீ கூட அவங்கள சில தடவ பாத்திருப்ப!'' என்றார் காவேரி.

''ஓ, பாத்தா ஞாபகம் வந்துடும்.''

''அது சரிதான். ஆனா அவங்க பேமிலில எல்லாருக்குமே உங்க குடும்பத்த ரொம்ப நல்லாத் தெரியும்!'' முக்கியமா உன்ன என்று நினைத்துக் கொண்ட காவேரி அதை மட்டும் வெளியே சொல்லவில்லை.

அத்தோடு அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு தயானந்த் மீண்டும் தனது மாமாவுடன் பேசத் தொடங்கி விட்டிருக்க, எழுந்து உள்ளே சுபாஹிணியிடம் வந்திருந்தார் காவேரி.

சரியாக அதே நேரம் வெளியே வருவதற்காக எழுந்திருந்த சுபாஹிணிக்கு, அங்கு அவரைப் பார்த்ததும் திக்கென்றாகி விட்டிருந்தது.

''என்னடியம்மா கண்காணாம ஓடிடுவேன்னு பாத்தா ஒரேயடியா வந்து ஒட்டிக்கிட்ட?''

............

''அது சரி, புடிச்சது புளியங் கொம்புன்னு தெரிஞ்சதுக்கப்புறம் விட்டுட்டுப் போறதுக்கு யாருக்குத் தான் மனசு வரும்.''

............

''ஓ, மேடம் பேச மாட்டீங்களாக்கும்? அது சரி. சும்மாவே நீ யாரையும் மதிக்கமாட்ட. இப்பக் கேக்கணுமா என்ன?''

காவேரி பாட்டுக்கு ஏதேதோ சொல்லிக் கொண்டே போக, அதற்குத் தான் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள் சுபாஹிணி.

''என்னப் பாத்தா எப்படித் தெரியுது உனக்கு? பதிலுக்குப் பேசறதுக்கென்னடி...''

''என்ன பேசினா உங்க கோபம் குறையும்னு தெரிஞ்சிருந்தா நான் ஏன் இப்படி நிக்கப் போறேன் ஆன்ட்டி?''

''என்னடி திமிரா நீ பேசறதப் பாத்தா நான் என்னவோ வேணும்னே கோபப்பட்றேன்னு சொல்ற மாதிரியல்ல இருக்கு? என்ன, பேசு...''

''அத நான் சொல்ல வேற செய்யணுமா ஆன்ட்டி?''

அப்படிச் சொன்ன தன்னைக் காவேரி கண்களில் வெறுப்பு உமிழப் பார்க்க, ''சின்னப் பொண்ணு நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நானும் உங்க பொண்ணு ஸ்ரீமதி மாதிரிதான். என்ன எதிரியா மட்டும் பாக்காதீங்க ப்ளீஸ்...'' என்றாள்.

''என்னடி, எனக்கே அட்வைஸ் பண்றியா?''

''இல்ல ஆன்ட்டி. என்ன காரணத்துனாலயோ என்ன ஆரம்பத்துலிருந்தே உங்களுக்குப் புடிக்காமல் போயிடுச்சு. நான் என்ன சொன்னாலும், எதச் சொன்னாலும் உங்களுக்குத் தப்பா தான் தெரியுது, அதுக்காக நானும் எத்தன நாளைக்குத் தான் பேசறதுக்குத் தயங்கிட்டே இருக்க...''

''என்னடி, ஏன் நிறுத்திட்ட?''

''ஸ்ரீமதி மேல எனக்கும் நிறையவே அக்கறையிருக்கு. அவளுக்காக எல்லாத்தையும் விட்டுட்டு எதுவுமே வேண்டாம்னு நான் போனது உங்களுக்கே தெரியு...''



''போதும், நிறுத்து. உன் நடிப்பையெல்லாம் நான் அப்பவே நம்பல. இப்பவா நம்பப் போறேன்.''

''மன்னிக்கணும், நான் உண்மையா நடந்தத சொல்றேன். அவ்வளவுதான். ஆனா அதுக்கப்புறம் நானே எதிர்பாக்காததெல்லாம் ஏதேதோ நடந்து போச்சு.

''அப்பத்தான் நம்ம எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் அப்பாற்பட்டது தான் நம்ம வாழ்க்கைன்னு எனக்குப் புரிஞ்சது.''

''போதும், போதும். நிறுத்து. விட்டா என்னோட மனச மாத்தி உனக்கு ஆரத்தி எடுக்க வெச்சுடுவ போலிருக்கு! எது எப்படியோ உன்ன எனக்கு எப்பவுமே பிடிக்கப் போறதில்ல. அதோட உன்ன நான் நிம்மதியா இருக்க விடப் போறதுமில்லை.''

என்ன முயன்றும் இப்பொழுது சுபாஹிணியால் எரிச்சலை வார்த்தைகளில் காட்டாது இருக்க முடியவில்லை.

''சரிதான். முடிஞ்சத செய்ங்க, ஆனா நீங்களும் ஒன்ன மனசுல வெச்சுக்கங்க. பாவம், ஏற்கெனவே ஸ்ரீமதி தன்னோட வாழ்க்கைய இழந்து நிக்கறா. அதோட நீங்களும் மேல மேல பாவத்த சேத்துட்டே போய்ட்டிருக்கீங்க. பெத்தவங்க சம்பாதிச்சு வெச்ச சொத்து மட்டுமில்ல. பாவமும் பிள்ளைங்களுக்குத்தான்னு சொல்லுவாங்க. அப்படிப் பாத்தா...''

''ஏய் என்னடி...'' என்று கோபத்துடன் ஓரடி எடுத்து வைத்திருந்த காவேரியை மேலும் அலட்சியத்துடன் பார்த்துச் சிரித்தாள் சுபாஹிணி.

''என்ன ஆன்ட்டி உண்மையச் சொன்னா கோபம் வருதாக்கும்? தயவு செஞ்சு இனிமேலாவது கொஞ்சம் நடைமுறைக்கு வாங்க. எதுவுமே வேண்டாம்னு போன எனக்கு ஒரு வாழ்க்கை அமைஞ்சதும், ரொம்ப ஆசையா எத்தனையோ கனவுகளோட தன் வாழ்க்கைய ஆரம்பிச்ச ஸ்ரீ இப்ப இந்த மாதிரி இருக்கறதும் இப்படி எதுவுமே நம்ம கைல இல்ல.''

''ஆனா ஸ்ரீக்கு சின்ன வயசு தான். திரும்பவும் அவ வாழ்க்கைல வசந்தம் வரும். அப்ப போன சந்தோஷம் நிம்மதி எல்லாமே திரும்பக் கிடைக்கும்...''

''சரிதான் போடி. நீயெல்லாம் பேசி அதக் கேட்டுட்டு நிக்கற அளவுக்கு என் நிலமையொன்னும் அவ்வளவு மோசமாயிடல. அதே சமயம் நீயும் ஒன்ன மனசுல வெச்சுக்க. இனிமேல் நீ நிம்மதியா இருக்க முடியாது. ஏன்னா நான் அதுக்கு விடமாட்டேன்.''

''என்ன மிரட்டறீங்களா?''

''அப்படித்தான்னே வெச்சுக்கோயேன்.''

''நான் அவர்கிட்ட சொல்லிடுவேன். அப்புறம் உங்களுக்குத் தான்...''

''ம், என்ன? உன்ன மாதிரி எத்தன பேர நான் என் வயசுக்குப் பாத்திருப்பேன். உங்கிட்டயெல்லாம் அதுவும் உன்னயெல்லாம் மதிச்சு நான் இவ்வளவு நேரம் நின்னேன் பாரு, அது என்னோட தப்பு.''

...............

''என்ன சொன்ன, வேணும்னா உன் வீட்டுக்காரர் கிட்ட இப்பவே போய்ச் சொல்லு. இல்லாததையும் பொல்லாததையும் கூட சேத்தே சொல்லு.''



அவ்வளவு நேரமும் எப்படியோ, ஆனால் இப்பொழுது சை என்றாகி விட்டிருந்தது சுபாஹிணிக்கு.

இதற்கு முன் இந்த மாதிரியெல்லாம் பேசிப் பழக்கப்படாதவள் என்பதால் மனம் பாரமாகி விட்டிருந்ததோடு, தலையும் விண்விண்னென்று தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

எப்படி இவர்களால் இப்படியெல்லாம் பேசவும், நடந்து கொள்ளவும் முடிகிறதென்று ஆச்சரியமாகவும்.

அந்த வினாடியே கிளம்பி விடப் பரபரத்த மனதை முயன்று திசை திருப்பினாள்.

பின்புறமாக வீட்டிற்கு வெளியே சென்று முன்பு ஒருமுறை வந்தபொழுது ஸ்ரீமதி காட்டிய மரங்களடர்ந்த அந்தக் கல் பெஞ்ச்சில் அமர்ந்து விட்டிருந்தாள்.

பறவைகளின் கீச் கீச் ஒலியும், லேசாகவும் அதே சமயம் இதமாகவும் வருடிச் சென்ற தென்றல் காற்றும் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற முயன்று ஓரளவு அதில் வெற்றியும் கிடைத்தது.

## 33

ஓரளவு மட்டும் தான்.

அதற்கே அவள் எவ்வளவோ சிரமப்பட வேண்டியிருந்தது.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ! ''சுபா, சுபா, எங்க இருக்க?'' என்ற ஸ்ரீமதியின் அழைப்பில் நடப்பிற்கு வந்து திரும்பினாள்.

"ஏ. நீ இங்க இருக்கியா? என்னமா என் தனியா வந்து உக்காந்துட்ட?"

ஸ்ரீமதி அக்கறையுடன் விசாரிக்க, "சும்மா தான் ஸ்ரீ இந்த இடம் ரொம்பப் பிடிச்சிருக்கு. அதான்..." என்றாள்.

"ஏன், எனக்குப் பிடிச்சதெல்லாமே உனக்கும் பிடிக்குது?" என்ற ஸ்ரீமதியின் வார்த்தைகளில் உள்ளர்த்தம் ஏதும் இருக்கிறதோ என்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"என்ன சுபா, திரும்பவும் யோசனை?"

"அதெல்லாமில்ல. அப்புறம் நீ எப்ப வந்த ஸ்ரீ?"

"அஞ்சு நிமிஷமாச்சு. வா உள்ளே போலாம்."

"இங்க நல்லா இருக்குன்னு பாத்தேன். இன்னும் அஞ்சு நிமிஷம். ப்ளீஸ்மா."

"சரிதான். அப்ப உனக்கு டிபன இங்கயே எடுத்துட்டு வர்றேன். இரு..." என்று மறுப்பிற்கு இடமளிக்காமல் உள்ளே வந்து விட்டிருந்த ஸ்ரீமதி, "மம்மி, டிபன் ப்ளேட்ஸத் தர்றீங்களா? நாங்க எல்லாரும் பின்னாடி கார்டன்லயே உக்காந்துக்கறோம்," என்று கேட்டாள்.

"உன்னிஷ்டம்மா. இந்தா எல்லாம் தயாரா தான் இருக்கு எடுத்துட்டுப் போ."

"தேங்க்யூமா!" என்று மகள் டிபன் ப்ளேட்களை வாங்கிக் கொள்ள, "ஸ்வேதா எங்க?" என்று கேட்டார் காவேரி.

"மேல ரூம்ல இருக்கா மம்மி. ட்ரேவல் டயர்டெல்லாம் போக ரிஃப்ரஷ் பண்ணிட்டு. இதோ இப்ப வந்துடுவா."



"சரிதான், ஒரு பத்து நிமிஷம் கழிச்சு திரும்பவும் வர்றியாம்மா?"

"ஏம்மா?"

"காபி எடுத்துட்டுப் போவியாம்..."

"ஓ.கே. ஓ.கே. யார் யார் என்ன குடிப்பாங்களோ கேட்டுட்டு நானே வந்து கலக்கறேன். நீங்க போய் முதல்ல உக்காருங்க. எப்பப் பாத்தாலும் கிச்சன்லயே காயாதீங்க."

உள்ளுக்குள் எவ்வளவு கவலையிருந்தாலும் அதையெல்லாம் துளியும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் பேசும் மகளின் முயற்சி, அதற்காக அவள் படும் சிரமம் என அனைத்துமே பெற்ற தாயான காவேரிக்குப் புரியவே செய்தது.

அது அப்படியே புரிந்ததாலேயே அவருடைய நெஞ்சம் பொறாமைத் தீயில் மேலும் மேலும் கனன்று கொண்டே இருந்தது என்றும் சொல்லலாம்.

மற்றவர்களுக்கெல்லாம் எப்படியோ, ஆனால் தயானந்தின் சிறு வயது முதலே அவனைத் தங்களுடைய வீட்டு மாப்பிள்ளையாகவே எண்ணிப் பார்த்து வந்த காவேரியால் ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட நடப்பை ஜீரணித்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு மகள் தயானந்தை விட்டுவிட்டு வேறொருவனைக் காதலென்று கணவனாகக் கைப் பிடிக்க நேர்ந்த போதே அது துளியும் பிடிக்காமல் கணவன், மகளின் கட்டாயத்தின் பேரில் மட்டுமே சம்மதித்து வைத்தவர்.

நிலைமை இப்படியிருக்க, அதற்குப் பிறகு மகளின் வாழ்க்கையில் நடந்ததோ யாருமே கனவில் கூட எண்ணிப் பார்க்காத ஒன்று.

திருமணமான ஒரு மாதத்திற்குள்ளேயே மகள் கணவனை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நின்றது, அவரை ஏன் அனைவரையுமே பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது.

அவ்வளவு பெரிய கெட்டதிலும் ஒரு நல்லதாக மகள் உடலளவில் எந்தவொரு பெரிய பாதிப்புமில்லாமல் பழையபடி மீண்டு வந்தது அவரைத் திரும்பவும் நம்பிக்கை கொள்ளச் செய்திருந்தது.

மகளின் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வருமென்று ஆணித்தரமாக நினைக்கத் தொடங்கி விட்டிருந்தார்.

மகளின் விபத்திற்குப் பிறகு தாங்கள் யாருமே சற்றும் எதிர்பார்த்திருக்காத விதமாகத் தயானந்த் மகளைக் கவனித்துக் கொண்ட விதமும், அவள் மீது செலுத்திய அளவு கடந்த அக்கறையும் காவேரியுடைய அந்த நம்பிக்கையை மேலும் மேலும் அதிகமாக்கிக் கொண்டே சென்றது என்றால் அது சற்றும் மிகையல்ல.

இந்த நேரத்தில் தான் மகள் உடலளவில் முழுமையாகத் தேறி விட்டிருந்ததை நிம்மதியுடன் உணர்ந்தார் காவேரி.

ஆனால் நாட்கள் செல்லச் செல்லத் தான் அவள் தேறியிருப்பது உடலளவில் மட்டுமே என்பதை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

அந்த அளவிற்கு மனதளவில் மிகவும் மோசமாக அடிபட்டிருந்தாள் ஸ்ரீமதி.

சரிதான், மகளின் இப்போதைய முதல் தேவை மனமாற்றம் என்பதை உணர்ந்து குடும்பத்துடன் உற்றார்



உறவினர், வீடு, தொழில் என அனைத்தையும் விட்டு விட்டு மகளை அழைத்துக் கொண்டு சென்னைக்குக் குடி பெயர்ந்தார்கள்.

அப்படிக் குடும்பத்துடன் ஒரேயடியாகச் சென்னைக்கு வந்து சேர்ந்திருந்த காவேரியின் மனதிற்குள் இருந்த ஒரே நம்பிக்கை தயானந்த்.

ஏற்கெனவே அண்ணன் மகனான தயானந்த்தின் மீது தனக்கு எப்பொழுதும் இருந்து வரும் மதிப்பும், நல்லெண்ணமும் இப்பொழுது பலப்பல மடங்கு அதிகமாகி விட்டிருந்ததை சந்தோஷத்துடன் உணர்ந்தார்.

அதே போல நிம்மதியாகவும்.

அவர் எதிர்பார்த்தது சரியே என்பதைப் போலத் தாங்கள் சென்னைக்குக் குடி பெயர்ந்த பிறகு தயானந்தின் வருகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போனதையும் மனம் நிறைந்த நிம்மதியுடன் கண்டார்.

கூடவே அவன் மகள் மீது காட்டிய அன்பையும், அக்கறையையும்.

இந்த நேரத்தில் அவருக்கு ஒரு பெரிய தலைவலியாக வந்து சேர்ந்தவள் தான் சுபாஹிணி.

ஏன் முதலில் காவேரி அவளை ஒரு பொருட்டாகக் கூட எடுத்துக் கொள்ளவில்லை.

ஆனால் கணவனே அவளைத் தயானந்த்துடன் வெளியே பார்த்ததாக வந்து சொன்னபோது முதன் முறையாக மனதிற்குள் அதிர்ந்து போனார்.

அது மட்டுமா?

போகப் போக மகள் ஸ்ரீமதியுமே அல்லவா அந்த சுபாஹிணியின் புகழ் பாடத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆரம்பத்தில் எப்படியோ, ஒரு எல்லைக்கு மேல் காவேரியால் சுத்தமாக அதைச் சகித்துக் கொள்ள முடியாது போயிற்று.

ஆனாலும் ஒரு முறை கூட அவர் அந்தக் கோபத்தையும் வெறுப்பையும் வெளியே காட்டிக் கொண்டதில்லை. முக்கியமாக மகளிடம்.

ஆனால் கணவனிடமோ அனைத்தையுமே சொன்னார். முக்கியமாகத் தயானந்தின் மூலம் மகளுக்கு மீண்டும் வரவிருக்கும் அந்த ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி நிறையவே எடுத்துச் சொன்னார்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதைப் போல அந்த மாதிரியான எண்ணமே ஒரு துளி கூட இருந்திருக்காத ராகவனுக்கும், போகப்போக ஏன் மனைவி சொல்வதில் ஆசைப்படுவதில் என்ன தவறு இருக்கிறது என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

கடைசியில் அவரும் அதுதான் சரி, அப்படித்தான் நடக்க வேண்டும் என்ற முடிவுக்கே வந்து விட்டிருந்தார்.

அதற்குப் பிறகோ தாங்கள் நினைத்ததைக் கணவன் மனைவி இருவருமே சேர்ந்து செயல்படுத்தத் தொடங்கி விட்டிருந்தனர்.

அப்படி அவர்கள் செய்ததும் இதுதான், மகள் ஆசையுடன் தங்களின் வீட்டிற்கு அழைத்து வந்த அவளுடைய தோழி சுபாஹினியை அவள் அறியாமல் மிரட்டியது.

அதற்குப் பிறகு சுபாஹினி வேலை செய்யும் அலுவலகத்திற்கே நேரடியாகச் சென்று மீண்டுமொரு முறையும் மிரட்டியது.



அதனால் மென்மையான மனம் கொண்ட சுபாஹினி தனது தோழி ஸ்ரீமதிக்காகத் தன்னுடைய உண்மையான காதலை விட்டுக் கொடுக்க நினைத்தது,

இதற்கிடையில் ஸ்ரீமதி தனது இறந்து போன கணவனின் நினைவில் அவரை மறக்க முடியாமல் தற்கொலைக்கு முயன்றது.

சுபாஹினியை ஓடச் செய்வதற்கு இதைவிட ஒரு வலுவான காரணம் கிடைப்பது அரிதென்று அவளிடம் ஸ்ரீமதியைப் பெற்றவர்கள் நடந்ததை மாற்றிச் சொன்னது.

அதாவது தாங்கள் தயானந்தை மறந்து விடச் சொல்லிக் கேட்டதற்காக மகள் அப்படிச் செய்து விட்டாளென்று சுபாஹினியிடம் அப்படியே மாற்றிச் சொன்னது,

அதைத் துளியும் சந்தேகப் படாமல் முழுமையாக நம்பி விட்டிருந்த சுபாஹினியும் அந்த வினாடியில் தனது காதலை ஸ்ரீமதிக்காகத் தியாகம் செய்யத் துணிந்தது.

ஸ்ரீமதியின் பெற்றவர்களிடம் சொல்லி விட்டு வந்தது போலவே உடனே தனது இருபத்து நான்கு மணி நேர ராஜினாமாக் கடிதத்தைத் தனது கைப்படவே எழுதிக் கையெழுத்திட்டு வைத்து விட்டுக் கிளம்பி விட்டிருந்தது வரை அனைத்துமே.

அப்படிச் செய்து விட்டவள், அதற்குப் பிறகு மனதளவில் பட்ட வேதனை.

அப்பப்பா, அது வார்த்தைகளால் விளக்கி விட முடியாத ஒன்றாயிற்றே.

காவேரியைப் போலவே தானும் நடந்ததனைத் தையும் வேதனையுடன் நினைத்துப் பார்த்தாள் சுபா ஹிணி.

ஆனால் இருவரும் இருவேறு துருவங்களில்.

யாரோ வரும் அரவம் கேட்டு திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

இரண்டு கைகளிலும் டிபன் ப்ளேட்டுகளுடன் ஸ்ரீமதி அருகிலேயே வந்திருக்க, ஒரு கையில் இருந்ததைத் தான் வாங்கிக் கீழே வைத்தாள்.

"எடுத்துக்கோ சுபா."

"எடுத்துக்கறேன் ஸ்ரீ. நீயும் உக்காந்து சாப்புடு."

"சரிதான்," என்ற ஸ்ரீமதி தானும் உடனே அமர்ந்து விட்டிருக்க, தோழிகள் இருவரும் டிபன் சாப்பிட்டபடியே பேசத் தொடங்கி விட்டிருந்தனர்.

"அது சரி, நீ ஏன் ரொம்ப டல்லாத் தெரியற?"

பேச்சின் நடுவே ஸ்ரீமதி கேட்க,

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே!" என்றாள் சுபாஹிணி.

"சரிதான். நம்பிட்டேன்."

"நிஜந்தான் ஸ்ரீ."

"தயா அத்தான் ஏதாவது சொன்னாரா? பயப்படாம சொல்லு. நான் கேக்கறேன்."

"அச்சச்சோ, நீ வேறப்பா. இது வரைக்கும் எந்தப் பிரச் சனையுமில்லாம நல்லாதான் போயிட்டிருக்கு."

"அப்ப இனிமேல் வருங்கறயா?"



"நான் எதுவும் சொல்லலப்பா."

"அட என்ன பொண்ணு நீ. அப்படியெல்லாம் எங் களுக்குள்ள எந்தப் பிரச்சனையும் வராதுனு அடிச்சுச் சொல்ல வேண்டாம்?"

"சரிதான். ஆனா முடியலையே."

"ஏன்?"

"ஏன்னா உன்ன மாதிரி பிரச்சனையைத் தீர்த்து வைக்கறதுக்குன்னே ஒருத்தி தயாரா இருக்கும்போது அதுவும்தான் வந்துட்டுப் போகட்டுமே."

"அடப்பாவமே, ஏதோ டல்லாத் தெரியறயே, என் னால முடிஞ்சா எதையாவது செஞ்சு குடுக்கலாமேன்னு ஒரு வார்த்தை கேட்டா நீ என் தலையிலயே மிளகா அரைச் சுடுவ போலிருக்கு!"

"அச்சச்சோ! எனக்கு அதெல்லாம் தெரியாதுப்பா, சமையலுக்கே நானெல்லாம் மிளகாய் அரைச்சதில்ல. என்னைப் போய் என்ன வார்த்தை சொல்லிட்ட..."

"அப்புறம், ஓ... உங்க வீட்டுக்காரர் அரைச்சுக் குடுப் பாராக்கும்."

"ஹலோ... அவரொன்னும் அதையெல்லாம் அரைக்க மாட்டார்."

"ஓ, தேங்காய மட்டும் தான் அ..."

அதே நேரம், "ஓ இங்க இருக்கியா?" என்று ஒரு பெண் தங்களை நோக்கி வர, "வா ஸ்வேதா!" என்று புன்னகை யுடன் வரவேற்றாள் ஸ்ரீமதி.

"அப்புறம் சுபா, இவ பேர் ஸ்வேதா, பெங்களூர்ல நம்ம வீட்டுக்குப் பக்கத்து வீட்ல இருக்காங்க. அன்ட்

ஆல்ஸோ மை ஃப்ரண்ட்.'' என்று அந்த ஸ்வேதாவை சுபாஹிணிக்கு அறிமுகப்படுத்தியவள், சுபாஹிணியை யும் ஸ்வேதாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

''ஓ! நீ கூட ஒரு தடவ சொன்னியே. சுபான்னு ரொம்ப அழகா ஒருத்தங்கன்னு...''

''ம். ஆமா ஸ்வேதா, அந்த சுபாஹிணி தான் இவங்க. என்ன நான் சொன்னது சரிதான?''

''சரி ஸ்ரீ. அப்புறமென்ன சொல்லு?''

''ஏய் முதல்ல நான் கேள்வி கேட்டதுக்குப் பதில் சொல்லு.''

''அதான் விடுன்னு சொல்றேனில்ல,'' என்ற ஸ்வே தாவை ஸ்ரீமதி புரியாமல் பார்க்க, ஏதோ புரிவதைப் போலிருந்தது சுபாஹிணிக்கு.

''என்ன ஸ்வேதா?''

''இல்ல, நீ எதையுமே மிகைப்படுத்திச் சொல்லுவேன்னு தெரியும். ஆனா இந்த அளவுக்கு ம்கூம் நான் கொஞ்சங் கூட எதிர்பாக்கல.''

''நீ என்ன சொல்ற?''

இப்பொழுது சுபாஹிணிக்கு நன்றாகவே புரிந்து விட்டிருக்க, ''அவங்க என்ன அழகா இல்லேன்னு... ம்கூம் அதுக்கும் மேல கூட...''

சுபாஹிணி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. உடனே அவளை இடைமறித்திருந்தாள் ஸ்ரீமதி.

''அப்படியா ஸ்வேதா, இல்லதான, நீ அந்த மாதிரி அர்த்தத்துல சொல்லல தான.''



''அது சரிதான் ஸ்ரீ. நீ கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல் லிட்டேன்னு மட்டும் தான் நான் சொல்றேன். ஆனா சுபாஹிணி தான் இன்னும் கூட ஏதேதோ...''

அதெப்படி நீ அப்படி சொல்லலாமென்று ஸ்ரீமதி ஸ்வேதாவைப் பிடித்துக் கொண்டு விட்டிருக்க, தொடர்ந்து அவர்கள் பேசிய எதுவுமே சுபாஹிணியின் கவனத்தில் பட்டிருக்கவில்லை.

ஆனால் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது.

ஏனோ இந்த ஸ்வேதாவுக்குத் தன்னைப் பிடிக்க வில்லை என்பது தான் அது.

ஆனால் அதெல்லாம் ஒரு சில வினாடிகள் தான். உடனே சரிதான், இந்த ஸ்வேதாவுக்கு ஏன் தன்னைப் பிடிக்க வேண்டுமென்று மனதைத் திசை திருப்பிக் கொண்டாள்.

''அப்புறம் சுபா...''

''என்ன ஸ்ரீ, சொல்லு.''

''இல்ல, ஒண்ணுமில்ல.''

''அட என்னமா, சொல்லு.''

''இல்ல, ஸ்வேதா சொன்னத நீ தப்பா எடுத்துக்காத...''

''அப்படி அவங்க என்ன சொன்னாங்க, தப்பா எடுத் துக்கற அளவுக்கு?''

''அதில்ல...''

''கூல் டவுன் ஸ்ரீ. கருத்துக்கள் எப்பவுமே வேறுபடும். ஒருத்தருக்கு ரொம்பப் பிடிச்சது இன்னொருத்தருக்குச் சுத்தமாவே பிடிக்காம இருக்கலாம். ஒண்ணுமே இல்லாததப் போய் நீ ஏன் இந்த அளவுக்கு எடுத்து ஃபீல் பண்ணிட்

டிருக்க?'' என்று சுபாஹினி உண்மையான ஆச்சரியத் துடன் கேட்க, ''அதான...'' என்றாள் ஸ்வேதா.

ஒன்றுமில்லாத ஒரு சின்ன விஷயத்திற்கே இப்படி வருந்துகிறாளே, இவளுடைய தாயும், தந்தையும் தன் னைப் படுத்தும் பாடு மட்டும் ஸ்ரீமதிக்குத் தெரிந்தால் என்று சுபாஹினியால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

மேலும் ஒரு மணி நேரமும் கூட மூன்று பெண்களும் வெளியே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

மற்ற இருவருக்கும் எப்படியோ, என்ன முயன்றும் சுபாஹினியால் தான் ஏனோ தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடியவில்லை.

அந்த அளவிற்கு ஒன்றுமே இல்லாததை மிகைப் படுத்தியும் பெரிய விஷயங்களை மிகவும் சாதாரணம் போலவும் எடுத்துப் பேசிய ஸ்வேதாவின் செயற்கை யான பேச்சு அவளை ஒரு மாதிரி எண்ண வைத்திருந்தது.

முக்கியமாகப் பெரும்பான்மை நேரம் ஸ்வேதா அவள் மட்டுமே பேசிக் கொண்டிருந்ததோடு, மற்ற இருவரை யும் அவள் பேச விட்டிருக்காததும்.

''என்னமா, மூணு பேருக்கும் இன்னுமா பேச்சு முடியல? சாப்பிடலாம். எழுந்து வாங்க.'' என்று எட்டு மணிக்கு இரவு உணவுக்காகக் காவேரி வந்து அழைக்க, மூவரும் எழுந்து உள்ளே வந்தனர்.

ஒரு சிறு உதவி கூடச் செய்யாமல் சாப்பிட சுபா ஹிணிக்கு ஏனோ ஒரு மாதிரியாக இருந்தது.

ஸ்ரீமதியின் தந்தையும், தனது கணவனும் ஏற்கெனவே சாப்பிட வந்து அமர்ந்திருக்க, சாப்பிடத் துளியும்



விருப்பமே இல்லா விட்டாலும் கூட மற்றவர்களுடன் தானும் சென்று அமர்ந்தாள்.

ஸ்ரீமதியின் தந்தை ராகவன் தன்னை நலம் விசாரித் துப் பேச, தானும் புன்னகையுடன் சில வார்த்தைகள் பேசினாள்.

அவர் அப்படிப் பேசியது கூடத் தனது கணவனுக் காகத் தான் என்பது அவளுக்குப் புரியாமல் இல்லை.

முன்பு நடந்ததனைத்தும் நினைவிற்கு வர சுபாஹினி யாலும் நடப்புடன் ஒன்றி இயல்பாக இருக்க முடிந் திருக்கவில்லை.

முள்ளின் மேல் நிற்பது போல மனதிற்குள் தவித்துப் போனாள்.

காவேரி அனைவருக்கும் உணவு பரிமாறியிருக்க, அனைவரும் உண்ணத் தொடங்கி விட்டிருந்தனர்.

''அப்புறம் தயா...''

''என்ன அத்தை, சொல்லுங்க.''

''உனக்கு...''

''ம். என்ன அத்தை?''

''இல்ல... உனக்கு பி.ஏ. செலக்ட் பண்ணிட்டியா?''

''ஏன் கேக்கறீங்க?''

''இல்லன்னா எனக்குத் தெரிஞ்ச பொண்ணு ஒருத்தி இருக்கா. ரொம்ப பிரில்லியண்ட். நல்லாப் படிச்சும் இருக்கா. அதான்...''

''ஓ...''

''என்ன தயா, நான் சொல்றது பிடிக்கலையா?''

"அப்படியெல்லாம் இல்ல அத்தை, அப்படி நினைச்சதும் யாரையும் எடுத்துட முடியாது. இண்ட்டர்வ்யூல செலக்ட் ஆகணும்."

"ஓ! அப்ப சுபாவ அப்படிதான் எடுத்தீங்களா அத்தான்?" எனறு பட்டென்று கேட்டு விட்டிருந்தாள் ஸ்ரீமதி.

"தேவா செலக்ஷன்."

"ஓ. அப்ப நீங்க இண்ட்டர்வ்யூ பண்ணியிருந்தா செலக்ட் ஆகியிருக்கறது கஷ்டம்னு சொல்றீங்களா?" ஸ்வேதா கேட்க, "என்ன கேள்வி கேட்டுட்ட. லைஃப் பாட்னராவே செலக்ட் பண்ணிட்டாராம். போயும் போயும் இண்ட்டர்வ்யூலயா சுபாவ செலக்ட் பண்ணாம விட்டிருப்பார்?" என்று வரிந்து கட்டிக் கொண்டு கேட்டாள் ஸ்ரீமதி.

மற்றவர்களுக்கு எப்படியோ சுபாஹினி மனதளவில் நெளியத் தொடங்கி விட்டிருந்தாள்.

மனைவியின் நிலை புரிய, அந்தப் பேச்சை அத்தோடு விட்டுவிட எண்ணினான் தயானந்த்.

ஸ்ரீமதியின் கேள்வியில், "அது சரிதான்," என்று தானும் உடனே ஒத்துக் கொண்டு விட்டிருந்தாள் ஸ்வேதா.

"என்ன தயா, அப்ப முடியாது, இல்லையா?"

"இல்ல அத்தை. அதப் பாத்து தான் முடிவு பண்ணணும். எதுக்கும் என்ன ஆபீஸ்ல வந்து பாக்கச் சொல்லுங்க."

"செலக்ட் ஆகறதுக்கு முதல் தகுதி அழகா இருக்கணுமா அத்தான்?"



ஸ்ரீமதி விளையாட்டாகக் கேட்க, "வாயாடி! பேசாம சாப்புடு," என்று தானும் அதேபோல அவளை அதட்டினான் தயானந்த்.

"நான் சொன்ன பொண்ணும் வேற யாருமில்ல. இந்த ஸ்வேதா தான்!" என்று காவேரி தனக்கு எதிரே அமர்ந்து கொண்டிருந்த பெண்ணை நோக்கிக் கை நீட்ட, "அப்படியா?" என்றான்.

"எப்படி அத்தான் ஃபர்ஸ்ட் டெஸ்ட்ல பாஸாயிடுவாளா?" என்று மீண்டும் விளையாட்டாக யோசிக்காமல் கேட்டு விட்டிருந்த ஸ்ரீமதி, உடனே, "ஸாரி, ஸாரி அத்தான்!" என்று அசடு வழியச் சொன்னாள்.

ஆனால் அது தயானந்த்தின் கவனத்தில் பட்டிருக்கவில்லை என்பதோடு, "எதுக்கும் உன் சர்ட்டிஃபிகேட்ஸோட நாளைக்கு ஆபீஸ்ல வந்து என்னப் பாரு," என்று அந்த ஸ்வேதாவைப் பார்த்துச் சொன்னான்.

"தேங்க் யூ ஸார்."

"இவள நீ பெங்களூர்லயே சில முறை பாத்திருக்க தயா," என்று தனது தாய் சொல்ல, "அது சரிதான் அத்தான்," என்று தானும் சொன்னாள் ஸ்ரீமதி.

"இருக்கலாம். ஆனா எங்க நீ வளவளன்னு பேசிட்டே இருப்பியே, அதனால பாத்திருந்தாலும் மறந்திருப்பேன்."

"ம். சொல்ல மாட்டிங்க. இனிமேல் பாருங்க அத்தான், நீங்களாப் பேசினாக்கூட நான் பேசவே மாட்டேன்."

"அட, சரிதான். அதையும் பாத்துடலாம்."

"ஆனா நான் உங்கள நிறைய முறை பாத்திருக்கேன் ஸார்," என்று ஸ்வேதா சொல்ல, "ஓ அப்படியா?" என்ற

வன் அவளுடைய படிப்பு, வேலை அனுபவம் பற்றிச் சிலவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''வேலைக்காகத் தான் இவளோட அண்ணா சென்னைக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகி வந்திருக்கான். எனக்கும் ஏதாவது நல்ல வேலையிருந்தா சொல்லுங்க ஆன்ட்டின்னு எங்கிட்ட எப்பப் பார்த்தாலும் கேட்டுட்டே இருக்காளேன்னு தான் ஒரு வார்த்த சொன்னேன் தயா. என் வார்த்தைக்காகன்னு பாக்க வேண்டாம். இன்டர்வ்யூல செலக்ட் ஆனா மட்டும் கன்ஸிடர் பண்ணு.''

காவேரி சொல்ல, ''பின்ன தயாவுக்கு சிபாரிசு தான் எப்பவுமே பிடிக்காதே. அத நீ சொல்ல வேற செய்யணுமா?'' என்று மனைவியைப் பார்த்துச் சிரித்தார் ராகவன்.

உடனே, ''அதான...'' என்று தானும் அதையே ஆமோதித்த ஸ்ரீமதி, ''ஆனாலும் நீ நம்பிக்கையோட இரு. உண்மையான தகுதிக்கு அத்தான்கிட்ட எப்பவும் மதிப்பிருக்கும்!'' என்று ஸ்வேதாவைப் பார்த்துச் சொன்னாள்.

''சரி. நாங்க அப்பக் கிளம்பறோம்.''

அந்த சூழ்நிலையே துளியும் பிடிக்காமல் அமர்ந்திருந்த சுபாஹிணிக்கு அதற்குப் பிறகு தான் உஷ் அப்பாடா என்றிருந்தது.

''என்ன தயா சாப்பிட்டதும கிளம்பிட்ட?'' என்று தனது தாய் கேட்க, ''அதான... ஏன் அத்தான்?'' என்றாள் ஸ்ரீமதி.

''பின்ன, வந்து எவ்வளவு நேரமாச்சு.''

''அது சரிதான். இன்னைக்கு என்ன அதிசயமா ரொம்ப நேரமாகியும் பேசாம இருக்கீங்களேன்னு இப்பதான் நினைச்சேன்,'' என்றாள்.



''ஓ, அதான் எனக்கும் மனசுக்குள்ள கிளம்பலாம்னு தோணுச்சா?''

''ம், அப்ப நான் இருங்க அத்தான், நாளைக்குப் போலாம்னு சொன்னா இருந்திடுவீங்களாக்கும்?''

''ஷ்யூர், ஆனா இன்னொரு நாளைக்கு.''

## 34

அடுத்த சில நிமிடங்களில் அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு மனைவியுடன் கிளம்பியிருந்தான் தயானந்த்.

மனைவி பேசாமலே வர, ''அப்படியென்ன மேடம் யோசனை?'' என்றான்.

''ம், நினைச்ச மாதிரியே என் ஃபேவரிட் ப்ரொக்ராமப் பாக்க முடியாமப் போயிடுச்சேன்னு ஃபீல் பண்ணிட்டிருக்கேன்.''

''ம், அதுக்குத் தான் எப்பவுமே பாஸிட்டிவ் திங்கிங் வேணுங்கறது.''

''சொல்ல மாட்டிங்க.''

''அட, என் சுபாவுக்குக் கோபம் போல.''

''அச்சச்சோ! உங்க மேலயா, அதுவும் எனக்கா? ம்கூம். சான்ஸே இல்ல.''

''ஏன் கோபப்பட்ற உரிமை இல்லேங்கறியா?''

அப்படிக் கேட்ட கணவனை எதுவும் பேசாமல் திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

''ம். என்ன?''

''தெரியல தயா, அது கொஞ்சம் யோசிக்க வேண்டிய விஷயம் தான்.''

''என்ன நீ...''

''அந்த ப்ரொக்ராம விடுங்க. அது ரொம்பச் சின்ன விஷயம் தான். ஆனா எம்மேல உங்களுக்கு...''

''ம்.''

''என் மனசப் பத்தி, அதுல இருக்கற உணர்வுகளப் பத்தியெல்லாம் உங்களுக்கு அக்கறை இல்லையோன்னு தோணுது.''

''ஓ, அப்ப வேறெதுல அக்கறையிருக்குன்னு நினைக்கற? இல்ல, எது மேலயுமே இல்லேங்கறியா?''

''இருக்கு. என்...''

''அட, என்னமா?''

''என் உடம்பு மேல.''

அப்படிச் சொன்ன மனைவியை உணர்ச்சி துடைக்கப் பட்ட முகத்துடன் பார்த்தான் தயானந்த்.

என்னதான் யோசிக்காமல் சொல்லி விட்டிருந்தாலும் நாம் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாதோ என்று சுபா ஹிணிக்கும் அதற்குப் பிறகு ஒரு மாதிரியாகி விட்டிருந் தது.

''ஸாரி தயா.''

...............



உணர்ச்சி துடைக்கப்பட்ட கணவனின் அந்த முகம் அவளை என்னவோ செய்திருக்க, அவளையறியாம லேயே மன்னிப்புக் கேட்டிருந்தாள்.

''நான் அப்படிச் சொன்னது த.....''

''நான் உன்ன ரொம்பவும் கஷ்டப்படுத்தறேனா சுபா?''

''அச்சச்சோ, நான் ஒரு முட்டாள் தயா. யோசிக்காம ஏதோ ஒரு வேகத்துல அப்படிக் கேட்டுட்டேன்.''

''எப்படிக் கேட்டாலும் மனசுல இருக்கறது தான் வெளிய வரும்.''

''நான் அப்படிச் சொன்னது தப்பு தான் தயா. ப்ளீஸ் என்ன மன்னிச்சுடுங்களேன்.''

''பரவாயில்ல. விட்டுடு.''

...............

''அட என்னமா, ஃப்ரீயா இரு.''

''நான் சொன்.....''

''போதும் சுபா.''

கணவனின் வார்த்தைகளில் தெரிந்த எரிச்சல் அதற்கு மேல் அதைப் பற்றிப் பேசும் துணிவை அவளுக்குத் தந்திருக்கவில்லை.

அடுத்த சில நிமிடங்களில் இருவரும் வீடு வந்து சேர்ந் திருக்க, கணவனுடன் தானும் வீட்டிற்குள் வந்த சுபா ஹிணி, ''உங்களுக்குக் குடிக்கறதுக்குப் பால்...'' என்று கேட்டாள்.

''இப்ப வேண்டாம், ஃப்ளாஸ்க்ல கொண்டு வந்து வெச் சுடு. அப்புறமா எடுத்துக்கறேன். ம். என்ன சொல்லு?''

''இல்ல. ஒண்ணுமில்ல...''

''நானும் பாத்துட்டேன், என்னைக்கு அத்தை வீட்டுக்குப் போய்ட்டு வர்றோமோ, இல்ல அவங்களப் பாக்க நேருதோ, அப்பவெல்லாம் நீ ரெஸ்ட்லெஸ்ஸா ஆயிட்ற.''

''அச்சச்சோ! அப்படியெல்லாம் ஒண்ணு...''

''அதனால முடிஞ்ச அளவுக்கு இனிமேல் அவங்களப் பாக்கறதையும், அவங்க வீட்டுக்குப் போறதையும் அவாய்ட் பண்ணிடலாம்.''

''என்ன தயா நீங்க...''

''நீ கொஞ்சம் முன்னாடி சொன்னது ஓரளவு சரிதாம்மா. இனிமேல் உம் மனசு மேலயும் அக்கறை இருக்கற மாதிரி பாத்துக்கறேன்.''

என்னதான் கணவன் சாதாரணமாகவே சொல்லி விட்டுச் சென்றிருந்தாலும் மனதளவில் துடித்துப் போனாள் சுபாஹிணி.

இனிமேல் தான் இந்த மாதிரி சிறு பிள்ளைத் தனமாக நடந்து கொண்டு விடவே கூடாதென்று வேதனையுடன் நினைத்துக் கொண்டாள்.

கணவன் அவனுடைய அலுவலக அறையில் ஏதோ வேலையாக இருக்க, பால் ஃப்ளாஸ்க்கை டேபிள் மீது வைத்து விட்டு வழக்கம் போலக் குளிப்பதற்காகச் சென்றாள் சுபாஹிணி.

இனிக் கணவன் தன்னுடன் பழையபடி பேசவும், நடந்து கொள்ளவும் மாட்டானோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.



கணவன் அவனே சொன்னது போல எப்பொழுது அவனுடைய அத்தையையும் மாமாவையும் பார்க்க நேருகிறதோ அப்பொழுதெல்லாம் இதே நிலை தானே என்றும்.

முக்கியமாகக் கணவன் அதைக் கவனித்திருந்ததோடு இனிமேல் முடிந்த அளவு அதைத் தவிர்த்து விடவும் செய்யலாமென்கிறானே என்றும், மனதின் மேலும் அக்கறையில்லாமல் இது எப்படிச் சாத்தியம்?

பதினைந்து நிமிடங்களில் குளித்து பிரஸ் செய்து விட்டு வெளியே வந்தவள், கணவனும் படுக்கைக்கு வந்திருந்ததைக் கண்டாள்.

முடியையும், முகத்தையும் திருத்திக் கொண்டு கணவனுக்கு அருகில் வந்திருந்தவள், அவன் இன்னும் பால் அருந்தியிருக்காததைக் கண்டாள்.

''நீங்க இன்னும் பால் எடுத்துக்கல போலிருக்கு?''

''இல்லமா, வேண்டாம்.''

''ஏன்?''

............

''தயா.''

''வேண்டாம்மா. விடு.''

''ஏன் கொஞ்சமாவது குடிங்களேன். பால் குடிக்காதன்னைக்குத் தூக்கமே வராதுன்னு கூட ஒருமுறை சொல்லியிருக்கீங்களே!'' மீண்டும் கணவன் மறுப்பதற்குள் டம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து கணவனுக்கு முன்பாக நீட்டினாள்.

''எடுத்துக்கோங்க தயா.''

கணவன் எதுவும் பேசாமல் பார்க்க, ''ப்ளீஸ்...'' என்றாள்.

''ம்கூம். இந்த மாதிரி பாக்காத. அப்புறம் என்னக் குத்தம் சொல்லிப் பலனில்ல. சொல்லிட்டேன்.''

என்ன, எதற்குக் குற்றம் சொல்லிப் பலனில்லையென்று சொல்கிறான்...

அடுத்த வினாடி சுபாஹிணிக்கும் விஷயம் புரிந்து விட்டிருக்க, சூடாகத் தொடங்கியிருந்த முகத்தைக் கணவன் அறியாது மறைக்க முயன்றாள்.

............

''எடுத்துக்கோங்க.''

''ம்கூம்.''

''ஏன்?''

............

''சரிதான்,'' என்று படுக்கையில் கணவனுக்கருகில் அமர்ந்தவள், ''வேணும்னா பாப்பாவுக்கு நானே ஊட்டி விடட்டுமா?'' என்று கேட்டாள்.

..........

கணவன் அதற்குப் பதில் எதுவும் சொல்லாததில், ''ஓ.கே. மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி!'' என்றாள்.

அதே நேரம் படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்த தயானந்த், மனைவியிடமிருந்து டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டான்.

''உனக்கு?''

''ம்கூம், எனக்குப் பாலே பிடிக்காதுப்பா.''



''அப்பன்னா இனிமேல் உனக்கு என்ன குடிக்கப் பிடிக்குமோ அதையே ரெண்டு பேருக்கும் எடுத்துட்டு வந்துடு.''

''எனக்கு எதுவுமே பிடிக்காதே, உங்களத் தவிர.''

''கொஞ்சம் முன்னாடி தான் யாரோ ஏதோ சொன்னாங்க...''

''அது யாரு தயா, என்ன சொன்னாங்க...''

''ம்....''

''சொல்லுங்க,'' என்றவள் கணவன் குடித்து முடித்து விட்டுக் கொடுத்த பால் டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

''இதோ வர்றேன்,'' என்று எழுந்து சென்றவள் சில வினாடிகளில் திரும்பி வந்தாள்.

''சுபா.''

கணவன் அழைக்க மீண்டும் அவன் அருகில் சென்று பழையபடி அமர்ந்தாள்.

''நான் கேக்கறதுக்குக் கொஞ்சம் சீரியஸா பதில் சொன்னா பரவாயில்ல.''

''நான் கார்ல வரும்போது யோசிக்காம படு முட்டாள் தனமா அப்படிச் சொன்னது தப்புதான் தயா. தயவு செஞ்சு அதப் பத்தி மட்டும் எதுவும் கேக்காதீங்களேன். அதோட...''

''அதோட?''

''எனக்குத் தான்...''

''ம், உனக்குத் தான்...''

அதற்கு மேல் எதையும் பேசக் கூட முடியாத அளவிற்கு சுபாஹிணியின் முகம் சூடாகச் சிவந்து விட்டிருக்க, உதட்

டைக் கடித்தபடி கீழே குனிந்து கொண்டு விட்டிருந்தாள்.

மனைவியின் நிலை புரியத் தனது கைகளால் அவளுடைய முகத்தை ஏந்திக் கொண்டான் தயானந்த்.

கணவனின் பார்வை தனது உதடுகளில் நிலைத்திருக்க, அப்படியே அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டாள்.

மனைவியின் மனம் புரியத் தானும் அவளை இதமாக அணைத்துக் கொண்டான் தயானந்த்.

''சுபா.''

''ம்.''

''சொல்லுமா, உனக்கு என்ன பிரச்சன?''

அப்படிக் கேட்ட கணவனை மனமே இல்லாமல் லேசாக நிமிர்ந்து பார்த்தாள் சுபாஹிணி.

''என்ன தயா இப்பப் போ...''

''இல்லடா, இன்னைக்குக் கொஞ்சம் பேசலாம்னு பாக்கறேன்.''

...........

''சுபா, சொல்லுமா.''

''ம்கூம், நான்... நான் பேசற மூட்ல இல்ல!'' என்றவள் கணவனை மேலும் இறுக அணைத்துக் கொள்ள, அதற்கு மேல் தயானந்த்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

மனைவியைத் தனது கைகளுக்குள் கொண்டு வந்து, எல்லையற்ற காதலுடன் அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.



# 35

எட்டு மணிக்கு வழக்கம் போலக் கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பியிருக்க, அவனை வழியனுப்பி விட்டு வீட்டிற்குள் வந்தாள் சுபாஹிணி.

சிகிச்சை முடிந்து தனது தோழி ஊர் திரும்பியிருக்க, அன்று அவளைச் சென்று பார்த்து விட்டு வந்து விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

அப்படியே முடிந்தால் தன்னுடைய தாய் தந்தையையும் சென்று பார்த்துவிட்டு வர வேண்டுமென்றும்.

அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க, சென்று எடுத்துப் பார்த்தாள். ஸ்ரீமதி.

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தவள், ''சொல்லு ஸ்ரீ...'' என்றாள்.

..............

''அப்படியா, ரொம்ப சந்தோஷம். வா.''

மேலும் சில நிமிடங்களும் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவள், சரிதான் தனது வேலைகளை மறுநாள் பார்த்துக் கொள்ளலாமென்று குளிக்கப் போனாள்.

ஸ்ரீமதி வருவதற்குள் குளித்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று வந்தவளுக்கு, மீண்டும் அழைப்பு வந்திருக்க, சென்று எடுத்துப் பார்த்தாள்.

தனது தோழி ரேவதி லைனில் இருக்க, சந்தோஷமாக அட்டெண்ட் செய்து பேசினாள்.

சிறிது நேரம் பேசியவள் அன்று நிச்சயம் வருவதாகத் தோழிக்கு வாக்குக் கொடுத்துவிட்டு மொபைலைக் கீழே வைத்தாள்.

சொன்னது போல ஒரு மணி நேரத்தில் ஸ்ரீமதி வந்திருக்க, சந்தோஷமாகச் சென்று வரவேற்றாள் சுபாஹிணி.

''ஸாரி சுபா.''

''ஏன், என்னாச்சு ஸ்ரீ.''

''இன்னைக்கு வந்து நான் உன்ன டிஸ்டர்ப் பண்ணினதுக்கு.''

''ஏய் என்ன நீ, அப்ப நாளைக்கு வந்தா டிஸ்டர்ப் இல்லேங்கறையா?''

''அத நீதான் சொல்லணும்.''

''நீ எப்ப வந்தாலும் எனக்கு ரொம்ப சந்தோஷம் தான் ஸ்ரீ. உள்ள வா,'' என்று அவளைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு வந்தாள்.

''ஸாரி சுபா.''

''திரும்பவும் என்ன?''

''ஒண்ணுமில்ல...''

''ஏய் என்ன நீ, இங்க வா. உக்காரு. அப்படி என்னதான் உம் மனசுக்குள்ளிருந்து உன்ன இந்தப் பாடு படுத்துதுன்னு முதல்ல சொல்லு.''

............

''ம், சொல்லு ஸ்ரீ.''

..........

''சரிதான். எங்கிட்ட சொல்லக் கூடாததுன்னா வேண்டாம்.''



''அப்படியெல்லாம் இல்ல சுபா. முக்கியமா இதப்பத்தி உங்கிட்டப் பேசத்தான் இன்னைக்கு நான் இங்க வந்ததே.''

அப்படிச் சொன்ன ஸ்ரீமதியை என்ன என்பதைப் போலப் பார்த்தாள் சுபாஹிணி.

''அது... அது வந்து...''

ஸ்ரீமதி ஏதோ முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கேட்கப் போகிறாளென்பது புரிந்து விட்டிருக்க, ''நாம வேணும்னா மேல ரூமுக்குப் போயிடலாமா ஸ்ரீ?'' என்று கேட்டாள்.

''சரிதான் சுபா. எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணி கிடைக்குமா?''

''அச்சச்சோ! மறந்தே போய்ட்டேன் பாரு!'' என்று உடனே சுபாஹிணி எழுந்திருக்க, ''ம்கூம். சாப்பிடவெல்லாம் எதுவுமே வேண்டாம். இப்பதான் டிபன் முடிஞ்சதும் வர்றேன்,'' என்றாள்.

''சரிதான். கொஞ்சமா ஏதாவது...''

''ம்கூம். வேண்டாம்பா. வயித்துல இடமில்ல. காபி மட்டும் வேணும்னா அதுவும் அரை டம்ளர் போதும்.''

''இதோ...'' என்று சுபாஹிணி கிச்சனுக்கு வர, தானும் உடன் வந்தாள் ஸ்ரீமதி.

''நீ உக்காரு ஸ்ரீ.''

''அங்கதான் தண்டனைன்னா, எனக்கு நீயும் இங்க அதே தண்டனையக் குடுக்கறயா சுபா?''

''அச்சச்சோ! என்ன ஸ்ரீ நீ, சரிதான் வா. அப்ப உனக்கு நிறைய வேல குடுக்கறேன்.''

''சந்தோஷமா செய்வேன். அதுவும் சொல்றது நீயாச்சே.''

அடுத்த ஐந்து நிமிடங்களில் காபி கப்களுடன் தோழிகளிருவரும் மாடிக்கு வந்திருக்க, ''வா ஸ்ரீ, இங்க உக்காரலாம்,'' என்று வெளியே வராண்டாவிற்கு அழைத்தாள் சுபாஹிணி.

''வாவ், எனக்கும் இந்த வீட்டுக்கு வந்தாலே இங்கதான் உக்காரப் பிடிக்கும்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தவளை, ''அப்படி மேடம் இந்த வீட்டுக்கு எத்தன தடவ வந்திருக்கீங்களாம்?'' என்று கேட்டாள் சுபாஹிணி.

''ம். எப்பவெல்லாம் வர்றேனோ, அப்பவெல்லாம்.

''ஆமா, நீ என்ன அத்தான விட க்ராஸ் கொஸ்டின்ஸ் நிறையக் கேக்கற?''

''பின்ன சும்மாவா, நான் என் வீட்டுக்காரர் மாதிரியேதான் எல்லாத்துலயும்.''

''போதுன்டியம்மா, ஒன்னும் தாங்க முடியல.''

''சரிதான். கண்ணு வைக்காத.''

''கண்ணு வைக்கறதா, ரொம்ப சந்தோஷமா பெருமையா இருக்கு சுபா.''

''ஓஹோ! காபிய எடுத்துக்கோ ஸ்ரீ. ஆறிடும்.''

''எனக்கு இன்னும் சூடு ஆறணும்,'' என்றவள், ''அப்புறம் சுபா...'' என்றாள்.

''சொல்லு ஸ்ரீ, கொஞ்சம் முன்னாடி கூட ஏதோ கேக்கணும்னு சொன்னியே.''



என்னதான் வெளியே தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டிருந்தாலும், உள்ளுக்குள் மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது சுபாஹிணிக்கு.

''என்ன மன்னிச்சுடு சுபா.''

அப்படிச் சொன்னவளைப் புரியாமல் பார்த்த சுபாஹிணி, ''என்ன ஸ்ரீ, என்னாச்சு உனக்கு?'' என்று கேட்டாள்.

''இன்னும் எதுவுமே ஆகாம குத்துக்கல் மாதிரி இப்படி உயிரோட இருக்கேனேன்னு தான் கவலையா இருக்கு.''

கூடவே ஸ்ரீமதியின் கண்களும் கலங்கி விட்டிருக்க, பதறிப் போனாள் சுபாஹிணி.

''ஏய் ஸ்ரீ, என்ன பேசற நீ, என்னாச்சு உனக்கு?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

''அதான் சொன்னேனே, இன்னும் இப்படி உயிரோட இ...''

''போதும் ஸ்ரீ, இனிமேல் இந்த மாதிரியெல்லாம் பேசாத.''

''எப்படிப் பேசாம இருக்க முடியும்? என்னால எத்தன பேருக்குச் சிரமம்...''

''என்னமா, என்னாச்சு உனக்கு? எதுவானாலும் பரவாயில்ல. நான் உன் ஃப்ரண்ட். ம்கூம். டியர் மோஸ்ட் ஃப்ரண்ட். இல்லையா, சொல்லு. உம் மனசுல இருக்கற பாரம் கொஞ்சமாவது குறையும். அதோட என்னால ஏதாவது உதவி ஆகணும்னாலும் செய்ய...''

''ஏன், நீ ஏற்கெனவே எனக்குச் செஞ்சுட்டிருக்கற உதவி பத்தாதா சுபா?''

............

''என்னமா பாக்கற? உதவி மட்டுமா? என்னால நீ எந்த அளவுக்கு மன வேதனைய அனுபவிச்சிருக்க, என் இப்பவும் அனுபவிச்சு...''

''கொஞ்சம் புரியற மாதிரி பேசு ஸ்ரீ.''

''எனக்கு ஆரம்பத்துலிருந்து நடந்ததெல்லாம் தெரிஞ்சு போச்சு.''

''அப்பிடி என்ன தெரிஞ்சு போச்சு உனக்...''

''என் அம்மாவும், அப்பாவும் உன்னப் படுத்தின பாடு. அதுக்காக ம்கூம் எனக்காக நீ அத்தானக் கூட வேண் டாம்னு வேலைய ரிஸைன் பண்ணிட்டுப் போனதிலிருந்து எல்லாமே...''

...........

''என்ன சுபா, இல்லேன்னு சொல்றியா...''

''அதெல்லாம் ஒன்னுமில்லயே. நீ ஏன் இப்படிப் பைத் தியம்...''

''ஆமாம்மா, பைத்தியம் தான். என் அம்மா அப்பா கூட என்ன அப்படித்தான் பாக்கறாங்க. கருணையே இல் லாத அந்தக் கடவுள் தான் எனக்கு அப்படி எதையுமே...''

''வேண்டாம் ஸ்ரீ.''

''என்னடி வேண்டாம்.''

''உனக்கென்ன பெரிய தியாகின்னு நினைப்போ?''

''உன் சந்தோஷத்த நீ பணயம் வெச்சுட்டா, உடனே நான் சந்தோஷமா இருந்துடுவேன்னு நினைச்சுட்டியா?

''என்னப் பெத்தவங்க தான் புத்தியில்லாம ஏதேதோ சொன்னாங்கன்னா நீ அவங்கள எதிர்த்து நின்னிருக்க வேண்டாம்?




''தயா அத்தான் எம்மனசுல இருக்கறதா நான் உங் கிட்ட எப்பவாவது சொல்லியிருக்கேனா?

''என்னப் பெத்தவங்கள மாதிரியே நீயும் ஒன்னத் தெரிஞ்சுக்கோ.

''இந்த ஜென்மம் மட்டுமில்ல. இன்னும் எத்தன ஜென்மங்கள் எடுத்தாலும் என் அர்விந்தத் தவிர வேற எந்த ஆம்பளையையும் என்னால ஏத்துக்க முடியாது.

''அதனால யாரும் தியாகியாக வேண்டாம்.''

மேலும் ஏதோ சொல்ல வந்த ஸ்ரீமதியால் அதற்கு மேல் முடியாமல் போய்விட்டிருக்க, அவளுடைய கைகளி லேயே முகம் புதைத்துக் குலுங்கி அழத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதைப் பார்த்த சுபாஹிணிக்கும் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

அழ வேண்டாம் என்று சொல்லக் கூடத் தோன்றா மல் கண்ணீருடன் தானும் அப்படியே நின்று விட்டிருந் தாள் சுபாஹிணி.

சில வினாடிகளில் ஓரளவு அழுகை குறைந்து ஸ்ரீமதி தானே நிமிர்ந்து பார்க்க, ''ஸாரிமா!'' என்றாள் சுபாஹிணி.

''எதுக்கு?''

''உனக்கு...''

''அத நான் கேக்கணும் சுபா,'' என்றவள், ''என்ன மன் னிச்சுடுவியாம்மா?'' என்று கேட்டாள்.

''என்ன ஸ்ரீ நீ...''

''சரிதான் புரியுது, நான் கேக்கறது எங்க அம்மா அப்பா செஞ்ச தப்புக்கு...''

''போதும் விடு ஸ்ரீ.''

''அதுக்குதான் பேசிட்டிருக்கேன். அவங்க இந்த அளவுக்குப் போவாங்கன்னு நான் கனவுலகூட நினைச்சுப் பாக்கல. யதேச்சையா நேத்து நைட் அம்மாவும், அப்பாவும் பேசிட்டிருந்ததக் கேக்கப் போய்தான் எனக்கு எல்லாமே புரிஞ்சது. அதுலயும் அவசியமே இல்லாம உன்ன எந்த அளவுக்குக் கொடு...''

''விட்டுடு ஸ்ரீ.''

''முடியல சுபா. நான் எங்க அம்மா அப்பாவ இந்த மாதிரி இருப்பாங்கன்னு நினைச்சுக் கூடப் பாத்ததில்ல. அது எப்படி சுபா இப்பதான் உயிருக்குயிரா நேசிச்சவர இழந்து நிக்கறேன், அதுக்குள்ள அந்த இடத்துக்கு இன்னொருத்தரக் கொண்டு வர முடியும்?''

...........

''அதோட நான் அத்தான அந்த மாதிரியெல்லாம் ஒரு தடவ கூட நினைச்சுப் பாத்ததில்ல. என் அர்விந்த் இருந்த இடத்துக்கு இன்னொருத்தர் அது யாரா இருந்தாலும் ம்கூம்...''

''இப்ப முடியாது தான். ஆனா எப்பவுமே இப்படியே இருந்துடுவியா ஸ்ரீ?''

அப்படிக் கேட்ட சுபாஹிணியை விரக்தியுடன் பார்த்துச் சிரித்தாள் ஸ்ரீமதி.

''என்ன சுபா, நீயும் கூடவா, நீயும் லவ் மேரேஜ் தான பண்ணிட்டிருக்க. உன்னால கூடவா புரிஞ்...''

''எனக்குப் புரியுது ஸ்ரீ, உன்னோட அம்மா அப்பா இடத்துலிருந்தும் நீ கொஞ்சம் சும்மா யோசிச்சு மட்டும் தான் பாருன்னு சொல்றேன்.''



''என்ன பாவம் செஞ்சேனோ ஏற்கெனவே கடவுள் எனக்கொரு பெரிய தண்டனையக் குடுத்துட்டார் சுபா. திரும்பவும் ஏன் என்ன இப்படி எல்லாருமே...''

''இல்லமா. புரிஞ்சுக்கோ. உம் மனசக் கஷ்டப்படுத்தணுங்கறதுக்காக யாரும் இதக் கேக்கல. நானும் தான்...''

''அது எனக்குப் புரியுது சுபா. சரி சொல்லு, தயா அத்தான் இடத்துல இன்னொருத்தர உன்னால மனசுக்குள்ள ஒரு நிமிஷம் வெச்சுப் பாக்க முடியுமா?''

..........

''பேசு சுபா.''

.......

''அப்ப உனக்கொரு சட்டம், எனக்கொரு சட்டம் இல்லையா? உலகமே இப்படித்தான். மத்தவங்க மனசயெல்லாம் புரிஞ்சுக்கறதே இல்ல...''

''என்ன பண்றது ஸ்ரீ? பெத்தவங்களுக்கு அது எல்லாத்துக்கும் மேல கண்ல தெரியறது நீ மட்டும் தான.

''எல்லார மாதிரியும் திரும்பவும் நீ உனக்கொரு குடும்பத்த அமைச்சுக்கணும்னு ஆசப்...''

ஸ்ரீமதியின் பார்வையில் சில வினாடிகள் நிறுத்திவிட்டுப் பின் மீண்டும் தொடர்ந்தாள் சுபாஹிணி.

''ஏன் எனக்குமே...''

''ம் சொல்லு.''

''இல்ல, எங்களுக்கெல்லாம் கூட நீ இப்படி இருக்கும்போது நாங்க மட்டும் சந்தோஷமா இருக்கறது ஏதோ தப்பு பண்ற மாதிரி குற்ற மனப்பான்மையா இருக்கு ஸ்ரீ.''

''அது உங்க நல்ல மனசக் குறிக்கிது சுபா. அதோட இன்னொரு வாழ்க்கை வேண்டாம்னு சொல்றதே நாந் தான்.

''ஏன்னா நான் என் அர்விந்த்தோட நினைவுகளோட அவரு கூட இன்னும் மானசீகமா வாழ்ந்துட்டு தான் இருக்கேன். அதுவே எனக்குப் போதும்.

''அவர நான் இழக்க நேர்ந்தது பேரிழப்பு தான்.

''தொடக்கத்துல கொஞ்ச நாள் அவ்வளவு தான் நமக்கு இனிமேல் வாழ்க்கைல ஒன்னுமே இல்லேன்னு நினைச்சதும் உண்மைதான்.

''ஆனா நான் இப்ப அந்தச் சின்ன வட்டத்துக்குள் ளிருந்து வெளிய வந்துட்டேன்.

''நடந்ததையெல்லாம் மறந்து திரும்பவும் எனக் குன்னு சில மாற்றங்கள் ஏற்படுத்திக்கிட்டு நிம்மதியா வாழ ஆசப்பட்றேன்.

''ஆனா அதுக்கு என்ன மத்தவங்க விடணும்.

''ஏதோ என் வாழ்க்கையே அவ்வளவுதான் முடிஞ்சு போச்சுங்கற மாதிரி மத்தவங்க பாக்கற பார்வை மாறணும்.

''நாம எந்த நிலைல இருந்து கஷ்டப்பட்டுட்டிருந் தாலும் நம்மள விடவும் அதிகமாக் கஷ்டப்பட்றவங்க உலகத்துல கோடிப் பேர்.

''எதையுமே நாம எடுத்துக்கறதுலதான் இருக்கு.

''எல்லாமே இருந்தும் கூட உலகத்துல எத்தன பேர் சந்தோஷமா இருக்காங்க? ஏன் கேக்கறேன்னா நமக்குத் தெரியாமலே கூட அவங்களுக்கும் ஏதாவது பிரச்சனை கள் இருக்கலாம்.



''எல்லாத்துக்குமே நம்ம மனசு தான் காரணம்.''

............

''என்ன சுபா பாக்கற?''

''சரிதான் ஸ்ரீ. ஆனா அந்த மனச நம்ம ஒரு கட்டுக் குள்ள கொண்டு வர்றதுக்கு கொஞ்ச நாள் பிடிக்கலாம்...''

''அந்த ஸ்டேஜ நான் கடந்து வந்துட்டேன் சுபா. என்னப் பொறுத்த வரைக்கும் இப்ப நான் பழைய ஸ்ரீயா மாறிட்டேன். அப்பவும் சரி இப்பவும் சரி நான் என் அர்விந்த் கூட மனசளவுல வாழ்ந்துட்டிருக்கேன். நிஜத் துலயா நான் அவரு கூட வாழ நேர்ந்த அந்த ஒரு மாசம் எனக்குக் கிடைச்ச வரம். அதப் புதையலா நான் என் நெஞ்சுக்குள்ள பூட்டிப் பாதுகாத்து அந்த நினைவுக ளோடயே சந்தோஷமா வாழ்ந்து முடிச்சுடுவேன்.''

''நீ கிரேட் ஸ்ரீ. அதுக்கு மேல என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியல.''

''நானும் இனிமேல் உன்ன அம்மாவும் அப்பாவும் தொந்தரவு பண்ணாத மாதிரி பாத்துக்கறேன் சுபா. உன் னளவுக்கு இந்த விஷயத்துல நான் யார்கிட்டயும் மனசு திறந்து பேசல. ஆனா இன்னைக்குப் பேசப் போறேன்.''

''அப்புறம் லஞ்ச் என்ன செய்யச் சொல்லட்டும் ஸ்ரீ?''

''என்னது, இனிமேல் தான் செய்யவே சொல்லப் போறியா?''

''பாதி முடிஞ்சிருக்கும். உனக்கு ஸ்பெஷலா என்ன செய்யச் சொல்றதுன்னு யோசிச்சுட்டிருக்கேன்.''

''ரொம்பவும் யோசிக்காத. இருக்கறதே போதும். அதையே ஒரு புடி புடிச்சுட்றேன்.''

"இருந்தாலும் உனக்கு என்ன பிடிக்கும்னு..."

"எனக்குச் சாப்பாட்டு விஷயத்துல எதையும் ஒதுக்கிப் பழக்கமில்ல. அப்புறம் நீங்க சொல்லுங்க மேடம், உங்க லைஃப் எப்பிடிப் போயிட்டிருக்கு?"

"நல்லாப் போகுது ஸ்ரீ."

"சரிதான். பயப்படாம சொல்லு, அத்தான நானொரு கை பாக்கறேன்."

அதே நேரம் கணவனிடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர, "இதோ நீ சொல்றத அவர்கிட்டயே சொல்றேன்." என்றாள்.

"அடிப்பாவி! பாவமே, ஹெல்ப் பண்ணலாமேன்னு பாத்தா நீ எனக்கே வேட்டு வைக்கறியா?"

புன்னகையுடன் சுபாஹினி அழைப்பை அட்டெண்ட் செய்து காதில் வைக்கப் போக, முதலில் தான் வாங்கிக் காதில் வைத்திருந்தாள் ஸ்ரீமதி.

"வாவ்! நாந்தான்னு எப்படித் தெரியும் அத்தான்!"

..............

"என்னது லஞ்சுக்கு வர்றீங்களா? நான் இருந்தா சவுகர்யமா? இல்ல கிளம்பினா சவுகர்யமா உங்களுக்கு?"

..............

"சரிதான் வாங்க," என்றவள், "ஒரு நிமிஷம் உங்க வீட்டுக்காரம்மாகிட்டக் குடுக்கறேன்," என்று புன்னகையுடன் சுபாஹினியிடம் மொபைலைக் கொடுத்திருந்தாள்.

"வாங்க மேடம்."

"என்ன அத்தான் இதுக்குள்ள வந்துட்டிங்க?"



"பின்ன மேடம் நீங்களே வந்திருக்கும் போது நான் வராம இருந்துட முடியுமா என்ன?"

"சும்மா சொல்லாதீங்க. சுபாவப் பாக்கத் தான வந்தீங்க?"

"ஏன், இல்லேன்னா வரக் கூடாதா? இல்ல, இதுக்கு முன்னாடி நான் அவளப் பாத்ததே இல்லையா?"

"சும்மா மழுப்பாதீங்க."

"சரி விடு. சுபாவப் பாக்கத்தான் வந்தேன்."

"அப்படி ஒத்துக்கோங்க."

"குடிக்கத் தண்ணி குடுமா!" என்று கணவன் கேட்க, "இதோ..." என்று சென்றாள் சுபாஹினி.

"அப்புறம் என்ன அதிசயம் திடீர்னு கிளம்பி வந்திருக்க?"

"ம். நீங்க மட்டும் தான் சுபாவப் பாக்க வருவீங்களா? நான் வரக் கூடாதா?"

"சரி விடு. இன்னைக்கு ஏதோ விதண்டாவாதமாவே பேசிட்டிருக்க."

"அச்சச்சோ! அப்படியெல்லாம் இல்ல அத்தான். வீட்ல போரடிச்சது. அதான் கிளம்பி வந்தேன்."

"இத நான் நம்பணுமாக்கும்?"

"பின்ன வேறென்ன?"

"சொல்லுமா, ஏன் டல்லாருக்க?"

"அதெல்லாம் ஒன்னுமில்ல அத்தான்..."

"உனக்கு எதுன்னாலும் நாங்க இருக்கோம்மா. முக்கியமா நான் இருக்கேன். மறந்துடாத."

''இப்படி நீங்க சொல்றதே போதும் அத்தான். எனக்கு மனசுக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு.''

மதிய உணவிற்குப் பிறகு தயாணந்த்துடனேயே தனது வீட்டில் சென்று இறங்கிக் கொள்வதாகக் கிளம்பி விட்டிருந்தாள் ஸ்ரீமதி.

## 36

அனைவரும் கிளம்பி விட்டிருக்க, சுபாஹிணி தானும் டிரைவரைக் காரை எடுக்கச் சொல்லிச் சென்று தனது தோழி ரேவதியைப் பார்த்து விட்டு வந்திருந்தாள்.

இரவு வழக்கம் போல வந்த கணவனைப் புன்னகையுடன் வரவேற்றாள் சுபாஹிணி.

''உன் ப்ரண்ட் எப்படி இருக்காங்க?''

''எல்லாரும் நல்லா இருக்காங்க தயா. அப்புறம் இன்னைக்கு ஏன் நீங்க லேட்?''

''லேட்டா?''

''ம், கால் மணி நேரம்.''

''இனியும் கொஞ்ச நாள் போனா ஏன் ரெண்டு நிமிஷம் லேட்னு கேப்ப போலிருக்கு!''

''பின்ன, அப்பதான பொண்டாட்டி மேல ஒரு பயம் வரும்.''

''அது சரி.''

''என்ன நான் சொல்றது?''



''சரிதான் மேடம். இனிமேல் எப்படி, என்ன பண்ணணும்னு ஒரு லிஸ்ட் போட்டுக் குடுத்துருங்க. அப்படியே செஞ்சுக்கறேன்.''

''ம், அந்தப் பயம் இருக்கட்டும்.''

''சொல்லுமா, ஸ்ரீ என்ன சொன்னா?''

.................

''என்ன பாக்கற, சொல்லு சுபா.''

சில வினாடிகள் தயங்கிய சுபாஹிணி, பிறகு கணவனிடம் அனைத்தையுமே சொல்லி விட்டிருந்தாள்.

ஏன் ஸ்ரீமதியே சொல்லியிருக்காத, ஆரம்பத்தில் நடந்த சிலவற்றையும் கூட.

ஆனால் முதல் நாள் இரவு காவேரி பேசியிருந்ததைப் பற்றி மட்டும் தோழியிடம் போலவே கணவனிடமும் வாய் திறந்திருக்கவில்லை.

''நினைச்சேன்.''

அப்படிச் சொன்ன கணவனை சுபாஹிணி பார்க்க, ''இல்ல நானும் இந்த மாதிரி தான் நினைச்சேன்,'' என்றான் தயானந்த்.

''ஓ, அப்ப உங்களுக்கும் முன்னாடியே எல்லாமே தெரியுமா?''

.................

''என்ன தயா?''

''இல்ல, நீ ஒருத்தி எத்தன பேர முட்டாளாக்கி இருக்கேங்கறது நல்லா யோசிச்சுப் பாக்கும்போது தான் புரியுது.''

கணவனின் குரல் ஓங்கித் தனது கன்னத்திலேயே அறைந்ததைப் போலிருக்க, அந்த வேதனையை முயன்று தனக்குள் மறைத்துக் கொண்டாள் சுபாஹினி.

''இவ்வளவு நடந்திருக்கு. நீ எங்கிட்ட ஒரு வார்த்த சொல்லல இல்ல?''

.............

''நானென்ன அவ்வளவு பெரிய முட்டாளா, எனக்கும் சேத்து நீயே டெஸிஷன் எடுத்துட்ட?''

.............

''ஸ்ரீ கேட்ட மாதிரி நீ என்ன பெரிய தியாகியா?''

ஒரே கேள்வியைக் கேட்கும் மூன்றாவது நபர். மிகவும் முக்கியமான நபர்.

''இப்ப நான் உன்னக் கேக்கறேன், சொல்லு. என் மனச விடவும் என் உடம்பு மேல தான் உனக்குக் கண் இல்ல?''

கடவுளே! என்ன வார்த்தை கேட்டு விட்டான்.

''சரிதான். இப்படி நேரடியா அதுவும் உண்மையப் பட்டுன்னு கேட்டா நீயும் தான் பாவம் என்ன பதில் சொல்லுவ?

''சரிதான். நீ எதிர்பாக்கறது உனக்குத் தடையில்லாம கிடைக்கும். கவலைப்படாதே.''

கண்கள் கலங்கிக் கண்ணீர் கொட்டத் தொடங்கி விட்டிருக்க, கணவனறியாமல் குனிந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''உன் குணம் தெரிஞ்சு இன்னும் யார் வேணும் னாலும் வந்து என்ன வேணும்னாலும் கேப்பாங்க. ரொம்பப் பெருந்தன்மையா என்ன அவங்களுக்கும்



விட்டுக் குடுக்கத் துணிஞ்சுடாத. தாலி கட்டின பாவத் துக்கு வேணும்னா உன்ன சகிச்சுக்கலாம். கண்டவங் களையெல்லாம் என்னால சகிச்சுக்க முடியாது.''

ஐயோ, போதுமே என்று மனதிற்குள்ளும் அழுதாள் சுபாஹினி.

இப்படியெல்லாம் தன்னைக் கொல்ல, அதிலும் தன் தயானந்த்தால் எப்படி முடிந்தது.

முதலில் இவன் தன்னுடைய தயானந்த் தானா?

அது மட்டுமல்லாமல் தான் நேற்றுக் கேட்டதை இவன் இன்னும் மறக்கவில்லை என்பதுமல்லவா தெளிவாகிறது.

மறக்காதது மட்டுமா?

''சரிதான். முட்டாள்தனமா நான் நடந்துக்கிட்டதுக்கு உன்னக் குத்தம் சொல்ல முடியுமா என்ன?''

அப்படி எதில் முட்டாள்தனமாக நடந்து கொண்டு விட்டானாம்.

ஒருவேளை தன்னை மணந்து கொண்டதைப் பற்றிச் சொல்கிறானோ?

அவள் நினைத்தது தான் தாமதம்.

அதை அப்படியே ஆமோதிப்பதைப் போல, ''சரிதான். இனி என்ன பண்ண முடியும், வாழ்க்கை முழுக்கவும் சகிச்சுப் போய்தான் ஆகணும்!'' என்று விரக்தியுடன் முடித்திருந்தான் தயானந்த்.

அப்படியெல்லாம் பேசிவிட்டுக் கணவன் அவன் பாட்டுக்கு விடுவிடுவென்று வெளியே சென்று விட்டிருக்க, அப்படியே சிலை போல நின்று விட்டிருந்தாள் சுபாஹினி.

கடவுளே! என்னென்னவெல்லாம் சொல்லி விட்டான் என்றிருந்தது.

எதுவுமே செய்யத் தோன்றாமல் அப்படியே எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ. ஆனால் வெகு நேரம் கடந்து விட்டிருந்தது மட்டும் தெரிந்தது.

மேலும் கூடச் சிறிது நேரத்திற்குப் பிறகு கணவன் வர, சென்று சாப்பிட அழைத்தாள்.

''எனக்கும் சேத்து நீயே கொட்டிக்கோ.''

கணவன் அப்படிச் சொன்னது தான் தாமதம், கண்கள் கலங்க நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சுபாஹிணி.

கல்லைப் போன்றிருந்த கணவனின் முகம் அதற்கு மேல் எதையும் கேட்கும் துணிவை அவளுக்குக் கொடுத்திருக்கவில்லை.

மாறாகச் சற்று முன்னர் கோபத்தில் பேசியிருப்பானாக இருக்கும். இப்பொழுது அதற்கும் சேர்த்து நல்ல விதமாகப் பேசுவானென்று எதிர்பார்த்தவளுக்குக் கணவன் அந்த மாதிரி சொல்லியிருந்தது மிகப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.

கூடவே அதிர்ச்சியையும்.

அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போயிருக்க, சென்று படுக்கையில் விழுந்து கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆற்றுவாரோ, தேற்றுவாரோ இல்லாமல் வெகுநேரம் கதறித் தீர்த்தவள், ஒருவாறு தெளிந்து எழுந்தாள்.

கணவன் படுக்கையின் மறு பக்கமாகத் திரும்பிப் படுத்து நன்கு தூங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது.



இப்படி நிச்சிந்தையாகத் தூங்குகிறான் என்றால், தன்னை அப்படியெல்லாம் பேசியது அவனுக்குத் துளிகூடக் குற்ற மனப்பான்மையைக் கொடுத்திருக்கவில்லை என்றுதானே பொருள். அட, தான் ஒரு முட்டாள், இவ்வளவிற்குப் பிறகும் கூட கணவன் தன்னிடம் பழையபடி பேசுவானென்று எதிர்பார்த்துக் கொண்டு.

கணவனின் சீரான மூச்சின் ஒலி இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கேட்க, சுபாஹிணிக்கோ அந்த இரவு தூக்கமில்லா இரவானது.

அதிகாலை ஐந்து மணி வரை கொட்டக் கொட்ட விழித்திருந்தவள், அதற்குப் பிறகு நன்கு தூங்கிப் போனாள்.

வழக்கம் போல அதிகாலையில் எழுந்திருந்த தயானந்துக்கு மனைவி நல்ல தூக்கத்திலிருப்பது தெரிய, இரவு விளக்கை ஆஃப் செய்துவிட்டு ஸ்கிரீனை உள்ளே வெளிச்சம் வராதபடி நன்றாக இழுத்து விட்டுவிட்டு வெளியே வந்திருந்தான்.

இரவெல்லாம் மனைவி தூங்காததை அவனும் அறிந்திருந்ததே அதற்குக் காரணம்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். மீண்டும் கோபத்தில் அவனுடைய முகம் இறுகி விட்டிருந்தது.

சும்மா அமர்ந்து கொண்டிருக்கப் பிடிக்காமல் அன்று வழக்கத்தை விடவும் ஒரு மணி நேரம் முன்னதாகவே அலுவலகம் கிளம்பி விட்டிருந்தான் தயானந்த்.

இரவும் சாப்பிட்டிருக்காததில் பசி வயிற்றைக் கிள்ளியது.

ஆனாலும் மனைவி சாப்பிடுகிறாளோ என்னவோ என்று மீண்டும் எண்ணங்கள் வீட்டிற்குச் சென்று விட்டிருந்தன.

அதிலும் இரவு மனைவி வந்து தன்னைச் சாப்பிட அழைத்தது தான் நினைவிற்கு வந்தது.

உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு அவள் வந்து அழைத்த பொழுது என்ன வார்த்தை சொல்லி விட்டோமென்று நினைத்ததில் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

அதைக் கேட்ட மனைவியின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்.

தான் இரவு பேசியது உண்மையிலேயே அதிகப்படி தானோ?

மொபைல் ஒலிக்க எடுத்துப் பேசினான்.

பெரிய ஆடரொன்று உறுதி செய்யப்பட்டு விட்டிருக்க, அதற்குப் பிறகு அது தொடர்பான வேலைகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தன.

இரண்டு மணி நேர மும்முரமான வேலைகளுக்குப் பிறகு சற்று நிமிர்ந்து அமர்ந்தவனுக்கு, மீண்டும் மனைவியின் நினைவு தான் வந்தது.

தவறு யார் மீதோ இருக்கத் தான் ஏன் இப்படி மனைவியின் மீது மட்டும் கோபப்பட வேண்டுமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கண்களை மூடிப் பேசாமல் இருக்கையில் சாய்ந்து அமர்ந்து விட்டிருந்தான்.

அதே நேரம் யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டு நிமிர்ந்தவன், திரும்பிப் பார்த்தான்.

ஸ்ரீமதி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

''வா ஸ்ரீ.''



''என்ன அத்தான், உடம்புக்கு என்ன?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல. வாம்மா. உக்காரு.''

''பின்ன ஏன் இவ்வளவு டல்லாத் தெரியறீங்க?''

''அப்படியா?''

''பின்ன, நீங்க கண்ணாடில உங்க முகத்தப் பாக்கலையா?''

''அப்புறம் என்ன திடீர்னு காலைலயே?''

............

''ஸ்ரீ என்னமா? என்னாச்சு?''

உடனே ஸ்ரீமதி அழத் தொடங்கி விட்டிருக்க, என்னவோ, ஏதோவென்று பதறி விட்டிருந்தான் தயானந்த்.

''ஸ்ரீ என்னமா? என்ன...''

''அத்தான்...''

''ம், என்னமா?''

''எனக்கொரு உதவி செய்ய முடியுமா?''

''என்ன உதவி?''

''நான் இன்னைக்குப் பெங்களூருக்குக் கிளம்பறேன், அங்க என் படிப்புக்குத் தகுந்த மாதிரி ஏதாவது வேலையிருந்தா அரேன்ஞ் பண்ணிக் குடுக்க முடியுமா?''

''என்னமா? ஏன் திடீர்னு?

''ஆமாம், இனிமேல் நான் இங்க இருக்க மாட்டேன்.''

''அதான் ஏன்?''

''ஏன்னா என்ன சொல்றது? ஏற்கெனவே மனசளவு ரொம்பவும் நொந்து போயிருக்கேன். அதுக்கு மேலய என்ன எல்லாரும் சோதிக்கறாங்க அத்தான்.''

''யார் என்ன சொன்னாங்க?''

''அப்பா, அம்மா தான். நான் இப்படி இருக்கறது அவங்களுக்குப் பிடிக்கலையாம். என்னால அவங்களும் ஒவ்வொரு நாளும் நிம்மதியில்லாம தவிச்சுட்டிருக்காங்களாம்...''

............

''என்னால யாரும் தவிக்க வேண்டாம்...''

''இரு ஸ்ரீ, கொஞ்சம் பொறுமையா இரு.''

''எப்படி அத்தான்? ஒரு நாள் ரெண்டு நாள்னா சரி தான். எப்பப் பாத்தாலும் ஏதாவது சொல்லிட்டே இருந்தா எப்படி? நான் மட்டும் என்ன நிம்மதியாவா இருக்கேன்...''

''முதல்ல நீ ஏதாவது சாப்பிட்டயா?''

''ஆமாம், இனி அது ஒன்னுதான் குறைச்சல். ஸாரி அத்தான்.''

''ஒரு நிமிஷம் இரு,'' என்று எழுந்து சென்றவன் ஃப்ளாஸ்க்கில் இருந்த டீயை இரண்டு கப்களில் ஊற்றி எடுத்து வந்தான்.

''முதல்ல எடுத்துக்கோ ஸ்ரீ.''

''வேண்டாமே ப்ளீஸ்...''

''ஊருக்குப் போறதா முடிவே பண்ணிட்டயா?''

''பின்ன என்ன தான் செய்யறது?''

''அங்க நம்ம வீட்ல வந்து கொஞ்ச நாளைக்கு இரு.''

''ம்கூம், எனக்குச் சென்னையே பிடிக்கல.''

''சென்னையப் பிடிக்கலையா? இல்ல என்ன, சுபாவையெல்லாம் பிடிக்கலையா?''



ஸ்ரீமதியை இயல்பாகப் பேச வைக்க மட்டும் தான் தயானந்த் அப்படிக் கேட்டதே,

ஆனால் அந்தக் கேள்வியில் அவள் மேலும் உணர்ச்சிப் பிழம்பாகிப் போனாள்.

''விளையாட்டுக்குக் கூட அப்படியொரு கேள்வியக் கேக்காதீங்க அத்தான். என்னப் பொறுத்த வரைக்கும் சுபா மாதிரி ஒரு க்ரேட் பர்ஸன நான் இதுவரைக்கும் பாத்ததுமில்ல, இனிமேல் பாக்கப் போறதும் கிடையாது.''

''அட, இது என்ன ஏதேதோ சொல்ற!''

''ஏன் அத்தான் சிரிக்கறீங்க? இந்தக் காலத்துல எல்லாரும் எவ்வளவு சுயநலமா இருக்காங்க? அதுலயும் ஒரு பொண்ணு இன்னொரு பொண்ணுக்கு எதையுமே விட்டுத் தர மாட்டா. ஆனா சுபா? நான் நல்லா இருக்கணுங்கற ஒரே காரணத்துக்காக அவ எவ்வளவு பெரிய தியாகத்த செய்யத் துணிஞ்சா?

''அந்த மாதிரி ஒரு எண்ணம் நமக்குள்ள இல்லேன்னாலும் கூட, என்ன மாதிரி கொஞ்ச நாள் மட்டுமே பாத்துப் பழகின ஒரு பொண்ணுக்காகத் தன்னோட உயிருக்குயிரான காதலையே தியாகம் செய்ய எத்தன பேர் முன் வருவாங்க?

''கோடில ஒருத்தர் கூட சந்தேகம் தான் அத்தான்.''

...............

''அப்படி விட்டுக் கொடுக்க அவளுக்கு இஷ்டமில்லாம அம்மா அப்பாவோட கம்பல்ஷனுக்காக மட்டுமே அவ சம்மதிச்சிருந்தான்னா அவ நேரா உங்ககிட்டயோ

இல்ல எங்கிட்டயோ வந்து என்ன இப்படிக் கட்டாயப் படுத்தறாங்கன்னு சொல்லியிருப்பா.

''ஆனா அவ அப்படிச் செய்யாததோட நான் நல்லா இருக்கணும்னு மனசார நினைச்சா.

''உங்களால (அத அப்படியே) புரிஞ்சுக்க முடியா துன்னு தான் எனக்குத் தோணுது. ரொம்பவும் நெருங்கிய சொந்தங்களே சுயநலமா நடந்துக்கற உலகம் அத்தான் இது.

''அப்படியிருக்கும் போது எனக்காக சுபா தான் செய்யத் துணிஞ்சத இந்த ஜென்மத்துல எப்படி அத்தான் என்னால மறக்க முடியும்?

''அதோட இதுக்குக் காரணமும் என்னோட அம்மா, அப்பா தான்.

''அதுலயும்...

''என்னமா?''

''உங்க நல்ல மனசுக்கு நீங்க ஹாஸ்பிட்டல்ல வந்து என்ன ஆக்ஸிடென்ட் நடந்த புதுசுல இராத்திரி பகலாப் பாத்துக்கிட்டதுக்குக் கூடத் தப்பு வண்ணம் பூசிட்டாங்க.

''அப்படிப் பூசினதுமில்லாம அதச் சொல்லிச் சொல் லியே சுபாவ வேலைய விட்டே போக வெச்சுட்டாங்க.

''ஒரு முறை ரெண்டு முறையில்ல, எத்தனையோ தடவ மிரட்டியிருப்பாங்கன்னு நினைக்கறேன்.''

''ஓ அதனால சுபா அத நம்பிட்டான்னு சொல்றியா?''

''நம்பறது, நம்பாததெல்லாம் நடைமுறைக்கு அப் ...றப்பட்ட விஷயம் அத்தான்.



''அப்ப நான் இருந்த நிலைமைய யோசிச்சுப் பாருங்க, உயிரோட மட்டும் தான் இருந்தேன். என்னச் சுத்தி நடக்கற எதையுமே புரிஞ்சுக்கற நிலைமைல கூட நான் அப்ப இல்ல.

''சுபாவும் உங்கள மாதிரி தான், கிரேட் பர்ஸன்.

''பாவம்! இந்தப் பொண்ணோட நிலம இப்படி ஆயி டுச்சேன்னு மனசார ஏதாவது நல்லது செய்ய நினைச் சிருக்கா.

''சுபா மட்டுமில்ல அத்தான். ஒருவேள அவ இடத் துல நீங்க இருந்திருந்தாக் கூட நீங்களும் அந்த மாதிரி தான் யோசிச்சுருப்பீங்க.

''அதே சமயம் என் அம்மா, அப்பா சொன்னதையும் அவ நம்பல.

''நீங்க அந்த மாதிரி கிடையாது.

''உங்க மனசுக்குள்ள அந்த மாதிரி எண்ணம் துளி கூட இல்லேங்கறதெல்லாம் சுபாவுக்கும் நல்லாவே தெரியும்.

''எல்லாரும் வந்து கழுத்துல கத்தி வைக்கற அந்த நேரத்துல பாவம் அவளும் தான் என்ன செய்வா?

''எல்லாத்துக்கும் மேல நீங்க வந்து என்ன டெஸிஷன் எடுத்தாலும் சரி, அதோட நீங்க வந்துட்டா எல்லாமே சரியாயிடும்னு மனசார நம்பியிருக்கா.

''இப்படி யோசிச்சுப் பாருங்க அத்தான். இதுவே அவ இடத்துல வேற ஒரு பொண்ணு இருந்திருந்தா அவ உங்களக் கூட சந்தேகப்பட்டிருக்கலாம்.

''தேவையில்லாம எல்லாரோட ம்கூம் முக்கியமா உங்க மனச நோக வெச்சு எத்தனையோ பிரச்சனைகள இழுத்து வெச்சிருக்கலாம்.

''ஆனா சுபா அந்த மாதிரியெல்லாம் செய்யல.
''ஏன் மனசளவுலகூட அந்த மாதிரியெல்லாம் சந்
தேகப்பட்டிருக்க மாட்டா.

''மாட்டா என்ன, இல்லவே இல்ல.

''அவ அப்படியெல்லாம் செய்யாததுக்கு என்ன காரணம்.

''அவளோட நல்ல மனசும், அவ உங்க மேல வெச்
சிருக்கற அன்பும், நம்பிக்கையும் தான்.

''இது மட்டுமில்ல அத்தான், என்னப் பெத்தவங்க
இன்னும் கூட சின்னத்தனமா எதையெதையோ செஞ்
சிருக்காங்க.

''அதையெல்லாம் அப்படியே பேசிட்டே இருந்தா,
ஏற்கெனவே மனசுல இருக்கற பாரம் இன்னும் அதிகம்
தான் ஆகும்.

''ஆனா ஒன்னு மட்டும் சொல்றேன் அத்தான். நீங்
களும் சுபாவும் பிரமாதமான ஜோடி.

''ஒருவேள அவர் இருந்திருந்தா நாங்களும் உங்கள
மாதிரியே இருந்திருப்போமோ என்னவோ. ஆனா அதுக்கு
நான் குடுத்து வைக்கல.''

''சுபா நல்ல பொண்ணு அத்தான். ரொம்ப வெகுளி.
ஸாஃப்ட் டைப்... ஏன் இன்னும் கூட நிறைய சொல்
லிட்டே போகலாம். அவள நல்லா வெச்சுக்கோங்க. அவ்
வளவுதான்.''

''ஏம்மா எழுந்துட்ட?''

''ஏன் அத்தான், கிளம்பறேன்.''

''எங்க?''



''வீட்டுக்குத்தான்.''

''பெங்களூர் போகல தான?''

''தெரியல.''

''இருமா. முதல்ல ஏதாவது சாப்டுட்டு வரலாம்.''

''வேண்டாம் அத்தான். நீங்க வேலையப் பாருங்க. நான் காலைல ரெண்டு இட்லி சாப்டுட்டு தான் வந்தேன்.''

''உனக்கு நிச்சயம் ஒரு மாற்றம் தேவை தான் ஸ்ரீ.

''உன் ப்யூச்சரப் பத்தி உம்மனசுல ஏதாவது இருந்தாலும் சொல்லு. அது வேலை, தொழில், லைஃப்னு எதுவா இருந்தாலும் சரி.

''உன்க்காக நானும் சுபாவும் என்ன உதவி வேணும்னாலும், எப்பவும் செய்யத் தயாரா இருக்கோம்.''

''அத நீங்க சொல்ல வேற செய்யணுமா அத்தான்?'' என்ற ஸ்ரீமதியின் கண்கள் கலங்கி விட்டிருக்க, ''வேண்டாம்மா!'' என்றான் தயானந்த்.

சில வினாடிகளில் தன்னை ஓரளவு சமாளித்துக் கொண்ட ஸ்ரீமதி, ''எனக்கும் ஒரு ஐடியா இருக்கு அத்தான். எதுக்கும் நான் இன்னொரு தடவ நல்லா யோசிச்சுட்டுச் சொல்றேன்,'' என்றாள்.

''சரிமா, ஆனா சீக்கிரமா சொல்லு. நாள் கடத்தாம செயல்படுத்தலாம்.''

''சரி அத்தான்...''

''என்னமா?''

''சுபாவ நல்லா வெச்சுக்கோங்க அத்தான். உங்களப் பாக்கறதுக்காகக் காலைல வீட்டுக்குப் போய்ட்டு தான் வந்தேன்.''

''பாக்க ஏனோ ரொம்ப டல்லாத் தெரிஞ்சா. விசாரிச்சதுக்கு சளி காய்ச்சல்னு சொன்னா.''

...............

''நேத்து பாத்தப்ப நல்லா தான் இருந்தா. ஒரே நாள்ல இவ்வளவு பெரிய மாற்றம்னா நம்பவே முடியல.

''ஒருவேள.....''

''என்னமா?''

''இல்ல. ஒன்னுமில்ல அத்தான்... என்னால எல்லாரும் இதுவரைக்கும் பட்ட கஷ்டமெல்லாம் போதும். இதுக்கு மேலயும் எதையும் தாங்கிக்கற சக்தி எனக்கு இருக்கற மாதிரி தெரியல.''

''ஸ்ரீ....''

''ஸாரி அத்தான், நான் கிளம்பறேன்.''

''இருமா. நானும் வர்றேன்.''

தயானந்த் தானும் கார் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு எழுந்திருக்க, ''எதுக்கு அத்தான்?'' என்று கேட்டாள் ஸ்ரீமதி.

''அத்தெ, மாமாவப் பாக்கறதுக்கு.''

''ப்ளீஸ் வேண்டாம்.''

''ஏம்மா, நான் இதுவரைக்கும் நடந்த எதையுமே பேசவோ கேக்கவோ மாட்டேன்.''

''இருந்தாலும் இப்ப வேண்டாம் அத்தான்.''

...............

''நான் இன்னொன்னும் சொல்லிடறேன் அத்தான், எந்தவொரு மோசமான கட்டத்துலயும் இன்னும் எவ்வளவோ பிரச்சனைகள் வந்தாலும் கூட நான் தப்பான முடிவுக்கு மட்டும் போயிடவே மாட்டேன். இது சத்தியம்.''



...............

''உங்கள மாதிரி நல்ல மனுஷங்க இருக்கும்போது நான் எதுக்காக அத்தான் பயப்படப் போறேன்? என்ன, நானே நடந்து முடிஞ்சுட்டதயெல்லாம் மறக்க முயற்சி பண்றேன். அதுக்கு முதல்ல என்னப் பெத்தவங்க விட்டா சரிதான்.

''அதோட இப்ப உங்கள வேண்டாம்னு சொல்றதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு. நான் இந்த மாதிரி தான் இருப்பேன். இனிமேலும் நீங்க இத்தன நாளும் செஞ்சதை யெல்லாம் தொடர்ந்து செஞ்சா நான் பாத்துட்டு சும்மா இருக்க மாட்டேன்னு அம்மா அப்பாவ மிரட்டியிருக் கேன்... அவங்களுக்குப் புரிய வைக்கறதுக்கு வேற வழி தெரியல அத்தான்.

''நான் இப்படியெல்லாம் பேசுவேன்னு அவங்களும் எதிர்பார்த்திருக்க மாட்டாங்க. இந்த மாதிரி நேரத்துல நீங்க வந்து உங்களப் பாத்த அதிர்ச்சியில அவங்க பேசத் தெரியாம எதையாவது சொல்லி...

''வேண்டாம் அத்தான். சில நாள் போகட்டும். காலம் எல்லாக் காயத்தையும் சரியாக்கிடும்.

''நாளைக்கு என் ப்யூச்சரப் பத்தி நானொரு முடிவுக்கு வரும்போது நீங்க வந்து பேசுங்க. சும்மாவே உங்களப் பாத்து பயப்பட்றவங்க இப்பக் குற்ற மனப்பான்மைல வேற இருக்கறவங்க, அப்ப நீங்க என்ன வந்து சொன் னாலும் அத அப்படியே கேப்பாங்க.''

...............

''என்ன அத்தான், எம்மேல கோபமா?''

''உன்ன சின்னப் பொண்ணாப் பாத்தே பழக்கமா யிடுச்சுமா. அதான் நீ இப்படியெல்லாம் பேசறதப் பாக்கும்போது ஆச்சரியமா இருக்கு. அப்படியே திகைச்சுப் போய்ட்டேன்.''

''போங்க அத்தான்!'' என்று புன்னகையுடன் சொல்லி விட்டுக் கிளம்பியவளைப் பார்த்த தயானந்திற்கும் அவனையறியாமலேயே சிரிப்பு வந்து விட்டிருந்தது.

அவள் நன்றாக இருப்பதற்காக நிச்சயம் என்ன உதவி வேண்டுமானாலும் தான் செய்து கொடுக்கத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

## 37

''அம்மா.''

வேலைக்காரம்மா அம்புஜம் அழைக்க, திரும்பிப் பார்த்தாள் சுபாஹிணி.

''என்னமா?''

''நீங்க இன்னும் சாப்புட்ல போலிருக்கு...''

''உடம்பு சரியில்ல, அதான்.''

''அதுக்காக சுத்தமாவே சாப்பிடாம இருந்தா எப்படி? நைட்டும் ஒன்னும் சாப்புட்ல, காலைலயும்...''

.............

''ஹார்லிக்ஸ் குடிச்சேம்மா. கவலைப்படாதீங்க. உடம்பு சரியானதும் திரும்பவும் பழையபடி சாப்பிட ஆரம்பிச்சுடுவேன்.''



''ஐயாவுக்கு மதியச் சாப்பாடு குடுத்தனுப்பிட்டேம்மா.''

''சரிதான், என்னமா, சொல்லுங்க.''

''இல்ல. ஐயாவும் நைட்டும், காலைலயும் எதுவும் சாப்பிட்ல போலிருக்கு. இப்பவும் சாப்பிட்டாரோ என்னவோ! போன் ஏதாவது பண்ணி சொல்லிட்டிங்கன்னா...''

தயக்கத்துடன் அதே சமயம் பயத்துடனும் சொன்னவரைப் பார்த்துச் சிரித்த சுபாஹிணி, ''சரிமா. போன் பண்ணிப் பேசிட்றேன்,'' என்றாள்.

''உங்களுக்கு உடம்புக்கு என்...''

''சளி காய்ச்சல் தான்.''

''எதுக்கும் டாக்டர, பொம்பள டாக்டர யாரையாவது போய்ப் பாத்துடுங்கம்மா. ஏன் சொல்றேன்னா...''

அவர் என்ன சொல்ல வருகிறாரென்பது புரிய, ஏனோ உள்ளம் பரபரத்தது.

''சரிமா. பாத்துக்கறேன்,'' என்றாள்.

வேலைக்கென்று பல வருடங்கள் வந்து தங்கி விட்டாலே வீட்டு மனிதர்களைப் போல அவர்களுக்கும் எல்லாவற்றிலும் அக்கறையும், அன்பும் வந்து விடுகிறதே என்று நினைக்கத் தோன்றியது.

''என்னமா, இன்னும் என்...''

''உங்களுக்கும் லேசா சாப்புட்றதுக்கு ஏதாவது எடுத்துட்டு வரட்டுமா...''

''இல்லமா. வேண்டாம், நீங்க போய் வேலையப் பாருங்க. ஏதாவது வேணும்னா வந்து கேக்கறேன்.''

தன்னுடைய அறைக்கு வந்து சேர்ந்திருந்த சுபாஹிணிக்குக் கணவனும் இரவிலிருந்து சாப்பிடவில்லையே என்று கவலையுடன் நினைக்கத் தோன்றியது.

அம்புஜம்மா சொல்வதைப் போல எதற்கும் இப்பொழுது அவனை அழைத்துச் சாப்பிடச் சொன்னால் என்ன?

ஒருவேளை இரவு போல எதையாவது சொல்லி விடுவானோ?

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கி விட்டிருக்க, என்ன ஆனாலும் பரவாயில்லை யென்று தனது மொபைலை எடுத்துக் கணவனுக்கு அழைத்திருந்தாள்.

சில வினாடிகளில் எதிர்ப்பக்கத்தில் கணவனின் குரல் கேட்க, ''நான் சுபா!'' என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மெதுவாகச் சொன்னாள்.

''என்ன, சொல்லு?''

''லஞ்ச் குடுத்தனுப்பியிருக்கு, சாப்புடுங்க.''

''நீ சாப்டாச்சா?''

...............

''இனிமேல் தான் சா...''

''நீ சாப்புட்டு முடிச்சுட்டுக் கூப்புடு. அப்புறம் நான் சாப்புட்றேன்,'' என்று கணவன் ரிஸீவரை வைத்திருக்க, தானும் எங்கே அதற்கு வலித்து விடுமோ என்பதைப் போல மெதுவாக மொபைலைக் கீழே வைத்திருந்தாள்.

கடவுளே! அப்படியானால் கணவனுக்குத் தன் மேலிருந்த கோபமனைத்தும் சரியாகி விட்டதோ?

ஆனாலும்... எப்படியெல்லாம், என்னவெல்லாம் பேசிவிட்டான்.

மீண்டும் பொங்கிக் கொண்டு அழுகை வர, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.



எப்படியோ அழைத்துச் சொன்னதும் நல்லதாகிப் போயிற்று என்று நினைக்கத் தோன்றியது.

அடுத்த சில வினாடிகளில் கீழே வந்திருந்தவள் தான் உண்டதாகப் பெயர் செய்துவிட்டு, அம்புஜம்மாவிடமும் தான் உண்டு விட்டதாகப் புன்னகையுடன் ஒரு வார்த்தை சொல்லி விட்டுத் தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள்.

வந்தவள் மீண்டும் கணவனுக்கு அழைத்தாள்.

தான் உண்டு விட்டதாகச் சொன்னதில் சரிதான் இனி நானும் சாப்பிடுகிறேன் என்று கணவன் சொன்னது ஒரு வகையில் மனதிற்கு மிகுந்த நிம்மதியை அளித்திருந்தது.

மொபைலை வைத்துவிட்டு வந்து படுக்கையில் விழுந்திருந்தாள்.

முதல் நாள் இரவு சுத்தமாகத் தூங்கியிருக்காததாலோ என்னவோ, படுத்தவள் அப்படியே அடித்துப் போட்டது போல நன்றாகத் தூங்கி விட்டிருந்தாள்.

மீண்டும் விழித்து எழுந்தபோது மாலை நேரமாகி விட்டிருந்தது தெரிந்தது.

சென்று குளித்துவிட்டு வந்து பூஜையறையில் விளக்கேற்றி வைத்தாள்.

பிறகு சமையலறைக்குச் சென்று இரவு டிபனுக்குச் சொல்லிவிட்டு ஒரு கப் காபியைக் கலக்கி எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்து டி.வி.யை ஆன் செய்து கொண்டு அமர்ந்தாள்.

அவள் காபியைக் குடித்து முடிக்கவும் தயானந்த் வரவும் சரியாக இருந்தது.

''வாங்க.''

மெல்லிய குரலில் சொல்லிக் கொண்டே எழுந்திருந்தாள். ''உங்களுக்கு ஸ்நேக்ஸ் காபி...''

''இப்ப வேண்டாம், கொஞ்சம் போகட்டும்.''

கணவன் தங்களுடைய அறைக்குச் செல்ல, மீண்டும் அமர்ந்து விட்டிருந்தாள்.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள, பயமாகவும் இருந்தது.

நேற்றளவுக்கு இல்லா விட்டாலும் இன்றும் கோபமாகத் தான் இருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

நேற்றுப் போல இன்றும் எதையாவது சொல்லி விடுவானோ?

ஏற்கெனவே அவன் சொன்னதையெல்லாம் மறக்கவே இன்னும் எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டுமோ! அப்படி நினைத்தவள், உடனே தனது எண்ணப் போக்கின் தவறை உணர்ந்தாள்.

அப்படிப் பார்த்தால் நாம் செய்ததும் பெரிய தவறு தானே.

பிரச்சனையென்று வரும்போது அவனுடைய நினைவு எப்படி வராமல் போகலாம் என்பது தானே கணவனின் வாதமும்.

அது மட்டுமா?

எனக்கும் சேர்த்து எப்படி நீயே முடிவெடுக்கலாம் என்ற கோபமும் கூட.



ஒருவேளை கணவனின் இடத்தில் நாம் இருந்திருந்தால் நாமும் அவனைப் போலத் தான் யோசித்திருப்போமா?

அது சரிதான்.

கணவனின் கோபத்தில் நியாயமிருக்கிறது.

அதற்காக நாம் கவலைப்படுவதில் அர்த்தமில்லை.

ஆனாலும்...

என்னதான் தவறு முழுக்கத் தன் மீதே இருந்தாலும் கூடத் தன்னை அப்படியெல்லாம் பேசத் தனது தயாவால் எப்படி முடிந்தது.

அப்படித் தான் மட்டுமென்ன சந்தோஷமாகவா அப்படியொரு முடிவை எடுக்க நேர்ந்தது.

மிகவும் மனம் வெறுத்துப் போய் வேறு வழியே தெரியாமல் தானே.

ஹாலில் டெலிபோன் மணி ஒலிக்க, சென்று எடுத்துப் பேசினாள் சுபாஹிணி.

யாரோ பிஸினஸ் விஷயமாகக் கணனைக் கேட்க, விஷயத்தைத் தெரிவிப்பதாகச் சொல்லி ரிஸீவரை வைத்தாள்.

மீண்டும் கணவனிடம் சென்று பேச வேண்டுமா?

சரிதான் என்று மேலே வந்தவளுக்குக் கணவன் குளித்து முடித்து விட்டு வெளியே வருவது தெரிந்தது.

''உங்களுக்கு போன் வந்தது.''

''யாரு?''

அவள் விஷயத்தைச் சொல்ல, ''சரி. நான் பேசிக்கறேன்,'' என்றான்.

"உங்களுக்குச் சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வர்றேன்..."

"வேண்டாம். கிளம்பு. வெளிய போய்ட்டு வரலாம்."

"..."

"என்ன பாக்கற, கொஞ்சம் முன்னாடி அத்தை பேசினாங்க. பாத்து ரொம்ப நாளாச்சுன்னு சொன்னாங்க. அதனால இப்ப நாம அங்க போய்ட்டு வரலாம்."

மனதிற்குள் சந்தோஷம் குமிழியிட்டாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "சரி," என்பதைப் போலத் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள் சுபாஹிணி.



## 38

அடுத்த பதினைந்து நிமிடங்களில் கணவனுடன் பிறந்த வீட்டிற்குக் கிளம்பியிருந்தாள்.

ஸ்டியரிங்கில் பதிந்திருந்த கணவனின் கம்பீரமான கரங்கள் தன்னை என்னவோ செய்ய, வெளியே வேடிக்கை பார்ப்பதைப் போலத் திரும்பிக் கொண்டாள்.

திடீரென்று நினைவுக்கு வந்தவளாய் மீண்டும் கணவனை நோக்கித் திரும்பியவள், "காலைல ஸ்ரீ வந்துட்டுப் போனா," என்றாள்.

"அங்க ஆபீஸ்க்கும் வந்துட்டுத் தான் போனா."

"ஏதாவது பிரச்சனையா?" என்று யோசிக்காமல் கேட்டுவிட்டவள், பிறகு, "இல்ல, தெரியாமக் கேட்டுட்டேன்," என்று மென்று விழுங்கினாள்.



மனைவியின் தயக்கம் நெஞ்சுக்குள் என்னவோ செய்ய, தனது இடது கையால் அவளுடைய வலது கையை மிருதுவாகப் பற்றியிருந்தான்.

ஏதேதோ சொல்ல வேண்டுமென்று மனம் நினைத்தாலும், ஏனோ அவனால் முடிந்திருக்கவில்லை.

கணவனின் ஸ்பரிசத்தில் சுபாஹிணி தானும் தன்னுடைய மனக் காயங்களெல்லாம் ஆறி விட்டதைப் போல மனதிற்குள் இதமாக உணர்ந்தாள்.

ஆனாலும்...

வேண்டாம் மனமே, யோசிக்காதே.

கியரை மாற்றுவதற்காகக் கணவன் கையை எடுத்துக் கொண்டு விட்டிருப்பது தெரிந்தது.

அதே சமயம் தயானந்தின் மனமும் யோசனையில் தான் இருந்தது.

தனது மனைவியைப் பற்றிப் பெருமையாக ஸ்ரீமதி சொன்னது தான் அவனுடைய காதுகளில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அதை மற்றொருவர் சொல்லிப் புரிய வைக்க வேண்டியிருக்கிறதே என்று வேதனையாகவும் -

அடுத்த சில நிமிடங்களில் தனது பிறந்த வீட்டு வாசலில் வந்து கார் நின்றிருக்க, கணவனுடன் தானும் இறங்கிக் கொண்டாள்.

தந்தையின் கார் இல்லாததிலேயே அவர் வீட்டில் இல்லையென்பதும் புரிந்தது.

"வாங்க! வாங்க!"

வீட்டு வாசலில் ஏதோ கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு வெளியே வந்த நளினியால் தன்னுடைய கண்களையே நம்ப முடிந்திருக்கவில்லை.

''வாங்க மாப்ள, வா சுபா!'' என்று சந்தோஷமாக வரவேற்றார்.

''எப்படியிருக்கீங்க அத்தை?''

''நல்லார்க்கோம் மாப்ள. நீங்க எப்படியிருக்கீங்க? ஊர்ல எல்லாரும் எப்படியிருக்...''

''எல்லாரும் நலம் அத்தை. மாமா வீட்ல இல்ல போலிருக்கு?''

''அது சரிதான். வெளியூர் போயிருக்கார்,'' என்றவர், ''வாங்க, உக்காருங்க,'' என்று சந்தோஷமாக வரவேற்று உபசரித்தார்.

''அப்புறம் எப்படியிருக்க சுபாம்மா?''

''ஃபைன் மம்மி, ஏன் இளைச்சுப் போய்ட்டீங்க?''

''அது சரி, நான் கேக்கறதுக்கு முன்னாடி நீ முந்திக்கிட்டயா?''

''நீங்க எப்படிக் கேக்க முடியும், நாந்தான் ஒரு சுத்து உடம்பு வெச்சிருக்கேனே.''

''ஓ அப்படி வேற நினைச்சுட்டிருக்கியா நீ?'' என்று நளினி உள்ளே செல்வதற்காகத் திரும்ப, தானும் பேசிக்கொண்டே தாயைப் பின் தொடர்ந்து சென்றாள் சுபாஹினி.

கணவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை மனம் சொல்ல, நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.



சில வினாடிகளில், ''எடுத்துக்கோங்க!'' என்று நளினி டிபன் ப்ளேட்களைக் கொண்டு வந்து வைத்திருக்க, ''டீ ஒரு கப் வேணும் அத்தை,'' என்றான் தயானந்த்.

''இதோ உடனே எடுத்துட்டு வர்றேன்,'' என்றவர், ''அதுக்குள்ள டிபன எடுத்துக்கோங்க,'' என்று நகர்ந்தார்.

''சுபா.''

''என்ன மம்மி?''

''மாப்ள தனியா உக்காந்திருக்கார்மா. போய்ப் பேசிட்டிரு போ.''

''அப்புறம் கிச்சன்ல நீங்க மட்டும் தனியா வேல செய்வீங்களே.''

''அடிப்போடி!'' என்றவர் அடுத்த சில நிமிடங்களில் டீ கப்களுடன் ஹாலுக்கு வந்திருந்தார்.

என்னதான் மகளும் மருமகனும் ஹாலில் அமர்ந்திருந்தாலும் இருவரும் வெவ்வேறு வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தது நளினியின் கண்களில் படத் தவறவில்லை.

ஒருவேளை தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதோ என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கும் போதே அது சரியே என்பதைப் போல, ''என்னமா அவ்வளவு மும்முரமாப் பேப்பர்ல என்ன இருக்கு? டீ எடுத்துக்கோ, வா,'' என்று அக்கறையுடன் மருமகன் மகளை அழைக்கக் கண்டார்.

''ஏன், வேணும்னா நீங்களும் படிங்க,'' என்று புன்னகையுடன் மகள் எழுந்து வந்து கணவனின் அருகில் அமர்ந்ததையும்.

''என்ன அத்தை, நீங்களும் உக்காந்து டீ எடுத்துக் கோங்க.''

நளினி ஏதோ சொல்ல வர, அதற்கு விடாமல் கட்டாயப்படுத்தித் தாயை அமரச் செய்திருந்தாள் சுபாஹிணி.

''என்ன மம்மி, என்னாச்சு உங்களுக்கு?''

''என்னமா?''

''இல்ல, கல்யாணத்துக்கு முன்னாடியெல்லாம் இவருக்கு முன்னாடி உக்காந்துட்டு தான இருந்தீங்க...''

''ஏன் இப்பவும் உக்காந்து தான இருக்காங்க,'' என்ற தயானந்த், ''கேரம் விளையாடலாமா?'' என்று கேட்டான்.

''ஓ.யெஸ். நான் ரெடி!'' என்று சுபாஹிணி சந்தோஷமாகச் சொல்ல,

''நீங்களும் வாங்க அத்தை,'' என்று அழைத்தான் தயானந்த்.

''இல்ல மாப்ள, நீங்க விளையாடுங்க,''

''ம்கூம், அதெல்லாம் முடியாது மம்மி. நீங்களும் வரணும்.''

நளினி என்ன மறுத்தும், மற்ற இருவரும் விடாமல் போக, தொடர்ந்து ஒரு அரை மணி நேரம் சிரித்துப் பேசிக் கொண்டே கேரம் விளையாடுவதில் கழிந்தது.

முதல் நாளைய கருத்து வேறுபாட்டாலோ என்னவோ, ஏனோ கணவனின் அருகாமை ஒரு விதப் பதட்டத்தையும், குறுகுறுப்பையும் கொடுத்திருந்தது சுபாஹிணிக்கு.



அதை மற்றவர்கள் அறிந்து விடாதவண்ணம் நடந்து கொள்ளச் சற்றுச் சிரமப்பட்டுத் தான் போனாள்.

விளையாட்டு முடிந்திருக்க, எழுந்திருந்தார் நளினி.

''ஏம்மா எழுந்துட்டீங்க?''

''நான் போய் டிபன் வேலையப் பாக்கறேம்மா.''

''சரிதான் சுபா. நீயும் போய் அத்தைக்கு ஹெல்ப் பண்ணு போ.''

''அதெல்லாம் வேண்டாம் மாப்ள. நான் பாத்துக்கறேன். அவரும் இல்ல. உங்களுக்கு போரடிக்கும். நீங்க பேசிட்டிருங்க,'' என்று விட்டு நளினி உள்ளே சென்றிருக்க, திரும்பி மனைவியைப் பார்த்தான் தயானந்த்.

''நீங்க வேணும்னா டி.வி. பார்க்கறீங்களா?''

''ம்கூம்...'' என்றவன் எழுந்து மாடிப்படிகளை நோக்கி நடந்தான்.

கணவனின் வீட்டைப் போல இங்கு மேலே அறைகள் இல்லாமல் மொட்டை மாடிக்குத் தானே செல்ல வேண்டும் என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கணவனைத் தொடர்ந்து தானும் மேலே வந்திருந்தாள்.

திருமணத்திற்கு முன்பு ஒரு முறை கணவன் தன்னை அங்கு அழைத்து வந்து பேசியது தான் நினைவிற்கு வந்தது.

கூடவே அந்த வார்த்தைகள் தந்த வலியும்.

யதேச்சையாகத் திரும்பிய சுபாஹிணிக்கும் கணவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவனுடைய கண்கள் எதையோ யாசிப்பதைப் போலிருக்க, அருகில் சென்றிருந்தாள்.

"தயா..."

"நான் உன்ன ரொம்பக் கொடுமைப் படுத்தியிருக் கேன் இல்ல?"

கணவனிடமிருந்து அந்த மாதிரி வார்த்தைகள் வருமென்று சுபாஹினி கனவிலும் நினைத்துப் பார்த் திருக்கவில்லை.

மனதிற்குள் பதறிப் போனாள்.

"சரிதான், அந்தக் கேள்வியக் கேக்கக்கூட எனக்குத் தகுதியில்ல."

மீண்டும் கணவனிடமிருந்து வந்திருந்த அந்த விரக்தியான வார்த்தைகளில், "ப்ளீஸ் தயா..." என்று கணவனின் கையைப் பற்றியிருந்தாள் சுபாஹினி.

ஆனால் அதே நேரம் தாய் தன்னை அழைக்கும் குரல் கேட்க ஒரு நிமிஷம் என்று கீழே வந்திருந்தாள்.

"மாப்பிள்ளைக்கு போன்மா, உங்க மாமா," என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தானும் கீழே வந்திருந்தான் தயானந்த்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் கணவனுடன் தானும் டிபன் சாப்பிடுவதற்காக வந்து அமர்ந்திருந்தாள் சுபா ஹினி.

மகளும், மருமகனும் எவ்வளவு அழைத்தும் நளினி அவர்களுடன் அமர்ந்து சாப்பிட மறுத்து விட்டிருந்தார்.

தாங்கள் இருவரும் சாப்பிட்டு முடித்து எழுந்ததும், "நீங்க உக்காருங்க மம்மி. இனி நான் பரிமாறறேன்," என்றாள் சுபாஹினி.



"இல்லமா. நீ போ, மாப்ள கூடப் பேசிட்டிரு."

"அட என்னமா நீங்க, ஏன் அவர் தனியா இருக்க மாட்டாரா?" என்று எரிச்சலுடன் கேட்டே விட்டிருந்தாள் சுபாஹினி.

"என்னமா இப்படிப் பேசற? மாப்ள தனியா போரடிச் சுட்டிருப்பாருனு தான..."

"அப்படியெல்லாம் ஒன்னுமில்ல அத்தை. சுபாவுக் கும் உங்ககூடப் பேசணுங்கற ஆச இருக்கும் தான?" என்று பின்னாலிருந்து வந்த தயானந்தின் குரலில் பெண்கள் இருவரும் ஒரு சேரத் திரும்பிப் பார்த்தனர்.

அதற்குப் பிறகுதான் அவன் ஹாலுக்குச் செல்ல வில்லை. பக்கத்து அறையின் சுவரில் மாட்டியிருந்த போட்டோக்களைப் பார்த்துக் கொண்டு இருந்திருக் கிறான் என்பது தெரிந்தது.

"உனக்கு இன்னும் இப்படி சட்டுசட்டுன்னு கோபப் பட்ற குணம் மாறவே இல்ல போலிருக்கு?" என்று சற்றே எரிச்சலுடன் தன்னைப் பார்த்த தாயைத் தானும் எதுவும் பேசாமல் பார்த்தாள் சுபாஹினி.

"என்ன பாக்கற?"

"ஐயோ! போதும்மா. கொஞ்சம் பேசாம தான் இருங் களேன்."

காரணமற்ற மகளின் கோபம் மிகுந்த பயத்தையே கொடுத்திருந்தது நளினிக்கு.

மீண்டும் வாயைத் திறப்பதற்குள் மகள் விடுவிடு வென்று அங்கிருந்து சென்றிருக்க, தாங்கள் இப்படி வளர்க்கவில்லையே என்று ஆதங்கத்துடன் உண்டதாகப்

பெயர் செய்து விட்டு அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு ஹாலுக்கு வந்திருந்தார்.

மகள் மட்டும் ஹால் சோபாவில் தனியே அமர்ந் திருக்கக் கண்டவர், ''என்னமா, மாப்பிள்ளை எங்க?'' என்று கேட்டார்.

''தெரியல. எங்கயோ கிளம்பிப் போனார். இப்ப வந் துடுவார்.''

எங்கே போயிருப்பாரென்று தனக்குள் ஒரு வினாடி யோசித்தவர், இதுதான் சமயமென்று மகளிடம் பேச்சுக் கொடுத்தார்.

''என்னமா புதுசு புதுசாக் கோபப்பட்டு சத்தமாப் பேசியெல்லாம் பழகியிருக்க. நீ முன்ன இப்படி இருந்த தில்லையே?''

மீண்டும் தன்னிடம் ஏதோ தவறு இருப்பதைப் போலவே தாய் பேசிய விதம், சுபாஹிணிக்கு மிகுந்த ஆதங்கத்தைக் கொடுத்து விட்டிருந்தது.

..................

''என்னமா, பேசு.''

''இப்ப உங்களுக்கு என்ன வேணும்?''

''உனக்கு என்னாச்சுன்னு கேக்கறேன். இந்த மாதிரி நீ மாப்பிள்ள கூடவும் அவங்க சொந்தங்க கூடவும் பேசினா நல்லா இருக்குமா சொல்லு?''

''நீங்க கேக்கறதைப் பாத்தா நான் ஏதோ யாருக்கும் அடங்காம சுத்திட்டிருக்கேன்னு சொல்ற மாதிரியல்ல இருக்கு.''



''பின்ன அத நான் சொல்ல வேற செய்யணுமா?''

தாய் கேட்டது தான் தாமதம், கோபத்துடன் எழுந்து உள்ளறைக்கு வந்திருந்தாள்.

''சுபா, நில்லு,'' என்று தாய் சில முறை அழைத்த தெல்லாம் அவளுடைய காதுகளில் கூட விழுந்திருக்க வில்லை.

சில நிமிடங்களில் திரும்பி வந்த தயானந்த், ''எங்க அத்தை, சுபாவக் காணோம்,'' என்று கேட்டான்.

''உள்ளே போனா மாப்பிள்ள. அவளுக்கு...''

''என்ன அத்தை, சொல்லுங்க?''

''இல்ல, அவளுக்கு உடம்புக்கு ஏதாவது சரியில் லையா?''

''ஏன் கேக்கறீங்க?''

''இல்ல. இன்னைக்குப் பாவம், ஏதோ ரெஸ்ட்லெஸ் ஸாவே இருக்கான்னு பாத்தேன். எப்பவுமே அவ இப்படி இருந்ததோ, கோபப்பட்டதோ இல்ல. அதான்.''

''ஒன்னுமில்லாததுக்கு ரொம்ப ஃபீல் பண்றீங்க ளோன்னு தோணுது அத்தெ.''

அப்படிச் சொன்ன தனது மருமகனைப் பார்த்த நளினி, ''பிரச்சனை ஒன்னுமில்லன்னா சந்தோஷம் தான்!'' என்று புன்னகையுடன் சொன்னார்.

''குடிக்கறதுக்கு ஒரு டம்ளர் பால் கிடைக்குமா அத்தெ?''

''இதோ எடுத்துட்டு வர்றேன்,'' என்று உள்ளே சென்ற நளினி சில வினாடிகளில் பால் டம்ளருடன் வந்திருந் தார்.

"எடுத்துக்கோங்க."

பாலை எடுத்துக் கொண்டவன், "காலைல ஒரு ஏழரை மணிக்கு டிபன் ரெடி பண்ணிட முடியுமா அத்தெ?" என்று கேட்டான்.

புரியாமல் சில வினாடிகள் தான் பார்த்திருப்பார். உடனே புன்னகையுடன், "சரிதான். அஞ்சு மணிக்கே கூட ரெடி பண்ணிட்றேன்!" என்றார்.

"காலைல எப்பவுமே இட்லி மட்டும்தான் எடுத்துக்குவேன். அதுக்கு சட்னி மட்டும் ஏதாவது ரெண்டு விதமா இருந்தாப் பரவாயில்ல. ஆனா அதுக்கு மேல சாப்பிடவே மாட்டேன். சிரமப்படாதீங்க."

சரி என்பதைப் போல நளினி சந்தோஷமாகத் தலையை ஆட்ட, "குட்நைட் அத்தெ!" என்று உள்ளே வந்திருந்தான்.

## 39

உள்ளே வந்தவன் கதவைத் தாழிட, உடனே படுக்கையிலிருந்து நிமிர்ந்தாள் சுபாஹிணி.

கணவனின் செய்கையைப் புரியாது பார்த்தாள்.

"என்னமா, இன்னைக்கு இங்கயே இருந்துடலாம்."

"இல்ல. நம்ம வீட்டுக்குப் போலாம்."

"அட!"

ஆச்சரிய பாவனையுடன் கணவன் பேன்டிலிருந்து வேஷ்டிக்கு மாறிக் கொண்டிருப்பது தெரிய, அழுகையுடன் மீண்டும் குனிந்து கொண்டு விட்டிருந்தாள் சுபாஹிணி.



"சுபா..."

கணவன் அழைப்பது காதில் விழுந்தாலும், அதற்குப் பதில் சொல்லும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

மீண்டுமொரு முறையும் அழைத்துப் பார்த்தவன், சில வினாடிகளில் மனைவியின் அருகில் வந்து அமர்ந்திருந்தான்.

"சுபா, இங்க பாரு," என்று முதுகில் கைவைத்து அழைத்தான்.

உடனே நிமிர்ந்த சுபாஹிணி, என்னவென்பதைப் போலப் பார்த்தாள்.

"என்னடா, என்ன கோபம்?"

...............

"சுபா...."

"நானெங்க கோபப்பட்டேன்?"

"இப்பக் கொஞ்சம் முன்னாடி அத்தெ கிட்ட...."

"ஓ, நீங்களும் அப்பிடிதான் நினைச்சுட்டிருக்கீங்களா?"

அழுகையில் உதடு துடிக்க மனைவி மீண்டும் திரும்பிக் கொள்ள, "சுபா..." என்று மீண்டுமொரு முறையும் அழைத்தான்.

"என்னமா, ஏன்..."

"நான் ரொம்ப மோசமான பொண்ணு தயா, எங்கிட்ட யாரும் பேசாதீங்க..."

"அப்படின்னு நான் சொன்னேனா?"

"இப்ப சொன்னாத்தானா?"

"சுபா..."

"ப்ளீஸ் கொஞ்சம் பேசாமப் போறீங்களா?"

"மாட்டேன். உங்கூட நிறையப் பேசணும்."

"வேண்டாங்க. நான் எல்லாரையும் முட்டாளாக்கறவ, எங்கிட்ட நீங்க யாரும் பேச வேண்டாம்."

"சுபா."

மனைவியின் கோபம் என்னவென்பது இப்பொழுது புரிந்து விட்டிருக்க, அடுத்த வினாடியே இல்லை அது கோபமில்லை, ஆதங்கம் என்பதும் புரிந்தது.

வெறும் ஆதங்கம் மட்டுமல்ல, நியாயமானது என்பதும்.

"ஸாரிமா. நான் நேத்து அப்படியெல்லாம் பேசினது தப்புதான்," என்று உணர்ந்து சொன்னான்.

"அதுக்காக நீ எனக்கு என்ன தண்டனை குடுத்தாலும் ஏத்துக்கத் தயாரா இருக்கேம்மா. ஆனா பேசாம மட்டும் இருக்காதடா. என்னால தாங்க முடியாது."

அப்பொழுதும் மனைவி அப்படியே படுத்திருக்க, தனது இரு கைகளாலும் மனைவியைத் திருப்பித் தனக்கு மிக அருகில் கொண்டு வந்திருந்தான்.

"சுபா, இங்க பாரு."

.................

"பேசுடா ப்ளீஸ்."



"என்ன விடுங்க. நாந்தான் சொல்றேனில்ல. நான் ரொம்ப மோசமான பொண்ணுன்னு. அப்புறம் நான்... எனக்கு... உங்க..."

"சுபா, என்னாச்சு உனக்கு, இங்க பாரு..."

கணவனின் அதட்டல் அவளுக்கிருந்த கோபத்தை மேலும் பல மடங்கு அதிகப்படுத்தியிருக்க, அவளும் கோபத்தில் கத்தியிருந்தாள்.

"சுபாஹிணி."

"சும்மா கத்தாதீங்க. உங்க மிரட்டலுக்குப் பயப்பட்றவங்க இங்க யாருமில்ல."

கண்மண் தெரியாத அளவிற்குக் கோபமாக இருக்கும் மனைவியை எப்படி நெருங்குவதென்று தெரியாமல் சில வினாடிகள் பார்த்தவன், அந்த வினாடியே மனைவியை மேலும் அருகில் இழுக்கப் பார்த்தான்.

ஆனால் அதற்கு முன்பே கட்டிலை விட்டு இறங்கியிருந்தவள், "வேண்டாம்..." என்று எச்சரிப்பது போலச் சொன்னாள்.

"என்ன வேண்டாம்?"

"எனக்கு உங்களப் பிடிக்காது."

"என்னடா, ஏன்..."

"ஏன்னா எனக்கு உங்க உடம்பு மேல மட்டும் தான் கண்..."

"ஓ, சுபா. வேண்டான்டா."

"தொடாதீங்க, அத நான் மட்டும் தான் செய்யணும்."

"ஏம்மா இப்படியெல்லாம் பேசற?"

''ஏன் அசிங்கமா இருக்கா, இருக்கறதத் தானே சொல்றேன்.''

''போதும் சுபா.''

''பத்தாது, எனக்குப் பத்தாது. எதுக்கும் எச்சரிக்கையா இருங்க. என் குணம் தெரிஞ்ச யாராவது உங்ககிட்ட வந்து உங்களக் கேட்டாலும் கேப்பாங்க.''

''சுபா...''

''ஆனா நீங்க யார சகிச்சுக்கிட்டாலும் எனக்கு ஆட்சேபணையே இல்லப்பா. ஏன்னா நான் அந்த மாதிரி மோசமான பொண்ணு தான்.

''ஏன் சொல்றேன்னா எனக்குப் பெருந்தன்மை ரொம்ப அதிகம். தாலி கட்டின பாவத்துக்காக நீங்க என்ன மட்டும் தான் சகிச்சுக்கணும்னு நான் ஒருநாளும் சொல்லவே மாட்...''

அதுவரை மனைவி பேசுவதையெல்லாம் வார்த்தைகளால் தடுத்துப் பார்த்த தயானந்த், இப்பொழுது கோபத்தில் ஓங்கி அறைந்திருந்தான்.

ஒரு வேகத்தில் அறைந்து விட்டிருந்தவன், அதற்குப் பிறகு தான் நடந்ததையே உணர்ந்தான்.

''ஸாரிடா...''

பதட்டத்துடன் தயானந்த் மனைவியை நோக்கிக் கையை நீட்ட, அதிர்ச்சியுடன் கணவனின் கையைத் தட்டி விட்டு விட்டுப் பின்னோக்கி நகர்ந்தாள் சுபாஹிணி.

''என்னடா, ஏன்டா என்ன இப்படிக் கொல்ற?''

''பரவாயில்ல. அடிங்க. எப்படி வேணும்னாலும் அடிச்சுக் கொல்லுங்க. பாவம், நீங்களும் தான் என்ன



பண்ணுவீங்க? என்ன மாதிரி ஒருத்தியக் கல்யாணம் பண்ணி முட்டாள்தனம் பண்ணினதுக்கு இனி சகிச்சு வாழ்ந்து தான ஆகணும்.''

''ப்ளீஸ்மா, தப்புதான், நான் செஞ்...''

''எப்படி தயா, என்ன அந்த மாதிரியெல்லாம் பேச உங்களால எப்படி முடிஞ்சது? எம்மேல உண்மையான அன்பு இருந்திருந்தா அப்படியெல்லாம் பேசியிருப்பீங்களா?''

மனைவி துடிப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவளை அருகில் இழுத்திருந்த தயானந்த், ''வேண்டாம்மா, ப்ளீஸ் வேண்டாம்!'' என்று மிகவும் உணர்ந்து சொன்னான்.

''முடியலையே தயா. இங்க வலிக்குது!'' என்று மனைவி நெஞ்சைத் தொட்டுக் காட்ட அவனை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்.

ஒரு சில வினாடிகள் தான் சென்றிருக்கும்.

கணவனின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள் வந்து கட்டிலில் ஒரு ஓரமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

''சுபா.''

கணவன் அழைப்பது கேட்க, ''நான் தூங்கணும்,'' என்றாள்.

மனைவியின் உடல் இப்பொழுதும் லேசாக அழுகையில் குலுங்கிக் கொண்டிருப்பது தெரிய மனம் வெறுத்துப் போனது.

'சுபா ரொம்ப ஸாஃப்ட் அத்தான்!' என்று ஸ்ரீமதி சொன்னதும், 'கொஞ்சம் செல்லமா வளந்துட்டா. ஆனாலும் அவளோட லிமிட் தெரிந்து கரெக்டா நடந்துக்குவா. அதுக்கு மேல ஏதாவதுன்னாலும் ஜஸ்ட் ஒரு தடவ எடுத்துச் சொன்னீங்கன்னாப் போதும்!' என்று தனது அத்தை சொன்னதுமே மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

நேற்று மட்டுமா என்ன, திருமணத்திற்கு முன்பு கூட ஒரு முறை மனதை மாற்றுவதைப் போல ஆளையும் மாற்றத் தயங்க மாட்டாய் என்று இன்னும் ஏதேதோ சொன்னதெல்லாமும் கூட இப்பொழுது நினைவிற்கு வந்து தயானந்த்தை வேதனையடையச் செய்திருந்தன.

குறுகிப் படுத்திருக்கும் மனைவியை அள்ளி அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல உடலும், மனமும் பரபரக்க, தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சற்றுச் சிரமப்பட்டுத் தான் போனான்.

ஆனால் அதற்குப் பிறகு தான் அவள் நன்கு உறங்கி விட்டிருந்ததைக் கண்டான்.

தூக்கத்தில் தன்னை நோக்கித் திரும்பிப் படுத்திருந்த மனைவியின் அழகான குழந்தைத் தனமான முகத்தை ஆசையுடன் அணு அணுவாக மனதிற்குள் ரசித்தான்.

ஒருவேளை மின் விளக்கின் வெளிச்சத்தில் மனைவி எழுந்து விட்டால் என்று தோன்றி விட்டிருக்க, உடனே அதை ஆஃப் செய்துவிட்டு இரவு விளக்கை ஆன் செய்தான்.

ஆனால் அன்று ஏனோ அவனுக்குத் தூக்கம் அருகில் கூட வந்திருக்கவில்லை.



வெகு நேரத்திற்குப் பிறகே தூங்கத் தொடங்கியிருந்தான் என்றாலும், காலையில் ஆறு மணிக்கு எழுந்து விட்டிருந்தான்.

புது இடம் என்பதால் வழக்கமான உடற்பயிற்சிகளைத் தவிர்த்து விட்டு, முடிந்ததை மட்டும் செய்து விட்டுக் குளிக்கப் போனான்.

மனைவி இன்னும் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

குளித்து விட்டு வந்து சத்தம் செய்யாமல் கிளம்பிக் கொண்டிருந்தவன், மனைவியின் குரலில் திரும்பினான்.

"ஏம்மா, இன்னும் கொஞ்சம் வேணும்னா படுத்துக்கோ."

"ம்கூம்."

"ஏன்?"

"நானும் உங்ககூட வர்றேன்."

"எங்க ஆபீஸ்க்கா?" என்று கேட்ட கணவனின் முகத்தில் தெரிந்த லேசான புன்னகையைக் கண்டும் காணாதது போலப் படுக்கையை ஒழுங்கு படுத்தியவள், வீட்டுக்கு என்றாள்.

"சரிதான், மெதுவா குளிச்சு சாப்டுட்டு கிளம்பியிரு. டிரைவரை அனுப்பறேன்."

..............

"என்னமா?"

"நான் இப்பவே உங்ககூடவே வர்றேன். என்ன அங்க வீட்ல விட்டுட்டுப் போய்டுங்க."

''சரி. கிளம்பு.''

சில வினாடிகளில் அறையை விட்டு வெளியே வந்திருந்தான் தயானந்த்.

சரியாக அதே நேரம் சமையலறையிலிருந்து ஹாலுக்கு வந்த நளினி, ''வாங்க மாப்ள! எழுந்துட்டிங்களா என்னவோன்னு காபி கூடக் குடுக்...''

''பரவாயில்ல அத்தெ. டிபன் எடுத்து வைங்க, சாப்டுட்டே காபி எடுத்துக்கறேன்.''

''சுபா எங்...''

''அவ குளிக்கப் போயிருக்கா. இப்ப வந்துடுவா. நீங்க வாங்க.''

''புதுசு புதுசா நிறையப் பழகியிருக்கா போல. நேரத்துல எழுந்து உங்களுக்குக் காபி கூடக் குடுக்காம...''

''நாந்தான் வேண்டாம்னு சொல்லிட்டேன். விடுங்க அத்தெ. அவள எதுவும் சொல்ல வேண்டாம்.''

அந்தக் குரலில் வீட்டு மாப்பிள்ளையே சொல்லி விட்ட பிறகு நளினியாலும் தொடர்ந்து எதையும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

தயானந்த் சாப்பிட்டு முடிக்கவும், சுபாஹிணி கிளம்பி வரவும் சரியாக இருந்தது.

தாய் காபி எடுத்து வர, கணவனுடன் சேர்ந்து தானும் எடுத்துக் கொண்டாள்.

''நீ சாப்புட்லயா?''

''அங்க போய் சாப்புட்டுக்கறேன்.''

''எங்க?''



நளினி கேட்டுக் கூட முடித்திருக்கவில்லை.

''ஒரு முக்கியமான வேலையிருக்கு அத்தெ. சுபாவக் கூடக் கூட்டிட்டுப் போறேன்,'' என்றான் தயானந்த்.

''உங்களுக்கு ஆபீஸ் லேட்டாயிடு...''

''ஒன்னும் பிரச்சனையில்ல அத்தெ. போற வழில தான் வேலையே.''

அடுத்த சில நிமிடங்களில் கணவனுடன் தானும் கிளம்பி விட்டிருந்தாள் சுபாஹிணி.

''என்னமா?''

கணவன் கேட்க, ''இல்ல. உங்களுக்கு லேட்டாயிடுச்சுன்னா, நான் வேணும்னா டிரைவர் கூடவே போய்க்கறேன். நீங்க இப்படியே ஆபீஸ் கிளம்புங்க,'' என்றாள்.

''இல்ல, இன்னும் டைம் நிறைய இருக்கு.''

''ஏம்மா இரேன், வேணும்னா சாயங்காலமாப் போய்குவியாம்.''

தாய் சொல்ல, ''இல்ல மம்மி. இன்னொரு நாள் வர்றேன்,'' என்று புன்னகையுடன் மீண்டுமொருதரம் சொல்லிக் கொண்டு காரில் ஏறி அமர்ந்திருந்தாள்.

கணவனின் அருகாமையில் இரவு தான் நடந்து கொண்டது தான் நினைவிற்கு வந்தது சுபாஹிணிக்கு.

ஏன், எப்படி அந்த அளவிற்கு நடந்து கொண்டோமென்று இப்பொழுது நினைக்க ஆச்சரியமாகவும் இருந்தது.

ஆனால் சில வினாடிகள் தான்.

ஏன் அப்படி நடந்து கொண்டோமென்பது நினைவிற்கு வர மீண்டும் மனம் இறுகி விட்டிருந்தது.

# 40

கணவன் தன்னை வீட்டில் இறக்கி விட்டுவிட்டு ஆபீஸ் கிளம்பி விட்டிருக்க, வீட்டிற்குள் வந்த சுபாஹிணிக்குப் பேசாமல் தான் இரண்டு நாட்கள் தாய் வீட்டில் இருந்து விட்டுப் பிறகு வந்திருக்கலாமோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

கடைசிக்கு இன்று மாலை வரை மட்டுமேனும்!

யாரோ பின்னால் வந்து நிற்பதைப் போலத் தோன்றியதில், திரும்பினாள்.

வேலைக்காரம்மா அம்புஜம் நின்றிருக்க, ''சொல்லுங்கம்மா,'' என்றாள்.

''நீங்க வந்து சாப்புடுங்கம்மா.''

''இதோ வர்றேன். நீங்க போங்க.''

''ஐயா சாப்புட்ல போல...''

''அம்மா வீட்ல இருந்து தான் வர்றோம். அவர் ஆபீஸ்க்கு லேட்டாயிடும்னு அங்கயே சாப்டுட்டுக் கிளம்பிட்டார்.''

''சரிதானுங்கமா. அப்புறம் மதியத்துக்கு என்ன...''

''வர்றேம்மா. நீங்களும் போய்ச் சாப்புடுங்க.''

தேடித் தேடி வேலைகளைச் செய்தும் கூட அன்று ஏனோ மிகவும் போரடித்து விட்டிருந்தது சுபாஹிணிக்கு.

கணவனுக்கு அழைத்துப் பேச வேண்டும் போல மனம் பரபரத்தது.



ஆனாலும் எதுவோ தடுத்தது.

ஒரு விதத்தில் கோபமாகவும்.

கணவனின் தூரத்துச் சொந்தங்களில் யாரோ இருவர் திருமணத்திற்காக அழைக்க வந்திருக்க, அவர்களை உபசரித்து அனுப்பி வைத்து விட்டு மீண்டும் தங்களுடைய அறைக்கு வந்து விட்டிருந்தாள்.

கணவன் இந்த நேரம் என்ன செய்து கொண்டிருப்பானென்று நினைக்கத் தோன்றியது.

தன்னைப் போல அவனும் தன்னை நினைத்துக் கொள்வானோ?

வேலைக்கு நடுவிலா?

ம்கூம், வாய்ப்பே இல்லை.

பிறகு சூரியன் மேற்கே அல்லவா உதிக்க வேண்டும்.

பேசாமல் பழையபடி நாம் மீண்டும் வேலைக்குச் சென்றால் என்னவென்று தோன்றியது. பிறகு, புன்னகையுடன் தனது எண்ணப் போக்கின் தவறைத் திருத்திக் கொண்டாள்.

ம்கூம், கணவனின் அலுவலகத்திற்கு.

கணவனிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

ஆனால் சம்மதிப்பானா?

மாட்டானென்று தான் சுபாஹிணிக்குத் தோன்றியது.

ஏனோ திருமணத்திற்கு முன்பு கணவனிடம் வேலை செய்த நாட்கள் நினைவிற்கு வந்தன.

அழகிய வசந்த காலம்.

புன்னகையுடன் படுக்கையில் விழுந்தவள், பிறகு அந்தப் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போனாள்.

கணவனின் கம்பீரமும், அந்த அலட்சிய நோக்கும் இல்லையில்லை. அப்பொழுது தன்னுடைய எம்.டி. மட்டுமே அல்லவா?

அப்போதைய எம்.டி.யையும் இப்பொழுதிருக்கும் கணவனையும் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

அந்தக் கம்பீரம் இன்னும் அதிகமாகியிருப்பதைப் போலத்தான் தோன்றியது சுபாஹிணிக்கு.

ஏன் அனைத்து விதங்களிலுமே இன்னும் மனதிற்கு மிகவும் பிடித்த வனாகவும் அல்லவா மாறி விட்டிருக் கிறான்.

ஆனால் கணவனுக்கு தான் அப்படியில்லையோ?

அவனுக்குத் தன் மீது இருக்கும் அன்பும், மோகமும் இப்பொழுது குறைந்து போய் விட்டதோ?

தொடர்ந்து அதைப் பற்றி யோசிக்க நேர்ந்ததில் ஆம் என்ற முடிவுக்குத் தான் அவளால் வர நேர்ந்தது.

அப்படியானால் நாட்கள் செல்லச் செல்ல கணவ னுக்குத் தன் மீது வெறுப்பு இன்னும் அதிகமாகுமோ?

ஒரு கட்டத்தில் தன்னைச் சுத்தமாகப் பிடிக்காமல் போய்க் கடைசியில் வெறுத்து ஒதுக்கியே விடுவானோ?

தொடர்ந்து அதே போக்கில் யோசித்தவளுக்குக், கண்கள் கலங்கி விட்டிருந்தன.

நேற்றைக்கு முதல் நாள் கணவன் தன்னிடம் நடந்து கொண்டது தான் நினைவிற்கு வந்தது.

ஏன் தான் நினைப்பது சரியே என்பதற்கு அதுவே பெரிய உதாரணமல்லவா?



கலக்கம் அதிகமாகி விட்டிருக்க, அதுவே இப்பொழுது அழுகையாகவும் மாறியிருந்தது.

அழுது ஓய்ந்தவள், எழுந்து அமர்ந்தாள்.

ஏனோ அவளுடைய தயாவைப் பற்றி ஒரேயடியாக அவளால் அப்படி நினைத்து விடவும் முடியவில்லை.

அப்படிப் பார்த்தால் திருமணத்திற்கு முன்பு தன் னைப் பெண் பார்க்க வந்த போதும் கூடக் கோபத்தில் கடுமையாகத் தானே நடந்து கொண்டான்.

அதற்காகத் தன்னை வெறுத்து ஒதுக்கி விட்டானா என்ன?

அதிலும் ஒவ்வொரு நாளும் எந்த அளவிற்கு...

ஏதேதோ இன்பக் கற்பனைகளில் முகம் சூடாகிச் சிவந்து விட, தனது கைகளால் முகத்தை மூடிக் கொண் டாள்.

சில வினாடிகளில் மீண்டும் நடப்புக்கு வந்திருந்த வளுக்கு, இரவு கணவன் தன்னை அறைந்தது தான் நினைவிற்கு வந்தது.

கூடவே அதற்கான காரணமும்.

வேறொரு பெண்ணுடன் அவனை வார்த்தையால் இணைத்துப் பேசியதற்கே, அவ்வளவு கோபப்பட்டான் என்றால்,

இல்லை, எந்தவொரு கட்டத்திலும், எந்தக் காரணத் திற்காகவும் கணவன் தன்னை வெறுத்துவிட மாட்டான்.

நேற்றைக்கு முதல் நாள் கணவன் தன் மீது கோபப் பட்டது கூட அவன் தன் மீது வைத்திருக்கும் அதிகப் படியான அன்பின் வெளிப்பாடு தான்.

ஒரு வழியாகக் கணவன் அவள் மீது அன்பும் அக்கறையும் ம்கூம் அளவு கடந்த அன்பும் அக்கறையும் கொண்டிருப்பது நிச்சயப்பட்டு விட, பெருமை கலந்த சந்தோஷத்தில் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள் சுபாஹிணி.

## 41

மாலை ஐந்து மணியிலிருந்தே கணவனுக்காகக் காத்திருந்த சுபாஹிணி இரவு ஏழு மணிக்கு மேலாகியும் அவன் வராததில் ஓய்ந்து போனாள்.

முன்பெல்லாம் தாமதமாகுமென்றால் அழைத்துச் சொல்வானே.

அப்படியானால் அவனுக்குத் தன் மேல் கோபம் இன்னும் அப்படியே இருக்கிறதென்று தானே அர்த்தம்.

சரியாக அதே நேரம் கணவன் வீட்டிற்குள் வர, முயன்று மனதை நடப்பிற்குக் கொண்டு வந்து கணவனை வரவேற்றாள்.

பதிலுக்கு அவன் தலையை ஆட்டியது போலத்தான் இருந்தது.

ஏன் அப்படித்தான் இரண்டு வார்த்தைகள் பேசினால் குறைந்து போய் விடுவானா என்ன!

''எனக்கு டிபன் எதுவும் வேண்டாம்.''

கணவனின் குரலில் திரும்பி அவனைப் பார்த்தாள்.



''இப்ப வெளிய கிளம்பணும், மீட்டிங் ஒன்னு இருக்கு.''

திரும்ப எவ்வளவு நேரமாகும் என்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

கணவனாகவே சொல்வானென்று எதிர்பார்த்து அதற்கும் ஏமாந்தாள்.

ஹாலில் இருக்கும் டி.வி.யை ஆன் செய்து கொண்டு அமர்ந்திருந்தவளுக்கு, கவனம் தான் அங்கு இருக்கவில்லை.

அரை மணி நேரத்தில் கணவன் குளித்துக் கிளம்பி ஃப்ரெஷ்ஷாகக் கீழே இறங்கி வருவதைக் கண்டாள்.

இதுவே மற்ற நாட்களில் என்றால் தான் இல்லாமல் மேலே தங்களுடைய அறைக்கே செல்ல மாட்டானே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''நீ சாப்டுட்டுப் போய்த் தூங்கு. நான் வர லேட்டானாலும் ஆகலாம்,'' என்ற கணவனின் வார்த்தைகளில் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

கணவனிடமிருந்து வரும் அந்தப் பழைய அன்பான வார்த்தைகளுக்கும், கரிசனத்திற்கும் மனம் ஏங்கியது.

கணவனின் கார் கண்ணை விட்டு மறையும் வரை நின்று பார்த்து விட்டு அதற்குப் பிறகே உள்ளே வந்தாள்.

மீண்டும் மனம் பாரமாகி விட்டிருக்க, உண்டதாகப் பெயர் செய்துவிட்டு வந்து படுக்கையில் விழுந்திருந்தாள்.

ஆனால் தூக்கம் தான் அருகில் கூட வர மாட்டேனென்று விட்டிருந்தது.

தூங்கும் எண்ணம் முதலில் அவளுக்கு இருந்தால் அல்லவா?

கணவனுக்காகக் காத்திருந்தே ஓய்ந்து போனவள், கடைசியில் ஒரு வழியாகத் தூங்கியும் போனாள்.

அப்படியே மேலும் சில நாட்களும் சென்றிருந்தன.

கணவனின் பாரா முகம் நிரந்தர வெறுப்பாக மாறி விடுமோ என்ற பயம் இப்பொழுது சுபாஹிணிக்கு நிறையவே வந்து விட்டிருந்தது.

தன் வழியிலேயே யோசித்துக் களைத்துப் போய்க் கொண்டிருந்தவளுக்குக் கணவன் தனக்காக ஏங்குவதும், கணவனின் பார்வைகள் மாறுவதும் துளியும் கவனத்தில் பட்டிருக்கவில்லை.

நிலைமை இப்படியிருக்க, தயானந்த் தானும் மனைவிக்குத் தன் மீது இன்னும் கோபம் குறையவில்லையோ என்று கவலைப்படத் தொடங்கியிருந்தான்.

அது சரிதான். தான் பயன்படுத்திய வார்த்தைகளும் அப்படிப்பட்டதாயிற்றே என்றும்.

வழக்கம்போல அன்று காலையில் அலுவலகத்திற்குக் கிளம்பிக் கீழே இறங்கி வந்தான் தயானந்த்.

மனைவி சமையலறையில் இருப்பது தெரிய அழைத்தான்.

கணவனின் குரலில் வெளியே வந்திருந்த சுபாஹிணி, "இதோ ரெண்டு நிமிஷம். டிபன் ரெடியாயிடும்," என்றாள்.



"இல்லமா, எனக்கு லேட்டாயிடுச்சு. நான் வெளிய சாப்புட்டுக்கறேன்."

"இட்லி ரெடி, மிளகாய்ப் பொடி வெச்சாவது ரெண்டு இட்லி..."

மனைவியின் அக்கறையான விசாரிப்பில், "சரி எடுத்துட்டு வா," என்று டைனிங் டேபிள் சேரை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

சில வினாடிகளில் வந்த சுபாஹிணி கணவனுக்கு வேகமாகப் பரிமாறுவதில் முனைந்தாள்.

"மெதுவா, ஒன்னும் அவசரமில்ல."

"அம்புஜம்மா காலைல நேரத்துல வந்துடுவேன்னு சொல்லிட்டுத் தான் போனாங்க. என்னாச்சுன்னு தெரியல. இந்த மாதிரி செய்ய மாட்டாங்க.

"இப்படி ஆகும்னு தெரிஞ்சிருந்தா நான் இன்னும் கூட கொஞ்சம் நேரத்துலயே எழுந்து செஞ்சிருப்..."

"கூல் சுபா, ஒரு நாளைக்குத் தான. விடு. அதோட எனக்கும் இந்தக் காம்பினேஷன் ரொம்பப் பிடிக்கும். ஒரு நாளைக்கு இப்படியும் சாப்புட்றேனே!" என்று ஒரு வாய் இட்லியை எண்ணெயுடன் கலந்த மிளகாய்ப் பொடியில் தொட்டு வாயில் வைத்திருந்தான்.

கணவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருக்க, தொடர்ந்து முடியாமல் எங்கோ பார்த்தாள்.

சில நாட்கள் இடைவெளிக்குப் பிறகு இருவருடைய பார்வைகளுமே நேருக்கு நேராகச் சந்தித்துக் கொண்டதில் இருவருமே கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் போனார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனாலும் அதை இருவருமே துளியும் வெளியே காட்டிக் கொண்டார்கள் இல்லை.

''இன்னொன்னு வெச்சுக்கோங்க.''

''இல்லமா, போதும்,'' என்று எழுந்திருந்தவன் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தான்.

''நீயும் சாப்புடு.''

சரி என்பதைப் போலத் தலையை ஆட்டிய மனைவியின் கன்னத்தில், ''சரிமா, கிளம்பறேன்,'' என்று லேசாகத் தட்டிவிட்டுக் கிளம்பியிருந்தான் தயானந்த்.

கணவன் தொட்ட இடம் குறுகுறுவென்றது சுபாஹிணிக்கு.

அப்படியே அவனுடைய கைகளைப் பிடித்துத் தனது கன்னத்திலேயே வைத்துக் கொள்ளாமல் போனோமே என்று மனம் ஏங்கியதில் சிரிப்புகூட வந்து விட்டிருந்தது.

கணவனே சொன்னானே என்று தானும் உண்டு முடித்த சுபாஹிணி அனைத்தையும் எடுத்து வைத்து விட்டு வெளியே வந்தாள்.

சிறிது நேரத்தில் அம்புஜம்மா வந்து விட்டிருக்க, மதிய உணவிற்குச் சொல்லி விட்டு வந்தாள்.

## 42

''ஹாய் ஆன்ட்டி.''

''வா ஸ்வேதா.''



''எங்க ஆன்ட்டி, யாரையுமே காணல. நீங்க மட்டும் தான் இருக்கீங்க போலிருக்கு?''

''ஆமாம்மா. ஸ்ரீயும் அவங்கப்பாவும் பெங்களூர் போயிருக்காங்க. நாளைக்குத் தான் வருவாங்க.''

''ஓ, என்ன திடீர்னு?''

''அங்கிளுக்கு ஏதோ டாக்குமெண்ட்ல கையெழுத்துப் போடணுமாம். அப்படியே மகளையும் அழைச்சுட்டுப் போய்ட்டார்.''

''அப்ப உங்களுக்கு போரடிக்கும்...''

''அது சரி, ஏன் நிக்கற, உக்காரு.''

''உக்காரலாம் ஆன்ட்டி. சாப்டாச்சா?''

''நான் ஆச்சு. நீ வேணும்னா வந்து சாப்புடு.''

''என்ன டிபன்?''

''இட்லி சாம்பார்.''

''இட்லியா, சரிதான். உங்க கைப்பக்குவமாச்சே. அதனால சாப்புட்லாம். என்ன ஆன்ட்டி நகைப் பெட்டியெல்லாம் வெளிய கிடக்கு?''

''ஆமாம்மா, கொண்டு போய் லாக்கர்ல வெச்சுட்டு வரணும்.''

''நிறைய இருக்கும் போலிருக்கு.''

''சரிதான், ஸ்ரீ கல்யாணத்துக்குப் பாத்துப் பாத்து வாங்கினதாச்சே.''

''ஓ, ஆமா. எதுக்கு இதை யெல்லாம் லாக்கர்ல வெக்கறீங்க?''

''ஏன், பின்ன வீட்லயா வெச்சுட்டிருக்க முடியும்?''

''வேண்டாம் ஆன்ட்டி, வித்துடுங்க.''

அப்படிச் சொன்ன ஸ்வேதாவைப் புரியாமல் பார்த்தார் காவேரி.

''என்ன ஆன்ட்டி பாக்கறீங்க? ஸ்ரீ இனி ஃபங்ஷனுக் கெல்லாம் முன்ன மாதிரி போகவா போறா. அவசியத் துக்கு மட்டும் வெச்சுக்கிட்டு மீதிய வித்து அவ பேர்ல பேங்க்ல இன்வெஸ்ட் பண்ணிடுங்க.''

....

''என்ன ஆன்ட்டி?''

''நீ சொல்றதப் பாத்தா, இனி அவ்வளவு தான், ஸ்ரீக்கு எல்லாமே முடிஞ்சு போச்சுங்கற மாதிரியிருக்கு.''

''அட என்ன ஆன்ட்டி நீங்க, ஏதோ மனசுல தோணுச்சு சொன்னேன். அதோட ஸ்ரீயும் வேற வாழ்க்கைக்கு ஒத்துக்கற மாதிரி தெரியலேன்னு புலம்பிட்டிருந்தீங் களே.''

...............

''அதுக்கும் மேல ஏதாவது விசேஷம்னாலும் திரும்ப நகைகளை வாங்கிக்க முடியாதா என்ன? அப்படியே பாத்தாலும் முன்ன மாதிரி நிறையவா தேவப் படப் போகுது. ஏதோ ஒன்னு ரெண்டு செட் தான?''

..............

''என்ன ஆன்ட்டி திரும்பவும் யோசன?''

''இப்பப் பேசினது பரவாயில்ல, தயவு செஞ்சு எங்க ஸ்ரீ இருக்கும்போது இந்த மாதிரியெல்லாம் பேசிடாதமா.''

''அட என்ன ஆன்ட்டி, அது கூட எனக்குத் தெரியாதா என்ன?''



''ஸ்ரீய நீங்க பழச மறக்கறதுக்குக் கூட விடாம ரொம்பவும் டார்ச்சர் பண்ணிட்டிருக்கீங்க. கொஞ்ச நாள் பேசாம அவ வழிக்கு விட்டுட்டிங்கன்னா போகப் போக அவளுக்கே எல்லாரையும் பாத்து லைஃப் மேல இன்ட் ரஸ்ட் வந்துடும்.

''ஏன் தனக்குன்னு இன்னொரு வாழ்க்கை அமைச்சுக் கறதுக்குக் கூட சந்தோஷமா சம்மதிச்சுடுவா...''

''ஆமா, எங்க...''

''சலிச்சுக்காதீங்க ஆன்ட்டி. அதுக்கு சில வருஷங் களாகும். ஆனா மாற்றம் நிச்சயம் வரும். முதல்ல நீங்க அதுக்கு விடணும்.''

''என்ன நீ, என்னயே தப்பு சொல்லிட்டிருக்க...''

''ம்கூம், நடக்கறத சொல்லிட்டிருக்கேன். அவ்வளவு தான்.''

''போதும், இனி எதுவும் சொல்லாத.''

''பாருங்க, இந்த மாதிரி தான் ஸ்ரீகிட்டயும் கோபப் பட்றீங்க. அவளே நொந்து போய் என்ன பண்றதுன்னு தெரியாம தவிச்சுப் போய் உக்காந்திருக்கறப்ப இந்த மாதிரி பேசிப் பேசியே அவ்வளவுதான். இனி எல்லாமே முடிஞ்சு போச்சுங்கற மாதிரியான எண்ணத்த நீங்களே அவளுக்குக் குடுக்கறீங்க.''

''ஐயோ, அப்ப என்ன என்ன தான்டி செய்யச் சொல்ற?''

''ம், அப்படிக் கேளுங்க. ஸ்ரீயோட குணத்துக்கு நீங்க பேசற மாதிரி பேசக்கூடாது, விட்டுப் பிடிக்கணும். கொஞ்ச நாளைக்கு எதுவுமே பேசாதீங்க. அதுக்கப்புறமும்

அவகிட்ட நேரடியா எதுவும் பேசாதீங்க. ஆனா அவ காதுல விழற மாதிரி சந்தோஷமான விஷயங்களைப் பத்தித் திரும்பத் திரும்ப பேசிட்டே இருங்க. கடைசில அவளே உங்க வழிக்கு வருவா.''

ஆனா இதெல்லாம் நடக்கக் குறைஞ்சது சில வருஷங்களாகலாம். அவசரப்பட்டுடாதீங்க. அப்புறம் எல்லாமே கெட்டுப் போயிடும்.

''சரிதான்டியம்மா, விட்டா என்ன உக்கார வெச்சு பாடம் எடுப்ப போலிருக்கு!''

''கோவிச்சுக்காதீங்க ஆன்ட்டி. ஒரு வயசுப் பொண்ணோட மனசு இன்னொரு வயசுப் பொண்ணுக்குதான் புரியும்.''

''வயசுப் பொண்ணுன்னு நீ சொல்ற. ஆனா அவ வாழ்க்கையே முடிஞ்சுட்டா மாதிரியல்ல விட்டத்த வெறிச்சுட்டு உக்காந்திருக்கா...''

''எங்க, நடந்தத அவ மறக்க முயற்சி செஞ்சாலும் நீங்க விட்றதில்லையே! சரி. நீங்களே சொல்லுங்க, முன்ன ஆக்ஸிடென்ட் நடந்தப்ப இருந்ததுக்கு அவ இப்ப எவ்வளவோ மாறலையா? நாளுக்கு நாள் முன்னேற்றம் தெரியலையா? சொல்லுங்க ஆன்ட்டி.''

''எப்படிப் பாத்தாலும்...''

''பாத்தீங்களா, ஒரேயடியா இல்லேன்னு உங்களால யும் சொல்ல முடியல தான? ஏன்னா மாற்றம் இருக்கு, அது அவ வாழ்க்கையையே மாற்றிப் போடும். அந்த நம்பிக்கை முதல்ல உங்களுக்கு வரட்டும்.''

''என்னவோடியம்மா, உங்ககிட்டப் பேசினதுக்கப்புறம் எனக்கும் கொஞ்சம் நம்பிக்க வந்த மாதிரி தான் இருக்கு.''



இருக்கல்ல, அத வளத்துக்கறதும் உங்க கைல தான் இருக்கு. சரி ஆன்ட்டி, பசிக்குது. என்னவோ இட்லி சாம்பார்னு சொன்னீங்களே, கிடைக்குமா?''

''பின்ன, எழுந்து வா. எடுத்து வைக்கறேன்.''

''....''

''சென்னை பிடிச்சிருக்கா ஸ்வேதா?''

''ரொம்ப, ரொம்ப.''

காவேரி பரிமாற, ''விடுங்க ஆன்ட்டி, நானே எடுத்து வெச்சுக்கறேன்,'' என்று சாப்பிடத் தொடங்கினாள் ஸ்வேதா.

''அப்புறம் வேலையெல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு?''

''நல்லாப் போகுது, ஆனா...''

''ம், என்ன?''

''உங்க மருமகங்கிட்ட வேல செய்யறது பெரும்பாடா இருக்கு ஆன்ட்டி.''

''ஏன்?''

''என்னா, எள்னா எண்ணெயா நிக்கணும்னு எதிர்பாக்கறார், முடியணுமில்ல.''

''ஓ, அப்ப உன்னால முடியலையா?''

''ரொம்ப சந்தோஷப்படாதீங்க. போகப்போக பழகிடுவேன்.''

''அப்ப இப்பப் பிரச்சனையா தான் போயிட்டிருக்குன்னு சொல்லு.''

''அதெல்லாம் ஒன்னுமில்லையே. கொஞ்சம் கஷ்டமா இருக்கு. அவ்வளவுதான்.''

''ஆமா, நீ இன்னைக்கு வேலைக்குப் போகலையா?''

''போகணும், ஒன் அவர் பர்மிஷன்.''

''எதுக்கு?''

''என்ன நீங்க என் எம்.டி.யவிட அதிகமா க்ராஸ் கொஸ்டின்ஸ் கேக்கறீங்க?''

''எனக்கென்னடியம்மா, நீ பேசறதப் பாத்தா உன்னால வேலைல தாக்குப் பிடிக்க முடியாதோன்னு தோணுச்சு. அதான் கேட்டேன்.''

''ம், கேக்க மாட்டிங்க. என்னாலயா முடியாது? கேவலம் அந்த சுபாஹிணியெல்லாம் செஞ்சுட்டிருந்தத என்னால செய்ய முடியாதா என்ன?''

''அவள நீ சாதாரணமா நினைச்சுட்டிருக்க போல?''

''யார, சுபாஹிணியா?''

''ம், சுபான்னே சொல்லு. எதுக்கு நீட்டிட்டிருக்க?''

''என்ன ஆன்ட்டி, என்ன திடீர்னு கோபம்?''

''பின்ன, நீ யாரத் தப்புக் கணக்குப் போட்டுப் பேசிட்டிருக்கேன்னு தெரியுமா? வேல மட்டுமில்ல. இன்னும் வேற எதுலயும் கூட அந்த சுபா அளவுக்கு ம்கூம் உன்னால முடியாது!

''என்ன ஆன்ட்டி, அவளப் பேசினா உங்களுக்குப் பிடிக்காது போலிருக்கு?''

''யாருக்கு, எனக்கா? வயிறு எரிஞ்சு போய் உக்காந்திருக்கேன். இதுக்கு மேல என்ன எதுவும் கேக்காத.''

''சரிதான்,'' என்று பேசாமல் சாப்பிட்டு முடித்தவள், எழுந்து ப்ளேட்டைக் கழுவி வைத்துவிட்டு வந்தாள்.



''என்னடி பாக்கற, உன்ன மாதிரி தான் ஆரம்பத்துல நானும் அந்த சுபாவப் பத்தி சாதாரணமா நினைச்சுட்டிருந்தேன். ஆனா...''

''ஆனா, என்ன ஆன்ட்டி?''

''அவ மட்டும் குறுக்க வராம இருந்திருந்தா, தயா நிச்சயம் ஸ்ரீயக் கல்யாணம் செஞ்சுக்கிட்டிருப்பான்.''

''ஓ...''

''என்ன பாக்கற? இனிமேலாவது அவளப் பத்தி உனக்கிருக்கற எண்ணத்த மாத்திக்கோ. அவ என்னயும் ஒரு கை பாப்பா, உன்னையும் ஒரு கை பாப்பா. ஏன் இன்னும் யார வேணும்னாலும்...''

''என்னடி சிரிக்கற?''

''எனக்கென்னவோ நீங்க அந்த சுபாவப் பத்தி ரொம்பவும் மிகைப்படுத்திச் சொல்றீங்களோன்னு தோணுது ஆன்ட்டி.''

''போடி பைத்தியக்காரி. ஆறு மாசத்துக்கு முன்னாடி அவளும் உன்ன மாதிரி வேலைக்குன்னு வந்தவ தான். ஆனா இன்னைக்கு அவ இருக்கற நிலைமையென்ன?''

................

''என் அண்ணா குடும்பமே அவள தல மேல தூக்கி வெச்சுக் கொண்டாடிட்டிருக்கு. அண்ணன் மகன் அதுக்கு மேல.

''விட்டா அவளுக்குக் கோவில் கட்டியே கும்பிடுவான் போல. விட மாட்டேன். இந்த சந்தோஷம் நிலைக்க நான் விடவே மாட்டேன்.''

தன்னையறியாமல் பேசி விட்டிருந்த காவேரி அதற்குப் பிறகு தான் நிலைமையை உணர்ந்தார்.

"என்ன ஆன்ட்டி பாக்கறீங்க. இனிமேல் நானும் உங்க கட்சி தான்."

அப்படிச் சொன்ன ஸ்வேதாவை நம்ப மாட்டாதவரைப் போல அவர் பார்க்க, "ஆமா ஆன்ட்டி, நம்புங்க," என்றாள் அவள்.

சில வினாடிகள் தான்.

அதற்குள் சுதாரித்து விட்டிருந்த காவேரி, "என்னவோ போடியம்மா. நம்ம ஆசா பாசங்கள்ல எல்லாம் என்ன ஆயிடப் போகுது. மேல இருக்கறவன் எப்படி எழுதியிருக்கானோ அதுப்படி தான எல்லாம் நடக்கும்!" என்றார்.

"சுபான்னு இல்ல, அந்த இடத்துக்கு வேற யார் வந்திருந்தாலும் எனக்கு இப்படி தான் கோபம் வந்திருக்கும். சின்ன வயசுல இருந்தே தயாவ என் மருமகனாவே பாத்துப் பழகிட்டது தான் அதுக்குக் காரணம். ஒரு வேளை எம்மக பூவும் பொட்டுமா நல்லா இருந்திருந்தா எதுவும் தோணியிருக்காதோ என்னவோ.

"சரிதான், அதையெல்லாம் பேசி இன்னும் மனசக் கஷ்டப்படுத்திக்க வேண்டாம்னு பாக்கறேன். அப்புறம் என்ன குடிக்கற காபியா, டீயா?"

"ஏதோ ஒன்னு, அதுகூட வேண்டாம்னு பாக்கறேன்."

"ஏன்?"

"லேட்டாயிடும். கிளம்பற வேலயப் பாக்கறேன்."

"இதோ ரெண்டு நிமிஷத்துல காபி ரெடியாயிடும். குடிச்சுட்டுக் கிளம்பு."

"மெதுவா ஆன்ட்டி, இன்னும் அரை மணி நேரத்துக்குள்ள ஆபீஸ்ல இருந்தாப் போதும்."



## 43

தலைக்குக் குளித்து விட்டு வந்து முடியை உலர்த்திக் கொண்டிருந்த சுபாஹிணி தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பேசினாள்.

"அத்தெ, சொல்லுங்க."

................

"ம், நீங்க நல்லார்க்கீங்களா?"

...............

"மாமா, சாருக்கா எல்லாரும் எப்படியிருக்காங்க?"

மேலும் சில நிமிடங்களும் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவளுக்குத் தனது அத்தை சொன்ன செய்தி புதியதாக இருந்தது.

ஆச்சரியமாகவும்.

சந்தோஷத்தில் கை, கால் பரபரத்தது.

இன்று தனது கணவனுக்குப் பிறந்த நாளாமே.

வாழ்த்துவதற்காக மொபைலை எடுத்திருந்தவள், பிறகு வேண்டாமென்று வைத்து விட்டிருந்தாள்.

"வாங்கமா."

"லஞ்ச் ரெடியா?"

"ஆச்சுங்கமா. ஐயாவுக்கு எடுத்து வெச்சுட்டிருக்கேன்."

"கொஞ்சம் கேசரி செய்ய முடியுமாம்மா."

"சரிம்மா. இதோ இப்பவே..."

"மெதுவா, அப்புறம் லஞ்ச டிரைவர் கிட்டக் கொடுத்தனுப்ப வேண்டாம். நானே போக வேண்டியதிருக்குமா, எடுத்துட்டுப் போய்க்கறேன்."

"சரிங்கம்மா."

அடுத்த அரை மணி நேரத்தில் கணவனின் அலுவலகத்தில் இருந்தாள் சுபாஹிணி.

கணவன் தன்னை ஆச்சரியமே உருவாகப் பார்ப்பது தெரிந்தது.

ஆனால் அதெல்லாம் ஒரு சில வினாடிகள் தான்.

பிறகு, "வா!" என்று வரவேற்று அமரச் சொல்லி உபசரித்தான்.

ராஜினாமாக் கடிதத்தை எழுதி வைத்து விட்டுக் கிளம்பியதற்குப் பிறகு அன்று தான் மீண்டும் வந்திருந்தாள் சுபாஹிணி.

கணவனும் அப்பொழுது அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தானோ என்னவோ, முகம் கடுமையாக மாறிப் பின் மீண்டும் நடப்புக்கு வந்திருந்தது தெரிந்தது.

"வாம்மா. உக்காரு."

"உங்களுக்கு..."

அதற்குள் கணவன் தனது டேபிளில் இருந்த போனுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேச, அவன் பேசி முடிப்பதற்காகக் காத்திருந்தாள்.

அதே நேரம் டிரைவர் லஞ்ச் பேக்கைக் கொண்டு ...ன் அறையில் வைத்துவிட்டு வருவது தெரிந்தது.



"என்ன பாஸ்கர்?" என்று அவள் மெதுவாகக் கேட்க,

"நான் வெயிட் பண்ணட்டுங்களாமா?" என்று கேட்டான் டிரைவர்.

"வேண்டாம். நீங்க கிளம்பிக்கோங்க."

"சரிங்கம்மா," என்று டிரைவர் கிளம்பவும், கணவன் பேசி முடித்து விட்டு ரிஸீவரை வைக்கவும் சரியாக இருந்தது.

என்னவென்று கணவன் கேட்க, தான் டிரைவரைக் கிளம்பிக் கொள்ளச் சொன்னதைத் தெரிவித்தாள்.

"ஏன்?"

மீண்டும் கணவன் கேட்க, அதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்தாள்.

"நான் அப்புறமாப் போய்க்கலாம்னு..."

தயக்கத்துடன் பதில் சொன்னாள்.

"நான் அதக் கேக்கல. என்ன அதிசயமா நீ இப்ப வந்திருக்க?" என்று கேட்டான்.

"அது..."

மனைவி பதில் சொல்வதற்காக வாயைத் திறந்திருக்க, "சரி வா, சாப்பிடலாம்," என்று எழுந்திருந்தான்.

"ஸார், கொட்டேஷன் ரெடி."

அந்தக் குரலில் திரும்பிய சுபாஹிணி அதற்குப் பிறகு தான் அங்கு நின்றிருந்த ஸ்வேதாவைப் பார்த்தாள்.

இவள்....

சுபாஹிணி மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, "உனக்குத் தெரியும்னு நினைக்கறேன்.

அன்னைக்கு ஸ்ரீமதி வீட்ல பாத்த ஸ்வேதா, இப்ப என் பி.ஏ.'' என்று மனைவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

''தெரியுங்க!'' என்று லேசான புன்னகையுடன் சொன்ன சுபாஹினி ஸ்வேதாவிடம் திரும்பி, ''நல்லாருக்கீங்களா?'' என்று கேட்டாள்.

''இருக்கேன். என்ன இன்னைக்கு அதிசயமா நீங்க வந்திருக்கீங்க?'' என்று பதிலுக்குக் கேட்டாள் ஸ்வேதா.

''ம், இந்த வழியா ஒரு வேலையா வந்தேன் அதான்,'' என்று சொல்லிவிட்டு சுபாஹினி எழுந்திருக்க, தயானந்த் உள்ளே சென்று வெகு நேரமாகி விட்டிருந்தது.

கைகளைக் கழுவிக் கொண்டு வந்து கணவன் டைனிங் டேபிள் சேரில் அமரவும், சுபாஹினி உள்ளே வரவும் சரியாக இருந்தது.

''உங்களுக்கு...''

''ம், சொல்லு.''

''மெனி மோர் ஹேப்பி ரிட்டன்ஸ் ஆஃப் தி டே.''

''தேங்க்ஸ்!'' என்றவன், ''எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

''அத்தெ சொல்லித்தான் தெரிஞ்சது.''

''ஓ, பரவாயில்ல. சாப்பாடு எடுத்து வைக்கறியா?''

கணவன் கேட்க, ''இதோ...'' என்று ஆசையாகத் தானும் சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

''நீ எதுக்கு இப்படி சிரமப்பட்ற?''

கணவனின் குரலில் உடனே நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், ''இதுல என்ன சிரமம்?'' என்றாள்.



''நீ வேணும்னா கிளம்பிக்கோமா. நானே எடுத்து வெச்சுக்கறேன்.''

கணவன் அந்த மாதிரி சொல்வானென்று சுபாஹினி சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கி விட்டிருக்க, குனிந்தபடியே துடைத்துக் கொண்டாள்.

மனைவியின் நிலை புரிய, ''சுபா...'' என்று அழைத்தான்.

''என்னாச்சு உனக்கு? நான் சாதாரணமாத்தான் சொன்னேன்.''

''இப்பெல்லாம் நீங்க எல்லாத்தையுமே சாதாரணமாத்தான் சொல்லிடறீங்க தயா.''

மனைவியின் பேச்சிலிருந்த உள்ளர்த்தம் புரிய, ''உனக்கெதுக்கு சிரமம்னு சொன்னேன். வேறொன்னுமில்ல,'' என்று மீண்டுமொரு முறையும் சொன்னான்.

''ஸாரி, நான் கிளம்பிக்கறேன்.''

மனைவி இரண்டு அடி எடுத்து வைத்திருக்க, ''சுபா, நில்லு,'' என்றான்.

''சாப்பாடு எடுத்து வை.''

''இல்ல, நான் வேணும்னா கிளம்பிக்...''

''எடுத்து வைமா.''

.........

''அப்பிடியே உனக்கும் ஒரு ப்ளேட் எடுத்து வை.''

கணவன் சற்று அழுத்தத்துடன் சொல்லி விட்டிருக்க, மறுக்க முடியாமல் அவன் சொல்வதைப் போலச் செய்தாள்.

அனைத்தையும் பரிமாறி விட்டுப் பிறகு கணவனுடன் தானும் அமர்ந்து கொண்டாள்.

''ஸ்வேதா சாப்புட்...''

''அப்பவே சாப்டிருப்பா.''

''ஓ.''

''சொல்லு. என்ன?''

''அத்தெ கோவிலுக்குப் போய்ட்டு வரச் சொன்னாங்க.''

''டிரைவரக் கார எடுக்கச் சொல்லி போய்ட்டு வந்துடு.''

''இல்ல, நம்ம ரெண்டு பேரையும் தான் போகச் சொன்னாங்க.''

''நோ ஃபார்மாலிட்டிஸ். நான் வர்றது கொஞ்சம் சிரமம். எனக்காகப் பாத்துட்டிருக்காத.''

கணவன் சொல்ல, ''சரிதான். வீட்லயே உங்களுக்காக நல்லா வேண்டிக்கறேன்,'' என்றாள்.

''அதெல்லாம் கூட வேண்டாம்.''

அப்படிச் சொன்ன கணவனைப் பார்த்தாள் சுபாஹினி.

''சமையல்ல உப்ப மட்டும் கொஞ்சம் குறைவா யூஸ் பண்ணினாப் போதும்.''

கணவன் என்ன சொல்ல வருகிறானென்று சுத்தமாகவே புரிந்திருக்கவில்லை.

''என்ன பாக்கற, உப்பு கம்மி பண்ணிட்டா, ரோஷம் குறையும், அப்பக் கோபம் தன்னப்போல குறைஞ்சுடுமில்லையா?''



...........

''அப்புறமென்ன பிரச்னைகளே வராது. என்ன நான் சொல்றது, சரிதான?''

கணவன் கேட்க, ''இதுக்கு நீங்க கோபப்பட்றதே பெட்டர்!'' என்று அலுத்துக் கொண்டாள் சுபாஹினி.

மனைவியின் பாவனையில் சிரித்து விட்டிருந்த தயாளந்துக்குப் புரையேறிக் கொண்டது.

''அச்சச்சோ! என்ன தயா நீங்க...'' என்று அவசரமாக எழுந்தவள் கணவனின் உச்சந் தலையில் லேசாகத் தட்டிக் கொடுத்தாள்.

''முதல்ல தண்ணி எடுத்துக் குடிங்க.''

ஒரு வழியாக இருமல் நின்று அனைத்தும் சரியாகி விட்டிருக்க, மீண்டும் வந்து சாப்பிட அமர்ந்திருந்தாள் சுபாஹினி.

ஆனால் அதற்குப் பிறகும் கூட தயானந்தால் சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''போதும் சிரிச்சது. சாப்புடுங்க.''

''நீ இப்படி ஜோக்கெல்லாம் கூட அடிப்பியா?''

கணவன் கேட்க, ''நானெங்க ஜோக்கடிச்சேன், உங்க தலைல தான அடிச்சேன்!'' என்றாள்.

''என்னது! எதுவா இருந்தாலும் பொறந்த குழந்தய நீ அடிச்சிருக்கலாமா?''

''கூடாதுப்பா!'' என்று பாவமாகச் சொன்ன மனைவியை, ''அதான...'' என்று பார்த்த தயானந்த், ''இல்ல நானும் மெதுவா அடிச்சு இப்படி அல்வா மாதிரி கிடைச்ச சான்ஸ மிஸ் பண்ணியிருக்கக் கூடாது தான்!''

என்றவளின் பாவனையில் இப்பொழுது மீண்டும் சிரித்து விட்டிருந்தான்.

''என்ன நீ, இன்னைக்கு ஏடாகூடமாவே பேசிட்டிருக்க!''

''நான் என்னைக்குமே வாயாடி தான். இன்னைக்கு மட்டும் தான்னு நீங்க நினைச்சுகிட்டா அதுக்கு நானென்ன பண்றது?''

''சுபா...''

கணவனின் அழைப்பில், என்னவென்பதைப் போலப் பார்த்தாள் சுபாஹினி.

''எம்மேல இருக்கற கோபமெல்லாம் சரியாயிடுச்சா?''

''என்ன... ஓ! அதக் கேக்கறீங்களா? அது எப்பவுமே சரியாகாது.''

தனது வார்த்தைகளில் கணவன் சாப்பிடாமல் பாதியில் எழப்போக, அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்து மீண்டும் அமர வைத்திருந்தாள்.

''சாப்பிடுங்க தயா.''

''போதும்மா. பசியில்ல.''

''முதல்ல சாப்புடுங்க. இல்...''

''சொல்லு, இல்லன்னா என்ன பண்ணுவ.''

''ம், பர்த்டே பேபிக்கு அப்புறம் நான் வந்து ஊட்டி விட வேண்டியதாயிடும்!'' என்றாள்.

''பர்த்டே பேபி என்ன சாப்பாடா சாப்புடும்?'' என்ற தயாளந்தின் பார்வை மாற, பின்ன... என்று சில வினாடிகள் யோசித்த சுபாஹினி ''யூ...'' என்று கோபத்துடன் கணவனை அடிக்க எழுந்திருந்தாள்.



ஆனால் லாவகமாக மனைவியின் கையைப் பிடித்துத் தடுத்திருந்தவன், ''இது ஆபீஸ்!'' என்றான்.

''அதுக்கு?''

''பேச்சு, பேச்சா இருக்கணும்.''

''ம், நீங்க என்ன வேணும்னாலும்...''

அதே நேரம் தயானந்தின் மொபைல் ஒலிக்க, ''ஒரு நிமிஷம்,'' என்று விட்டு அட்டெண்ட் செய்து பேசினான்.

பேசிவிட்டு மொபைலை வைத்தவன் வேகமாகச் சாப்பிடுவதில் முனைந்தான்.

''என்னங்க?''

''ஒரு ஆடர் டெஸ்பேட்ச்மா. கொஞ்சம் ஃபேக்டரி வரைக்கும் போகணும்.''

''ஓ, சரிதான். அதுக்காக ஏன் இவ்வளவு வேகமா சாப்புட்றீங்க?''

''பின்ன, இந்நேரம் அவங்களுக்கு லோட் போய்ச் சேந்திருக்கணும். பேச்சுக்கு நடுவுல மறந்தே போய்ட்டேன்.''

''ஓ. ஸாரிங்க. என்னால தான...''

''ம்கூம், மறந்தது என் தப்பு!'' என்றவன் சில நிமிடங்களில் சாப்பிட்டு முடித்து எழுந்திருந்தான்.

''நீங்க போகலேன்னா என்ன, போன் பண்ணிச் சொன்னா செய்ய மாட்டாங்களா?''

''தாராளமா. அப்பிடித்தான ஒரு நாளைக்கு நூறு லோடு போயிட்டிருக்கு.''

''பின்ன, இப்ப மட்டும் நீங்க ஏன் போகணும்?''

''என்னா நானே பார்ட்டிகிட்ட டைரக்டா பேசிட்டேன். நம்ம ரெகுலர் கஸ்டமர் வேற. சொன்ன மாதிரி செய்ய லேன்னா நல்லார்க்காது.''

தொழிலில் சிறுசிறு விஷயங்களிலும் கூடக் கண வன் எடுத்துக் கொள்ளும் கவனமும் அக்கறையும் அவன் இன்னும் மேலே மேலே செல்வான் என்பதைச் சொல் லாமல் சொல்வதைப் போலிருந்தது.

''அப்புறம் சுபா, நீ வந்ததும் கூட நல்லதாத்தான் போச்சு.''

''என்னங்க, நான் என்ன செய்யணும்?''

''பெண்டிங் ஆர்டர் லிஸ்ட்ட எடுத்து அதுல லாஸ்ட் த்ரீ மந்த்ஸா இருக்கற பெண்டிங்ஸ ஒரு ரிப்போர்ட்டா எடுத்துக் குடுக்க முடியுமா?''

''ஓ.கே. ஸார்.''

மனைவியின் பயபக்தியான பதிலில் பழைய நினை வுகள் வந்து அவனைப் புன்னகைக்க வைத்தன.

''ஏன் சிரிக்கறீங்க?''

''ம், எனக்கு இங்க இன்னொரு சுபாஹிணியப் பாக்கணும். ஸ்வேதாவுக்கு நீ முன்னாடி செஞ்சுட்டிருந்த வேலைகளையெல்லாம் சொல்லிக் குடு.''

''ஷ்யூர் ஸார்,'' என்றவள், ''இன்னொரு சுபாவ தொழில் கண்ணோட்டத்துல மட்டும் பாருங்க போதும்,'' என்றாள்.

ஆனால் அதற்குள் அந்த அறையிலிருந்து வெளியே வந்திருந்தான் தயானந்த்.



அப்படியிருந்தும் மனைவி சொன்னது அவனுடைய காதுகளில் விழவே செய்தது.

வெளியே வந்தவன் மனைவியிடம் சொன்னது போலவே ரிப்போர்ட்டைத் தயார் செய்து வைக்கச் சொல்லி ஸ்வேதாவிடமும் சொன்னான்.

ஏதாவது சந்தேகம் வந்தால் தனது மனைவி சுபா ஹிணியிடம் கேட்டுச் செய்யும்படியும்.

## 44

சில வினாடிகளில் அனைத்தையும் எடுத்து வைத்து விட்டுச் சுபாஹிணியும் வெளியே வந்திருக்க, மீண்டு மொரு முறையும் சொல்லிவிட்டுக் கிளம்பியே விட்டிருந் தான் தயானந்த்.

கணவன் சென்றதும் எம்.டி.யின் இருக்கைக்கு எதிரே இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தாள் சுபாஹிணி.

''என்ன இங்க உக்காந்துட்டிங்க?''

ஸ்வேதா கேட்க, புரியாமல் பார்த்தாள்.

''இல்ல, எம்.டி. ஸீட்ல உக்காருங்க.''

''ம்கூம், அது நல்லார்க்காது. தப்பு.''

''என்ன தப்பு? உங்க வீட்டுக்காரர் ஸீட்...''

''ரிப்போர்ட் ரெடி பண்ணிடலாமா ஸ்வேதா?''

''என்ன நீங்க, ஸின்சியர் சிகாமணியா இருப்பீங்க போல!''

''இல்ல. கொஞ்சம் அவசரம்னு சொல்லிட்டுப் போனார். அதான்.''

''ஸார் இப்பதான கிளம்பியிருக்கார். வர எப்படியும் மினிமம் ஒரு மணி நேரமாவது ஆகாதா? அதுக்குள்ள ரெடி பண்ணிடலாம்.''

''கொஞ்சம் ஃபைல்ஸ எடுத்துட்டு வர்றீங்களா? முதல்ல வேலைய முடிச்சுடலாம்.''

ஏனோ கொஞ்சம் கொஞ்சமாகப் பொறுமை காணா மல் போய்க் கொண்டிருந்தது சுபாஹிணிக்கு.

ஆனாலும் முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டாள்.

ஏன் அதற்குப் பின்னரும் கூட ஸ்வேதா வேலையைப் பார்த்தாள் இல்லை.

அவளுடைய இடத்திற்குச் சென்று எதையெதையோ எடுத்து வைத்துக் கொண்டிருந்தாளே தவிர, நடக்க வேண்டிய வேலையைப் பற்றி யோசித்தாள் இல்லை.

சரிதான், வேறு ஏதாவது முக்கியமானதாக இருக்கு மென்று மேலும் சிறிது நேரமும் கூடக் காத்திருந்தாள் சுபாஹிணி.

சரியாகப் பத்து நிமிடங்களுக்குப் பிறகு, ''ஸ்வேதா!'' என்று அழைத்தே இருந்தாள்.

ஒருமுறை, இரண்டு முறையல்ல, நான்கைந்து முறை அழைத்த பிறகே மெதுவாக ஆடி அசைந்து வந்தாள் ஸ்வேதா.

''வேலையப் பாக்கலாமா?''

''என்ன வேல...''



''என்ன ஸ்வேதா, ஸார் சொல்லிட்டுப் போனத மறந்தே போய்ட்டிங்களா?''

''அத மறக்கல சுபா... சுபான்னு கூப்புட்லாமா இல்ல மேடம்னு ஏதாவது...''

''மரியாதையெல்லாம் வேலைல காட்னீங்கன்னாப் போதும்...''

''ஓ, கோபமா இருப்பீங்க போல.''

''கோபமா? என்ன ஸ்வேதா ஜோக்கடிக்கறீங்க? வேலையப் பாக்கலாம்னு மட்டும்தான் சொல்லிட்டிருக் கேன்.''

தான் அவ்வளவு சொன்ன பிறகும் சரிதான் போனால் போகிறது என்பதைப் போல, ''சரி வாங்க,'' என்று பைல்களுடன் வந்து அமர்ந்தவளைப் பார்த்து அயர்ந்து போனாள் சுபாஹிணி.

இவள் இப்படியெல்லாம் நடந்து கொள்வாளென்று இப்படி நேரிலேயே பார்த்திருக்கா விட்டாலன்றி யாரா வது வந்து சத்தியம் செய்திருந்தாலும் கூட நம்பியிருக்க மாட்டாள்.

சரிதானென்று அதற்குப் பிறகு வேலையில் கவ னத்தைச் செலுத்தத் தொடங்கி விட்டிருந்தாள் சுபா ஹிணி.

ஆனால் சுபாஹிணி மட்டும் தான்.

ஸ்வேதாவோ அவள் பாட்டிற்கு தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசத் தொடங்கி விட்டிருந்தாள்.

சரிதான், ஏதாவது முக்கியமான அழைப்பாக இருக்கு மென்று தான் மட்டும் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

ஆனால் எதற்கும் ஒரு எல்லை இருக்கிறதல்லவா?

மீண்டும் பத்து நிமிடங்களுக்கு மேலாகியும் கூட ஸ்வேதா தொடர்ந்து மொபைலில் பேசிக் கொண்டே இருந்ததில், இப்பொழுது பொறுமையை இழந்தே விட்டிருந்தாள் சுபாஹிணி.

ஏனென்றால் போனில் அவளும் ஒன்றும் முக்கிய மான எதைப்பற்றியும் பேசியிருக்கவில்லை,

''கொஞ்சம் வந்து வேலையப் பாக்கறீங்களா?'' என்று அழைத்தே விட்டிருந்தாள்.

ஆனால் அதற்குப் பிறகும் சில நிமிடங்கள் கழித்தே இணைப்பைத் துண்டித்தவள், ''கூப்புட்டிங்களா?'' என்று மெதுவாக வந்து நின்றாள்.

''வேலையப் பாக்கற ஐடியா இருக்கா?''

''பின்ன, வேலைக்குன்னு வந்துட்டு வேலையப் பாக்காம இருக்க முடியுமா?''

''நல்லாப் பேசறீங்க.''

''அப்ப வேல நல்லா செய்யலேன்னு சொல்றீங் களா?''

''வேலையே செய்யலேன்னு சொல்றேன். நீங்க சர்ட்டிஃபிகேட் கேக்கறதுக்கு வந்துட்டிங்களா?'' என்ற சுபாஹிணிக்கு இப்பொழுது அதுவரை இருந்த இறுக்க மான மனநிலை மாறிச் சிரிப்புகூட வந்து விட்டிருந்தது.

''வேலை செய்யும் போது நீங்க எப்பவுமே இப்படித் தான் இருந்தீங்களா?''

''எப்படி?''



''ஒரு நிமிஷங் கூட வேஸ்ட் பண்ணாம வேலை செஞ்சுட்டே இருப்பீங்களா?''

''ம்கூம், உங்கள மாதிரி இருக்க மாட்டேன். அவ்வளவு தான்.''

''என்ன மாதிரின்னா?''

''சரி, ஸ்வேதா. வேலையப் பாருங்க.''

''எனக்கு ஒன்னு மட்டும் ஏனோ புரியவே மாட்டேங் குது,'' என்றவளைப் பார்த்தாள் சுபாஹிணி.

''இல்ல, இந்த அளவுக்கு வேலையப் பாத்துட்டே இருக்கும்போது எப்பிடி...''

..............

''ஸார லவ் பண்ண டைம் கிடைச்சதுன்னு தான் புரியல.''

''போதும், உங்க லிமிட்டத் தாண்டாதீங்க.''

''அப்படி என்ன தப்பாக் கேட்டுட்டேன். ஏன் இப்படிக் கோபப்பட்றீங்க?''

''சொல்றத செய்ங்க ஸ்வேதா.''

''அடப் போதும். நீங்களும் ஒரு கட்டத்துல என்ன மாதிரி வேலைக்குன்னு வந்தவங்க தான, அத மறந்துடா தீங்க.''

ஸ்வேதாவின் வார்த்தைகளில் அதிர்ச்சியுடன் நிமிர்ந்து அவளைப் பார்த்தாள் சுபாஹிணி.

''என்ன ஸ்டன்னாயிட்டீங்களா? சும்மா மிரட்டறீங்க. நான் வேலை செய்யறேன். உங்க ஸார் சொல்லட்டும். வார்த்தைக்கெல்லாம் என்னால பணிஞ்சு போக முடி யாது.''

''என்னடா, இப்படியெல்லாம் பேசறாளேன்னு அதிர்ச்சியா இருக்கா? நீங்க மட்டும் என்ன ரொம்ப நியாயமாவா நடந்துட்டிருந்திருப்பீங்க. ஸாரக் கவுக்கறதுக்கு இல்லாத வேஷமெல்லாம் போட்டு தான இருப்பீங்க?''

ஸ்வேதா பாட்டுக்குக் கேள்வி மேல் கேள்வி கேட்க, அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போய் நின்று விட்டிருந்தாள் சுபாஹினி.

கடவுளே! இவள் ஏன் இந்த மாதிரி பேசுகிறாளென்று பேச்சிழந்தும்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். பிறகு ஒரு அருவருப்புடன் நிமிர்ந்து ஸ்வேதாவைப் பார்த்துக் கேட்டாள்.

''இப்படியெல்லாம் பேச உனக்கு வெக்கமா இல்ல?'' என்று கோபத்தில் லேசாகக் குரல் நடுங்கக் கேட்டாள்.

''இதப் பாருடா, ஏதேதோ ஜாலமெல்லாம் காட்டி எம்.டி.ய மயக்கறதுக்கு நீங்களே வெக்கப்படாத போது உண்மையக் கேக்கறதுக்கு நானெதுக்கு வெக்கப்படணும்?''

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போன சுபாஹினியால் ஏனோ மேலே பேச முடியாது போயிருக்க, உடனே தனது மொபைலை எடுத்துக் கணவனுக்கு அழைத்திருந்தாள்.

சில ரிங் டோன்களிலேயே இணைப்பு கிடைத்திருக்க, ''ஒரு நிமிஷங்க. இவங்களுக்கு ஏதோ சந்தேகமாம். கிளியர் பண்ணிடுங்க,'' என்று ஸ்வேதாவின் கைகளில் மொபைலைத் திணித்திருந்தாள்.



ஆனால் அதைச் சற்றும் எதிர்பார்த்திருக்காத ஸ்வேதா, ''இல்லில்ல ஸார், மேடம் விளையாட்டுக்கு ஏதோ பண்ணிட்டாங்கன்னு நினைக்கறேன்,'' என்று விட்டு மொபைலை வைத்திருந்தாள்.

''என்ன?''

''பேசியிருக்க வேண்டியது தான. உனக்கும் எல்லாம் கிளியர் ஆயிருக்கும். அதுக்குள்ள ஏன் வெச்சுட்ட?

''பேசு, உங்க லவ் ஸ்டோரியப் பத்திக் கொஞ்சம் சொல்லுங்க ஸார்னு கேட்டிருக்க வேண்டியது தான?

''ஏன் கேக்கல, பயமா?

''பதில் சொல்ல முடியல இல்ல?

''சரிதான். இப்ப சொல்லு. இவ்வளவு பேசற நீயே அவர்கிட்டப் பேசப் பயப்படும் போது நான் மட்டும் எப்படி அவ்வளவு சுலபமாப் பேசியிருப்பேன்னு நினைக்கற?

''எல்லாரையுமே உன்ன மாதிரி நினைச்சுக்காத. முதல்ல மத்தவங்க விஷயத்துல இனிமேலாவது தேவையில்லாம மூக்க நுழைக்கற வேலைய வெச்சுக்காத.

''இதக்கூட ஏன் சொல்றேன்னா, எல்லாருமே என்ன மாதிரியே இருக்க மாட்டாங்க. அப்புறம் மூக்கே காணாமப் போயிடுச்சேன்னு அழுது புலம்ப வேண்டியதாயிடும்.''

அப்படியெல்லாம் பேசிவிட்ட சுபாஹினியால் ஏனோ இயல்பாக இருக்க முடிந்திருக்கவில்லை.

சை என்று மனம் வெறுத்துப் போய் விட்டிருந்தது.

இரண்டாவது முறையே பார்க்கும் ஒருவரிடம், இந்த அளவிற்குக் கூடப் பேச முடியுமா?

இவள் சொல்வதை வைத்துப் பார்த்தால், தான் ஏதோ மிகவும் கேவலமாக நடந்து தயானந்த்தை வளைத்துப் போட்டு விட்டதாகவல்லவா பொருளாகிறது.



## 45

ஏனோ ஒரு மாதிரியாகி விட்டிருக்க, தொடர்ந்து அங்கே அமர்ந்திருந்தால் எங்கே நம்மை நாமே காட்டிக் கொடுத்து விடுவோமோ என்று எழுந்து உள்ளே வந்து விட்டிருந்தாள்.

என்னதான் தயானந்த்தின் அளவிற்கு இல்லாவிட்டாலும் அவளுடைய வீட்டில் ராணியாக இருந்து பழகி விட்டவளுக்கு ஸ்வேதாவின் ஏளனத்தை ஏனோ தாங்கிக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அவள் கேட்டதையெல்லாம் நினைத்துப் பார்த்ததில், கண்களைக் கரித்துக் கொண்டு அழுகை வந்து விடும் போலிருந்தது.

ஆனாலும் எவளோ, ஏதோ சொன்னாளென்று நாம் ஏன் அழ வேண்டுமென்று முயன்று தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

பேசாமல் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடி அமர்ந்து விட்டிருந்தாள்.



ஏதேதோ யோசனையில் வெகுநேரம் அமர்ந்து விட்டிருந்தவள், பிறகு அப்படியே தூங்கியும் போனாள்.

மீண்டும் அவள் விழித்து எழுந்தபோது நேரம் ஐந்துக்கு மேல் ஆகியிருந்தது.

வெளியே கணவன் வந்து விட்டிருந்ததும், ஸ்வேதாவிடம் கிளம்பிக் கொள்ளச் சொல்லிக் கொண்டிருந்ததும் கேட்டது.

ஆனாலும் எழுந்து வெளியே வர மனம் வந்திருக்கவில்லை.

“சுபா.”

கணவன் உள்ளே வர, “வாங்க!” என்றாள்.

“என்னமா, ஏன் இங்க வந்து உக்காந்துட்ட?”

“சும்மா தான். இப்பதான் வந்தீங்களா?”

“ஆமாம்மா, ஏன் போரடிக்க வெச்சுட்டேனா?”

“...”

“டீ கிடைக்குமா?”

கணவன் கேட்க, “இதோ...” என்று எழுந்து அந்த அறையை விட்டு வெளியே வந்தாள்.

“அப்புறம் என்ன சொல்லுது உன் பழைய ஆபீஸ்?”

“அப்ப, இப்ப இது என் ஆபீஸ் இல்லையா?”

“என்ன இப்படிக் கேட்டுட்ட? இப்ப ஓனரே நீதான?”

கணவன் சொன்னது காதில் விழாதது போல இரண்டு கப்களில் டீயை ஊற்றி எடுத்து வந்தாள்.

ஒன்றைக் கணவன் எடுத்துக் கொள்ள, மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டாள்.

“உக்காரு.”

கணவன் சொல்ல, எம்.டி. ஸீட்டுக்கு எதிரே இருந்த ஸீட்டில் அமர்ந்திருந்தாள்.

''அட ஓனரம்மா, ஏன் இங்க உக்காரணும்? எம்.டி. ஸீட்ல உக்காரு.''

''ம்கூம், அது நல்லார்க்க...''

''சுபா...''

அதட்டுவது போலக் கணவன் அழைக்க, ''சரிதான். பிரச்சனய நீங்களே வில கொடுத்து வாங்கறீங்க!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து சென்று எம்.டி. ஸீட்டில் அமர்ந்திருந்தாள்.

அமர்ந்தவள் புன்னகையுடன் நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

அவன் என்ன என்பதைப் போலப் பார்க்க, ''ஏனோ கொஞ்சம் ஓவராத் தெரியற மாதிரியிருக்கு!'' என்றாள்.

அதே சமயம் மனதிற்குள் மிகவும் பெருமையாகவும் உணர்ந்தாள்.

''என்னமா?''

''ஏன் என்னையெல்லாம் போய் இந்த ஸீட்ல உக்காரச் சொல்றீங்க?''

''என்ன இவ்வளவு சாதாரணமாக் கேட்டுட்ட? நீ என் மனச் சிம்மாசனத்துலயே கால் மேல் கால் போட்டு என்ன அன்பா அதிகாரம் பண்ணி வழி நடத்திட்டிருக்க. அப்படியிருக்கும்போது இதெல்லாம் என்னடா பெரிய விஷயம்?''

''தயா...''

கணவன் உணர்ந்து சொன்ன அந்த வார்த்தைகளில் ஏனோ சுபாஹினியின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.



கூடவே தான் இந்த அன்புக்குத் தகுதியானவள் தானா என்ற பயமும் வந்து விட்டிருந்தது.

''சுபா.''

''எனக்கு ஏனோ ரொம்ப பயமா இருக்கு தயா.''

''ஏன்? என்னமா...''

''தெரியல. ஆனா மனசுக்கு என்னவோ தப்பாப் பட்ற மாதிரி, நம்ம ரெண்டு பேருக்கும் நடுவுல ஏதோ பிரச்சன வர்ற மாதிரி...''

''பைத்தியம், உளறாத.''

''தெரிஞ்சு, எம் மனசார நான் எந்தத் தப்பும் நிச்சயம் பண்ண மாட்டேன் தயா. அதுக்கும் மேல அப்பிடி ஏதாவது நடந்துடுச்சுன்னாலும் என்ன வெறுத்துட மாட்டிங்க தான தயா. அப்பிடி ஏதாவது நடந்தா அதத் தாங்கிக்கற சக்தி எனக்குத் துளி...''

''சுபா, என்னாச்சு உனக்கு?'' என்ற கணவன் தன் கையை மிருதுவாக அழுத்த, அதில் ஏதோ ஆயிரம் ஆறுதல் வார்த்தைகள் சொன்னதைப் போல மனம் நிம்மதியடைந்திருந்தாள் சுபாஹிணி.

''உன்னப் பத்தி எனக்குத் தெரியாதாமா? இத்தன நாளும் எப்பிடியோ, ஆனா இந்த செகண்ட் நான் உன்ன முழுமையாப் புரிஞ்சுக்கிட்டிருக்கேன்டா. இனி நீ தெரிஞ்சே தப்புப் பண்ணினாக் கூட அன்பால மாத்துவேன், கோபப்படவே மாட்டேன்.''

''தயா...'' என்று அழுகையில் உதடு துடிக்க அழைத்த மனைவியை உணர்ந்து சொன்ன அன்பான வார்த்தைகளால் மேலும் மனம் நெகிழச் செய்திருந்தான் தயானந்த்.

அந்த வினாடியில் தன்னைப் போல மிகப்பெரிய அதிர்ஷ்டம் செய்த பெண் இந்த உலகத்திலேயே இல்லை யென்பதைப் போல மனத்திற்குள் பெருமையுடன் உணர்ந்தாள் சுபாஹிணி.

மேலும் சில நிமிடங்களில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்தவள், நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்.

அதற்குப் பிறகுதான் அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

கணவனின் பார்வையில் முகம் சூடாகத் தொடங்கி யிருக்க, ''ம்... அப்புறம் என்னப்பா தயானந்த், என்ன பாக்கற? இந்த ஸீட் உன்னை விடவும் எனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு இல்ல?'' என்று பந்தாவாகக் கேட்டாள்.

''என்ன நீ? போனாப் போகுதுன்னு உக்காரச் சொன்னா அதிகாரம் பண்ற?''

''என்ன பண்றதுப்பா? அது இந்த ஸீட்டோட மகிமை.''

''ஓ அப்பிடிங்களா மேடம்?''

''அட ஆமாம்பா!'' என்ற சுபாஹிணி கணவனின் பார்வை மாறுவதைப் பார்த்தபடியே கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

''அட என்னப்பா பாக்கற, வேலையெல்லாம் எப்படி நடக்குது?''

..............

''அட உன்னத்தான்...''

''சுபா...''

கணவன் அழைக்க, ''ம்கூம். மேடம்,'' என்றாள்.



''ஓ.கே. மேடம், வாங்க எங்காவது வெளிய போய்ட்டு வரலாம்.''

''எங்க?''

''சினிமாவுக்கு.''

''அப்பிடியே மை ஃபேவரிட் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல டின்னர்.''

''ம், அப்புறம்?''

''அப்புறம் தான் ரொம்ப முக்கியமான...''

''ம், என்ன?''

''ம்கூம், அத சொல்ல முடியாது. செயல்ல தான் காட்டணும்.''

தன்னை அப்படியே விழுங்க வருவதைப் போன்ற கணவனின் பார்வையில் தொடர்ந்து அந்தப் பார் வையைச் சந்திக்க முடியாமல் குனிந்து கொண்டு விட் டிருந்தாள்.

''சுபா.''

கணவனின் அழைப்பில் நிமிர்ந்தவள், என்ன என்ப தைப் போலப் பார்த்தாள்.

''ஏன் டல்லா இருக்க?''

''அதெல்லாம் இல்லையே.''

''பொய் சொல்லாத.''

''நிஜமாதான்.''

''அப்புறம் போன் பண்ணியிருந்தியே, எதுக்கு?''

''அது...''

''என்னமா?''

''ஸ்வேதா வேலைல ஒரு டவுட் கேட்டா. எனக்கும் தெரியல. அதான்...''

தான் சொல்வதை நம்பாததைப் போலப் பார்த்த கணவனிடம், ''ஆமாங்க. நான் சொல்றதக் கேக்கத் தயங்கினாங்க. அதான் உங்களுக்கு போன் பண்ணிக் குடுத்துப் பேசச் சொன்னேன்,'' என்றாள்.

''சரி. நம்பிட்டேன்.''

''நீங்க நம்பலேன்னாலும் அது தான் உண்மை!'' என்றவள், ''ஆமா, அவ வேலைல எப்பிடி?'' என்று கேட்டாள்.

''எப்பிடின்னா?''

''பெர்ஃபார்மன்ஸ்.''

''வந்து மூணு நாள் தான ஆச்சு, பாக்கலாம்.''

''பாத்த வரைக்கும்?''

''உனக்கென்ன தோணுது?''

''சொல்லத் தெரியல.''

''ஏன் உனக்கு அவளப் பிடிக்கலையா?''

''ஏன், எனக்கு ஏன் அவளப் பிடிக்காம...''

''சும்மா தான் கேட்டேம்மா. விடு.''

''அப்புறம் தயா.''

''என்னமா?''

''நான்...''

''ம், சொல்லு.''



''ஒன்னுமில்ல.''

''என்னடா, அப்பிடி என்ன விஷயம் உன் அழகான மண்டைக்குள்ள இருந்து உன்னக் குடைஞ்சுட்டிருக்கு?''

''இல்ல, வீட்ல போரடிக்குது. டைம் பாஸாகவே மாட்டேங்குது...''

''அதனால வேலைக்கு வர்றியா?''

''அச்சச்சோ! இல்ல, மேல படிக்கட்டுமா?''

''எப்பிடி டிஸ்டன்ஸ் எஜுகேஷனா?''

''ம்கூம், ரெகுலர்ல...''

''அட, பாராட்ட வேண்டிய விஷயமாச்சே. இதுக்கு ஏன் இப்படித் தயங்கற?''

''உங்களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோன்னு ரொம்ப யோசனையாவே இருந்தது. அதான்...''

''நீ வீட்ல போரடிச்சுட்டு உக்காந்துட்டிருக்கறது தான் எனக்குப் புடிக்கல.''

''அப்ப நான் படிக்கலாமா?''

''பின்ன? வேணும்னா சொல்லு. நானும் வர்றேன். ரெண்டு பேரும் சேந்தே படிக்கலாம்.''

''அது சரி.''

''ஏன்?''

''படிச்ச மாதிரி தான்.''

''என்னப்பத்தி நீ என்னன்னு நினைச்சுட்டிருக்க? ஐயாவெல்லாம் ரொம்ப ஷார்ப்பாக்கும். ஏன் எப்பவுமே நல்ல மார்க்ஸ் தானாக்கும்!'' என்று கணவன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு பந்தாவாகப் பார்க்க,

என்ன முயன்றும் சுபாஹினியால் சிரிப்பைக் கட்டுப் படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

"ஹலோ மிஸ்டர். நான் காலேஜ்ல ஸ்டடிஸ்ல கோல்டு மெடலிஸ்ட். எப்பவுமே ஃபர்ஸ்ட் மார்க் மட்டும் தான். எல்லாத்துக்கும் மேல நானொன்னும் சிலர மாதிரி வெறும் சட்டைக் காலர மட்டும் தூக்கி விட்டுக்கற டைப் கிடையாதுப்பா. சொல்றதெல்லாம் அப்பிடியே நாத் துக்கு நூறு உண்மையாக்கும்."

"அப்ப நான் பொய் சொல்றேன்னு சொல்றியா?"

"இனி, அத வேற நான் சொல்லணுமாக்கும்!"

"யாரு ஐயாவா? வேணும்னா என் சர்ட்டிஃபிகேட்ஸப் போய் எடுத்துப் பாருங்க மேடம்."

"ஓஹோ."

"அதோட என் யூ.ஜி. புரொஃபஸர் நளினி மேடம் கிட்டப் போய் என்னப் பத்திக் கேட்டுப் பாருங்க..."

"யாரு அவங்களா? சும்மாவே பெரும தாங்க முடியாது. இப்ப நீங்க அவங்களோட மரியாதைக்குரிய மாப் பிள்ள வேற. தலகால் புரியுமா அவங்களுக்கு? நீங்கெல் லாம் என்ன, அவங்க உங்களையும் மிஞ்சிட மாட் டாங்க?"

"ம், அப்புறம்?"

"அப்புறமென்ன, வாங்க கிளம்பலாம். சினிமாவுக்கு லேட்டாயிடும்."

"அது சரிதான், அதுலயும் திறமையிருக்கறவங்களப் பாத்து இல்லாதவங்க வயிறு எரியத்தான் செய்வாங்க. அதுக்காகவெல்லாம் நாம தளர்ந்து போயிட முடியுமா



என்ன? எக்ஸேக்டா சொல்லணும்னா நீ இப்ப என்னப் பாத்து பொறாமைப் பட்ற மாதிரி..."

"யாரு நானு?" என்ற சுபாஹிணி கணவனை நோக்கிக் கையை நீட்டியிருக்க, "நான் வேணும்னா போய் கதவச் சாத்திட்டு வந்துடட்டுமா?" என்று பயபக்தியுடன் கேட் டான் தயானந்த்.

"எதுக்கு?"

"இல்ல நமக்குள்ள கொடுக்கல், வாங்கல் எத்தனையோ இருக்கும். அதையெல்லாம் நாலு பேர் பாத்தா நல்லாக் குமா?"

"அது சரிதான். அதுலயும் நான் இப்ப உங்களுக்குக் குடுக்கப் போறத கண்டிப்பா யாரும் பாத்துடவே கூடா துப்பா."

"எங்க இங்க குடுக்கப் போறதயா?" என்று கணவன் அவனுடைய உதடுகளைத் தொட்டுக் கேட்டுக் கொண்டே எழுந்து தன்னை நோக்கி வர, "அச்சச்சோ! நானில் லப்பா!" என்று வெகு அவசரமாக இருக்கையை விட்டு எழுந்திருந்தாள் சுபாஹிணி.

அதற்குள் அருகிலேயே வந்திருந்த கணவனிட மிருந்து லாவகமாகத் தப்பித்துத் தள்ளி நின்றவள், "போதும். சினிமாவுக்குக் கிளம்பலாம். அப்புறம் டிக்கெட் கிடைக்காமப் போயிடுச்சுன்னா தாங்கவே முடியாது. ரொம்ப ஆசையா இருக்கேனாக்கும்." என்றாள்.

"அட, சரி. சீக்கிரம் கிளம்பு."

"எப்பிடி?"

"ம். உள்ளயே வாஷ் பேஸின்கிட்ட ஸ்டேண்ட்ல சோப் டவல் கண்ணாடின்னு எல்லாமே இருக்கு. ஓ! நீ

யூஸ் பண்ற பவுடர், கிரீம் எதுவும் இல்லையேன்னு கேக்கறியா?''

''பரவாயில்லங்க, அதெல்லாம் வேண்டாம்,'' என்ற சுபாஹிணி, ''ஃபைவ் மினிட்ஸ்ல கிளம்பிடுவேன். அதுக்குள்ள நீங்களும் ரெடியாயிடுங்க,'' என்று உள்ளே வந்திருந்தாள்.

# 46

சொன்னது போலவே அடுத்த ஐந்து நிமிடங்களில் கணவனுடன் சினிமாவுக்குக் கிளம்பி விட்டிருந்தாள் சுபாஹிணி.

கணவனுடன் வெளியே செல்வது அவளுக்கு எப் பொழுதுமே மிகவும் பிடித்த ஒன்றுதான் என்றாலும், அன்று ஏனோ கணவனின் அருகாமையை மிகவும் உணர்ந்து அனுபவித்தாள்.

சினிமா முடிந்ததும் சொன்னது போலவே ஏற்கெனவே புக் செய்யப்பட்டிருந்த தனக்கு மிகவும் பிடித்தமான அந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு மனைவியை அழைத்துச் சென்றான் தயானந்த்.

அந்த ஹோட்டலின் பிரம்மாண்டத்தையும், அவர்கள் தந்த உணவின் நேர்த்தியையும் கணவனின் அன்பை யும், அருகாமையையும் போலவே அணு அணுவாக ரசித்தாள் சுபாஹிணி.

மனைவியின் மனதைப் புரிந்து கொண்ட தயானந்த் தும் இனிமேல் மனைவியை இப்படி அடிக்கடி வெளியே



அழைத்து வர வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''என்னமா?''

கணவன் கேட்க, ''ஒன்னுமில்லங்க!'' என்றாள் சுபா ஹிணி.

''சரி. சொல்லக் கூடாதுன்னாப் பரவாயில்ல. விடு.''

''இல்ல. நான் இந்த மாதிரி ஹோட்டலுக்கு வர்றது இது தான் ஃபர்ஸ்ட் டைம். இந்த எக்ஸ்பீரியன்ஸ் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு தயா. தேங்க்ஸ்!'' என்றாள்.

''அப்ப விடு. இனிமேல் அடிக்கடி வந்துடலாம்.''

''அச்சச்சோ! அதெல்லாம் வேண்டாம்.''

''ஏன்?''

''பில் பயங்கரமா வருமே...''

''ரொம்பவும் கவலைப்படாத. நம்ம ஸ்டேட்டஸ்க்கு தினமும் எல்லா நேரமும் அதுவும் குடும்பத்தோடயே வந்து இந்த மாதிரி ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல சாப்புட்லாம். கட்டுப்படியாகும்!'' என்றான்.

''அதுக்காக...''

''அதுக்காக நானும் தினமும் வரலாம்னு சொல்லல. வாரத்துக்கொரு தடவ வரலாம்னு சொல்றேன்.''

''அப்புறம் நான்...''

''ம் என்னடா?''

''ம்கூம், அப்புறம் சொல்றேன்.''

''ம்கூம். இப்படியெல்லாம் சஸ்பென்ஸ் வெச்சாத் தாங் காது, இப்பவே சொல்லு.''

''இல்ல. நான் ரெகுலர்ல படிக்க ஆரம்பிச்சுட்டா...''

''ஆரம்பிச்சுட்டா?''

''ஒன்னுமில்ல தயா.''

''என்னடா?''

''இல்ல படிக்கணும்னு முடிவு பண்ணிட்டதால நாம வேணும்னா இப்பத்துக்குக் குழந்த ஆகாத மாதிரி பாத்துக் கலாமா?''

ஒரு வழியாகக் கேட்டே விட்டிருந்தவளுக்குக் கணவனின் பார்வையில் முகம் இரத்த நிறம் கொண்டு விட்டிருந்தது.

''என்ன தயா?'' என்று தயக்கத்துடன் மெல்லிய குரலில் கேட்டாள்.

''என்னடா, ஏதாவது குட் நியூஸா?''

''அச்சச்சோ, அதெல்லாம் ஏன்...''

''என்னது அச்சச்சோ.''

''ஸாரி தயா. ஏதோ மனசுக்குப் பட்டது. அதனால கேட்டுட்டேன்.''

''அதுல என்னமா இருக்கு. ஆனா...''

''சொல்லுங்க தயா.''

''படிப்புக்கும், குழந்த ஆகறதுக்கும் சம்பந்தப்படுத்தாத. எதுக்காகவும் எதயும் தள்ளிப் போட வேண்டாம்.''

கணவன் சொல்ல, சரி என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் சுபாஹிணி.

''என்னடா கோபமா?''

''அச்சச்சோ, அதெல்லாமில்ல.''



''நானும் என்னோட கருத்தத் தான் சொன்னேன். உனக்காக உன் சந்தோஷத்துக்காக நான் எதச் செய்யவும் தயாரா இருக்கேன்டா. ஈவன் குழந்த ஆகறதத் தள்ளிப் போடற வரைக்கும்.''

கணவனின் அன்பில் மனம் நெகிழ்ந்து போயிருக்க, சந்தோஷத்தில் திக்கு முக்காடிப் போனாள் சுபாஹிணி.

''ரொம்ப தேங்க்ஸ் தயா!'' என்று மீண்டுமொரு முறையும் உணர்ந்து சொன்னாள்.

மேலும் சிறிது நேரத்தில் இருவரும் உணவை முடித்துக் கிளம்பி விட்டிருந்தனர்.

கணவன் டிரைவிங் ஸீட்டில் ஏறி அமரப் போக, ''ப்ளீஸ் நான் ஓட்டறேனே!'' என்றாள்.

''நீயா?''

''ம்.''

''ஏன், அப்படியென்ன கோபம் எம்மேல?''

''புரியல.''

''இல்ல. நீ ஓட்றேன்னு சொல்றியே. அதனால கேக்கறேன்.''

''ஹலோ மிஸ்டர், போதும் உங்க கிண்டல் எல்லாம். அப்படியே ஏதாவது ஆனாலும் நம்ம ரெண்டு பேருக்கும் தான? உங்களுக்கு மட்டுமா பிரச்சன...''

''அதத்தான் கேக்கறேன், என்னயும் ஏன்...''

கணவனின் கேலியில் அவனுடைய கையை நறுக்கென்று கிள்ளி விட்டிருந்தாள் சுபாஹிணி.

''வேண்டாம், அப்புறம் எனக்கும் கிள்ளத் தெரியும்.''

''உங்களுக்கு என்னதான் தெரியாது?'' என்று கேட்ட சுபாஹிணி கணவனை விடாமல், டிரைவர் ஸீட்டில் தான் ஏறி அமர்ந்திருந்தாள்.

காரை ஸ்டார்ட் செய்திருந்தவள், ''என்னங்க, ஏன் நின்னுட்டே இருக்கீங்க? வாங்க!'' என்று கணவனை அழைத்தாள்.

''ஒன்னு செய்யலாமா சுபா?''

''என்ன?''

''பேசாம இந்த ஹோட்டல்லயே ஒரு ரூம் புக் பண்ணித் தங்கிடலாமா?''

''ஏன்?''

''உயிராவது மிஞ்சுமே.''

கணவனின் வார்த்தைகளில் அவனை முறைத்துப் பார்த்தவள், ''வாடா முதல்ல வந்து ஏறி உக்காரு,'' என்று கோபம் போலக் குரலை மாற்றி மிரட்டினாள்.

மனைவியின் மிரட்டலில், ''எல்லாம் என் நேரம். எங்கப்பா அப்பவே சொன்னாரு, லவ் மேரேஜ் எல்லாம் வேண்டாம்பா. இந்தப் பொண்ணப் பாத்தாலே எனக்கென்னவோ மனசுக்குச் சரியாப் படல. விட்டுடுன்னார். கேட்டேனா நானு? இப்ப அனுபவிக்கறேன்,'' என்று புலம்பிக் கொண்டே வந்து காரில் ஏறி அமர்ந்திருந்தான் தயானந்த்.

''ஓ, இதெல்லாம் வேற சொன்னாரா உங்கப்பா? இன்னும் வேற என்னவெல்லாம் சொன்னாரு அவரு?''

மனைவி கேட்க, ''வேண்டாம், விடு. இப்பெதுக்கு அதெல்லாம்?'' என்றான்.



''சொல்லுடா,'' என்று மீண்டுமொரு முறையும் விளையாட்டுக்குக் கணவனை மிரட்டிக் கொண்டே சுபாஹிணி காரை ஸ்டார்ட் செய்திருக்க, ''ம். அதுவும் உன்ன மாதிரி அப்பாவியான பையனுக்கு இந்த மாதிரி ஒரு பொண்ணா? வேண்டான்டா. இப்பக்கூட ஒன்னும் கெட்டுப் போயிட்ல. தப்பிச்சுக்கோன்னு தாலி கட்றதுக்குப் பத்து நிமிஷத்துக்கு முன்னாடி கூட மனுஷன் வந்து அத்தன தடவ சொன்னாரு. சரி விடு. அவரு அனுபவத்துக்கு அப்பவே அவருக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு, ஆனா என் கெட்ட நேரத்துக்கு நாந்தான அனுபவிச்சாகணும்!'' என்றான்.

''அப்படியா சேதி? வீட்ல வந்து பேசிக்கறேன்.''

''யார?''

''ம். உங்கப்பாவ, அதுக்கப்புறம் உங்க அம்மாவ.''

''ஐயோ! அவங்களயெல்லாம் ஏம்மா இழுக்கற?''

''ம், எனக்கு அப்பவே அந்தம்மா மேல ஒரு சந்தேகம். இப்ப சரியாதான் இருக்கு. ஒண்ணுமே தெரியாத மாதிரி இருந்துக்கிட்டு அவங்க புருஷனுக்குச் சொல்லிக் குடுத்திருக்காங்க. விடமாட்டேன்.''

''ஏன் நிறுத்திட்ட? இன்னும் எங்க அண்ணா அண்ணி...''

''பின்ன, யாரையும் விட மாட்டேன்.''

''ஓ.''

''ஆனா முதல் எய்ம் அந்த வயசானதுங்க தான்.''

''எப்பிடியோ நான் தப்பிச்சேன். அது போதும்.''

''யாரு நீங்களா? இப்ப வீட்டுக்கு வாங்க. பேசிக்கறேன்.''

"என்னயுமா? நான் வாயக் குடுத்து மாட்டிக்கிட்டேன் போலிருக்கே."

"நீங்கென்ன வாயக் குடுக்கறது? அதுக்கும் முன்னாடியே உங்கள விடக் கூடாதுன்னு நான் முடிவு பண்ணிட்டேன்."

"என்ன மட்டும் விட்டுடேன்மா. பொழச்சுப் போயிட்றேன்."

"சரி. நீங்க இவ்வளவு கேக்கறதுக்காக வேணும்னா யோசிக்கறேன்."

"நன்றிங்கம்மா, நன்றி."

"என்ன அம்மா, திரும்பவும் மாட்டிக்க ஆசையா?"

"இல்லைங்க மேடம், இல்ல."

ஆளாளுக்குச் சிரித்துப் பேசிக் கொண்டே காலை வாரியபடி கணவன் மனைவி இருவரும் வீட்டை அடைந்திருந்தனர்.

"ஸாரி தயா."

"எதுக்கு?"

காரை டிரைவரிடம் கொடுத்துவிட்டுக் கணவனுடன் இறங்கி நடந்த சுபாஹிணி, "விளையாட்டுக்கு என்னென்னவோ சொல்லிட்டேன்," என்றாள்.

"ஏன் நிஜமாவே சொல்ல முடியலையேன்னு கவலையா இருக்கா?"

"அச்சச்சோ! என்ன தயா நீங்க?"

சரியாக அதே நேரம் தனது மொபைல் ஒலிக்க, இவள் ஏன் இந்த நேரத்திற்கு அழைக்கிறாளென்று யோசித்துக்



கொண்டே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தான் தயானந்த்.

.........

"ம். சொல்லு."

சில நிமிடங்கள் பேசியவன், பிறகு மொபைலைப் பாக்கெட்டில் வைத்தபடி உள்ளே வந்தான்.

"தயா, பால். என்னங்க, யார் போன்ல?"

மனைவி கொண்டு வந்து நீட்டிய பால் டம்ளரை எடுத்துக் கொண்ட தயானந்த், "ஸ்வேதா!" என்றான்.

"ஏன், அவ ஏன் இந்த நேரத்துக்கு?"

............

"என்ன தயா, சொல்லிட்டுப் போங்க."

"மேல வா."



## 47

கணவனைத் தொடர்ந்து தானும் தங்களுடைய அறைக்கு வந்திருந்தாள் சுபாஹிணி.

"என்னங்க?"

............

கணவனின் முகத்தில் தெரிந்த இறுக்கமும் கடுமையும் சுபாஹிணியின் நெஞ்சைத் திக்கெனச் செய்து விட்டிருந்தன.

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், கணவனின் முகத்தையே பார்த்தாள்.

''என்ன பாக்கற? உனக்கென்ன பெரிய இவள்னு நினைப்பா?''

''என்னங்க?''

கடவுளே! என்னவாயிற்று, ஏன் கணவனுக்குத் திடீரென்று இவ்வளவு கோபம்.

''அந்த ஸ்வேதா என்ன சொன்னா?''

.........

''சொல்லுங்க.''

''அவ என்ன சொல்லப் போறா? சொல்லுமா. எனக்குன்னு ஒரு பிரஸ்டீஜ் இருக்கு, அவ உன்னப் பேசறது என்னப் பேசற மாதிரி தான்...''

கடவுளே! அப்படியென்றால்...

அவள் தன்னிடம் கேட்டது போலவே கணவனிடமும் எதையாவது கேட்டு விட்டாளோ?

''சுபா.''

''என்ன கேக்கறீங்க தயா?''

''அந்த ஸ்வேதா என்ன சொன்னான்னு கேக்கறேன்.''

கணவன் கிளம்பியதும் அவளை வேலை செய்யச் சொன்னதிலிருந்து அதற்கு அந்த ஸ்வேதா பேசியது வரை அனைத்தையுமே சொல்லி விட்டிருந்தாள் சுபாஹிணி.

சொல்லிவிட்டுக் கணவனின் முகத்தையே பார்த்தாள்.



''நாளையிலிருந்து ஆபீஸ்க்குப் பழையபடி நீயே வந்துடு.''

'ஏன், எதற்குத் தான் வர வேண்டும்?'

''என்ன ஒன்னும் புரியலையா? இனி அந்த ஸ்வேதாவ வேலைக்கு வெச்சுக்கற ஐடியா எனக்கில்ல.''

''ஏன், அவ உங்ககிட்ட என்ன சொன்னா...''

''ஒன்னுமில்லமா. நீ வர. அவ்வளவுதான். விடு.''

''சொல்லுங்க தயா, என்ன சொன்னா?''

''ம். நீயெல்லாம் அவளுக்கு வேல சொல்லக் கூடாதாம். அப்படியே சொன்னாலும் செய்ய மாட்டாளாம்.''

''ஏனாம்?''

''அத விடு.''

''சொல்லுங்க.''

''என்ன சொல்லணும்?''

''ஏன் அப்படிச் சொன்னான்னு...''

''போதும். வாய மூடு. அதான் ஏற்கெனவே சொன்னேனே, நமக்குன்னு ஒரு மரியாத இருக்குன்னு. அதே கம்பெனில தான் ஆயிரம் பேர் எங்கிட்ட வேலை செய்யறாங்க, யாரும் எனக்கு முன்னாடி நின்னு பேசினது கூடக் கிடையாது. ஆனா இவ? எல்லாம் உன்...''

''சொல்லுங்க தயா, ஏன் நிறுத்திட்டிங்க, என்னாலன்னு தான சொல்ல வந்தீங்க, சொல்லுங்க.''

''ஆமா, அதுல என்ன சந்தேகம்? யார் யார எங்கெங்க வெக்கணுமோ அங்கங்க வெக்கணும். அத விட்டுட்டு...''

''இத நீங்க ரொம்ப முன்னாடி யோசிச்சிருக்கணும் தயா, இனி அதப்பத்தி யோசிச்சு என்ன பண்றது?''

அப்படிச் சொன்ன மனைவியைப் புரியாமல் பார்த்தான் தயானந்த்.

"நீ என்ன சொல்ற?"

"ஏன் புரியலையா? உங்க தகுதிக்கு ஏத்த மாதிரி உங்க வீட்ல சொல்ற பொண்ணக் கல்யாணம் பண்ணிட்டிருந்தீங்கன்னா இன்னைக்கு இந்த மாதிரி தலை குனிவையெல்லாம் பாவம் நீங்களும் சந்திச்சிருக்க வேண்டியதில்ல தான்."

"சுபா."

கணவனின் அதட்டலில் நிமிர்ந்து அவனைப் பார்த்த சுபாஹினி, "எனக்கு உங்களப் போலவே உங்க மதிப்பும் மரியாதையும் கூட முக்கியம் தான் தயா. என்னால உங்களுக்கு அதெல்லாம் கெட வேண்டாம். அதனால..."

"அதனால?"

...........

"சொல்லு, அதனால?"

"ஆபீஸ்க்கெல்லாம் இனிமேல் வரவே மாட்டேன், தயவு செஞ்சு நீங்களும் என்னக் கூப்புடாதீங்க. இன்னைக்கு நான் வந்ததும் கூட தப்புதான் தயா. ரொம்ப பெரிய தப்புதான்."

"போதும், நிறுத்து."

"ஏன் பிராக்டிகலா தான பேசறேன்."

"உன் பேச்சக் கொண்டு போய் குப்பைல போடு. ஓ, அப்ப நம்ம கல்யாணமே தப்புன்னு முடிவு பண்ணிட்டயா?"



.....

"சொல்லு."

கணவன் தனது தோளைத் தொட்டு உலுக்க, "தெரியல," என்றாள்.

"சுபா."

"எனக்கு நீங்க வேணும் தயா. நீங்க மட்டும்தான் வேணும். இன்னும் ஒருநாள் கூட உங்க சொத்துப் பத்தியோ அதனோட மதிப்பப் பத்தியோ நான் கனவுல கூட நினைச்சது கிடையாது..."

"கேக்கறதுக்கு மட்டும் பதில் சொல்லு."

"ஆனா மத்தவங்க எல்லாருமே உங்க பணத்துக்காக நான் உங்கள மயக்கிக் கல்யாணம் பண்ணிக்கிட்டதா தான் நினைக்கறாங்க. அந்த மாதிரியான ஒரு கேவலமான வேல செஞ்ச எனக்கு இந்த மரியாத போதும்னு நினைக்கறாங்க."

"சுபா..."

"முடியல தயா, என்னப் பொறுத்த வரைக்கும் உங்களுக்கும், உங்க அன்புக்கும் ஈடு இணையா இந்த உலகத்துல எதுவுமே கிடையாது."

"என்ன தயா, நான் சொல்றதுல உங்களுக்கு நம்பிக்கை இல்ல. அப்படித்தானா?"

"போதும், கொஞ்ச நேரத்துக்கு எதுவும் பேசாத."

"இவ்வளவு யோசிக்கறீங்க, முதல்ல ஸ்வேதா இவ்வளவு பேசறான்னா அது ஏன், அதுக்கு என்ன காரணம்னு யோசிச்சீங்களா?"

அப்படிக் கேட்ட மனைவியைப் பார்த்தான் தயானந்த்.

"ஏன், அதயும் நீயே சொல்லேன்."

............

''சொல்ல முடியாது...''

''உங்க அத்தெ. உங்க அத்தெ தான் அதுக்குக் காரணம்.''

''என்ன பாக்கறீங்க? அவங்க தான் சொன்னாங்க, நீ நிம்மதியா இருக்க மாட்ட, இருக்க விட மாட்டேன்னு சொன்னாங்க.''

............

''அதுக்காக நீங்க ஸ்வேதா மேலயெல்லாம் கோபப் படாதீங்க. வேணும்னா உங்க அத்தெ வாய அடைங்க. இல்லன்னா இன்னைக்கு ஸ்வேதா மாதிரி நாளைக்கு ஒரு கவிதா, இதுக்கு முடிவே இருக்காது.''

அப்படிச் சொல்லிவிட்டு சுபாஹினி தன் பாட்டுக்கு அந்த இடத்தை விட்டு நகரப் போக, எட்டி மனைவியின் கையைப் பிடித்திருந்தான் தயானந்த்.

''சுபா...''

மனைவியை இழுத்துத் தனது கைகளுக்குள் கொண்டு வந்திருந்தவன், ''இதச் சொல்ல உனக்கு இத்தன நாளாச்சா?'' என்று மென்மையாகக் கேட்டான்.

''என்னடா? என்ன பாக்கற? உன் காதலுக்கு முன்னாடி எனக்கும் இந்த உலகத்துல எல்லாமே தூசு தான்டா.

''போனதையெல்லாம் விடு. இனிமேல் உன்ன யாரும் நெருங்காத மாதிரி பாத்துக்கறேன். முக்கியமா என்னோட அத்தெ மாதிரி ஆளுங்க.''

''அவங்களுக்கும் ஒன்னும் எம்மேல கோபம் கிடையாது தயா. அவங்களுக்கு, அவங்க பொண்ணுக்குக் கிடைக்க இருந்த உரிமைய நான் வந்து தட்டிப் பறிச்சுட்டதா நினைக்கறாங்க. அவ்வளவுதான்.

''ப்ளீஸ் தயா... இத மட்டும் கேட்டுடுங்க. நான்னு கிடையாது. உங்க மனைவியா நானில்லாம வேற யாராவது ஒருத்தி வந்திருந்தாக் கூட உங்கத்தெ இந்த மாதிரி தான் நடந்துக்கிட்டிருந்திருப்பாங்க.

''ஒருவேள ஸ்ரீயும் நல்லா இருந்திருந்தா, அதாவது அவ வீட்டுக்காரரோட நம்மள மாதிரி சந்தோஷமா இருந்திருந்தான்னா, உங்க அத்தெ நிச்சயம் இந்த மாதிரியெல்லாம் நடந்துக்கிட்டிருக்கவே மாட்டாங்களா இருக்கும்.''

''அதுக்காக இனிமேல் இப்படித்தான் நடந்துப்பாங்க, அதுதான் சரின்னு சொல்றியா?''

''ம்கூம் இல்ல, இனி அவங்களாவே கொஞ்சம் கொஞ்சமா மாறிடுவாங்கன்னு சொல்றேன். இதக்கூட உங்க கிட்ட சொல்லக் கூடாதுன்னுதான் நினைச்சேன். ஆனா இன்னொரு தடவ நீங்க கோபப்பட்றதையும் அதனால வர்ற விளைவுகளையும் தாங்கிக்கற சக்தி எனக்குக் கிடையாது.''

''எது எப்படியோ, ஆனா இனிமேல் அந்த ஸ்வேதாவ வேலைக்கு வெச்சுக்கற ஐடியா எனக்கில்லை.''

''எதுக்கும் கொஞ்சம் யோசி...''

''சரிதான், முட்டாளெல்லாம் கொஞ்சமென்ன நிறையவே யோசிக்கத்தான் வேணும்!'' என்று விரக்தியுடன் சொன்ன கணவனைக் குற்ற உணர்வுடன் பார்த்தாள் சுபாஹினி.

''ஸாரி தயா, அவள வேலைய விட்டு எடுக்கறது நீங்க தான்னாலும் கூட அதுக்கு நாந்தான் காரணமோன்னு உங்க அத்தெ யோசிப்பாங்க. அதனால அவங்களுக்கு எம்மேல இருக்கற வெறுப்பும், கோபமும் இன்னும் அதிகமாயிடுமோங்கற கண்ணோட்டத்துல அந்த மாதிரி சொல்ல வேண்டியதாயிடுச்சு...''

''விடுமா. இந்த மாதிரி நேரத்துல அதுவும் அந்த மாதிரி தகுதியில்லாதவங்களப் பத்தி நாம ஏன் பேச ணும்?''

யாரையும் அவ்வளவு எளிதில் எதையுமே சொல்லி விடாத கணவன் இப்படியொரு வார்த்தை சொல்கிறா னென்றால், அதுவும் தன்னிடமே என்று சுபாஹிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அதற்குப் பிறகோ அவளால் எதைப் பற்றி யுமே நினைக்க முடிந்திருக்கவில்லை. அதற்கு அவ ளுடைய கணவன் தயானந்த் விட்டிருக்கவில்லை.

மனைவியை மேலும் அருகில் இழுத்துத் தனது கைகளுக்குள் கொண்டு வந்திருந்தவன் எல்லையற்ற காதலுடன் மனைவியின் முகத்தையே பார்த்தான்.

''சுபா.''

''ம்...''

''எம்மேல கோபமாடா?''

''ம்கூம்.''

''மத்தவங்கள விடவும் கூட நான் உன்ன ரொம்பக் கொடுமைப்படுத்திட்டேன் இல்லடா... சுபா...''

கணவனின் அணைப்பிலும், அருகாமையிலும் கொஞ் சம் கொஞ்சமாகத் தன்னை மறந்து கொண்டிருந்த



சுபாஹிணி, கணவனின் கேள்வியில் நடப்புக்கு வந்தவ ளாய் நிமிர்ந்து என்னவென்பதைப் போல அவனுடைய முகத்தைப் பார்த்தாள்.

மனைவியின் நிலை முழுமையாகப் புரிந்திருக்க, அதற்கு மேல் தயானந்தாலும் தன்னைக் கட்டுப்படுத் திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அப்படியே மனைவியை அணைத்தபடியே கட்டி லுக்கு அழைத்து வந்திருந்தான்.

ஒருவிதக் கிறக்கத்தில் கண்கள் சொக்கத் தன் மேல் சாய்ந்த மனைவியை இறுக அணைத்து அவளுடைய முகம் நோக்கிக் குனிந்தான்.

குனிந்தவன் மனைவியின் இதழ்களைத் தனது இதழ் களால் சிறைப் பிடித்திருக்க, தானும் தனது கணவனை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தாள் சுபாஹிணி.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் இருவரும் முழுமை யாகத் தங்கள் வசம் இழந்து போயிருந்தார்கள்.

## 48

''வா தயா.''

''வரலாம் அத்தெ. எப்படியிருக்கீங்க?''

''நல்லார்க்கேன்பா. என்ன அதிசயம் திடீர்னு வந் திருக்க?''

தனது மனைவியைப் பற்றி அவர் ஒரு வார்த்தை கூட விசாரிக்காதது தயானந்தின் கருத்தில் படத் தவறவில்லை.

''எங்க அத்தெ ஸ்ரீ, மாமா?''

''காலைல தான்பா பெங்களூரிலிருந்து வந்தாங்க. ஸ்ரீ தூங்கப் போனா. உங்க மாமா குளிக்கப் போனார்.''

''அப்புறம் தயா.''

''என்ன அத்தெ, சொல்லுங்க?''

''ஏதேதோ நினைச்சேன்பா. ஆனா நினைக்காததெல்லாம் நடந்து போச்சு...''

''.............''

''எம் மேலயும் சில தப்புக்கள் இருக்கு...''

நாங்க திரும்பவும் பெங்களூர்க்கே போயிடலாம்னு முடிவு பண்ணிட்டோம்பா. ஆமாம்பா. எல்லாத் தப்புமே எம்மேல தான். ஆனா இனிமேல் என்னால எந்தத் தப்பும் வராது. கவலைப்படாத.''

''விடுங்க அத்தெ. இத்தன நாளும் போனதெல்லாம் போகட்டும். அதோட ஸ்ரீயும் சென்னை பிடிக்கலேன்னு தான் சொன்னா...''

அதே நேரம் ராகவன் தானும் ஹாலுக்கு வந்தார்.

''வா தயா, இப்பதான் வர்றியா?''

''ஆமாம் மாமா, நல்லார்க்கீங்களா?''

''நல்லார்கேன்பா.''

''எங்கயோ வெளிய கிளம்பிட்டீங்க போல?''



''ஆமாம்பா. என்ன தயா...''

''ஸ்ரீயோட எதிர்காலத்தப் பத்தி என்ன டிஸைட் பண்ணியிருக்கீங்க?''

''பெங்களூர்ல எம் பிஸினஸப் பாத்துக்கறேன்னு சொல்றா தயா. பாக்கட்டும்.''

''சந்தோஷம். இதுவே நல்ல தொடக்கமா இருக்கட்டும். அவ எந்நேரமும் வீட்லயே இருந்தா உங்களுக்கும் இப்படியாயிடுச்சேங்கற கவல. அதுல நீங்க ஏதாவது சாதாரணமா சொன்னாக்கூட அது அவளுக்கும் தண்டனையா தான் முடியும்.''

''அது சரிதான் தயா. இத்தன நாளும் நாங்க ரெண்டு பேரும் சேந்து அவள ரொம்பவுமே புண்படுத்திட்டோம்!'' என்று காவேரி சொல்ல,

''ஆனா இனிமேல் கண்டிப்பா அந்த மாதிரி நடக்காம பாத்துக்கறோம்பா. முக்கியமா அவ விருப்பம் என்னவோ அதக் கேட்டு நடந்துக்கறோம்,'' என்றார் ராகவன்.

''ஆமாம் மாமா. இப்ப நாம முக்கியமா செய்ய வேண்டியதும் அதுதான், மத்தப்படி வர்ற பெரிய பெரிய தீர்வுகளை யெல்லாம் காலமே சுமுகமா எடுத்துடும். இனிமேல் எல்லாமே நல்லபடியா நடக்கும். கவலைப்படாதீங்க.''

''அந்த நம்பிக்கை இப்ப எங்களுக்கும் வந்திருக்குப்பா.''

''அப்புறம் எந்த ஸெகண்ட்லயும் என்ன மறந்துடாதீங்க. என்ன உதவி தேவைப்பட்டாலும் அது பணமானாலும் சரி. ஸ்ரீக்காக நான் எதயும் செய்யத் தயாரா இருக்கேன். கேக்கத் தயங்காதீங்க.''

''சரிப்பா.''

அதே நேரம், ''ஹாய் அத்தான்!'' என்று ஸ்ரீமதி வர, திரும்பிப் பார்த்தான் தயானந்த்.

''அட, நீ தூங்கிட்டிருக்கறதா சொன்னாங்க.''

''டாடி கார் இன்னும் கிளம்பற சத்தம் கேக்கலையே, என்னவா இருக்கும்னு எழுந்து வந்தேன்.''

''அப்புறம் பெங்களூர் எப்படியிருக்கு?''

''அதுக்கென்ன, சுபா எப்படியிருக்கா? அத சொல்லுங்க முதல்ல.''

''நல்லார்க்கா.''

''அவள சந்தோஷமா வெச்சுக்கோங்க அத்தான், இல்லன்னா நான் எங்கிருந்தாலும் சரி, வந்து உங்கள ஒரு வழி பண்ணிடுவேன்.''

விளையாட்டாகத் தான் சொன்னாள் ஸ்ரீமதி.

ஆனால் அது ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான எண்ணங்களை ஏற்படுத்தியிருந்தது.

''இனிமேல் எல்லாமே சரியாயிடும்மா. கடவுளாவே பாத்து எல்லார்க்குமே ஒரு நல்ல வழியக் காட்டிட்டார்னு நினைக்கறேன்.''

தயானந்த் சொல்ல, ''சரியா சொன்னீங்க அத்தான்!'' என்றாள் ஸ்ரீமதி.

ஆனால் காவேரியால் தான் அந்த நிமிடத்தில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்திருக்கவில்லை, கூடவே ராகவனாலும்,

மறைமுகமாகத் தங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறானோ என்றிருந்தது.



ஸ்ரீமதி பேசியதும் கூட அதை ஆமோதிப்பது போலவே தான் இருந்தது.

''நாங்களும் கிளம்பிட்டா, அதுக்கப்புறம் உங்களுக்கும் எத்தனையோ தொல்லைகள் குறையும். முக்கியமா என்னால!'' என்று அந்தக் கடைசி வார்த்தைக்குச் சற்று அழுத்தம் கொடுத்துச் சொன்னாள்.

ஆனால் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தை மற்றவர்களுக்காகச் சேர்த்துச் சொல்லப்பட்டதோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''அப்புறம் அத்தான்...''

''என்ன ஸ்ரீ?''

ஸ்ரீமதி தனது எதிர்காலத் திட்டத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கியிருக்க, ஒரு நிமிஷம்... இப்ப வர்றேன் என்று உள்ளே சென்றார் காவேரி.

தொடக்கத்தில் எப்படியோ, தான் இனிச் செய்யப் போவதையெல்லாம் தயானந்த்திடம் சொல்லியதற்குப் பிறகு மேலும் நம்பிக்கை பல மடங்கு அதிகமாகியிருக்கக் கண்டாள் ஸ்ரீமதி.

''தேங்க்ஸ் அத்தான்.''

''என்னமா?''

''உங்ககிட்ட சொன்னதுக்கப்புறம் இன்னும் கூட நம்பிக்கை அதிகமாயிருக்கறதோட, மனசுக்கும் ரொம்ப நிம்மதியா இருக்கு.''

''எங்கிட்டேன்னு இல்லமா, நாம நினைக்கறத வெளிய சொல்லச் சொல்லத்தான் அதனோட தீவிரம் மேலும் அதிகமாகறதோட, இன்னும் எப்படி சிறப்பா செயல்படுத்தறதுங்கறதும் புரியும்,'' என்றான்.

ஸ்ரீமதி சொல்லச் சொல்லத் தானும் சில கருத்துக்களைச் சொன்னான், தயானந்த்.

அது அவளுக்கும் மிகவும் பிடித்துப் போனதோடு, புதிய நம்பிக்கையையும் தருவதாக இருக்க, சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தாள்.

அதே நேரம் காபி ஸ்நேக்ஸ் ட்ரேயுடன் ஹாலுக்கு வந்த காவேரி மகளை ஆச்சரியமாகப் பார்த்தார்.

''என்னமா பாக்கறீங்க?'' என்று கேட்ட ஸ்ரீமதி, அனைத்தையும் தனது தாயிடமும் சொன்னாள்.

ஏற்கெனவே அங்கிருந்து அனைத்தையும் பார்த்தபடி அமர்ந்திருந்த ராகவனுக்கும் மிகுந்த சந்தோஷம்.

''சரிதாம்மா, உன் சோதனைக் காலமெல்லாம் சென்னையோட முடிஞ்சு போச்சு. பெங்களூருக்குப் போனதுக்கப்புறம் நீ திரும்பவும் பழைய ஸ்ரீயா மாறி சந்தோஷமா துள்ளிக் குதிக்கலாம்.''

ராகவன் சொல்ல, ''அது சரிதாம்மா. அதுக்கு முதல்ல நாங்களும் உன் பழைய பேரண்ட்ஸா மாறிடுவோம்!'' என்றார் காவேரி.

''அப்ப சரிதான்!'' என்று கண் சிமிட்டிச் சிரித்த ஸ்ரீமதி, ''டிபன் எடுத்துக்கோங்க அத்தான்,'' என்று உபசரித்தாள்.

''ஆமாம் தயா, காபிய முதல்ல எடுத்துக்கோ. ஆறிடும்,'' என்றவர், கணவனுக்கும் மகளுக்கும் ஆளுக்கொரு காபி கப்பை எடுத்துக் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்டார்.

''அப்புறம் அத்தான், எனக்கொரு உதவி செய்வீங்களா?''



ஸ்ரீமதி கேட்க ''என்னமா?'' என்றான் தயானந்த்.

''கண்டிப்பா செய்யணும்னு கிடையாது, ஒரு ரிக்வெஸ்ட் அவ்வளவுதான்...''

''முதல்ல விஷயத்துக்கு வா.''

''இல்ல, ஸ்வேதா...''

''ம். என்ன?''

''ஸ்வேதா வேலைல ஏதோ தப்புப் பண்ணிட்டாளாம். அதனால உங்களுக்குக் கோபம்னு ரொம்பவும் புலம்பிட்டிருந்தா அத்தான். அதான்....''

............

''இந்த ஒரு தடவ அவள மன்னிச்சு விட்டுட முடியுமா ப்ளீஸ். அவ ஃபேமிலி ரொம்பவும் கஷ்டப்பட்ற பேமிலி அத்தான். இல்லன்னா இதக்கூட நான் கேக்க மாட்டேன். ஆனாலும் முடிவு உங்களோடது தான்...''

''இப்ப என்ன சொல்ல வர்ற.''

''முடிஞ்சா அவள வேலைல கண்டினியூ பண்ணிக்கச் சொல்ல முடியுமான்னு கேட்டேன், வேறொன்னுமில்ல...''

''சரி. உனக்காக மன்னிச்சு விட்டுட்றேன்.''

''தேங்க்யூ அத்தான்.''

''ரொம்பவும் சந்தோஷப்படாத. இனியொரு தடவ ரிமார்க் வந்தா யாருக்காகவும் பாக்க மாட்டேன். சொல்லிட்டேன்.''

''சரிதான் அத்தான், உங்க குணத்துக்கு அவள நீங்க ஒரு முறை மன்னிச்சு விட்டதே பெரிய விஷயம்னு எனக்கும் புரியாதா என்ன? ஏதோ என்னால முடிஞ்ச

ஒரு உதவிய அவளுக்கு நான் செஞ்சுட்டேன். இனி அவளுக்குப் புத்தியிருந்தா அவளே பாத்து நடந்துக்கட்டும். அவ்வளவுதான்.''

''அப்புறம் தயா.''

''என்ன மாமா சொல்லுங்க?''

''இந்த வார சன்டே நாங்க பெங்களூர்க்கு கிளம்பறோம்பா.''

''இந்த வாரமேவா...''

''ஆமாம் தயா, போதும். எங்களுக்கும் புது ஊர்ல ஏதோ கையக் காலக் கட்டிப் போட்டுட்ட மாதிரி எப்பிடியோ இருக்கு. அதனால தான் மூணு பேரும் ஒரு மனசா இந்த முடிவுக்கு வந்தோம்,'' என்றார் காவேரி.

தனது அத்தையும் சொல்ல, ''சரிதான் கிளம்பறதுன்னு முடிவானதுக்கப்புறம் யோசிக்கறதுல என்ன இருக்கு? யாருக்காக இங்க வந்தீங்களோ அவளே முழுசா நல்ல படியாத் தேறிட்டா. இனி நிம்மதியாவே நீங்க கிளம்பற வேலையப் பாருங்க,'' என்றான்.

''அது சரிதான்பா.''

''அப்பறம் ஏதாவது ஹெல்ப் வேணும்னாலும் கேளுங்க அத்தெ.''

''பின்ன உன்ன விட்டா எங்களுக்கும் இங்க வேற யாரு இருக்கா? எதுவானாலும் உன்னத்தான் கேப்போம். நீ வந்து செஞ்சு குடுத்தாப் போதும்.''

''அப்புறம் சுபா...''

''என்ன அத்தான்?''

''கிளம்பறதுக்கு முன்னாடி நாம எல்லாரும் வெளிய எங்காவது போய்ட்டு வரலாமா?''



என்னதான் ஆரம்பித்து விட்டிருந்தாலும் அதைக் கேட்டு முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டிருந்தது தயானந்த்திற்கு.

அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

ஆனால் அதற்குள், ''தாராளமாப் போலாம் அத்தான், ஆனா இப்ப இல்ல. நீங்க சுபாவ அழைச்சுட்டுப் பெங்களூர்க்கு வாங்க. ஜாலியாப் போய்ட்டு வரலாம்,'' என்றாள் ஸ்ரீமதி.

என்னதான் ஸ்ரீமதி அதை வெகு இயல்பாக எடுத்துக் கொண்டிருந்தாலும் ஏற்கெனவே ஒரு சுற்றுலா பயணத்தில் கணவனை இழந்து நிற்பவளிடம் நாம் இப்படிக் கேட்டு மீண்டும் அதை நினைவு படுத்தி விட்டோமே என்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது தயானந்த்திற்கு.

''கூல் அத்தான். நான் அதையெல்லாம் மறந்துட்டேன். அதோட எனக்கே வெளிய ஒரு லாங் டூர் எங்காவது போய்ட்டு வரணுங்கற ஐடியாவும் இருக்கு,'' என்றாள்.

''சரி. கிளம்பறதுக்குள்ள அங்க வீட்டுக்கு ஒரு முறை வாங்க.''

''அது கூட...''

''என்ன அத்தெ?''

''கிளம்ப இன்னும் ரெண்டு நாள் தான் தயா இருக்கு. அதுக்குள்ள பர்சேஸ் பண்ணணும்னு ஆளாளுக்கு ஒரு பெரிய லிஸ்ட்டே வெச்சிருக்கோம். இன்னொரு முறை வரும்போது வர்றோமே.''

''சரிதான் அத்தெ, அப்ப நீங்க அந்த வேலையப் பாருங்க. வேணும்னா அங்க நம்ம வீட்டு டிரைவரக் கூடக் கூப்புட்டுக்கோங்க.''

''சரிப்பா.''

மேலும் சிறிது நேரமும் இருந்து பேசிக் கொண்டிருந்து விட்டு ஞாயிற்றுக்கிழமை பார்க்கலாமென்று கிளம்பி விட்டிருந்தான் தயானந்த்.

## 49

மேலும் இரண்டு நாட்கள் சென்றிருந்தன.

ஸ்ரீமதி குடும்பம் மறுநாள் கிளம்ப இருப்பதால் அவர்கள் கேட்ட சிறுசிறு உதவிகளைச் சிரமேற் கொண்டு செய்து கொடுத்தான் தயானந்த்.

அவனுக்கும் மனதிற்குள் வேதனையாகத் தான் இருந்தது. ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு இயல்பாக நடந்து கொண்டான்.

அவனுடைய கவலையும் கூட ஸ்ரீமதியை நினைத்துத் தான்.

என்னதான் சுற்றியிருப்பவர்களுக்காக அவள் தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாலும், உள்ளுக்குள் அவள் படும் வேதனை தயானந்த்திற்கும் புரியவே செய்தது.

அந்த வெகுளிப் பெண்ணிற்குக் கடவுள் வாழ்நாள் முழுமைக்கும் மறக்கவே முடியாத அளவிற்கு இந்த மாதிரியொரு மிகப் பெரிய துன்பத்தைக் கொடுத்திருக்க வேண்டாமே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.



''ஸார்.''

ஸ்வேதா வந்து நின்றிருக்க, ''சொல்லு,'' என்றான்.

''ஸார், நீங்க சொன்ன வேலைகளையெல்லாம் முடிச்சுட்டேன் ஸார். மந்த்லி ரிப்போர்ட் மட்டும் தான். அதக்கூட ஒரு தடவ கம்ப்ளீட்டா செக் பண்ணிட்டா பிரிண்ட் அவுட் எடுத்துடலாம்,'' என்றாள்.

''ஏன், அதையும் எடுத்துக் குடுத்துடு.''

''நீங்க ஒரு தடவ செக் பண்ணிட்டீங்கன்னா...''

''ஆரம்பத்துல அதுவும் தெரியாம மிஸ்டேக்ஸ் வந்தாத் தப்பில்ல ஸ்வேதா, தெரிஞ்சே தப்புப் பண்றது தான் என்னால நூத்துல ஒரு பர்ஸன்ட் கூட அனுமதிக்க முடியாது.''

எம்.டி. தயானந்த் சொல்ல, அவன் எதைக் குறிப்பிட்டுச் சொல்கிறான் என்பதும் அவளுக்குப் புரியவே செய்தது.

''அது சரிதான் ஸார், நானும் இப்ப என் தப்ப உணர்ந்து திருந்திட்டேன் ஸார். இனிமேல் பாத்து நடந்துக்குவேன்...'' என்றாள்.

''சந்தோஷம்!'' என்றவன் கையைத் திருப்பிக் கடிகாரத்தில் நேரம் பார்த்தான்.

''சரி. நீ கிளம்பு, மீதி வேலைய நாளைக்கு வந்து பாத்துக்கோ.''

..........

''என்ன, ஏன் இன்னும் நின்...''

''ஸார்...''

''என்ன, சொல்லு?''

''ஸார், எனக்கு நீங்க திரும்பவும் வேல போட்டுக் குடுத்ததுக்கு ரொம்ப நன்றி ஸார்.''

அப்படிச் சொன்ன தன்னை எம்.டி. பார்க்க, அவனுடைய உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையில் சில வினாடிகள் பயந்து கூடப் போனாள் ஸ்வேதா.

''ஸார்...''

''முதல்ல நான் எப்ப உன்ன வேலைய விட்டு நிறுத்தினேன்?

''தேவையில்லாம உன்னை நீயே கன்ஃப்யூஸ் பண்ணிக்காத, கிளம்பு.''

எம்.டி.யின் அந்த அழுத்தமான குரலில் அவனுக்கு நன்றி சொல்லி விட்டுக் கிளம்பியே விட்டிருந்தாள் ஸ்வேதா.

வெளியே வந்த பிறகுதான் அவளால் இயல்பாக மூச்சு விடக்கூட முடிந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தவள் யாரும் இல்லையென்பதை உறுதி செய்து கொண்ட பின் கைப்பைக்குள்ளிருந்த தனது மொபைலை வெளியே எடுத்தாள்.

எடுத்தவள் உடனே ஒருவருக்கு அழைத்திருந்தாள்.

அது வேறு யாருமல்ல, காவேரி.

சில வினாடிகள் பேசியவள், ''சரி. அப்ப நான் வீட்டுக்கு வந்துட்றேன்,'' என்று இணைப்பைத் துண்டித்தாள்.

நேராகச் சென்று ஒரு ஆட்டோவைப் பிடித்து அட்ரஸை சொல்லிவிட்டு ஏறி அமர்ந்தாள்.



அடுத்த பதினைந்து நிமிடங்களில் காவேரியின் வீட்டை அடைந்திருந்தாள் ஸ்வேதா.

ஏனோ நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு, காலிங் பெல் ஸ்விட்சை பிரஸ் செய்தாள்.

அடுத்த சில வினாடிகளில் கதவு திறக்கப்பட, உள்ளே சென்றாள்.

ஸ்வேதா உள்ளே வந்ததும் உடனே கதவைத் தாழிட்டிருந்தார் காவேரி.

''வா, நானும் கூட எங்க நீ லேட் பண்ணிடுவியோன்னு பயந்தே போயிட்டேன்.''

''நீங்க அவ்வளவு சொன்னதுக்கப்புறம் நான் எதுக்கு ஆன்ட்டி லேட் பண்ணப் போறேன்?''

''அது சரி. இரு. காபி குடுக்கறேன்.''

''ஆமா முதல்ல குடுங்க, அப்பதான் படபடப்பு கொஞ்சமாவது குறையும்.''

''ஓ, அப்ப பயமா இருக்கா உனக்கு?''

''யாருக்கு? எனக்கா? யாரப் பாத்து இந்தக் கேள்வியக் கேக்கறீங்க? எனக்குப் பணம் வேணும், அதுக்காக நான் என்ன வேணும்னாலும் செய்வேன். தெரிஞ்சுக்கோங்க.''

''அதெல்லாம் எனக்கும் தேவையில்ல. நான் சொன்ன மாதிரி அந்தச் சின்ன வேலைய மட்டும் செஞ்சாப் போதும்.''

''சரிதான் ஆன்ட்டி, கச்சிதமா முடிச்சுட்றேன்.''

காவேரி காபி கப்பை நீட்ட, வாங்கிக் கொண்டாள் ஸ்வேதா.

“எங்க ஆன்ட்டி, ஸ்ரீ, அங்கிள்?”

“ஓ அப்ப அவங்களையெல்லாம் வெச்சுக்கிட்டு தான் நான் இதையெல்லாம் பேசிக்கிட்டிருக்கேன்னு நினைச்சுட்டிருக்கியா?”

“யாரு நானா? உங்களப் பத்தி இது கூடத் தெரியாமலா ஆன்ட்டி உங்களுக்கு நானே இந்த ஐடியாவக் குடுத்திருப்பேன்? நான் கேக்கறது அவங்க ரெண்டு பேரும் எங்க போயிருக்காங்க, திரும்ப எவ்வளவு நேரமாகும்னு மட்டும்தான்.”

“கடவீதிக்குப் போயிருக்காங்க. எப்படியும் திரும்பி வர நைட் எட்டுக்கு மேல ஆகும். அதனால நாம தைரியமாப் பேசித் திட்டம் போட்டு முடிச்சுடலாம்.”

“அப்ப சரிதான்.”

“என்னமா சாப்பிட்றதுக்கு ஏதாவது குடுக்கட்டுமா?”

“ம்கூம், அதுக்கெல்லாம் நேரமில்ல. நாளைக்கு நான் செய்ய வேண்டியத முதல்ல சொல்லிடுங்க. குறிச்சுக்கறேன்.”

“ஏதோ ஆர்வமாத் தான் இருக்க. ஒன்றும் சொதப்பிட மாட்டியே?”

“என்ன ஆன்ட்டி, பயம் வந்துடுச்சா? நீங்க குடுக்கறதும் ஒன்னும் சின்னத் தொகை கிடையாதே, மூணு லட்சமாச்சே!” என்றாள்.

“ஆமா, அத மறந்துடாதே. ஆனா நீ அத வேலையக் கச்சிதமா முடிச்சுட்டு வந்தாத்தான் குடுப்பேன். அதக் கூட இங்க வெச்சுக் குடுக்க மாட்டேன். ஏற்கெனவே முடிவு பண்ணின மாதிரி அடுத்த வாரம் நீ பெங்களூர் வரும்போது தான்.”



“அட, அத எத்தன தடவ சொல்லுவீங்க ஆன்ட்டி. உங்க மேல எனக்கு முழு நம்பிக்கையிருக்கு.

“அதோட நான் இங்க வேலைய முடிக்கற நேரத்துல நீங்க தான் பெங்களூர்க்கு ஃப்ளைட்டே ஏறியிருப்பீங்களே!” என்றாள்.

தொடர்ந்து வந்த அரை மணி நேரத்தில் காவேரியும், ஸ்வேதாவும் சேர்ந்து அனைத்தையும் பேசி முடித்து விட்டிருக்க, “அப்ப நான் கிளம்பறேன் ஆன்ட்டி,” என்றாள் ஸ்வேதா.

“சரிதான். கிளம்பு. நம்ம கெட்ட நேரம் யாராவது வந்துட்டா அப்புறம் எல்லாமே கெட்டுப் போகும்.”

“அது சரிதான்,” என்ற ஸ்வேதா, மீண்டுமொரு முறையும் கூட காவேரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தாள்.

## 50

“சுபா.”

“சொல்லுங்க தயா.”

“ஏன்டா டல்லா இருக்க?”

“ம், இந்த சன்டே என்னப் பிக்னிக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்லிட்டு இப்படி நீங்களும் பெங்களூர் கிளம்பினா...”

“ஸாரி டியர்!” என்றவன், “நானும் என்ன சந்தோஷமாவா போறேன்?” என்றான்.

............

''இன்னைக்கு முழுக்க உங் கூடவே ஜாலியா இருக்கலாம்னு எவ்வளவு ஆசையா இருந்தேன்.''

''சும்மா சொல்லாதீங்க.''

''இல்லடா, நானே அவாய்ட் பண்ண முடியாம தான் போறேன். நீயே ரொம்பக் கம்பல் பண்ணிக் கூப்புட்ற தோட, அங்க பெங்களூர்லயும் ஒரு முக்கியமான வேல. அதயும் முடிச்சுட்டு வந்து ஒரு கல்லுல ரெண்டு மாங்கா.''

''ம். அப்புறம்.''

''அப்புறமென்ன, தயா எவ்வளவு பொறுப்பாக் கொண்டு வந்து விட்டுட்டுப் போறான்னு ஐயாவுக்கு நல்ல பேரும் சேத்துக் கிடைக்கும்...''

''ம்க்கும், இல்லேன்னா மட்டும் நல்ல பேருக்கு என்ன குறைவாம்.''

''அடடா, என் சுபாக் குட்டிக்கு இன்னுமா கோபம் குறையல?''

கணவனின் பாவனையில் சிரிப்பு வந்து விட்டிருக்க, ''அதெல்லாம் ஒன்னுமில்ல தயா. சும்மா உங்ககிட்ட வாயக் குடுத்துப் பாத்தேன். நீங்க பாத்துப் போய்ட்டு ஸ்ரீ பேமிலிய ஸேஃப்டியா விட்டுட்டு உங்க வேலையை யும் முடிச்சுட்டு வாங்க,'' என்றாள்.

உணர்ந்து அக்கறையுடன் சொன்ன மனைவியின் வார்த்தைகளில் உள்ளம் நெகிழ்ந்து போய் விட்டிருந்தது தயானந்த்திற்கு. எவ்வளவு அன்பான, அக்கறையான மனைவி தனக்கு என்று சந்தோஷத்துடன் நினைத்துக் கொண்டான்.



என்ன விஷயமாக இருந்தாலும் ஒருமுறை எடுத்துச் சொன்னால் அப்படியே புரிந்து கொள்கிறாளே என்றும்.

வாரம் முழுக்கத் தனிமையில் காயும் மனைவி, ஞாயிற்றுக் கிழமையை மனதிற்குள் எந்த அளவிற்கு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் என்பதை அவனும் அறிந்திருந்ததே அதற்குக் காரணம்.

''அப்புறம் எப்பத் திரும்புவீங்க?''

மனைவி கேட்க, ''இதென்ன கேள்வி? இன்னைக்கே!'' என்றான்.

''எனக்காக ரொம்பவும் சிரமப்படாதீங்க தயா. இதுக்கு எல்லாத்துக்கும் சேத்து நீங்க திரும்பி வந்ததும் காம்பன் ஸேட் பண்ணிக்கறேன்,'' என்றாள்.

அப்படிச் சொன்ன மனைவியைப் பார்த்தான் தயானந்த்.

கணவனின் பார்வையில் சுபாஹிணியின் முகம் சூடாகிச் சிவந்து விட்டிருக்க அவளை அப்படியே இழுத்து அணைத்திருந்தான்.

மீண்டும் அவன் மனைவியை விடுவித்தபோது, வெகு நேரம் கடந்து விட்டிருந்தது.

''அச்சச்சோ...''

''என்னடா?''

''டைம் பாருங்க, லேட்டாயி...''

''அது சரிதான்,'' என்ற தயானந்த், கண்ணாடியில் பார்த்துத் தனது உடையைத் திருத்திக் கொண்டு மனைவி யிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியே விட்டிருந்தான்.

கணவனை வழியனுப்பி விட்டு, வீட்டிற்குள் வந்தாள் சுபாஹிணி.

கணவன் இல்லாமல் தான் மட்டும் தனிமையில் காய வேண்டுமென்ற எண்ணமே மிகுந்த சோர்வைக் கொடுத்திருந்தது.

எக்காரணத்தைக் கொண்டும் தான் மேலே படிப்பதில் எந்த மாற்றமும் வந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் சில நிமிடங்கள் அமர்ந்திருந்தவள், பிறகு குளித்து விட்டு வந்து விடலாமென்று எழுந்து சென்றாள்.

குளித்து விட்டு வெளியே வரவும் தனது மொபைல் ஒலிக்கவும் சரியாக இருக்க, சென்று எடுத்துப் பார்த்தாள்.

ஏதோ ஒரு புது எண்ணிலிருந்து அழைப்பு வந்திருக்க, அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

அவர்கள் ஒரு பிரபல நகைக் கடையிலிருந்து பேசுவதாகச் சொல்லி, என்னவென்று விசாரித்தாள்.

சில வினாடிகள் பேசியவள், ''சரி, நான் வந்து வாங்கிக்கறேன்,'' என்று மொபைலை வைக்கப் போனாள்.

............

''ம். என்ன, சொல்லுங்க?''

....

''சரி, இப்பவே வர்றேன்,'' என்றவள், கடையிருக்கும் இடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

மொபைலை வைத்திருந்தவள் உடனே அதில் கணவனுக்குத் தொடர்பு கொண்டாள்.

ஆனால் இணைப்பு கிடைத்திருக்கவில்லை, நாட் ரீச்சபிள் என்று வந்தது.

சரிதான், ஃப்ளைட்டில் இருப்பார்களென்று நினைத்தவள், கிளம்பிக் கைப்பையுடன் வெளியே வந்தாள்.



அந்த நேரம் பார்த்து, டிரைவரும் எங்கோ வெளியே கிளம்பியிருக்க, சரிதானென்று தானே காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டிருந்தாள்.

அந்த நகைக் கடையைக் கண்டு பிடிப்பது அவ்வளவு ஒன்றும் சிரமமானதாக இருக்கவில்லை.

அதிலும் காலை வேளை என்பதால், கூட்டமும் ஒன்றும் அதிகமாக இருந்திருக்கவில்லை.

சின்ன வேலை தானே என்று காரை வெளியிலேயே ஒரு ஓரமாகப் பார்க் செய்திருந்தவள், காரை விட்டு இறங்கி அந்த நகைக் கடையை நோக்கி நடந்தாள்.

யாரோ தனக்குப் பின்னால் வருவதைப் போல மனதிற்குள் தோன்றத் திரும்பிப் பார்த்தாள்.

தான் நினைத்தது சரியே என்பதைப் போல ஒருவன் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

தன்னை நோக்கி ஏன் அவன் வர வேண்டும்?

இல்லையில்லை. அவன் வழிப்போக்கனாகத் தான் இருக்க வேண்டும்.

சுபாஹிணி கடைசியாக முழுச் சுயநினைவுடன் மனதிற்குள் யோசித்தது இதுதான்.

## 51

மீண்டும் சுபாஹிணி கண் விழித்தபோது அனைத்தும் இருண்டிருந்தது.

மெதுவாக யோசித்துக் கொஞ்சம் கொஞ்சமாக நடப்பிற்கு வந்திருந்தவளுக்கு, அதற்குப் பிறகுதான் தான் இருப்பது ஒரு பெரிய அறை என்பது புரிந்தது.

மெதுவாக நடந்ததை நினைவு படுத்திப் பார்த்தாள்.

தலை பாரமாக இருக்க, மூளை ஒத்துழைக்க மாட்டேனென்று வேலை நிறுத்தம் செய்தது.

மிகவும் முயன்று யோசித்தவளுக்கு நடந்ததனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்தது.

நகைக்கடையை நோக்கி அவள் நடந்து கொண்டிருந்த போது தனக்குப் பின்னால் யாரோ நடந்து வருவது போலத் தெரிய திரும்பிப் பார்த்தாள்.

சரியாக அதே நேரம் ஒரு கார் வந்து நின்று அதற்குள் இருந்தவர்கள் தன்னை உள்ளே இழுக்க, தன்னை நோக்கி நடந்து வந்தவனும் அவர்களுக்கு ஒத்துழைத்தான்.

அதாவது தன்னைக் காருக்குள் தள்ளி, கத்தி விடாதபடி வாயைப் பொத்திக் கொண்டதோடு, அவன் தானும் ஏறி அமர்ந்து கொண்டு விரைவாகச் செல்லும்படி டிரைவரைத் துரிதப்படுத்தினான்.

அதே நேரம் காருக்குள்ளிருந்த தடியர்கள் தனக்கு மயக்க மருந்தைக் கொடுத்திருக்க, தொடர்ந்து வந்த சில நிமிடங்களில் சுத்தமாகச் சுய நினைவை இழந்து விட்டதும் நினைவிற்கு வந்தது.

அதற்குப் பிறகு அவள் கண் விழித்தது -

இப்பொழுது சற்று முன் தான்.

இப்பொழுது எங்கே இருக்கிறோம்?

தான் இங்கு கொண்டு வரப்பட்டு எத்தனை நாளாயிற்று?

இடையில் என்னவெல்லாம் நடந்தது?

தன்னை இப்படிக் கொண்டு வந்து அடைத்தது யார்?



அவர்கள் இப்பொழுது எங்கிருக்கிறார்கள்?

அவர்களுக்கு என்ன வேண்டும்?

எதற்காக இப்படிச் செய்கிறார்கள்?

இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

ஆனால் ஒன்றிற்குக் கூடப் பதில் கிடைத்திருக்கவில்லை.

தலை தான் வலியில் விண்விண்னென்று தெறித்துக் கொண்டிருந்தது.

வெளியே வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக மறைவதை அங்கிருந்த சிறு ஜன்னல் வழியாகக் கண்டு தெரிந்து கொள்ள முடிந்தது.

கடவுளே! அப்படியானால் இரவு ஆரம்பமாகி விட்டதா?

யார் கையில் சிக்கி இனி எந்த மாதிரி சின்னா பின்னமாகப் போகிறோமோ என்று தோன்றிய எண்ணத்தில் ஒரேயடியாகப் பயந்து போனாள்.

நாக்கு உலர்ந்து போய் விட்டிருந்தது.

குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நாற்காலியோடு இறுக்கிக் கட்டப்பட்டிருந்ததில் கையும் காலும் இற்றுப் போய் விடும் போல வலியெடுக்க ஆரம்பித்து விட்டிருந்தது.

கடவுளே! இன்னும் எத்தனை நாட்கள் இப்படியே இருக்க நேரிடுமோ?

அப்படியே யோசித்துக் கொண்டிருந்தவள், ஒரு கட்டத்தில் அழவே தொடங்கி விட்டிருந்தாள்.

தயா, என்னால் முடியவில்லையே. என்னை வந்து காப்பாற்றி அழைத்துச் செல்லுங்களேன் என்று வாய் விட்டே கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

## 52

சென்ற வேலை முடிந்து விட்டிருந்ததில் அன்று இரவே பெங்களூரிலிருந்து திரும்பி விட்டிருந்தான் தயானந்த்.

மணி இரவு ஒன்பதாகியிருக்க, மனைவிக்கு அழைத்துப் பேசினால் என்னவென்று தோன்றியது.

விமான நிலையத்தில் பார்க் செய்யப்பட்டிருந்த காரை அடைந்து அதில் ஏறி அமர்ந்திருந்தவன், பிறகு வேண்டாம், பத்து நிமிடங்களில் வீட்டிற்கே சென்று விடலாமென்று காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

ஆனால் வீட்டிற்கு வந்து சேர்ந்தவனுக்கோ ஒரு பேரிடி வந்து தலையில் விழுந்திருந்தது.

மனைவிக்கு ஆனந்த அதிர்ச்சி கொடுத்து அவளுடைய சந்தோஷத்தைக் கண்டு ரசிக்க வேண்டுமென்று ஆவலுடன் உள்ளே வந்தான்.

ஏன் டிரைவர் இப்படிப் பார்க்கிறானென்று தோன்ற, நின்று என்னவென்று கேட்கலாமென்று பார்த்தான்.

ஆனால் அதற்காகச் சில வினாடிகள் தாமதிக்க வேண்டுமே, அதற்குள் மனைவியைச் சென்று பார்க்கலாமென்று மனம் ஒரேயடியாகச் சொல்லி விட்டிருக்க



எங்கும் நிற்காமல் மனைவியைக் கீழே காணாததில் மேலே தங்களுடைய அறைக்கு வந்திருந்தான்.

அங்கும் மனைவியைக் காணாததில், ''சுபா...'' என்று வாய் விட்டே அழைத்திருந்தான்.

சில முறை அழைத்துப் பார்த்தவன் அங்கு மனைவி இல்லாததை உறுதி செய்து கொண்டு மீண்டும் கீழே வந்தான்.

''வாங்கய்யா.''

வேலைக்காரம்மா அம்புஜம் வந்து வரவேற்க, ''சுபா எங்கமா?'' என்று கேட்டான்.

''உங்ககூட வர்லீங்களாய்யா?''

அப்படிக் கேட்டவரைப் புரியாமல் பார்த்தான் தயானந்த்.

''என்ன சொல்றீங்க? இன்னைக்குக் காலைல இருந்து வீட்ல தான இருக்கீங்க?''

''ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டு மதியம் தான் வந்தேனுங்கய்யா. போகும்போது காலைல நேரத்துலயே சுபாம்மா கிட்ட சொல்லிட்டுத்தான் போனேன். நான் திரும்பி வரும்போது அவங்க இல்லீங்...''

''என்னமா, இப்படிச் சொல்றீங்க?'' என்ற தயானந்த்துக்கு அடிவயிற்றில் ஏதோ பிசைவதைப் போலிருந்தது.

ஆனாலும் முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டான்.

''என்னங்கய்யா சொல்றீங்க, அப்ப அம்மா உங்க கூடவும் வர்லீங்களா? இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமைங்கறதால நீங்களும், அம்மாவும் எங்காவது வெளிய போயிருப்பீங்கன்னல்ல நான் நினைச்சுட்டிருக்கேன். இப்ப...''

''அப்ப நீங்க சுபாவ காலைல தான் கடைசியாப் பாத்தீங்க இல்லையா?''

''ஆமாங்கய்யா. காலைல ஆறரை இருக்கும். இந்த மாதிரி நான் ஆஸ்பத்திரிக்குப் போய்ட்டு வர்றேன்னு சொன்னதுக்கு போய்ட்டு நிதானமா டாக்டரப் பாத்துட்டு வாங்க. இன்னைக்கு மதியச் சாப்பாடு செய்ய வேண்டிய வேலையில்லைன்னு கூட சொன்னாங்கய்யா.''

............

''அதனாலதான் நானும் சரிதான், அம்மா உங்ககூட வெளிய வந்திருப்பாங்கன்னு நினைச்சு...''

''போன் ஏதாவது வந்ததா?''

''இல்லைங்கய்யா, வரல.''

''உங்களுக்குத் தெரியாம வேற யாராவது எடுத்துப் பேசியிருந்தா, நீங்க ஏதாவது வேல மும்முரமா இருக்கும்போது...''

''இல்லைங்கய்யா. நைட் டிபன் ஏதாவது செய்யச் சொல்லி அம்மா பண்ணுவாங்களோன்னு நான் போன எதிர்பாத்துட்டே தான் இருந்தேனுங்க. மத்தவங்ககிட்டேயும் கேட்டேனுங்க. போன் எதுவும் வரலேன்னு தான் சொன்னாங்க.''

மனதிற்குள் ஏதோ அபாய மணி ஒலிக்க, இல்லை யில்லை, அப்படியெல்லாம் எதுவும் நடந்திருக்காதென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் தயானந்த்.

எப்பொழுது மதிய உணவையும் வேண்டாமென்று சொல்லியிருக்கிறாளோ, நிச்சயம் எங்காவது வெளியே தான் சென்றிருக்க வேண்டும்.

இப்பொழுது வந்து விடுவாள்.



நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்திருக்க, உடனே தனது மொபைலை எடுத்து மனைவியின் மொபைலுக்கு அழைத்தான்.

ரிங் போக, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தான்.

ஆனால் முழு ரிங் போய்க் கடைசியில் கட்டானதே தவிர இணைப்பு கிடைத்திருக்கவில்லை.

சரிதான். ஏதாவது வேலையாக இருப்பாளென்று, மீண்டும் மீண்டும் கூட அழைத்துப் பார்த்தான்.

ஆனால் பலன் தான் பூஜ்யமாக இருந்தது.

''என்னங்கய்யா, அம்மா எடுக்கலீங்களா?''

''ஆமா, பயப்பட ஒன்னுமில்ல. சுபா அவங்கம்மா வீட்டுக்குத் தான் போயிருப்பா,'' என்று அவருக்குச் சொல்வதைப் போல, தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

''அப்ப போன் பண்ணிப் பாருங்கய்யா.''

அம்புஜம்மா சொல்ல, சரிதான், அழைத்துப் பேசி விடலாமென்று மீண்டும் மொபைலைக் கையிலெடுத்தான்.

ஆனால் அதற்குப் பிறகு தான் ஒருவேளை அவள் அங்கும் சென்றிருக்கா விட்டால் என்று நினைக்கத் தோன்றியது.

தான் அழைத்து, அவர்களையும் பீதியடையச் செய்ய வேண்டுமா என்றிருந்தது.

எதுவானாலும் மனைவி இப்பொழுது வந்து விடுவாள் அல்லது தனது மொபைலுக்கு அழைப்பாளென்று தீவிரமாக நினைக்கத் தொடங்கி விட்டிருந்தான்.

ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகம் போலக் கழிந்தது.

சிறு சிறு விஷயங்களுக்காகக் கூட மனைவி எப்பொழுதும் தன்னை அழைத்துப் பேசுபவளாயிற்றே.

இன்று ஏன் அழைக்கவே இல்லை.

ஏதோ உருண்டை போல ஒன்று வந்து தொண்டையில் சிக்கிக் கொண்டதைப் போலிருக்க, வாழ்க்கையில் முதன் முறையாக ஒரு இனம் புரியாத பயம் வந்து அவனுடைய நெஞ்சைச் சிலிரிடச் செய்தது.

கடவுளே! என் சுபாவுக்கு ஏதாவது ஆகி விட்டதோ?

பேசும் மனநிலையில் அவள் இப்பொழுது இல்லையோ?

யாராவது வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்று விட்டார்களோ?

கடத்திச் சென்று ஏதாவது...

ம்கூம், இல்லை.

இருக்காது.

இருக்கவே இருக்காது.

தன்னுடைய பயம் அவசியமற்றது.

திடீரென்று டிரைவரிடம் விசாரித்தால் என்னவென்று தோன்றியிருக்க, ஒரடி எடுத்து வைத்திருந்தான்.

தான் உள்ளே வந்தபோது அவனும் தன்னிடம் ஏதோ கேட்க வந்ததைப் போலத்தானே இருந்தது.

சரியாக அதே நேரம் டிரைவரும் தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிய, முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டான்.

''வா பாஸ்கர்.''



''ஐயா, நம்ம கார்...''

''ம் என்ன?'' என்று கேட்டவனுக்கு அவனையறியாமலேயே குரல் பதறிவிட்டிருந்தது.

''இல்ல, நம்ம கார் காலைலிருந்து ஒரே இடத்துல நின்னுட்டிருக்குன்னு, எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் கொஞ்சம் முன்னாடி தான் போன் பண்ணிக் கேட்டார்.''

எங்கே, எந்த இடத்தில் என்று தயானந்த் விவரம் கேட்க, விவரம் சொன்னான் அந்த டிரைவர்.

''போய்ப் பார்த்துட்டு...''

முதலாளி கேட்பதற்குள், ''நம்ம முத்து டிரைவர அனுப்பிட்டேனுங்கய்யா. இன்னும் ரெண்டு நிமிஷத்துல போயிட்டுக் கூப்புடுவான்,'' என்றான்.

மனைவி எதற்காக அங்கே சென்றாள்?

அதுவும் தனியாக.

அப்படிச் சென்றவள் ஏன் இன்னும் திரும்பவில்லை?

என்ன ஆயிற்று?

''அம்மா எதுக்கு தனியா கார எடுத்துட்டுப் போனாங்க, நீங்க ஏன் கூடப் போகல?''

''நான் டியூட்டிக்கே மதியம் தானுங்கய்யா வந்தேன். முத்து டிரைவரும் நம்ம கம்பெனி வண்டி ஏதோ ரிப்போர்னு சர்வீஸ்க்காக எடுத்துட்டுப் போயிட்டு மதியம் தான் நான் வர்றதுக்குக் கொஞ்சம் முன்னாடி வந்திருக்கார்.''

பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுடைய மொபைலுக்கு அழைப்பு வர, ''முத்து தானுங்கய்யா,'' என்று அட்டெண்ட் செய்து பேசப் போனான்.

ஆனால் அதற்குள் அந்த மொபைலைத் தான் வாங்கிக் காதில் வைத்திருந்த தயானந்த், பதட்டத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு மேலே விவரம் கேட்டான்.

கார் அங்கு பார்க் செய்யப்பட்டுப் பூட்டப்பட்டிருக்க, மனைவியின் கைப்பை, அதற்குள் மொபைல் என அனைத்தும் உள்ளே இருந்தது தெரிந்தது.

அப்படியானால்...

மீண்டும் நடப்பிற்கு வந்தவன் மேலும் சில விவரங்களைக் கேட்டுக் கொண்டு தொடர்ந்து அவன் செய்ய வேண்டியதையும் சொல்லிவிட்டு மொபைலை எதிரே நின்றிருந்த பாஸ்கரிடம் கொடுத்தான்.

''என்னங்கய்யா, ஏதாவது...''

''பயப்பட்றதுக்கு ஒன்னுமில்ல பாஸ்கர். அவசியம்னா கூப்புட்றேன். இங்கயே இரு,'' என்று விட்டு மீண்டும் உள்ளே வந்தான்.

நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, மீண்டும் ஒரு இனம் புரியாத பயம் வந்து அவனுடைய வயிற்றைப் பிசையத் தொடங்கி விட்டிருந்தது.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, எடுத்துப் பார்த்தான்.

மனைவியின் அம்மா. இவர்கள் ஏன்...

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்திருந்தவன், முயன்று வரவழைக்கப்பட்ட இயல்பான குரலில், ''சொல்லுங்க அத்தை...'' என்றான்.

சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்தவனுக்கு இப்பொழுது மனைவி அவளுடைய தாய் வீட்டிலும் இல்லை என்பது உறுதியாகி விட்டிருந்தது.

அம்புஜம்மா எதிரே வர, ''போன் ஏதாவது வந்தாக் கூப்புடுங்க. இதோ வர்றேன்,'' என்று தங்களுடைய அறைக்கு வந்திருந்தான்.



அறைக்குள் வந்தவன், கால்களில் சுத்தமாகப் பலமே இல்லாதது போல வலுவிழந்து போயிருந்ததில் உடனே அமர்ந்து விட்டிருந்தான்.

மனைவியை உடனே பார்த்தாக வேண்டும் போலத் துடித்த மனதை, முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்.

மனைவி ஏதோ ஆபத்தில் சிக்கியிருக்கிறாள் என்பது இப்பொழுது நூற்றுக்கு நூறு சதவிகிதம் தெளிவாகி விட்டிருந்தது.

ஒருவேளை அறிந்தவர் தெரிந்தவர் வீடுகளுக்கென்று எங்காவது சென்றிருப்பாளோ?

இன்னும் மனம் நடப்பைப் புரிந்து கொள்ள மறுப்பது புரிந்தது.

அதே சமயம் நிஜமும் கண் முன்னே வந்து நின்று மருட்டியது.

ஏதோ தோன்ற, உடனே சென்று மனைவியின் டைரியை எடுத்து அதிலிருந்த தொலைபேசி எண்களுக்கு முக்கியமாக அவர்களுக்குச் சந்தேகம் வந்து விடாதபடி அழைத்துப்பேசி மனைவி அங்கு சென்றிருக்காததை உறுதி செய்து கொண்டான்.

மீண்டும் யோசனை மாற, வேறு சில வழிகளிலும் முயன்றான்.

ஆனால் பலன் தான் பூஜ்யமாக இருந்தது.

எண்ணங்கள் எங்கெங்கோ சென்றதில் ஒரேயடியாக மனம் விட்டுப் போயிற்று.

ஆனாலும் முயன்று நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொண்டான்.

இந்த நேரம் மனைவி எங்கே இருப்பாள்?

எந்த நிலையில் இருப்பாள்?

யோசனை எங்கெங்கோ சென்றதில் சற்றே குறையத் தொடங்கியிருந்த பயம் மீண்டும் அதிகமாகி விட்டிருந்தது.

காலையிலிருந்து தானும் மனைவிக்கு அழைக்காமல் பெரிய தவறைச் செய்து விட்டிருக்கிறோமே என்று தன்னையே நொந்து கொண்டான்.

ஒருவேளை நாம் மதியமோ அல்லது அதற்குப் பிறகோ பேசுவதற்காக அழைத்திருந்தால், நிலைமை இந்த அளவிற்கு விபரீதமாகியிருக்காதோ என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பாவம்! இப்பொழுது எங்கே, என்ன சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறாளோ?

சந்தேகப்படும்படியாக மனதிற்குள் தோன்றிய நபர்களை மனதில் குறித்து வைத்துக் கொண்டான்.

மீண்டும் மொபைலை எடுத்து அவர்களுக்கெல்லாம் பேசிச் சந்தேகத்தைத் தெளிவு படுத்திக் கொண்டான்.

ஏன் காலையிலிருந்து ஒருமுறை கூடத் தான் மனைவிக்கு அழைக்காமல் போனோமென்று மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டே இருந்ததில், மேலும் மனம் கலங்கிப் போனான்.

எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் வீடு வந்து சேர்ந்து மனைவிக்கு ஆனந்த அதிர்ச்சி கொடுக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே இருந்தவன் என்பதால் மனைவிக்கு அழைத்துப் பேச வேண்டுமென்று தோன்றியிருக்கவில்லை.

ஆனால் அதுவே இப்பொழுது வினையாக முடிந்திருப்பதை மனதில் ஒரு வலியுடன் உணர்ந்தான்.



இத்தனை முயற்சிகளையும் அதிக பட்சம் பதினைந்து நிமிடங்களுக்குள் செய்திருந்தவன், உடனே தனக்குத் தெரிந்த ஒரு போலீஸ் உயர் அதிகாரியைத் தொடர்பு கொண்டான்.

அதே போலத் துப்பறியும் நிறுவனத்தையும்.

மனதிற்குத் தோன்றியவற்றையெல்லாம் தேடித் தேடிச் செய்து கொண்டிருந்தவனுக்கு, இப்பொழுது பயம் முன்னை விடவும் பல மடங்கு அதிகமாகி விட்டிருந்தது.

ஒரு கட்டத்தில் சுபா... சுபா... என்று வாய் விட்டே புலம்பத் தொடங்கி விட்டிருந்தான்.

இரவு ஒரு வினாடி கூடக் கண் மூடியிருக்கவில்லை. ஏன் படுக்கைக்குச் செல்ல வேண்டும், தூங்க வேண்டும் என்ற எண்ணமே துளியும் வந்திருக்கவில்லை.

இரவெல்லாம் அந்த அறையிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்து தீர்த்தான்.

அதற்கிடையில் இரண்டு முறை வெளியே சென்று விட்டு வந்தான்.

எங்கெங்கோ அழைத்துப் பேசினான்.

கால்களிரண்டும் மரத்துப் போய் விட்டதோ என்று எண்ணுமளவிற்கு நடந்து தீர்த்தவனுக்கு வாய் சுத்தமாக உலர்ந்து போய் விட்டிருந்தது உறைத்தது.

சென்று ஒரு முழு வாட்டர் கேன் தண்ணீரையும் எடுத்து ஒரு மடக்கில் குடித்திருந்தவனுக்கு,

அம்புஜம்மா கொண்டு வந்து வைத்து விட்டுப் போன உணவு எடுக்கப்படாமல் அப்படியே இருப்பது கண்களில் பட்டது.

ஒன்றும் முடியாமல் இருக்கையில் அமர்ந்திருந்தவன், அப்படியே பின்னால் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

மூடிய கண்களுக்குள் மனைவி சுபாஹிணி வந்து நின்றிருந்தாள்.

மனைவி இந்நேரம் யாரிடம் என்ன பாடு பட்டுக் கொண் டிருக்கிறாளோ என்று தோன்றியதில், கண்ணோரம் கரித்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் கீழே விழுந்து சிதறியிருந்தன.

## 53

நேரம் போகப்போக இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக் கையும் சுத்தமாகக் காணாமல் போய்க் கொண்டிருந்தது சுபாஹிணிக்கு.

அவ்வளவுதான். நாம் இனி இப்படியே முடிந்து போய் விடப் போகிறோமென்று தோன்றத் தொடங்கி விட்டிருக்க, அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

தலை முதல் கால் விரல் வரை வலி உயிர் போக, அழக் கூடத் தெம்பில்லாமல் அப்படியே கண்களை மூடிக் கொண்டு விட்டிருந்தாள்.

கண்களை மூடியவள் இருந்த களைப்பில் தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

மீண்டும் அவள் கண் விழித்தபோது நன்கு விடிந்து விட்டிருந்தது ஜன்னல் வழியாகத் தெரிந்தது.



நேரம் போகப் போக நிறையத் துளைகளிலிருந்தும் வெளிச்சம் உள்ளே வரத் தொடங்கியிருக்க, அந்த அறையைக் கண்களால் ஆராய்ந்தாள்.

ஆராய்ந்த வரையில் அது ஒரு ஓட்டு வீடு என்பது தெளி வானது.

வெளிச்சத்தோடு நம்பிக்கையும் கொஞ்சம் சேர்ந்து வந்தாற் போலிருக்க, மீண்டும் காத்திருக்கலானாள்.

ஆனாலும் முடிவில்லாமல் நீண்டு கொண்டே இருந்த சிறைவாசம் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக மனதள விலும், உடலளவிலும் வலுவிழக்கச் செய்து கொண்டே வந்தது என்றால் அது சற்றும் மிகையல்ல.

அப்படியே இருக்கையில் அமர்ந்தபடியே [illegible] தூக்கம் போட்டிருந்த தயானந்த். [illegible] தெரிய எழுந்து சென்று [illegible] விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

அம்புஜம்மா காபி கப்புடன் [illegible] விட்டாலும் உடனே [illegible]

"ஐயா, அம்மாவப் [illegible]"

"இன்னைக்குக் [illegible] லாளியைச் சற்றுப் [illegible]

அந்த அளவிற்கு [illegible] தயானந்த்தின் [illegible] விட்டிருந்தது.

ஆறுதல் சொல்ல [illegible] தைகளைச் சிரமப்பட்டு [illegible]

அதே நேரம் [illegible] திரும்பிப் பார்த்தவன் [illegible]

மனைவியின் [illegible] கொண்டிருக்க [illegible]

ஆனாலும் அந்த நேரத்தில் அவர்களை அதுவும் அந்த மாதிரி சமயத்தில் பார்க்க நேர்ந்தது அவனுக்கு மனதிற்குள் மிகப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்து விட்டிருந்தது.

அவன் நினைத்துப் பயந்தது சரியே என்பதைப் போல, ''சொல்லுங்க மாப்ள, என்னாச்சு எங்க பொண்ணுக்கு?'' என்று முயன்று வரவழைத்த இயல்பான குரலில் கேட்ட மாமனாரைப் பார்த்தான்.

''என்னாச்சு, கடவுளே! சொல்லுங்களேன்,'' என்று நளினி அதாவது மனைவியின் தாயும் கேட்க, அவன் அனைத்தையும் சொன்னான், தான் அறிந்த வரை.

தங்கள் வீட்டு மாப்பிள்ளை சொன்னதைக் கேட்ட சுபாஹினியின் பெற்றவர்கள் இருவரும் அதிர்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டிருந்தனர்.

ஆனாலும் அப்போதிருந்த தயானந்த்தின் தோற்றம் அவர்களை எதையும் கேட்க விடாமல் வாயடைக்கச் செய்திருந்தது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று தயானந்த் கேட்க, அவர்கள் இருவரும் திரும்பி அம்புஜத்தைப் பார்த்தார்கள்.

''நாந்தானுங்கய்யா, அதுவும் இவங்க போன்ல அம்மாவக் கேட்டதும் என்ன பேசறதுன்னு தெரியாம...''

பயத்துடன் நடுங்கிய குரலில் சொன்னவளை எதுவும் பேசாமல் பார்த்தான் தயானந்த்.

சாதாரணமாகத் தான்.

''நீங்களே சொல்லலேன்னாலும் நான் இப்பக் கூப்புட்டு சொல்லியிருப்பேன்,'' என்றவனை நளினியும், நடேசனும் கலக்கத்துடன் பார்க்க, ''கவலைப்படாதீங்க, இன்னைக்கு மதியத்துக்குள்ள சுபா வீட்ல இருப்பா!'' என்றான்.



''எங்களுக்காகச் சொல்றீங்களா மாப்ள...'' என்று அழுகையுடன் கேட்ட மனைவியை மென்மையாக அதட்டியிருந்த நடேசன், ''நீங்க சொல்றது சரிதான் மாப்ள. சுபாவக் கண்டுபிடிக்க என்ன உதவி வேணும்னாலும் நானும் செய்யறேன்,'' என்று தயானந்த்தைப் பார்த்துச் சொன்னார்.

அப்படிச் சொன்ன தனது மாமனாரை நன்றியுடன் பார்த்த தயானந்த், ''உக்காருங்க. இதோ வர்றேன்,'' என்று வெளியே வந்திருந்தான்.

## 54

அப்பொழுது தான் விழித்து [illegible]
கேட்டின் பூட்டைத் திறந்து [illegible]
வெளியே வந்தாள்.

தூக்கக் கலக்கம் முற்றிலும் [illegible]
தவள், ஒரு கார் வந்து [illegible]
தயானந்த்தை முதலில் [illegible]
இருக்கவில்லை.

காரை விட்டு [illegible]
தாவை நோக்கி வர, [illegible]
மென்று அதே [illegible]

பார்த்தவள் [illegible]
விட்டிருந்தாள்.

அதைப் [illegible]
நம்பிக்கை [illegible]

''ஸார்...'' [illegible]
வார்த்தை [illegible]

''போலீஸ் ஸ்டேஷன் போகலாம். நட.''

ஆனால் சில வினாடிகளுக்குள் சுதாரித்துக் கொண்டிருந்த ஸ்வேதா, அப்படிச் சொன்ன தயானந்த்தை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அந்த நேரத்திலும் கூட தயானந்த்தால் அவளுடைய நடிப்பை மனதிற்குள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

''ஸார், நீங்க என்ன சொல்றீங்க?''

''அதத்தான் போலீஸ் ஸ்டேஷன்ல போய்ச் சொல்றேன். வா.''

''என்ன ஸார் நீங்க, எதுக்கு...''

''இப்ப வர்றியா? இல்ல போலீ....'' தொடர்ந்து தயானந்த் சொன்னதனைத்தையும் கேட்டுப் பயத்தில் நடுங்கி விட்டிருந்த ஸ்வேதா நடந்ததனைத்தையும் அப்படியே அச்சுப் பிசகாமல் சொல்லி விட்டிருந்தாள்.

அதாவது முதல் நாள் சுபாஹினியைக் கடத்தியதிலிருந்து, இப்பொழுது அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் வரை.

யார் சொல்லி, ஏன், எதற்காக இப்படிச் செய்தாள் என்பதையும் கூட.

அதாவது தயானந்த் சொல்ல வைத்திருந்தான்.

அந்த வினாடியே தயானந்த் அவளை அழைத்துக் கொண்டு மனைவியைப் பார்ப்பதற்காகக் கிளம்பியிருந்தான்.

அதே சமயம் தனது மாமனார், மாமியாருக்கும் போனில் அழைத்துச் சொல்லியிருந்தான்.

தயானந்த் ஸ்வேதாவுடன் அந்த இடத்தைச் சென்றடைவதற்குள், சுபாஹினியின் பெற்றவர்கள் அவன் சொல்லியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.



''இங்க தான் ஸார்,'' என்று ஸ்வேதா காட்டிய அந்தப் பழைய ஓட்டு வீட்டின் முன்பாக அவன் காரை நிறுத்திய பிறகு தான், தன்னுடைய பெற்றவர்களும் அங்கு வந்திருந்ததைக் கண்டான்.

ஆனால் யாரிடமும் பேசும் மன நிலையில் அவன் இருக்கவில்லை.

தனது கையிலிருந்த சாவியால் ஸ்வேதா அந்த ஓட்டு வீட்டின் பூட்டைத் திறப்பதற்குள், பலமுறை செத்துப் பிழைத்திருந்தான் தயானந்த்.

அனைவருக்கும் முன்பாக வீட்டிற்குள் சென்றிருந்தவன், துணியால் வாயும், கயிற்றால் கைகளையும் கால்களையும் இருக்கையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த மனைவி மயங்கிய நிலையில் இருப்பதைக் கண்டான்.

வினாடிக்குள் சென்று அவன் காரிலிருந்த வாட்டர் பாட்டிலை எடுத்து வருவதற்குள், மற்ற நால்வரும் வந்து சுபாஹினியைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கயிற்றையும் துணியையும் அவிழ்த்து எறிந்திருந்தார்கள்.

ஆளாளுக்கு அனைவரும் முதலுதவி செய்ய, சில வினாடிகளுக்குப் பிறகு கண்களைத் [illegible] சுபாஹினி.

அந்த சில வினாடிகள் சில [illegible] அதற்குப் பிறகே மீண்டும் [illegible] தயானந்த்.

அவனுடைய நிலை [illegible] கொண்டு அவனுக்கு [illegible]

பக்கத்து வீட்டில் [illegible] ஹார்லிக்ஸ் [illegible] கொஞ்சம் [illegible]

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் முழுமையாக நடப்பிற்கு வந்திருந்த சுபாஹினி, நிமிர்ந்து அனைவரையும் பார்த்தாள்.

முக்கியமாகக் கணவனை -

இதென்ன, தனது தயாவுக்கு இவ்வளவு வயதாகி விட்டதா என்று நினைத்த சுபாஹினிக்கு, எல்லையற்ற ஆனந்தத்தில் அழுகை கூட வந்து விட்டிருந்தது.

அழுகையில் உதடு துடிக்க அவள், “தயா...” என்று கணவனை நோக்கிக் கை நீட்ட, அருகில் சென்ற தயானந்திற்கும் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

“சுபா!” என்று ஆவலுடன் மனைவியின் முகத்தைக் கைகளில் ஏந்தியிருந்தான்.

அவர்கள் இருவரின் நிலையையும் கண்ட மற்றவர்களுக்கும் கூட லேசாகக் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

அதே நேரம் அனைவருடைய பார்வையும் அங்கு பயத்துடன் நடுங்கியபடி நின்றிருந்த ஸ்வேதாவின் மீது திரும்பியிருந்தது.

ஆனால் அதற்குள், “என்ன தயவு செஞ்சு மன்னிச்சுடுங்க!” என்று அழுகையுடன் அனைவருடைய கால்களிலும் சேர்த்து மொத்தமாகத் தரையில் சாஷ்டாங்கமாக விழுந்திருந்தாள் அவள்.

மீண்டுமொரு முறையும் அவள் அழுகையுடன் நடந்ததனைத்தையும் சொல்ல, இப்பொழுது சுபாஹினியின் பெற்றவர்களுக்குத் தலைகுனிவாகி விட்டிருந்தது.

அதற்குக் காரணமும் அந்தச் சதியைத் தீட்டியிருந்த முக்கிய நபர் தயானந்த்தின் தந்தையான நித்யானந்தனின் தங்கை காவேரி என்பதே.



மற்றவர்கள் அனைவருக்கும் கூட எப்படியோ, ஸ்வேதா சொன்னதைக் கேட்ட தயானந்த்தின் தந்தை நித்யானந்த்துக்கு எல்லையற்ற கோபம் வந்து விட்டிருந்தது.

அவர் உடனே மொபைலை எடுத்துத் தனது தங்கை காவேரிக்கு அழைத்து விட்டிருக்க, தனது அத்தையுடன் கோபத்தில் மீசை துடிக்கப் பேசும் தந்தையைக் கடைசியில் தயானந்த் தானே வந்து சமாதானப்படுத்தும்படி ஆயிற்று.

“என்னடா, போ முதல்ல இங்கிருந்து. அவள நான் நிச்சயம் சும்மா விடப் போறதில்ல.”

“உங்க கோபம் புரியுதுப்பா. ஏன் உங்கள விடவும் கூட என் நிலைமைய நினைச்சுப் பாருங்க. நானும் சும்மா விடப் போறதில்ல. ஆனா அதையெல்லாம் வீட்டுக்குப் போய்ப் பேசிக்கலாம். இப்ப முதல்ல சுபாவ டாக்டர்கிட்ட அழைச்சுட்டுப் போகணும். கிளம்புங்க,” என்றான்.

“ஏன், என்னாச்சு?”

ஆனால் அதே நேரம், “அதெல்லாம் [redacted] மாமா. நான் ரொம்ப [redacted] கொண்டே வந்த சுபா[redacted] டிருந்த கால்களால் நிற்க [redacted]

கீழே விழப்போக, [redacted] தனது கைகளிலேயே [redacted]

“அசடு. அதுக்குள்ள [redacted] மையாகக் கடிந்து [redacted] பார்த்துச் [redacted]

“ஏற்கெனவே [redacted] கொலை [redacted]

புத்தி வரலேன்னா, இனி என்ன சொல்றதுன்னே தெரியல. யாருக்காக இல்லேன்னாலும் அவளுக்காக இத இப்பத்துக்குப் பெரிசு பண்ணாம விட்டுடலாம்பா. ஏன் சொல்றேன்னா நடந்தது மட்டும் அவளுக்குத் தெரிஞ்சா சுத்தமா மனசு விட்ருவா!'' என்றான்.

சுபாஹிணியும் அதையே ஆமோதிக்க, ''சரிதான். மருமகளுக்காக வேணும்னா இத இன்னொரு முறையும் சொல்றேன். இப்பத்துக்கு விட்டுட்றேன். ஆனா...'' என்று தொடர்ந்து ஏதோ சொல்ல வந்த தந்தையைப் பார்த்த தயானந்த், ''சரிப்பா. நாங்க முன்னாடி போறோம். வாங்க,'' என்று மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான்.

கணவனைத் தொடர்ந்து தானும் காரில் ஏறி அமர்ந்திருந்த சுபாஹிணி புன்னகையுடன் திரும்பிக் கணவனைப் பார்க்க, ''ம் இப்ப சிரி.'' என்று மனைவியை மென்மையாகக் கடிந்து கொண்டான் தயானந்த்.

''என்ன பண்றது தயா? நைட்டெல்லாம் எப்படி அழுதுட்டே இருந்தேன் தெரியுமா, உங்கள நினைச்சு? என்ற மனைவியை, ''நீயுமா?'' என்று காதலுடன் பார்த்தான்.

''அப்ப...''

''ஆமாம்மா. என்ன வாழ்க்கைல முதன் முதலா அழ வெச்ச பொண்ணு நீ.''

''அப்ப நான் ரொம்ப மோசமில்ல தயா...''

''ம்கூம்...''

''என்ன தயா?''

''அத வீட்ல வந்து சொல்றேன். வா,'' பொருள் பொதிந்த பார்வையுடன் பார்த்த கணவனைத் தானும் எல்லையற்ற காதலுடன் பார்த்தாள் சுபாஹிணி.